உ
சிவமயம்

மீசாலை

# திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் கோவில் குடமுழுக்கு மலர்

08.06.1997.



வெளியீடு:
ஈஸ்வர ஹூ ஆடி மீ 32-ம் உ சனிக்கிழமை
16-08-1997

University of Jaffna
235.4
MEE
49690(AR; Main)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாவகச்சேரி நகரில் .....

சகல விதமான தெறிவகைகள்

பாடசாலை உபகரணங்கள்

அழகு சாதனப் பொருட்கள்

லேஸ் வகைகள்

மலிவுவிலையில் கிடைக்க
நாடவேண்டிய இடம்

V

# சங்கரன்ஸ்

நவீன சந்தை உட்புறம், சாவகச்சேரி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
கணபதி துணை



# மீசாலை திருநீலகண்ட
# வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோவில்

# குடமுழுக்கு மலர்

08-06-1997

NA

மலர் ஆசிரியர்:

திரு. சோ. கணேசலிங்கம் அவர்கள்
(B. A., Dip. in Ed, M. A.)

வெளியீடு: 16-08-1997

235.4
MEE
University of Jaffna Library
2007
University of Jaffna
249690
Library
249690
ARCHIVES
249690
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீசாலை

திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோவில்

## திருப்பணிச்சபை செயற்குழு

திரு. ஐ. மாணிக்கவாசகர் — தலைவர்
(இளைப்பாறிய அதிபர்)

திரு. அ. கயிலாயபிள்ளை — செயலாளர்
(B. A. Hons, Dip in - Ed., S. L. P. S. I.)
(கோட்டக்கல்வி அலுவலர் - பளை, அதிபர் - பளைமத்திய கல்லூரி)

திரு. க. சோமசேகரம் — பொருளாளர்
(தொழில்நுட்ப உத்தியோகத்தர் - யாழ் பல்கலைக்கழகம்)

திரு. சோ. கணேசலிங்கம் — உபதலைவர்
(இளைப்பாறிய அதிபர்) (மலராசிரியர்)

திரு. சி. இராமலிங்கம் — ஆலய முகாமையாளர்

திரு. சு. அருளானந்தசிவம்
(வர்த்தகர்)

திரு. த. செல்வராசா

திரு. ச. சந்திரகுமார்
(துணை முகாமையாளர்)

## குடமுழுக்கு மலர்க்குழு

திரு. சோ. கணேசலிங்கம் — மலராசிரியர்

திரு. சி. இராமலிங்கம்

திரு. ச. சந்திரகுமார்

திரு. சு. அருளானந்தசிவம்

திரு. த. செல்வராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ARCHIVES

## சமர்ப்பணம்

வேழ முகத்தோனே விநாயகப் பெருமானே
வெள்ளை மாவடியில் விரும்பி உறைபவனே
சாலவும் போற்றி நின்பாதம் பணிந்து
இத்திரு மலரை
சமர்ப்பணம் செய்கின்றோம்.

— மலராசிரியர்

ARCHIVES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஆலய பிரதம சிவாச்சாரியார்

'வேதாகம சோதிட பூஷணம்', 'சிவாச்சார்ய திலகம்', 'சிவாகம பூஷணம்'

# சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக் குருக்கள்

அவர்களின்

# ஆசியுரை

ஓங்கார ஸ்வரூபியாகியும், எல்லாவற்றிற்கும் முதன்மையானவருமாகிய விநாயகப் பெருமான் எத்தகைய இடையூறுகளையும் நீக்கி நமது கருமங்களை இனிதாக அனுகூலமாக்குபவர். எண்ணிய கருமங்களெல்லாம் எளிதில் முற்றுற அவனை வேண்டுகின்றோம். தென்மராட்சியில் விநாயகர் ஆலயங்கள் பல இருப் பினும் மீசாலை திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் ஆலயம் தனிச் சிறப்பு வாய்ந்தது.

இந்த ஆலயத்தில் 1965-ம் ஆண்டு முதல் விநாயகரை வணங்கிப் போற்றி குருத்துவப் பணியாற்றிக்கொண்டிருப்பதை மிகப்பெரிய பேறாகக் கருதுகின்றேன். இதனால் இந்த ஆலயத்திலே கூடிய ஈடுபாடுண்டு. விநாயகருடைய திருவருளா லும் அடியார்களுடைய ஒத்துழைப்பினாலும் நித்திய நைமித்தியங்கள் சற்றும் குறையாது நிகழ்ந்துகொண்டுவருகின்றன. ஆலயமும் பலவகையாலும் வளர்ச்சி யடைந்து தென்மராட்சியிலே ஒரு தனிப்பெரும் ஆலயமாகக் காட்சியளிக்கிறது என்றால் மிகையொன்றுமில்லை.

1981-ம் ஆண்டு முந்திய கும்பாபிஷேகம் நடைபெற்றது. அதன் பின்ன ரும் பல திருப்பணிகள் தொடர்ந்து நடைபெற்றுவந்திருக்கின்றன. இவை எல் லாம் அடியார்களுடைய தெய்வ சிந்தனையையும், பக்தியையும்தான் எடுத்துக் காட்டுகின்றன. 16 வருடங்களின் பின் இப்பொழுது ஆலயம் புதுமெருகூட்டப் பட்டு கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது என்றால் விநாயகப்பெருமானு டைய திருவருளைப் போற்றாமலிருக்க முடியாது. இன்னும் இராஜகோபுரம் தான் நிறைவு பெறவேண்டியுள்ளது. அதுவும் அவனுடைய திருவருளினால் விரை வில் நிறைவு பெறுமென்று நம்புகிறேன்.

எம்பெருமானின் திருக்கோயில் புனருத்தாரண வேலைகளில் ஈடுபட்டுள்ளா வர்களுக்கும், வழிபடுகின்ற அடியார்களுக்கும், ஏனையோருக்கும் விநாயகப்பெரு மானின் திருவருள் கிட்டவேண்டுமென மனதார இறைஞ்சுகின்றேன்.

இங்ஙனம்
சி. சிதம்பரநாதக் குருக்கள்

ARCHIVES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

குருமகா சந்நிதானம் — ஆதீன முதல்வர்

# ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிகஞான சம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்

இரண்டாவது குருமஹா சந்நிதானம்

# அருளாசிச் செய்தி

**விநாயகர் அடியார்களே!**

சாவகச்சேரி மீசாலை திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோயில் கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றோம். கும்பாபிஷேகம் என்பது ஒரு ஆலயத்தில் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை வருவதாகும். அந்த அபிஷேகத்தை காண்பது எல்லோருடைய வாழ்க்கையிலும் மிக மிகப் புண்ணியமான பேறாகும். அதனால்தான் திருஞானசம்பந்த சுவாமிகள்கூட "என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே" என்ற தேவாரத்தை அருளியுள்ளார். அப்படிப்பட்ட கும்பாபிஷேகம் மீசாலையில் எழுந்தருளியிருக்கும் வெள்ளைமாவடிப் பிள்ளையாருக்கு சாலப்பொருத்தமானதொன்று. மாமரத்தை தல விருட்சமாகக் கொண்டு நீண்டகாலமாக எழுந்தருளியிருந்து மக்களுக்கு அருள் புரிந்து வருகின்றார். எங்கள் சமயத்தில் எந்தக் காரியங்களை செய்ய வேண்டுமென்றாலும் விநாயகருடைய அருளைப் பெறவேண்டும். தனக்கு மேல் நாயகனில்லாத தனித் தலைவனாகிய விநாயகப் பெருமானுடைய அருள் இல்லாமல் எக்காரியங்களை தொடங்கினாலும் தடைப்படுவது எல்லோரும் அறிந்த வரலாற்று உண்மை. அவன் இன்றி அணுவும் அசையாது என்ற வாக்குக்கு நிகராக விநாயகப் பெருமான் இல்லாத இடமேயில்லை என்று கூறலாம். எளிமையான வழியில் வழிபடக்கூடிய முறையில் உள்ளது விநாயக வடிவம். அப்படிப்பட்ட விநாயகனின் அருள் வேண்டினால் எல்லா நற்காரியங்களையும் எளிதான முறையில் தரக்கூடியது. சாவகச்சேரி பதியிலே பல விநாயகர் ஆலயங்கள் இருக்கின்றன. அப்படிப்பட்ட விநாயகர் ஆலயத்திலே சிறந்த ஆலயமாக வெள்ளைமாவடிப் பிள்ளையார் ஆலயம் விளங்குகின்றது. இவ்வாலயத்தில் பல நற்காரியங்கள் நடைபெற்றுவருவதை யாவரும் அறிவார்கள். இவ்வாலயத்தில் நடைபெறும் கும்பாபிஷேக நிகழ்ச்சியை நடாத்திவைக்கும் சிவ ஸ்ரீ சிதம்பரநாதக் குருக்கள் அவர்கள் வயதிலும், அறிவிலும், அனுபவத்திலும் உயர்ந்த சிவாச்சாரியார் ஆவார். இக் கும்பாபிஷேகத்திற்கு ஒன்று நின்று உழைத்த அடியார்கள், தொண்டர்கள் எல்லோருக்கும் இறைவன் ஆசீர்வதிக்கப் பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

இங்ஙனம்
ஸ்ரீலஸ்ரீ பரமாசார்ய ஸ்வாமிகள்
(குருமஹா சந்நிதானம்)

ARCHIVES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

மீசாலை தெற்கு திருநீலகண்ட
# வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோவில்
கும்பாபிஷேகம்

# ஆசியுரை

''திருவுங் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமது உள்ளம் பழுக்கவும்
பெருகு மாடத்துப் பிள்ளையைப் பேணுவாம்''

தென்மராட்சியில் கோயில் கொண்டு எழுந்தருளி வாழ்வளிக்கும் பெருமானாக வெள்ளைமாவடிப் பிள்ளையார் விளங்குகின்றார். அருள்மழை பொழிந்து அனைவருக்கும் தண்ணிழல் வழங்கும் பெருமானாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கின்ற மூர்த்தியை இங்கே சென்று பல தடவைகளில் தரிசித்த பாக்கியம் எனக்கு உண்டு. அமைதியையும், ஆனந்தத்தையும் வழிபடுவோர்க்கு அருளி வாழ்விக்கின்ற பெருமானாக இவர் விளங்குகின்றார். இத்தகைய அருட் சிறப்பு மிக்க திருக்கோயிலுக்கு குடமுழுக்குவிழா நடைபெறுவது குறித்து சைவ மக்கள் புளகாங்கிதமடையாமல் இருக்க முடியாது. கடந்த பதினாறு ஆண்டு களுக்கு முன்பு மகாகும்பாபிஷேகத்தில் பங்குபற்றி உரையாற்றிய புண்ணியம் எனக்குக் கிடைத்தது. சமீபத்தில் இடம்பெயர்ந்த நிலையிலும் இங்கே சென்று வழிபடக்கூடிய ஒரு வாய்ப்பை நான் தொடர்ந்து பெற்றேன். இவையெல்லாம் பூர்வபுண்ணியப் பயன் என்றுதான் கூறவேண்டும்.

ஆலயங்களைப் புனருத்தாரணம் செய்வதும் குடமுழுக்கு விழாவை நடாத்தி பெருஞ்சாந்தி அளிப்பதும் சைவமக்களின் தலையாய கடனாகும். இந்த வகையில் இந்தநாட்களில் எமது நாட்டுக் கோயில்கள் செப்பனிடப்படுவதும் திருப்பணிகள் நிறைவேற்றப்படுவதும் வரவேற்கத்தக்கது. ஆனால் கோயில் களைக் கட்டுவதிலும் விழாக்களை விமரிசையாக எடுப்பதிலும் மாத்திரம் எமது சமய எழுச்சி தங்கியிருக்கவில்லை. நாமும் வாழ்ந்து மற்றவர்களுக்கும் வாழ வழிகாட்டுகின்ற அருள் நிலையமாக ஆலயங்கள் அமைய வேண்டும். ஏழை கள், அநாதைகள், ஊனமுற்றோர், மனவலுவற்றோர் யாவருக்கும் கோயில்களே நல்வழிகாட்டி வாழவைக்க வேண்டும்.

''யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும்போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க் கின்னுரைதானே''

என்ற திருமந்திரவாசகம் சைவமக்களின் இல்லங்களிலும் திருக்கோயில் களிலும் ஒலிக்க வேண்டும். இந்தவகையில் வெள்ளைமாவடிப் பிள்ளையார் ஆலய நிர்வாகம் சீரிய பணியாற்றி நமது நாட்டுத் திருக்கோயில்களுக்கு ஒரு முன்மாதிரியாக விளங்கவேண்டும் என்று திருவருளைப் பிரார்த்தித்து அமை கின்றேன்.

**செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி**
தலைவர் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மீசாலை தெற்கு
## திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோயில்
### கும்பாபிஷேக

# வாழ்த்துரை

மீசாலையில் எழுந்தருளி இருக்கும் வெள்ளைமாவடி திருநீலகண்ட விநாயகப் பெருமானின் கும்பாபிஷேகம் நிகழவிருப்பதறிந்து பெரிதும் மகிழ்வுறுகிறேன். எல்லாம் வல்ல விநாயகப் பெருமானுக்கு நாமாற்றும் கருமங்களெல்லாம் அதி உயர்ந்த இடத்தை வகிக்கின்றன. மீசாலையூர் வெள்ளைமாவடி திருநீலகண்ட விநாயகப் பெருமானின் கும்பாபிஷேகத்தைக் காண்பது கோடி புண்ணியம் ஆகும். இப்பெரு விழாவைக் கண்டுகளிக்க தவமுடையார்க்கே வாய்ப்புண்டு என்பர் எமது முன்னோர். மூல விக்கிரகத்தின் அருட்பிரவாகத்தை மீண்டும் பெருகச் செய்வதே இவ்விழாவின் உட்பொருளாகும். மஹாகும்பாபிஷேக விழாவானது பல ஆண்டுகளுக்கு ஒருமுறை நிகழ்வதால் இதனைத் தரிசித்தல் பெரும் பேறாகும். யாகதரிசனம் செய்தலும், ஓமப்புகையைச் சுவாசித்தலும், மந்திர ஒலிகளைக் கேட்டலும், உடல் நலத்தையும் புண்ணியத்தையும் தருவனவாகும். பிரதேசம் வளர்ச்சி பெறவும் மக்கள் துன்பம் நீங்கி இன்பவாழ் வெய்தலும் பூரணமான ஒரு கும்பாபிஷேகத்தின் பயனாகும். இவ்விழாவை கிரியைமுறைப்படி நடாத்திவைக்கும் சிவாசாரியர்களுக்கும் எனது வாழ்த்துக்கள். இவ்விழா ஒரு குறையுமின்றி நிறைவேற வேண்டுமென எல்லாம்வல்ல விநாயகப் பெருமானை வேண்டுகின்றேன். கும்பாபிஷேக மலர்சிறப்படைய என் வாழ்த்துக்கள்.

''ஓம் கணேசாயநம''

பு. சுந்தரம்பிள்ளை
பிரதேச செயலர்
தென்மராட்சி.

ARCHIVES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

### மீசாலை தெற்கு
### திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோயில்
### முகாமையாளர் அவர்களின்

# ஆசியுரை

''கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்பது முன்னோர் மொழி.
ஈழவள நாடு இந்துக்கோயில்கள் பலவற்றை தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது.
இவ் இந்துக் கோயில்களில் கூடுதலானவை விநாயகப் பெருமானுக்கே அமைக்கப்பட்டுள்
ளன. யாழ்குடாவின் முக்கிய பிரதேசங்களில் ஒன்றாக தென்மராட்சி விளங்குகின்றது.
இப் பிரதேசம் நீர்வளம், நிலவளம், தொழில்வளம் மற்றும் சமூக பண்பாடுகள் பல
வற்றைத் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது.

தென்மராட்சிப் பகுதி மக்களில் பெரும் பகுதியினர் ஆரம்ப காலந்தொட்டு இன்று
வரை இந்துக்களாக விளங்கி வருகிறார்கள். இப்பிரதேசத்தில் பல விநாயகர் ஆலயங்
கள் அமைந்துள்ளன. காரணம் விநாயகர் விவசாய உற்பத்திக்குரிய தெய்வமாகவும்,
விக்கினங்களை விலக்கி உளச்சாந்தியளிப்பவர், கல்விக்குரியவர் என பல காரணங்களி
னாலும் ஆகும். இப் பிரதேசத்தில் அமைந்து அருள பாலிக்கின்ற விநாயகர் ஆலயங்
களிலே எமது திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் ஆலயமும் ஒன்றாகும்.
''மாவடிப் பிள்ளையார்'' என மக்களால் உள்ளன்போடு, பயபக்தியாக அழைக்கப்படு
வது எமது ஆலயமாகும். மீசாலைப் பதியிலே நடுநாயகமாக அமைந்து மனம் நொந்து
வரும் அடியார்க்கு சாந்திஅளித்து அருளாட்சிபுரிபவர் எமது மாவடிவிநாயகர் ஆவார்.

கோயில்களில் நிகழ்த்தப்படும் கிரியைகள் நித்திய பூசைகள், நைமித்திய பூசைகள்,
காமிக பூசைகள் என மூவகைப்படும். நைமித்திய பூசைகளில் ஒன்றாக மஹா கும்பா
பிஷேகம் விளங்குகின்றது. இவ் ஆலய கும்பாபிஷேக நிகழ்வு 22 06 81-ல் நடந்தேறி
16 ஆண்டுகளின் பின் மீண்டும் 08-06 97 அன்று பல புனருத்தாரண வேலைகளின்
பின் இனிதே நிறைவெய்தியுள்ளது. இக் கும்பாபிஷேகமானது நிகழும் ஈசுவர ஆண்டு
வைகாசித் திங்கள் 25-ம் நாள் (08 06 97) ஞாயிறு அதிகாலை 5 3 மணி முதல் 6/16
மணிவரை வந்த வளர் திருதியையும், புனர்பூச நட்சத்திரமும, சித்தயோகமும் கூடிய
இடபலக்கின சுப முகூர்த்தத்தில் நடந்தேறியுள்ளது.

எனது முகாமைக் காலகட்டத்தில் இந்நிகழ்வு இனிதே திருப்தியாக நிறைவேறி
உள்ளமை குறித்து ஆத்ம திருப்தியடைகிறேன். இப்புனித கைங்கரியம் குறித்த அட்ட
வணைக் கேற்ப இனிதே நிறைவெய்தியுள்ளதானது எம் பெருமான் செயலன்றி வேறெது
வுமில்லை. இப்புனித கைங்கரியம் நிறைவேற முன்நின்றுழைத்த திருப்பணிச்சபையினர்,
சமயப்பெரியோர்கள், கிரியாலய குருக்களமார் குறிப்பாக கும்பாபிஷேக பிரதம குரு
சி. சிதம்பரநாதக்குருக்கள் ஆகியோர் என்றும் நினைவுகூர வேண்டியவர்கள் ஆவர். இப்
பெருங் கைங்கரியத்துக்கு நிதியுதவி, பொருளுதவி புரிந்த அடியார்கள், தனிப்பட்ட
முறையில் ஆலய புனருத்தாரண வேலைகளில் பங்குகொண்டோர், ஆலய வழிபடுவோர்
சபையினர், சிரமதான வேலைகளில் பங்கு கொண்ட அனைத்து அடியார் பெருமக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராணிகர்கள் அனைத்து தரப்பினருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். யாவர்க்கும் மாவடியான் அருளாட்சி என்றும் கிடைத்தவண்ணமே இருக்கும்.

தொடர்ந்து மகாகும்பாபிஷேக நிகழ்வின் ஒரு அங்கமாக திருப்பணிச்சபையினரால் இம் மகாகும்பாபிஷேக மலர் வெளியிடப்படுகின்றது. இம்மலராக்கத்திற்கு திருப்பணி சபை மலர்க்குழு முழுமுயற்சியுடன் செயலாற்றியதை மலர் விடயதானங்களும், குறுகிய காலத்தில் வெளிவந்தமையும் பறைசாற்றி நிற்கின்றன. இம்மலரும் மலர் வெளியீடும் நன்கு சிறப்புற்று அமைய எனது ஆசிகளைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். மேலும் இவ்வாலயம் சிறப்புற அனைத்து தரப்பினரதும் ஒத்துழைப்பை வேண்டுவதுடன், ஈழத்து இந்து மக்களது இன்னல்கள் களைந்து எல்லோரும் இன்புற்று வையகத்து வாழ்வாங்கு வாழ மாவடி விநாயகனைத் தொழுவோமாக.

இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!

சி. இராமலிங்கம்
(முகாமையாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வா
## ழ்
## த்
## து

ஆற்றங் கரையில்
அமர்வார் பிள்ளையார் ஆலமரத்தடி அதுவும் வழக்கே
ஆனால் காண்பீர்
அதிசயம் இங்கே அவர் உவப்பதோ! வெள்ளை மாவடிதனை
மீசாலையூர்
வெள்ளை மாவடியில் வீற்றிருக்கும் விநாயகப் பெருமானுக்கு
ஆகம விதிப்படி
அலங்காரம் அர்ச்சனை ஆராதனையுடன் பூரண
கும்ப நீரால்
குடமுழுக்காற்றிடக் குதிர்ந்ததே வேளை மாவடியான் தன்
மகிமையாலே
கொட்டிடும் மேளம் குழலதின் நாதம்
மறையவர்
ஓதிடும் மந்திர ஒலியுடன் நறுமலர் தூவி நல்
விழா எடுக்க
வெவ்வினை தீர்ந்திடும் நல்வினை சார்ந்திடும்
திருக் கோயில்
சிதைவுகள் திருத்தி செம்மையாக்கி திருவருள் கூட்டிடும்
திருப்பணிக்கு
நிகரில்லைக் கண்டீர் இந் நிலவுலகம் தனிலே
நாடு
செழித்திடும் நன்மை பெருகிடும் மாரி பொழிந்திடும்
மண்வளமடைந்திடும்
அறிவு பெருகும், ஆற்றல் தழைக்கும், அமைதியும் நிலவிடும்
சித்தியும் புத்தியும்
சக்தியாய்க் கொண்ட மத்தள வயிற்று
மாமணி தனையே
குட்டிக் கும்பிட்டு குவலயம் போற்றிட
குடமுழுக்காற்றிடும்
குறிக்கோள் கொண்ட அன்பர்கள் அடியவர்
அறங்காவலர் சபையினர்
அனைவருக்கும் அம்பிகை மைந்தன் அருளது வேண்டி
அன்புடன் வணங்கி
ஆசி கூறி வாழ்க வாழ்கவென வாழ்த்துகின்றேன்
பெரு விழாக்கண்டு
பொங்கிடும் மகிழ்ச்சி என்றும் தங்கிட வேண்டி
தனிமலர்
ஆக்கிடல் பெரும் தவப்பயன் அன்றோ!
ஆன்மீக மலராக
அது மலர்ந்திடவே அல்லும் பகலும் அயராதுழைத்த
மலர்க்குழுவுக்கும்
அது தொடர்பான பணிகளுக்கு ஆதரவளித்த
திருப்பணிச் சபைக்கும்
மலரினைப் பெற்று மணம் நுகர்ந்திடவே ஆவலாயிருக்கும்
அடியவர்களுக்கும்
மங்கலமனைத்தும் பொங்கிடவே தான் ஆனைமுகத்தோன்
அடிகளைப் பணிந்து
வணக்கத்தோடு வாழ்த்தும் கூறி நன்றியும் சேர்த்து
நயத்துடன் தந்தேன்
வணக்கம்

திருமதி
புஸ்பலதிகவதி
கணேசலிங்கம்

முன்னாள்
கல்விப்பணிப்பாளர்
தென்மராட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
கணபதி துணை

ஸ்ரீசாலை

# திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோவில்

# தர்மகர்த்தா சபை

திரு. ஐ. மாணிக்கவாசகர் — தலைவர்
திரு. சோ. கணேசலிங்கம் — துணைத்தலைவர்
(வழிபடுவோர் சபை பிரதிநிதி)
திரு. சு. அருளானந்தசிவம் — செயலாளர்
திரு. த. செல்வராசா — பொருளாளர்
திரு. சி. இராமலிங்கம் — முகாமையாளர்
திரு. க. சோமசேகரம்
திரு. ச. சந்திரகுமார்
திரு. அ. கயிலாயபிள்ளை —வழிபடுவோர்சபை பிரதிநிதி

# வழிபடுவோர்சபை செயற்குழு

திரு. சோ. கணேசலிங்கம் — தலைவர்
திரு. செ. மனோகரன் — துணைத்தலைவர்
திரு. அ. கயிலாயபிள்ளை — செயலாளர்
திரு சி. க. சிவசுப்பிரமணியம் — துணைச்செயலாளர்
திரு. ம. குமாரவேல்ராசா — பொருளாளர்
திரு. சி. கணேசன்
திருமதி சீதாதேவி சச்சிதானந்தம்
திருமதி அற்புதமலர் அரசரத்தினம்
திரு. சி. கணேசன்
திரு. சி. முருகதாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே ..........


| | | பக்கம் |
|---|---|---|
| 1 | மலராசிரியரின் பேனாவிலிருந்து ......... | — 01 |
| 2 | மீசாலை வெள்ளைமாவடிப் பிள்ளையார் ஆலய மான்மியம் | — 04 |
| 3 | விநாயகர் வழிபாடும் தோத்திரங்களும் | — 11 |
| 4 | பண்டைய ஈழத்து நாணயங்களில் இந்துத்தெய்வங்கள் | — 16 |
| 5 | யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கான அபிவிருத்தி திறமுறைகள் | — 23 |
| 6 | பக்திநெறியும் மணிவாசகரும் | — 28 |
| 7 | அன்பே சிவம் | — 31 |
| 8 | கும்பாபிஷேக மகிமை | — 36 |
| 9 | இந்துசமயத் தளத்தில் பரதநாட்டிய அழகியல் | — 39 |
| 10 | ஞானசம்பந்தர் விடுதூது | — 43 |
| 11 | விநாயக பரதத்துவமும் வெள்ளைமாவடியானும் —ஒரு நோக்கு | — 47 |
| 12 | திருக்கோயில்களின் தல இலக்கிய மரபில் திருவூஞ்சல்கள் | — 51 |
| 13 | வெள்ளை மாவடியான் ....... .... | — 61 |
| 14 | வரங்கொடுக்கும் வெள்ளைமாவடியான் ....... ... | — 63 |
| 15 | சிந்தையே மகிழ நல்லருள் புரிவாய் ........... | — 66 |
| 16 | பாமாலை | — 67 |
| 17 | வைணவம் ஓர் அறிமுகம் | — 69 |
| 18 | இந்துசமய மரபில் பெண்மை | — 76 |
| 19 | தோத்திரப்பாடல்கள் | |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலராசிரியரின் பேனாவிலிருந்து........

திரு. சோ. கணேசலிங்கம் அவர்கள்
(B. A. Dip-in-Ed., M. A.)

யாழ்ப்பாண நகருக்குக் கிழக்குத் திசையில் பரந்து காணப்படும் வளமான நிலப் பகுதி தென்மராட்சி. இப்பிரதேசத்தின் மத்திய பகுதியை அணி செய்வது மீசாலைப்பதி. ஆதியில் மாஞ்சோலை என வழங்கிய இவ் ஊர்ப்பெயர், காலப்போக்கில் மருவி மீசாலையாயிற்று என்பது ஆய்வாளர் கருத்தாகும். 'தாளுண்ட நீரைத் தலையாலேதான் தரும்' நெடிதுயர்ந்த தெங்குடன், பலாவும் மாவும் இவ்வூருக்கு, வளமும் வனப்பும் சேர்க்கின்றன. தீஞ்சுவை தரும் மாங்கனிகளினால் சிறப்புப் பெற்றிடும் பதிஇது. இதனாலன்றோ, அம்மையப்பனை வலம் வந்து மாங்கனி பெற்ற தலைமகன் இங்கு விரும்பிக் கோயில் கொண்டுள்ளார்.

விடா முயற்சியும், வினையாற்றும் திறனும் கொண்ட இவ் ஊர் மக்கள், விருந்தோம்பலில் விஞ்சி நிற்கின்றனர். இறை பக்தியுடன், சமய அனுட்டானங்களையும் பேணி ஆசார சீலத்துடன் வாழ்ந்து வருகின்றனர். உழைப்பினால் உயர்வு பெற்று, திருமகளின் அருளுடன், கலைமகளின் கடாட்சமும் பெற்று உள்ளனர். இங்கு வாழும் மக்களின் கண்கண்ட தெய்வமாக, காத்திடும் கடவுளாக மாவடிப்பிள்ளையார் விளங்குகின்றார்.

திருநீலகண்ட வெள்ளை மாவடிப்பிள்ளையார் ஆலயம், தொன்மையும் திருவருட் திறனும் மிக்கது. இது தென்மராட்சிப் பகுதியில் தனிச்சிறப்புப் பெற்று விளங்கும் விநாயகர் ஆலயம் ஆகும். மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் முச்சிறப்புக்களையும் பெற்றுத் திகழ்கின்றது. வெள்ளை மாவின் அடியில், மண்ணில் புதைந்திருந்த மூல விக்கிரகம், திருநீலகண்டம் வழிகாட்ட, முத்தனுக்குக் காட்சி கொடுத்து எழுந்தருளிற்று. இதனால் இங்கு உறையும் தலமூர்த்தி, திருநீலகண்ட வெள்ளை மாவடிப்பிள்ளையார் எனும் திருநாமத்தைப் பெற்றார்.

இருநூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக மக்கள் இங்கு வழிபாடாற்றி வந்துள்ளனர். தொடர்ச்சியாக ஒரு தசாப்த காலத்துக்கு. இவ் ஆலயத்தில் மகோற்சவம் நடைபெற்று வருவதற்கு, உற்சவ உபயகாரரின் வரலாறு சான்று பகருகின்றது.

காலத்துக்கு காலம், இந்த ஆலயத்தில் அடியார்களின் ஆதரவுடன், திருப்பணி வேலைகள் மேற் சொள்ளப்பட்டு வந்துள்ளன. எமது பிரதேசத்தில் பல்லாண்டுகளாக நிலவிவந்த நலமற்ற சூழ்நிலையினால் திருப்பணி வேலைகள் தடைப்பட்டன. பதினாறு ஆண்டுகளாகியும் குடமுழுக்கு விழாவுக்கான காலம் கனிந்து வரவில்லை. காலச் சூழ்நிலை, சாதகமாக மாறியதால், இவ்வாண்டு மஹாகும்பாபிஷேகத்தை நடாத்துவதெனத் தீர்மானிக்சப்பட்டது. அத்துடன் கும்பாபிஷேக நினைவாக மலர் ஒன்றினையும் வெளியிடுவதென முடிவாயிற்று. மூன்று பேரைக் கொண்ட மலர்க்குழு தெரிவு செய்யப்பட்டது.

விநாயகப்பெருமானின் திருவருளினால் அடியவர்கள் பலர் திருப்பணிக்கு நிதி உதவிட முன்வந்தனர். தர்மகர்த்தா சபையே திருப்பணிச் சபையாகவும் செயற்படுவதெனத் தீர்மானிக்கப்பட்டது. தர்மகர்த்தா சபையின் தலைவரான, திரு. ஐ. மாணிக்கவாசகர் அவர்கள், வசந்த மண்டபத்தையும் வைரவர் மண்டபத்தையும் அமைத்துத்தர முன்வந்தார். திரு. சோ. கணபதிப்பிள்ளை (குஞ்சையா) அவர்கள், சண்டேசுவரர் சந்நிதியைக் கட்டுவதற்கான நிதி உதவினார். யாகசாலைத் திருப்பணியும், சுற்றுமதிலும் ஊர் மக்கள் உதவியுடன் நிறைவேறின. கோயில் பிரகாரம் புதிதாக வர்ணம் தீட்டப்பட்டு, மெருகூட்டப்பட்டு பொலிவுடன் திகழ்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீசாலை வாழ் மக்களின் வணக்கத்துக் குரிய குருவாகவும், வழிகாட்டும் ஆசானா கவும் விளங்கும் பிரதிஷ்டா குரு, சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக் குருக்கள் அவர்களினால் கணித்துக் குறிக்கப்பட்ட நன்நாளாகிய 97 - 05 - 08 அன்று மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவதற்குத் திருவருள் கைகூடிற்று பிரதிஷ்டா குருவின் தலைமையில், அந்தணப் பெருமக்களின் அனுசரணையுடன், மஹாகும்பாபிஷேகக் கிரியைகள் விமரிசை யாக நடைபெற்றன. யாகப் புகையின் நறு மணமும், வேத மந்திர ஒலியின் நாதமும் மீசாலைப் பதியின் எண்திசையிலும் பரவி, பக்திப் பரவசத்தை ஏற்படுத்தின. கரை புரண்டோடும் வெள்ளமென அடியார் கூட் டம் ஆலயத்தைச் சரணடைந்தது. நல்லை ஆதினகுரு மகாசந்நிதானம், ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தர பரமாசார்ய சுவாமிகள், இவ்விழா வில் கலந்து சிறப்பித்தமை எமக்குப் பெரு மகிழ்வுதந்தது. மஹாகும்பாபிஷேக விழாக் காண்பது பெறுதற்கரிய பேறாகும். இப் பேற்றினைப் பெற்ற நாம் பெரும் புண்ணி யம் செய்தவர்களன்றோ!

மஹா கும்பாபிஷேகக் கிரியைகளைத் தலைமை தாங்கி நடாத்திய, பிரதிஷ்டாகுரு சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக் குருக்கள் அவர் களுக்கும், அவருடன் சேர்ந்து கிரியைகளை ஆற்றிய, ஞானசாகரம் கி. சோமசுந்தரக் குருக்கள் அவர்களுக்கும், மற்றும் அந்தணப் பெரியோர்களுக்கும், கோயில் நித்திய அர்ச் சகர்களுக்கும், எனது இதய பூர்வமான நன்றியினைச் சமர்ப்பணம் செய்கின்றேன். விழாவில் பங்குகொண்டு சிறப்பித்த, நல்லை ஆதின குரு மகாசந்நிதானம் அவர்களுக் கும் எனது உளங்கனிந்த நன்றி.

திருப்பணி வேலைகளை உரியகாலத் தில் நிறைவு செய்து தந்த, திரு. சி. பால சுப்பிரமணியம் குழுவினருக்கும், திரு. சி. வேலுப்பிள்ளை குழுவினருக்கும், வர்ணப் பூச்சுவேலைகளைச் செய்த திரு. செ. விக்கி னேஸ்வரமூர்த்தி (மீசாலை சிவா) குழுவி னருக்கும் திருப்பணி வேலைகளுக்கு உறுது ணையாக நின்று தொடர்ச்சியாக சிரமதா னப் பணிகளை மேற்கொண்ட அடியவர்க ளுக்கும் எனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

குடமுழுக்கு விழாக் கண்டு, உவகை மிகக் கொண்டு, உளம் பூரித்துப் பக்திப் பரவசத்தில் திளைத்திருக்கும் அடியவர் களுக்கு, அருட் பிரசாதமாக, நினைவுச் சின்னமாக, கும்பாபிஷேக மலரைச் சமர்ப் பிக்கின்றோம் இது அரிய பாரிஜாத மலராக மலர வேண்டுமென்பதைக் கருத் திற் கொண்டு, மலர்க் குழு செயற்பட்டது. தரமான ஆக்கங்களைப் பெற்றிட விழைந் தது. யாழ் பல்கலைக்கழக உபவேந்தர், பீடத்தலைவர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், ஆகியோர் விடய தானஞ் செய்துள்ளனர் அவர்களை அணுகி எமது கருத்தை வெளியிட்டபோது மறுப் புக் கூறாது மனமுவந்து, கட்டுரைகளைக் குறிப்பிட்ட காலத்துள் தந்துதவிய பெருந் தன்மை போற்றுதற்குரியது. மலர்க் குழு சார்பிலும், தனிப்பட்ட முறையிலும் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். உள்ளூர் அறிஞர்களும் அன்பர்களும் ஆக்கங்களைத் தந்துதவி உள்ளனர் அவர்களுக்கும் எமது அன்பான நன்றி.

கும்பாபிஷேக மலர்:

- பெரியோர்களின் அருளுரைகள், வாழ்த்துரைகள், ஆசியுரைகள்,
- மாவடிப்பிள்ளையார் மான்மியம்
- விநாய வழி பாட்டு மேன்மையை எடுத்தியம்பும் கட்டுரைகள்
- சமய மரபுசார் ஆய்வுக் கருத்துரைகள்
- திருவூஞ்சல் பாட்டு,
- தோத்திரப் பாடல்கள்,
- பக்திப் பரவசத்தால் கவிஞர் உள்ளத் தில் ஊற்றெடுத்த கவிதைகள்,
- கலையழகு நிரம்பிய புகைப்படங்கள்
- ஆலய செயற்பாடு தொடர்பான அறிக்கைகள்

என்பவற்றை உள்ளடக்கிய கருத்துக் கரு வூலமாக விளங்குகின்றது. பக்தி சிரத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுடன் ஆக்கப் பட்டு, விநாயகப் பெருமானின் பாத கமலங்களில் சமர்ப் பிக்கப் படும் இம் மலருக்கு அடியவர்கள் ஆதரவு தந்து நற்பயன் பெறுவர் என்பது எனது நம்பிக்கை. எதிர் காலத்தில் சமய சார்பான ஆய்வுகளை மேற்கொள்ளும் ஆய்வாளர்களுக்கு இது ஒரு வரப்பிரசாத மாக அமைவதுடன், உசாத்துணை நூலா கவும் பயன்படும் என எதிர்பார்க்கின்றேன்.

மீசாலை வெள்ளை மாவடிப் பிள்ளை யார், குடமுழுக்கு மலருக்கு ஆக்கங் களைத் தந்துதவிய அனைவருக்கும் நான் பெரிதும் கடப்பாடுடையேன். மலராக்கப் பணிகளில் அயரா ஊக்கத்துடன் உழைத்த திருப்பணிச் சபையினருக்கு எனது மனம் நிறைந்த நன்றி. மலர்த்தொகுப்பில் எனக்கு எல்லா வகையிலும் உறுதுணையாக நின்று ஒத்துழைத்த, திருப்பணிச் செயலாளர் திரு. அ. கைலாயபிள்ளை அவர்களுக்கு விஷேடமாக நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளேன். மலராசிரியருக்குப் பக்கத் துணையாக நின்று விளம்பரம் சேகரித்தல் விடயதானங்களை ஒழுங்கமைத்தல் போன்ற மலர் தொடர்பான பணிகளில் உதவி நல்கிய மலர்குழுவுக்கு எனது உள மார்ந்த நன்றி. மலரை ஆய்வுரை செய்த அறிஞர்களுக்கும், முற்பிரதிகளை வாங்கி ஊக்கமளித்த வள்ளல்களுக்கும் ஆதரவு நல்கிடும் அடியவர்களுக்கும் பெரிதும் நன்றியுடையேன்.

இம் மலரினை தெளிவாகவும் அழகா கவும் அச்சிட்டுத்தந்த மட்டுவில் திருக்கணித அச்சகத்தாருக்கு என்ஞான்றும் நன்றிக் கடன் பட்டுள்ளேன். கும்பாபிஷேக மலராக்கத்தில் ஒத்துழைப்பும் உதவியும் நல்கிய, ஒவ்வொவரையும் மனதில் இருத்தி ஒரு தரத்துக்குப் பலதரம், தனிப்பட்ட முறையிலும் மலர்க்குழு சார்பிலும் திருப் பணிச் சபை சார்பிலும் நன்றி கூறி, மீசாலை திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையாரது அருளாசி அனைவருக்கும் கிட்டிட அவர் திருவடிகளை இறைஞ்சு கின்றேன்.

ஈற்றில், வேண்டுவார் வேண்டுவன ஈந் தருளிக் காத்தருளும், கண் கண்ட தெய்வ மான திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையாரின் திருவருள் மகத்தானது.

உள்ளுணர்வாகவும், சமிக்கைகளாக வும் நிமித்தங்களாகவும் இறையருள் எமக்கு வழி காட்டிய சந்தர்ப்பங்கள் பற் பல. எடுத்தியம் பிடினும் நம்புதற்கரியன எனினும் அவரவர் உள்ளத்தால் உணரப் பட்டு வரும் அருட் செயற்பாடுகளாக மிளிர்கின்றன இத்துணை பெருமை மிகு பிள்ளையார் ஆலயம், பூரணப் பொலிவு பெற்றுத் திகழ வேண்டுமென்பதே எமது உள்ளத்தில் உருக் கொண்டுள்ள இடை யறாத சிந்தனையாகும்.

பல ஆண்டுகளுக்கு முன் தங்கமுத்து எனும் அம்மையாரினால் அடித்தளமிட்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள இராஜகோபுரத்திருப் பணி நிறைவடையாதுள்ளது இப்பணி நிறைவெய்தி, இராஜகோபுரம் வானளாவ ஓங்கி உயர்ந்து அருள் ஒளி பரப்பிட வேண்டும். ஊரின் எண் திசையிலும் வாழும் மக்கள் இராஜகோபுரத்தைத் தரிசித்து வணங்கிட திருவருள் பாலிக்க வேண்டும் இத் திருப்பணியோ பாரியது பெரும் நிதிச் செலவில் நிறைவேற வேண்டியது இவ் அரும்பணியை நிறைவேற்றிட அனை வரும் உறுதி கொள்வோம் அன்பர்களின் ஆதாரவுடன் திருப்பணி தொடரட்டும்.

எல்லாம் வல்ல விநாயகப் பெருமான் இன்னருளினால் எல்லா நலன்களும் எய்துக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீசாலை வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலய மான்மியம்

பண்டிதர் ந. கந்தையா அவர்கள்
(மீசாலை)

மீசாலை திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் ஆலய மான்மியத்தை, கிடைக்கப்பெற்ற ஆதாரங்களுடன் வெளிக் கொண்டுவர விரும்புகின்றேன். பிற்சந்ததியினருக்கு ஷெ ஆலயம் பற்றிய ஆய்வுக்கு இது ஒரு தூண்டுகோலாகவும் அதே நேரம் ஓர் ஆரம்பமாகவும் அமையும் என்பது எனது நம்பிக்கை.

**ஆதாரங்களாகக் கிடைத்தவை :**

1. சமகாலப் பெரியோரின் வாய்மூலத் தகவல்,
2. கர்ண பரம்பரைக் கதைகள்,
3. கோயில் தொடர்பான உறுதிகள்,
4. அத்திபாரம் வெட்டும் போது கிடைத்த கற்கள்,
5. முன்னைய மலர்கள்.

**கோயிலின் நிலையம் :**

இயற்கை எழில்மிகு ஈழவள நாட்டிலே அதன் மணிமுடி எனத்திகழும் யாழ் மாவட்டத்திலே புண்ணிய பூமியெனப் பெரியோரால் மதிக்கப்படும் தென்மராட்சிப் பகுதியிலே முக்கனிகளும் மலிந்த கிராமம் மீசாலை. இக் கிராமத்தின் மத்தியிலே யாழ்ப்பாணம் - கண்டி வீதிக்கு அண்மையிலே மீசாலை - அல்லாரை வீதியிலே அமைந்துள்ளது. மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலயம்.

**உற்பத்தி :**

யாழ்ப்பாண இராச்சியம் போர்த்துக்கேயரின் கைக்கு வருமுன்பே, இவ்ஆலயம் ஒரு வணக்க ஸ்தலமாக இருந்ததாக கர்ண பரம்பரைக் கதைமூலம் அறியக் கிடக்கின்றது. சாவகச்சேரி வாரிவனநாதர் சிவன் கோயில் போர்த்துக்கேயரால் இடிக்கப்படுவதை அறிந்த அடியார்கள் உடனே தாங்கள் வழிபட்டு வந்த விநாயகர் இலிங்கத்தை அயலிலே நின்ற வெள்ளைமா என்று அழைக்கப்பட்ட மரத்தின் அடியிலே புதைத்து வைத்து விட்டு மானசீகமாக அவ்விடத்து நின்று வணங்கினர். பின்னர் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்திலே அந்த இலிங்கம் வெளிப்பட்டது. (இது இற்றைக்கு 100 வருடங்களுக்கு முன் வாழ்ந்த பெரியோரால் அறியப்பட்டது) மேலும் வசந்த மண்டப அத்திபாரம் வெட்டும்போது, அவ்விடத்திலே பழைய வைரக் கற்களால் ஆன ஒரு அத்திபாரம் காணப்பட்டது. கற்கள் அழுத்தமாக பளபளப்பாகக் காணப்பட்டன. ஆனால் அவை தொல்பொருள் ஆய்வுக்கு உட்படுத்தப்படாமை துர்ரதிட்டமே. இவ்வத்திபாரத்தின் படி ஒரு சிறு ஆலயம் இருந்ததற்கான அறிகுறி தென்பட்டது.

**பிள்ளையார் வெளிப்பாடு :**

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் ஒரு நாள் முத்தன் என்றழைக்கப்படும் விவசாயி வெள்ளை மா நின்ற சந்திரகுமரேசன் புலம் என்ற காணியில் கொள்ளு விதைத்துக் கொத்திக் கொண்டிருந்தார். வெள்ளை மாவின் அடியிலே கொத்தும் போது, பெரிய திருநீலகண்டம் ஒன்று அம்மரத்தடியில் இருந்த துவாரத்தினூடே புகுந்தது. விவசாயி அந்த விஷப்பிராணியை வெளியே எடுக்க விரும்பி அத்துவாரத்தை மண்வெட்டியால் ஆழமாக்கினார் அப்பொழுது மண்வெட்டி ஒரு பொருளில் பட்டுச் சத்தம் கேட்டது. அப்பொழுது அவ்விடத்திலிருந்து இரத்தம் பெருகியது. ஆனால் திருநீலகண்டத்தைக் காணவில்லை. அதைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ட முத்தனுக்கு மயக்கம் வருவது போன்ற நிலை ஏற்பட்டது. உடனே அவர் வீட்டுக்குச் சென்று உணவும் உண்ணாது படுத்துவிட்டார்.

அன்றிரவு அவர் ஒரு கனவு கண்டார். விநாயகர் உருவத்திலே ஒருவர் தோன்றி "துன்பப்படாதே; அவ்விடத்திலே ஒரு விநாயகர் சிலை இருக்கிறது. அதையெடுத்து நீராட்டி அந்த மாவின் அடியிலே வைத்துப் பூசிப்பாயாக. நீ உண்ணும் உணவில் ஒரு பகுதியை எனக்குப் படைத்துவிடு" என்று கூறினார். விடிந்ததும் அந்த அடியார் சிலையைத் தோண்டி எடுத்து, அந்த மரத்தடியிலே வைத்து அமுது படைத்து வணங்கினார்.

பின்பு அந்தக் காணியின் சொந்தக்காரராகிய, முகமாலையிலிருந்த கேகயரத்தின முதலியாரிடம் நடந்தவற்றைக் கூறினார். முதலியாரும் அங்கிருந்து ஒற்றைச் சரத்தை வண்டியில் உரிய இடத்துக்கு வந்தார். வந்து, ஒரு சிறு வீடு அமைத்து, அந்தச் சிலையை அங்கே பிரதிட்டை செய்தார். அந்த ஆலயத்தை திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோயில் என அழைத்து வந்தார். அன்று கிடைத்த அந்த மூர்த்தியே இன்றும் வழிபாட்டில் இருக்கிறது. மண்வெட்டி பட்டவடு இன்றும் மூலலிங்கத்தில் காணக்கூடியதாக இருக்கிறது.

**அற்புதங்கள் :**

சிறிது காலஞ்செல்ல முதலியார் பெரிதாக ஆலயத்தைக் கட்ட விரும்பினார். முதலியாருடன் அயலவர்கள் ஊரவர்கள் என்று பலர் சேர்ந்து கொண்டனர். திருப்பணி வேலை ஆரம்பமானது. திருப்பணிக்குத் தேவையான மரங்களை அரசாங்கக் காட்டிலே தறித்தார்கள். அப்பொழுது வன இலாகா அதிகாரிகள் முதலியாரை நீதிபதி முன் நிறுத்தினர். நீதிபதியும் விசாரணைக்காக முதலியாரைத் தடுத்து வைத்தார். அன்றிரவு நீதிபதியின் மனைவிக்கு எதிர்பாராத வகையில் 'முடத்துநோ' என்றழைக்கப்பட்ட தொண்டை வியாதி ஏற்பட்டது. அவர் அன்னாகாரம் இல்லாமல் தவித்தார். சிறந்த வைத்தியர்கள் வைத்தியம் செய்தும் நோய் குறையவில்லை. மாறாகக் கூடிக்கொண்டே சென்றது. மனம் நொந்து போயிருந்த நீதிபதியின் எண்ணத்திலே முதலியார் தோன்றினார். "கோயில் கட்டத்தான் மரம் தறித்ததாகச் சொன்னாரே" என்று சிந்தித்தார். முதலியாரை அழைத்து விடயத்தைக் கூறி மனைவிக்கு விபூதி கொடுக்கும்படி வேண்டினார். முதலியாரும் விபூதியைக் கையிலே எடுத்துப் பிள்ளையாரைத் தியானித்து விபூதி கொடுத்தார். நோய் குறையத் தொடங்கியது. நீதிபதியும் மிகுந்த பயபக்தியோடு திருநீலகண்ட வெள்ளை மாவடிப்பிள்ளையாரை வணங்கினார். முதலியாரையும் விடுதலை செய்யும்படி பணித்தார். அத்தோடு திருப்பணிக்கு உதவியுஞ் செய்து ஒரு பட்டுக் குடையையும் காணிக்கையாக வழங்கினார்.

கோயில் கட்டப்பட்டு, தேவையான சில தட்டுமுட்டுச் சாமான்களும் வாங்கப்பட்டன. ஆலயத்தில் இரண்டு காலப்பூசை நடைபெற்றுக் கொண்டிருந்தது அக்காலத்து அம்பலவாணி என்றொரு கள்வன் இருந்தான். (இவர் ஒரு பிராமணர் என அறியக்கூடியதாக உள்ளது) இவன் ஆலயத்துட் புகுந்து சில பொருட்களை எடுத்துக் கொண்டு வெளியே வந்தான். அவனுடைய கண் ஒளி மங்கியது என்ன செய்வதென்றறியாது வாயிலில் நின்ற சண்பக மரத்திலே ஏறி இருந்தான். (இச்சண்பக மரம் அண்மையில் திருப்பணி செய்வதற்காக அகற்றப்பட்டது) அப்பொழுது தர்மகர்த்தாவாக இருந்தவர், கேகயரத்தின முதலியாரின் பேரன் சரவணமுத்து நொத்தாரிஸ் ஆவர். விநாயகப் பெருமான் கனவிலே அவர் முன் தோன்றி "கள்வன் ஒருவன் சண்பகமரத்திலே இருக்கிறான். நீ அவ்விடஞ்சென்று அவனிடமுள்ள பொருட்களை வாங்கிக்கொண்டு அவனுக்கு விபூதி கொடு அவனுக்கு ஒன்றுஞ் செய்யாதே" என்று திருவாய் மலர்ந்தருளினார்.

விடிந்ததும் தர்மகர்த்தா கோயிலுக்கு வந்தார் கள்வன் மரத்திலிருப்பதைக் கண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டார்பிள்ளையார் திருவாக்குப்படிசெய்தார். தர்மகர்த்தா விபூதி கொடுக்கவும் அவன் நெற்றியிலும்கண்ணிலும் பூசினான். மெல்ல மெல்ல அவனுக்குக் கண்ணொளி வந்தது. அவன் கோயிலை வலம்வந்தான். வாயிலில் நின்று, ''நான் இனிமேற் களவெடுக்க மாட்டேன்'' என்று சத்தியஞ் செய்தான். பின்பு ஒரு நாள் ஒரு வில்வமாலையை பிள்ளையாருக்குக் காணிக்கையாகக் கொடுத்தான்.

சுமார் 5 வருடங்களுக்கு முன்பு சரவணமுத்து என்ற ஓர் அடியார் இருந்தார். இவர் மீது பழிவாங்கும் நோக்கில் ஒரு பொய் வழக்குத் தொடுக்கப்பட்டது. இவர் கோயில் வாயிலில் நின்று தோத்திரம் செய்து ''அப்பனே என்னை அநியாயமாகக் கோட்டுக்கு இழுத்திருக்கிறார்கள். இதில் எனக்கு நீதி கிடைக்க அருள்புரிய வேண்டும். உனக்கு நான் ஒரு சகடை செய்து தருவேன்'' என்று நேர்த்தி வைத்தார். ஐங்கரன் அருளால் அவர் விடுதலையானார் இன்றும்அவரால் கொடுக்கப்பட்ட சகடையிலேயே சுவாமி வீதிவலம் வருகின்றார்.

இவ்வாலயத்தின் திருமஞ்சனக் கிணறு வழக்கத்துக்கு மாறாக உள்வீதிக்கு அப்பால் வடக்குப் பக்கமாக அமைந்திருக்கின்றது. திருமஞ்சனக் கிணறு கட்டப் பெரியோர்கள் நிலம் வகுக்க வந்தார்கள். அப்பொழுது ஒரு பாம்பு இவர்களின் முன்னே ஓடிச் சென்று ஓரிடத்திலே தனது உடம்பால் ஒரு வட்டமிட்டு ஓடியது. பெரியோர்கள் அவ்விடத்திலேயே திருமஞ்சனக் கிணறு கட்டினார்கள். அயலில் உள்ள மற்றைய கிணறுகளில் கிடைக்கும் நீரிலும் பார்க்க, இக்கிணற்றிலே கிடைக்கும் நீர் விஷேடமாக இருப்பதை இன்றும் காணலாம். இக்கதை இதனுடன் சம்பந்தப்பட்டவர்களால் நேரிலே கூறப்பட்டது.

**முகாமைகள் :**

தனிப்பட்ட முகாமையில் இயங்கிய இவ்வாலய நிர்வாகம் இப்பொழுது காத்திரமான ஒரு தர்மகர்த்தா சபையின் நிர்வாகத்தில் இயங்குகின்றது.

கேயரத்தின முதலியார் வழக்கில் விடுதலையானதும் அவர் காட்டில் தறித்த மரங்களையும் வேறு மரங்களையும் கொண்டு இரண்டு மண்டபங்களை ஆக்கினார். நித்தியபூசை நியமமாக நடைபெற ஒழுங்குகள் செய்தார். மேலும் இவ்வாலயம் செவ்வனே நடைபெற பல பெரியோர்கள் பல கிராமங்களில், நிலபுலன்களைத் தரும சாதனஞ் செய்தனர்.

முதலியார் சிவபதமடைய அவருடைய மகன் கணபதிப்பிள்ளை மணியகாரன் முகாமைப் பொறுப்பை ஏற்றார். அவருக்குப் பின் அவருடைய மகன் சரவணமுத்து நொத்தாரிஸ் முகாமைப் பொறுப்பை ஏற்று நடத்தினார். இவருடைய காலத்திலேதான் ஆகம விதிப்படி மண்டபங்கள் அமைக்கப்பட்டு மூன்றுகால நித்திய பூசையும் நைமித்தியமும் நடைபெற்றன என்பதை அறிய முடிகின்றது.

சரவணமுத்து நொத்தாரிஸ்சைத் தொடர்ந்து அவருடைய மகன் ஏரம்பு அவர்கள் கோயில் நிர்வாகத்தை நடத்தினார். இச்காலத்தில் ஏரம்பரின் பேரன் திரு. வி. சபாரத்தினம் ஏரம்புடன் சேர்ந்து நிர்வாகத்துக்கு உதவினார்.

ஏரம்பு அவர்களின் பின்பு அவருடைய மகன் விநாசித்தம்பி தனது பொறுப்பை தன்னுடைய இளையமகனான சின்னையா என்று எல்லோராலும் செல்லமாக அழைக்கப்படும் சபாரத்தினத்திடம் ஒப்படைத்தார். இவரே இக்கோயில் நிர்வாகத்தை மிகச்சிறப்பாக சுமார் 50 வருடங்கள் நடத்தியவர் என்ற பெருமைக்குரியவர். கஷ்டமான பொருளாதார நிலையிலும் மிகச் சிறப்பாகக் கோயிலை நிர்வகித்தவர். இவருடைய காலத்திலேயே இவ்வாலயத்துக்கு (1954ஆம் ஆண்டு) சட்ட பூர்வமாகத் தரும கர்த்தாசபை ஏற்படுத்தப்பட்டது. திரு. சபாரத்தினம் தன்னுடைய அந்திம காலத்தில் தர்மகர்த்தாக்களில்ஒருவரான இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர் திரு. தம்பிராசா அவர்களை முகாமையாளராக நியமித்து அவருக்கு வழிகாட்டியாகவிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபாரத்தினம் காலமாகக் குறிப்பிட்ட தம்பிராசா நிர்வாகப்பொறுப்பை ஏற்றார். இவர் தான் இக்கோயிலில் குறிக்கப்பட்ட நேரங்களில் காலதாமதமில்லாமல் பூசைகள் நடைபெற ஒழுங்குகள் செய்தவர் ஆவர். இதனால் வழிபடுவோர் தொகை அதிகரித்தது. ஊர் மக்களின் உபயங்கள் அதிகரித்தன. ஆலயத்தின் உட்பிரகாரம் முழுவதும் ஓட்டினால் வேயப்பட்டது. உட்பிரகாரத்திலே முருகன், விஷ்ணு ஆகிய தெய்வங்களுக்கு தூபியுடன் கூடிய ஆலயங்கள் அமைக்கப்பட்டன. உட்பிரகாரச் சுவர்களில் புராண, இதிகாச சம்பந்தமான ஓவியங்கள் தீட்டப்பட்டன. கணபதி ஹோமம் ஆரம்பிக்கப்பட்டு வருடந்தோறும் நடைபெற்றது. மாதசதுர்தியிலும் வெள்ளிக்கிழமைகளிலும் விஷேட பூசை ஆராதனைகளுடன் எம் பெருமான் உள்வீதி வலம் வர ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் இவர் ஒரு சில வருடங்களே ( சுமார் 5 வருடங்கள் ) தொண்டாற்றமுடிந்தது. தனக்குப் பின் முகாமையாளராக இருக்கக்கூடியதாக திரு. சி. இராமலிங்கத்துக்குப் பயிற்சி கொடுத்து மறைந்தார். இவ் ஆலயத்துக்கு வழிபடுவோர் சபை ஒன்றும் தம்பிராசா அவர்களின் காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டது.

இவருக்குப்பின் திரு. சி. இராமலிங்கம் அவர்கள் முகாமைப் பொறுப்பினை ஏற்று ஆலயத்தைச் சிறப்பாக நடத்தி வருகின்றார். இவர் வயதில் இளைஞர் ஆனாலும் நிர்வாகத் திறனில் முதியவராகவே காணப்படுகின்றார். இவர் வழிபடுவோர் சபையின் அனுசரணையுடன் ஆலயத்தில் நித்திய, நைமித்தியகிரியைகள் குறைவின்றிக்குறித்த நேரத்தில் நடைபெற நடவடிக்கை எடுத்து வருகின்றார். இவருடைய காலத்தில் ஆகம விதிப்படி வசந்தமண்டபம், யாகமண்டபம், வைரவர் கோயில், சண்டேசுரர் கோயில், வெளிப்பிரகார மதில் என்பன அமைக்கப் பெற்றன. திருப்பணிச் சபையின் ஒத்துழைப்புடன் குடமுழுக்குக்கு ஏற்ற ஒழுங்குகளைச் செய்தார். இவர் நோய்நொடியின்றி வாழ்ந்து இவ் ஆலயத்துக்கு மேன்மேலும் தொண்டாற்றிவர எல்லாம்வல்ல வெள்ளை மாவடிவிநாயகனைப் பிரார்த்திப்போமாக.

**திருவிழா ஆரம்ப காலம் :**

இற்றைக்கு சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்பு இவ் ஆலயத்தில் திருவிழா ஆரம்பமாகியது. திருவிழா ஆரம்பமான காலந் தொட்டு, கொடியேற்றத் திருவிழா, கேயரத்தினத்தின் வழித் தோன்றல்களினாலேயே பெய்யப்பட்டு வந்த இந்தத் திருவிழா இப்பொழுது அவருடைய மகள் முகமாலை க. கனகலிங்கம் அவர்களால் செய்யப்படுகிறது.

திருவிழா ஆரம்பமான காலத்தில், கொடிகாமத்தைச் சேர்ந்த கட்டைப் பண்டாரம் என அழைக்கப்பட்ட திரு. கோவிந்தர் எட்டாந் திருவிழாவை வேட்டைத் திருவிழாவாகச் செய்து வந்தார் அவருக்கும் பின் அவருடைய மகன் வேலுப்பிள்ளை அவர்கள் இத்திருவிழவைச் செய்து வந்தார். 1916 ஆம் ஆண்டு நடந்தேறிய ஒரு வழக்கின்படி, அந்தத் திருவிழாவைச் செய்யும் உரிமை வேலுப்பிள்ளையின் இளைய மகன் சோமசுந்தரத்திடம் ஒப்படைக்கப் பட்டது வேலுப்பிள்ளை வேட்டைத் திருவிழாவுக்காக சிவப்பு நிற குதிரை வாகனமென்றை உபயஞ் செய்தார். சோமசுந்தரம் செம்மறிக் கடா, சிங்கம் ஆகிய வாகனங்களை உபகரித்தார் அவரின் பின்பு அவருடைய இளைய மகன் கணேசலிங்கத்திடம் திருவிழா ஒப்படைக்கப்பட்டது. தனது மூதாதைகளின் வழி நின்று இவரும் வெள்ளை நிறத்தில் ஒரு சோடிக்குதிரை வாகனத்தைக் கொடுத்தார். 1916 ஆம் ஆண்டு எழுதப்பட்ட உறுதியின்படி இவ் ஆண்டுக்குச் சில வருடங்கள் முன்பாவது இவ்வாலயத்தில் திருவிழா தொடங்கி இருக்க வேண்டு மென்பதை உறுதியாகக் கூறலாம்.

**குடமுழுக்கு :**

இவ்வாலயம் பல குடமுழுக்கு விழாக்களைக் கண்டிருக்கிறது. ஆனால் 22 - 06 - 1981 இல் நடைபெற்ற குடமுழுக்கைத் தவிர்ந்த ஏனைய குடமுழுக்குகள் பற்றி எழுத்து மூலமான எவ்வித சான்றும் கிடைக்கவில்லை. அடியேன் காலத்தில் நடந்தேறிய குடமுழுக்குக்கள் நான்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்று 1947 இல் நடந்தேறியது. இரண்டாவது குடமுழுக்கு 1957 ஆம் ஆண்டு நடைபெற்றது. மூன்றாவது குடமுழுக்கு 22 - 06 - 1981 இல் நிகழ்ந்தது. நான்காவது குடமுழுக்கு விழா 1997 - 05 - 08 இல் நடைபெற்றது. இவைகளை விட ஆலயம் ஆகம விதிப்படி கட்டப்பட்ட காலத்தே ஒரு குடமுழுக்கு கட்டாயம் நடந்திருக்கும் எனக் கூறுவது பிழையில்லை.

**இவ் ஆலய வளர்ச்சிக்கு உதவிய பெரியார்கள் :**

இவ் ஆலய வளர்ச்சிக்கு உதவிய பெரியார்கள். என்று கூறும் போது, சாவகச்சேரி, மீசாலை, கொடிகாமம், முகமாலை ஆகிய இடங்களிலுள்ள பலருக்கும் பொருந்தும். என்றாலும் இவ் ஆலயத்தின் ஆரம்பகாலத்திலே, ஆலய வளர்ச்சிக்காக, நிலபுலம், திருப்பணி, திருவிழா முதலிய உபயங்களைத் தனித்து நின்று செய்தவர்கள் ஒரு சிலரே.

**அருட்பெரு வள்ளல் ஆண்டார் — அவரின்பரம்பரை :**

இவர்கள் இவ் ஆலயத்துக்குப் பெருந்தொண்டாற்றி உள்ளனர். காணிகளையும் சப்பறம் ஒன்றையும் உபகரித்ததோடு அமையாது, எம் பெருமான் தீர்த்தமாடவென வெளிவீதியில் வடகிழக்கில் ஒரு பெரிய தீர்த்தக் கேணியைக் கல்லால் கட்டி, அதன் கரையிலே சுவாமி இளைப்பாற ஒரு மண்டபமும் அமைத்தார்கள் இவைகளைப் பராமரிப்பவர்கள் இன்றும் அவர்களே.

**றங்கூன் சுப்பிரமணியம் :**

இவர் றகூனில் தொழில் புரிந்தமையினால் றங்கூன் சுப்பிரமணியம் என்று அழைக்கப்பட்டார். இவர் றன்கூனில் இருந்து பெருந்தொகை பணம் அனுப்பினார். அந்தப்பணத்திலே தீர்த்தக்கேணி செப்பனிடப்பட்டது. திருமஞ்சனக் கிணறு கட்டப்பட்டது. கோயிலின் வெளிவீதியில் வடபகுதிக்கு மதில் கட்டப்பட்டது.

**பெரியார் வேலுப்பிள்ளை :**

வேலுப்பிள்ளை என்பவர் ஆண்டார் வழித் தோன்றல்களில் ஒருவர். இவரும் இவருடைய மனைவியாரும், (கொடுக்கன் விதானை பரம்பரை) தங்களது சொத்துக்களை விற்று ஆலயத் திருப்பணிக்கு உதவினார்கள். உட்பிரகாரத்தின் ஒரு பகுதி ஓட்டினால் வேயப்பட்டது. வாகன சாலை, மடப்பள்ளி, வில்வறை, களஞ்சிய அறை, குருக்கள் அறை, என்பனவும் கட்டப்பட்டன இவர்களின் தொண்டுகளை நினைவு கூருமுகமாக இவர்களின் நிழலுருக்கள் வாகன சாலையின் சுவரிலே வைக்கப்பட்டுள்ளன.

**சிதம்பரநாத தேசிகர் :**

இவர் ஆலயத்தின் அயலிலே வசித்தவர். இவர் குருபூசை மடமொன்றை அமைத்து, நால்வரினதும் குருபூசை தினங்களைச் சிறப்பாகக் கொண்டாடி அன்னதானமும் அளித்து வந்தார். இப்பொழுது நிர்வாகத்தினால் அமைக்கப்பட்ட இன்னொரு மடத்திலும் அன்னதானம் வழங்கப்படுகிறது.

**சிவசங்கர நமசிவாயம் பரம்பரையினர் :**

இவரைக் கொடுக்கன் விதானை என அழைப்பார்கள். கோயிலின் வளர்ச்சிக்கு உழைத்தவர்களில் இப்பரம்பரையினரும் அடங்குவர். இவரும், இவருடைய இளைய மகன் தங்கமுத்து என்பவரும் கோயிலுக்கு நிலம் வழங்கி உள்ளனர் தங்கமுத்துவினால் ஆரம்பிக்கப்பட்ட இராச கோபுரம் இன்னும் முடிவுறாத நிலையில் உள்ளது. இதுமுடிவுற பிள்ளையார் அருள்புரிவாராக.

இப்பொழுது நடைபெற்ற புனருத்தாரணத்தின் போது சில அடியார்கள் புதிதாகத் திருப்பணி சில செய்தார்கள். ஆகமவிதிப்படி கலசம் வைத்து அமைக்கப்பட்ட வசந்தமண்டபம் திரு. ஐ. மாணிக்கவாசகர் குடும்பத்தினால் உபயஞ் செய்யப்பட்டது. இவர்கள் மேலும் வைரவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்தைத் திருப்பணிச் சபையுடன் சேர்ந்து திருத்தி அமைத்துள்ளார்கள். அயலிலே வசிக்கும் குஞ்சையா என்று அழைக்கப்படும் கணபதிப்பிள்ளை என்ற அடியார் சண்டேசுரருக்குக் கோயில் அமைத்துள்ளார். இவைகளை விட அமைப்பு ரீதியாக தற்காலிக சபைகளினூடாகப் பல திருப்பணிகள் நடைபெற்றன.

**தேர்த் திருப்பணிச் சபை :**

எங்கள் ஆலயத்துக்கு ஒரு சித்திரத் தேர் செய்யவிரும்பிய அடியார்கள் தேர்த் திருப்பணிச் சபை என்ற பெயரில் ஒரு சபையை ஆக்கினர். அதன் தலைவாரக பிரபலவர்த்தகரும் கொடைவள்ளலுமாகிய M. T. சுப்பிரமணியம் அவர்களும், செயலாளராக ஓய்வு பெற்ற கிராம சேவையாளர் க. சதாசிவம் அவர்களும் பொருளாளராக ஓய்வு பெற்ற ஆசிரியர் கி. செல்லையா அவர்களும் சேவையாற்றி அடியார்களின் உபயங்களுடன் ஒரு சித்திரத்தேர் அமைத்தனர். அப்படியே தேர் முட்டித் திருப்பணிச்சபை, திருப்பணிச்சபை என மூன்று சபைகள் அந்தந்தந்த திருப்பணிக்காக இயங்கின. திருப்பணிச் சபையின் தலைவாரக M T. சுப்பிரமணியம் அவர்களும், செயலாளராக ஆசிரியர் திரு. க. குமாரசாமி அவர்களும் பொருளாளராக ஓய்வு பெற்ற ஆசிரியர் திரு. க. சங்கரப்பிள்ளை அவர்களும் கடமையாற்றினர். இவர்கள் நான்கு மண்டபங்களையும் வைரக் கற்களால் கட்டி, கோயிலைத் திருத்தி, 22-06-1981 இல் குடமுழுக்கு செய்தனர்.

இம் மூன்று சபைகளிலும் தலைவராகக் கடமையாற்றிய திரு. சுப்பிரமணியம் அவர்கள், தேர்த்திருவிழாவையும் ஏற்று, அது எக்காலமும் முட்டின்றி நடைபெற ஏற்ற ஒழுங்குகளையும் செய்து இறைபதமடைந்தார். இவரைப் போன்றே கொடி ஊர்வலம் நடைபெறுவதற்கும் திரு. க. ஆறுமுகம் அவர்கள் ஆவண மூலம் ஏற்ற ஒழுங்குகளைச் செய்துள்ளார்.

**வழிபடுவோர் சபை :**

*1992-03-23* ஆம் திகதி தொடக்கம் கலாச்சார அமைச்சினாற் பதிவு செய்யப்பட்ட (பதிவு இல: H A/4/J/165) ஒரு வழிபடுவோர்சபை இயங்குகின்றது 1994ஆம் ஆண்டு, தென்மராட்சியின் பிரதேச செயலர் திரு. பு. சுந்தரம்பிள்ளை அவர்கள் முன்னிலையில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தின்படி, வழிபடுவோர் சபையின், நிர்வாகசபை உறுப்பினர் இருவர் மரபு வழியாக தருமகர்த்தா சபையில் இடம் பெறுவர். இதன் தற்போதய தலைவர் திரு. சோ. கணேசலிங்கம், B. A. Dip-in-Ed, M. A, ஓய்வு பெற்ற கொத்தணி அதிபர் அவர்களும் செயலாளராக திரு. அ. கைலாயபிள்ளை B. A. Hons Dip-in-Ed, பளை கல்விக் கோட்ட அலுவலர் அவர்களும், பொருளாளராக திரு. ம. குமாரவேல்ராசா (வெளி நாடு சென்று வந்தவர்) ஆண்டாள் பரம்பரையினர் அவர்களும் திறம்படச் செயலாற்றுகின்றனர். தலைவரும் செயலாளரும் தருமகர்த்தா சபையில் அங்கத்துவம் வகிக்கின்றனர். இச் சபை, சமய அனுட்டானங்களை ஊக்குவிப்பதிலும், கலாசார விழுமியங்களை வளர்ப்பதிலும் மிகுந்த அக்கறை காட்டி வருகின்றது.

**இச்சபையின் செயற்பாடுகள் :**

1. கூட்டுப் பிரார்த்தனை (பிரதி வெள்ளிக்கிழமையும்)
2. புராண படனம் (கந்த புராணம், திருவிளையாடற் புரணம் பெரிய புராணம், சிவராத்திரி புராணம், ஏகாதசிப் புராணம் திருவாதவூர் அடிகள் புராணம் என்பன) ஏறக்குறைய வருடம் முழுவதும் புராண படனம் நடைபெறும், ஆலயம் இது ஒன்றே ஆகும்
3. திருவாசகம் முற்றோதல்
4. தேவாரம் முற்றோதல்
5. சமய சம்பந்தமான பேச்சுப் போட்டகள் (வருடந்தோறும்)
6. திருமுறை ஓதற்போட்டிகள் (வருடந்தோறும்)
7. சமய சம்பந்தமான பொதறிவுப் போட்டிகள் (வருடந்தோறும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. மலர் மாலை கட்டும் போட்டிகள் ( வருடந்தோறும் )

மேலும் இச்சபையின் ஆதரவில் :

1. பண்ணிசை வகுப்பொன்று நடத்துதல்

2. நூல் நிலையம் ஒன்றும் ( சமயசம்பந்தமானது ) நிறுவுதல்

ஆகிய தொண்டுகளையும் வருங்காலத்தில் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

**பூசகர்கள் :**

இவ்வாலயத்தில் காலைப் பூசை காலை 8 – 00 மணிக்கும், மத்தியானப் பூசை பகல் 12 – 00 மணிக்கும் பின்னேரப் பூசை மாலை 5 – 00 மணிக்கும் ( விஷேட உற்சவ நாட்கள் தவிர ) நேரந்தவறாது நடைபெறுகின்றன. தினமும் விநாயகருக்கு மோதக நைவேத்தியம் நடைபெறும் ஆலயம் தென்மராட்சியில் இது ஒன்றே ஆகும். இவ்வாலயத்தில் சைவக்குருமாரினாலேயே, தொன்றுதொட்டு நடத்தப்பட்டு வருகின்றது. உடுவில் குருக்கள், குமாரசாமிக் குருக்கள், நடேசையர், கணபதிப்பிள்ளை ஐயர், பாலசுந்தரக் குருக்கள், கந்தவேள் குருக்கள், வேலுப்பிள்ளை ஐயர் என்போர் நித்திய பூசைகளைப் பக்தியுடன் விதிமுறை தவறாது செய்து வந்தனர். இப்பொழுது திருநீலகண்டக் குருக்கள் அவர்கள் நித்திய பூசைகளைத் திறம்படச் செய்து வருகின்றார். இவருக்கு உதவியாளர்களாக சிவலிங்க ஐயர், உமாமகேஸ்வர ஐயர் ஆகியோர் தொண்டாற்றி வருகின்றனர். ஆலய நிர்வாகத்தினால், ஆலயக் காணியுள் இவர்களுக்கு இருப்பிட வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

**முடிவுரை :**

இவ்வாலயம் மேன் மேலும் வளர்ந்து பல தொண்டுகளைச் செய்ய, உள்ளூர், வெளியூர் வெளிநாட்டு வாசிகள் உறுதுணையாக இருக்கவேண்டும் என்று சைவ உலகம் வேண்டுகின்றது. இவ்வாலயத்தில் உள்ள ஒரேயொரு குறை இராசகோபுரம் இல்லாமையே. விரைவில் அதுவும் பூர்த்தி அடைய எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை வேண்டுவோமாக.

---

**மனிதன் இவ்வுலகில் தாமரை இலையைப் போல வாழ வேண்டும் என்று ஸ்ரீ கிருஷ்ணர் சொன்னார். தாமரை தண்ணீரில் வளர்கிறது ஆனால் தண்ணீரால் நனைவதில்லை. அதே மாதிரி மனிதன் வாழ வேண்டும். இதயம் இறைவன் பால் இருக்க, கைகள் வேலையச் செய்து கொடுக்க வேண்டும்.**

**— சுவாமி விவேகானந்தர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரமான அச்சு வேலைகளுக்கும்
புத்தகம் கட்டுவதற்கும்
நாடவேண்டிய இடம்

# நியூ செந்தில் பிறின்றேஸ்

கண்டி வீதி, சாவகச்சேரி

அழகான பின்னணிக் காட்சிகளுடன்
நவீன முறையில் கவர்ச்சிமிக்க
படம்பிடிக்கச் சிறந்த இடம்

# குகன் ஸ்ருடியோ

கிளை:
பருத்தித்துறை.

கண்டி வீதி,
சாவகச்சேரி.

UNIVERSITY OF JAFFNA
LIBRARY



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்குத் தேவையான

- கட்டடப பொருட்கள்
- இரும்புப் பொருட்கள்
- பெயின்ற் வகைகள்
- மாபிள் வகைகள்
- குளியலறை உபகரணங்கள்

ஆகியவற்றை மலிவான விலையில் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய நிறுவனம்

# முருகன் கட்டிடப் பொருட்கள் விற்பனை நிலையம்

360, கண்டி வீதி, சாவகச்சேரி.

கால்நடை உணவு வகைகள் விவசாய
உரவகை, இரசாயனப் பொருட்கள் ஆகியவற்றை
மலிவு விலையில் பெற்றுக்கொள்ள

# முருகன் களஞ்சியம்

கண்டி வீதி, சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்களை

மலிவான விலையில் பெற்றுக்கொள்ளவும்

உங்கள் ஆவணங்களை

தரமான போட்டோ பிரதி செய்யவும்

## நாட வேண்டிய இடம்




## K.S.Y. MOTORS

# கே.எஸ்.வை. மோட்டோர்ஸ்

உதவி அரச அதிபர் பணிமனை முன்பாக

கண்டி வீதி, சாவகச்சேரி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மளிகைப் பொருட்கள் அனைத்தையும்

மொத்தமாகவும் சில்லறையாகவும் மலிவான

விலையில் கொள்வனவு செய்ய

## சிறி முருகன் களஞ்சியம்

கண்டி விதி, கொடிகாமம்.

---

மாவடிப் பிள்ளையார் கும்பாபிஷேக மலர்சிறக்க

## எமது நல்வாழ்த்துக்கள்

# எக்சலன்ற்கல்விநிலையம்

புத்தூர்ச்சந்தி அருகாமை, மீசாலை.

## THE EXCELLENT INSTITUTE

Near Puttur Junction, MEESALAI.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் வழிபாடும் தோத்திரங்களும்

பேராசிரியர் வி. சிவசாமி அவர்கள்
(தலைவர், சமஸ்கிருதத்துறை,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்)

தென்னாசிய சமய வழிபாடுகளிலே விநாயகர் அல்லது கணபதி வழிபாடு தனிச் சிறப்புடையதாகும். இந்துசமய அல்லது சைவசமய மரபிலே ஒன்றிணைந்த வழிபாடாகவும் அதே மரபிலுள்ள ஆறுவகைச் சமயப்பிரிவுகளில் ஒன்றாகவும் இலங்கும் காணபத்தியத்தின் முழுமுதற் கடவுளாகவும் விநாயகர் திகழ்கின்றார். சிவபிரான் சக்தி ஆகியோரின் மூத்த திருக்குமாரனாகவும் முருகனின் மூத்த சகோதரனாகவும் திருமாலின் மருகனாகவும் சூரியனைத்தன் அமிசங்களிலொன்றாக கொண்டிலங்குவதாலும் இவ் அறுவகைச் சமயங்களுக்குள்ளே ஒன்றிணைந்த பாலமாகவும் அவர் விளங்குகின்றார்; மேலும் இப்பிராந்தியத்திலே நிலவிவரும் பௌத்தம், சமணம் ஆகிய அவைதிகசமயங்களிலும் ஒரு குறிப்பிடத்தக்க இடத்தினை வகிக்கின்றார் என்பதும் மனங்கொளற்பாலது. சமய ஒருமைப்பாடு சமரச மேன்மை வாய்ந்த வழிபாடாகவும், அதே வேளையில் வேதாகம முறையிலான வழிபாட்டு மரபுகளும். இவற்றிற்குப் புறம்பான வழிபாட்டு மரபுகளைக் கொண்ட வழிபாடாகவும் இவ்வழிபாடு விளங்குகின்றது. தென்னாசியா அடங்கலும் மட்டுமன்றி இதற்கு வெளியேயுள்ள தென்கிழக்காசியா, கிழக்காசியா, சீனா, யப்பான், மத்திய ஆசியாவரை இவரின் வழிபாடு பரவி நிலவி வருகின்றமை உற்றுநோக்கற்பாலது. இந்துசமய மூலமாக மட்டுமன்றி பௌத்தம் மூலமாகவும் இவ்வழிபாடு மேற்குறிப்பிட்ட நாடுகள் பலவற்றிலே பரவியுள்ளது. அவ்வவ்நாட்டுப் பண்பாட்டு மரபுகளுக்கேற்ப அவருடைய வழிபாட்டு முறைகள் மட்டுமன்றி, அவருடைய திருவுருவங்களும் சில மாற்றங்கள் அடைந்துள்ளன. எடுத்துக்காட்டுகளாக சீனா, யப்பான், ஆகிய நாடுகளிலே அமைக்கப்பட்டுள்ள விநாயகர் சிலைகளின் வடிவம் மங்கோலியச்சாயலும் அந்நாடுகளின் கலை மரபுகளும் பிரதிபலிக்கும் வகையிலே காணப்படுகின்றது. ஆனால் இன்று இலங்கை, இந்தியா ஆகிய நாடுகளிலிருந்து ஐரோப்பா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா முதலிய நாடுகளிற்குச் சென்றுள்ள இந்துக்கள் தத்தம் நாட்டு மரபினை அப்படியே பின்பற்றி விநாயகர் சிலைகளை அமைத்துள்ளமையும் ஈண்டுக் குறிப்பிடற்பாலது.

விநாயகர்வழிபாடு மிகப்பழமை வாய்ந்ததாகும். இந்தியாவின் காலத்தால் முந்திய சிந்துசமாவெளி நாகரிகம் (இற்றைக்குச் சுமார் 5000 ஆண்டுகள்) தொட்டாவது நிலவி வந்துள்ளது. சிந்துவெளி நாகரிகத்திற்கு அடுத்ததாக நிலவிய வேதகாலம் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட இதிஹாஸ புராண காலங்களிலும் பின்னரும் அவ்வழிபாடு நன்கு வளர்ச்சியடைந்துள்ளது. முதலிலே தனிவழிபாடாக நிலவிப் பின்னர் இந்துசமயத்தின் ஒன்றிணைந்த வழிபாடாகப் பரிணமித்துள்ளது. ''வேற்றுமையில் ஒற்றுமை'' இந்துசமயத்தின் தனிச்சிறப்புகளில் ஒன்றாகும். இறைவன் ஒருவனேயாயினும் ஞானிகள் அவரைப்பல பெயர்களால் அழைக்கின்றனர். ''ஏகம் ஸத்விப்ராஹப ஹ பி தா வ த ந் தி'' (உண்மைப் பொருள் இறைவன்) ஒன்றே (ஆனால் ஞானிகள் அதனைப் பலவாறு கூறுகின்றனர்) எனக் காலத்தால் முந்திய இருக்குவேதம் கூறுகின்றது. ''ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமில்லார்க் காயிரம் திருநாமம்பாடி நாம்தெள்ளேணம் கொட்டாமோ'' என மணிவாசகரும் கூறியுள்ளார்.

விநாயகரை உருவமாகவும், அருவமாகவும், அருவுருவமாகவும் வழிபடலாம். இறைவன் அருவமாகவே எங்கும் நீக்கமற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைந்து நின்றாலும் பக்தர்களும் ஞானிகளும் அவனை உருவமாகவும் தத்தம் ஞானக்கண்ணினாற் கண்டனர். எனவே தாம் மட்டுமன்றி ஏனையோரும் உய்யும் வண்ணம் பல திருவடிவங்களை உருவாக்கியுள்ளனர். ஆகமங்களிலும், சிற்பசாஸ்திர நூல்களிலும் விநாயகரின் திருவுருவங்களின் லக்ஷணங்களை வருணித்துள்ளன. விநாயகருக்கு 16 32, 64 எனபல திருவுருவங் கூறப்படுகின்றன. இவற்றுள் மிக எளிமையான திருவுருவங்களில் ஒன்று பக்தவிநாயக திருவடிவமாகும். இவ்வடிவத்திலே ஓங்காரமாக இலங்கும் துதிக்கையும் இரு பக்கங் களிலும், இடப்புறத்திலுள்ள ஒரு திருக்கரத்திலே அங்குசமும், மற்றையதிலே மோதகமும் காணப்படும். வலப்புறத்திலுள்ள திருக்கரத்திலே அங்குசமும், மற்றையது வரதமாக ஒடித்ததந்தத்தினையும் கொண்டிலங்கும். துதிக்கை மோதகத்தினைத் தொட்டுச் சுவைத்துக் கொண்டிருப்பது போல விளங்கும். அவர் பீடத்திலே அமர்ந்திருப்பார். இவருடைய பருத்த உருவத்திற்கு மாறாக அவரின் வாகனமாகிய எலி சிறியதாயிருப்பதும் குறிப்பிடற்பாலது.

இவருடைய வழிபாடு அன்பரின் வசதிக்கேற்றபடி அமையலாம். ஆகமமுறைப்படி அமைக்கப்பட்ட கோவில்களிலே இவரைப் பிரதிஷ்டை செய்து பல்வேறு கிரியைகள் வழிபாடுகள், விழாக்கள் மூலம் நன்குவழிபடலாம். வீடுகளிலோ, தொழிலகங்களிலோ அவரின் படங்களை வைத்து வழிபடலாம். மற்றும் மரங்கள் குறிப்பாக அரசமரம், வேப்பமரம் போன்றவற்றின் கீழே சிறிய சிலையை வைத்துப் பூசிக்கலாம். மக்கள் மஞ்சள், பசுவின் சாணம் ஆகியனவற்றின் சிறிய உருண்டையிலே அறுகம்புல்லினைக் குத்திவைத்து வழிபடலாம். இவ்வாறு வழிபாட்டுமுறைகள் வேறுபடலாம். அவரை அங்கப்பிரதக்ஷிணம், அஷ்டாங்கநமஸ்காரம் பஞ்சாங்க நமஸ்காரம் குறிப்பாக தோப்புக் கரணம் (இரு கைகளாலும் மாறிதலையிலே குட்டிவிட்டு காதிரண்டினையும் கைகளால் மாறிப்பிடித்துக் கொண்டு மும்முறை இருந்தெழுதல்) இசை, நடனம், தோத்திரம் முதலிய பலவழிகளில் அவரை வழிபடலாம்.

அவர் எளிதிலே அன்பர்களுக்கு இரங்கி அருள்செய்பவர். இறைவன் விரும்புவது தூயஉள்ளமே. எனவே உள்ளார்ந்த அன்பு – சுவாமிவிபுலானந்தர் கூறியிருப்பதுபோல் ''உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது'' என்பதே கவனிக்கவேண்டியதாகும்.

விநாயகர் ஓங்கார அல்லது பிரணவ வடிவினர். இவ்வடிவம் இவருக்குச்சிறப்பானதாகும். வேதங்களின் சாரமாகவே ஓங்காரம் விளங்குகின்றது.

திருவுருவமுள்ளவனாக இறைவனை வழிபடும் போது அவருக்குரிய கோவில்-மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய சிறப்புகளைக் கொண்டிலங்கும். இந்தியாவிலே பல இடங்களிலும் விநாயக வழிபாடு நிலவினாலும், மகாராஷ்டிர மாநிலத்திலும், தமிழ்நாட்டிலும் தான் மிகச்சிறப்பாக இவ் வழிபாடு நிலவுகின்றது. தமிழ்நாட்டிலே சிவபிரானுக்கு அட்டவீரத்தலங்கள் இருப்பது போல மகாராஷ்டிர மாநிலத்திலே விநாயகருக்கு அஷ்டவிநாயகர் ஆலயங்களாக, மோர்கோணிலே ஸ்ரீமயூரேஸ்வர், சித்தாருக்கிலே ஸ்ரீசித்திவிநாயகர், பாலியிலே ஸ்ரீபல்லாலேஸ்வரர், மஹத்தில் ஸ்ரீவரத்விநாயகர் தேயூரிலே ஸ்ரீசிந்தாமணி, லென்யத்ரியிலே ஸ்ரீகிரிஜாத்மஜர், ஓசாரிலே ஸ்ரீவிக்கினேஸ்வரர், ரஞ்ஜன் கோணிலே ஸ்ரீமஹாகணபதி எனும் திருப்பெயர்களாலான ஆலயங்கள் உள்ளமை குறிப்பிடற்பாலது. இந்தியாவின் கடைசி இந்துப்பேரரசு மகாராஷ்டிரத்தை மையாகக் கொண்ட மராத்தியருடையது என்பதும், தற்காலத்திலே பிரித்தானியப் பேரரசுக்கெதிரான இந்திய சுதந்திரப் போராட்டத்தினைத் தொடக்கிய பாலகங் காதரதிலக் இந்த இடத்தினைச் சேர்ந்தவர் என்பதும், விநாயகர் விழாக்கள் மூலமும் இந்தியசுதந்திர சிந்தனைகளை அவர் எடுத்துக்கூறியவர் என்பதும் குறிப்பிடற்பாலன.

தமிழகத்திலும், தமிழர் வாழும் இலங்கை போன்ற வெளிநாடுகளிலும் விநாயகர் பிள்ளையார் என்றே பெரிதும் அழைக்கப்படுகிறார்; உலக பிதா, மாதாவாகிய சிவன் பார்வதியின் மூத்தபிள்ளை மட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்றிச் செல்லப்பிள்ளையுமாவார். அவ்வாறே தமிழ்மக்களுக்கும் செல்லமான தெய்வமாகவும் இவர் விளங்குகிறார். இறைவனைக் குழந்தையாகப் பாவனை செய்யும் மரபும் உள்ளது. பிள்ளையாரையும் முருகனையும் சைவர்கள் குழந்தைத் தெய்வமாகவும், வைஷ்ணவர் திருமாலைக் குழந்தையாகவும் பாவனை செய்வர். பிள்ளையார் வழிபாடு முதலில் இடம்பெறாத சைவக் கிரியைகளோ இல்லை. அவருடைய கோவில்இல்லாத தமிழர் வாழ்விடங்கள் மிகக்குறைவு.

பிள்ளையார் பிரமச்சாரியெனத் தமிழர் மத்தியிலே பொதுவான கருத்து நிலவினாலும் அவருக்கு வல்லபா (அன்பு, காதல்) எனும் ஒரு சக்தியும், சித்தி (செயலில் வெற்றி), புத்தி (அறிவு) எனும் இருசக்திகளும் உள்ளனர். அவர் கல்வித்தெய்வம். அவரது சக்தியான வல்லபா எனும் பெயர் அவர் காதல் தெய்வம் என்பதனையும் சுட்டுகின்றது. இக்கருத்து தென்ஆசியா, தென் கிழக்காசியாவிலன்றி வெகுதூரத்திலுள்ள யப்பான் நாட்டிலின்றும் நிலவுவது குறிப்பிடற்பாலது.

இடையூறுகளின் தலைவராகவும் அவற்றை நீக்குபவராகவும் அவர் விக்கினேஸ்வரர் அல்லது விக்கினராஜ என அழைக்கப்படுகிறார். விநாயகரின் மறுபெயர்களில் கணேச அல்லது கணபதியும் ஒன்றாகும். கணங்களின் இங்கு சிவகணங்களின் தலைவராக கணபதி விளங்குகிறார். ஆதிமூலப்பரம்பொருளே விநாயகர் எனவும் மூலப்பொருள் இயற்கையின் பல்வேறு அம்சங்களை கணங்கள் எனவும் சுவாமி சின்மயானந்தா கணபதி தத்துவத்திற்கு ஒரு விளக்கம் அளித்துள்ளார். மேலும் தெய்வங்கள் அனைவரையும் உள்ளடக்கியவராகவே விநாயகர் விளங்குகிறார் என்பது பின்வரும் செய்யுளாலும் புலப்படும். அதாவது, 'அவ்யாகிருதப்ரஹ்மணோ கணேஸ்ய சரீரே, நபபிர்பிஹ்மா, முகம் விஷ்ணுஹபி நேத்ரம் ருத்ரஹ, வாமபார்ஷ்வம் சக்திஹி தக்ஷிணம் சூர்ய ஹ ஆத்மஸ்திதாமயஹ' என்பதாம். இங்கு புலப்படாத பரம்பொருளாகிய கணேசரின் திருவடிவத்திலே நாபி பிரமன் எனவும், முகம்திருமால் எனவும், கண்ருத்திரன் (சிவன்) எனவும் இடதுபாகம் சக்தி எனவும், வலது பாகம் சூரியன் எனவும் கூறப்படுகின்றன.

இத்தகைய பெருமை வாய்ந்த பிள்ளையாரை வழிபடுவதற்கான சாதனங்களிலொன்று தோத்திரம் ஆகும். தோத்திரம் 'ஸ்தோத்ரம்' எனும் வடசொல்லின் தமிழ் வடிவமாகும். 'ஸ்து' எனும் வினையடிக்குப் புகழ்தல் – இங்கு இறைவனைப் புகழ்தல் எனும் கருத்து உள்ளது; இவ்வினையடியிலிருந்து தோன்றிய ஸ்தோத்ரம் 'புகழ் மாலை' – இங்கு தெய்வத்திற்கு உரிய புகழ் மாலை எனப்பொருள்படும். கலியுகத்திலே இறைவனை வழிபடுவதற்குப் பக்தியடிப்படையிலான தோத்திரமே சாலவும் சிறந்ததெனக்கூறப்படுகின்றது. தோத்திரம் 'நமஸ்காரம்' ஆசீர்வாதம், சித்தாந்தத்தினை எடுத்துக்கூறல், பராக்கிரமம், பெருமைகளை விளக்குதல், பிரார்த்தனை (நமஸ்காரஸ்த தாசீச்சசித்தாந்தோத்திபராக்கிரஹ விபூதிஹிப்ரார்த்தனாசேதிஷட்விதம் ஸ்தோரலக்ஷணம்) ஆகிய ஆறுலக்ஷணங்களைக் கொண்டதாகும். தமிழிலும், வடமொழியில், ஏனைய இந்திய மொழிகள் பலவற்றிலும் பலதோத்திரங்கள் உள்ளன இவை இறைவன் மீது கொண்ட ஆரா அன்பினால் அருட்கவிகளால் இயற்றப்பட்டவை. 'இறைவன் மீதுகொண்ட பேரன்பே பக்தி' என நாரதபக்திசூத்திரம் கூறும். இப்பக்தி ஒரு தலைச்சார்பாக அன்றி இருதலைச்சார்பாகவே இருக்கும். அதாவது இறைவனோ அல்லது ஆத்மாவோ ஒருவர் மட்டுமன்றி இருவரும் ஒருவரையொருவர் நாடிவருதலே பக்தியில் முக்கியமான அமிசமாகும். இதனை நன்கு விளக்குதற்கு நாயகநாயகி (தலைவன் தலைவி) பாவனையை ஞானிகள் பயன்படுத்தியுள்ளனர். இறைவன் ஆத்மா தொடர்பு, தந்தை - பிள்ளை, தாய் - சேய், ஆண்டான் - அடிமை, தலைவன் - தலைவி தொடர்புகளுடன் ஒப்பிட்டுக் கூறப்படினும் தலைவன் - தலைவி தொடர்பே சிறந்ததாகக் கருதப்படுகிறது.

பிள்ளையரைப் பற்றிபல தோத்திரங்கள் தனியாகவும், வேறுநூல்களின் பகுதிகளாகவும் பல மொழிகளில் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழிலே காரிய சித்திமாலை, ஔவை யார் அகவல், கபிலநாயனாரின் மூத்த விநாயகரின் திருவரட்டைமணிமாலை, அதிராவடிகளின் மூத்தபிள்ளையார். திரு மும்மணிக்கோவை, நம்பியாண்டார் நம்பியின் திருநாரையூர் திருவிரட்டைமணிமாலை, போன்ற தனிப்பட்ட தோத்திரங்களும், பெரிய புராணம் கந்த புராணம், திருவிளையாடற் புராணம் முதலிய வைற்றிலே வரும் சில செய்யுட்களும் குறிப்பிடற்பாலன.

இச்சிறுகட்டுரையிலே வடமொழியி லுள்ள சில தோத்திரங்கள் பற்றிச் சிறிது கூறப்படும். இவை சமயதத்துவக்கருத் துக்களை உள்ளடக்கிய வாடாத இலக்கிய மாலைகளாக இறைவன் — விநாயகரின் புகழை எடுத்துரைப்பன. இவை ஓசைநயம் இசைநயம், இலக்கியநயம் பொருந்தியவை இத்தோத்திரங்கள் இவற்றிலுள்ள செய் யுட்களின் தொகை, கூறும் பொருள் முதலி யனவற்றின் அடிப்படையில் அழைக்கப் படும். எடுத்துக் காட்டுகளாக கணேச பஞ்சரத்னம் (05 செய்யுட்கள்), கணே சாஷ்டகம் (08 செய்யுட்கள்), ஸ்ரீகணேச மானஸபூஜா (அகப்பூசை) ஸ்ரீகணேசப் ராதஸ்மரணஸ்தோத்ரம் (காலையிலே கணேசரை நினைவிலிருத்தற்கான தோத் திரம்) ஸ்ரீமஹாகணபதித்ரைலோக்ய மோஹனகவசம் (பல்வேறு இடையூறுகள், துன்பங்களிலிருந்து காப்பாற்றுதற்கான கவசம்) போன்வற்றினைக் குறிப்பிடலாம். இவற்றைவிட கணேசரின்பல்வேறு திருப் பெயர்களைத் தோத்திரவடிவிலே கூறும், விநாயக அஷ்டோத்தர சதநாமாவளி ஸ்தோத்ரம், ஸஹஸ்ரநாமாவலிஸ்தோத்ரம் போன்றவற்றையும், வேதங்கள், ஆகமங் கள், இதிஹாஸங்கள், புராணங்கள் குறிப் பாக கணேசபுராணம், முட்கலபுராணம், பிறநூல்கள் முதலியவைற்றிலே வரும் மந்திரங்கள், தியானச்செய்யுட்கள் போன்றவற்றையும் சேர்த்துக் கொள்ள லாம். இவற்றுள்ளே பிள்ளையார் பற்றிய ஒரு சில தனித்தோத்திரங்களை உதாரணங் களாகக் கொள்ளலாம்.

**கணேசபஞ்சரத்தினம் :**

ஐந்து செய்யுட்களிலே விநாயகரின் சிறப்புகளும், அவர் அன்பர்களுக்கு அருள்புரியும் வண்ணமும் கூறப்படுகின்றன ஆறாவது செய்யுள் இதன் பலனை (பல சுருதி) க் கூறுகின்றது. கணேசாஷ்டகம் எட்டுச்செய்யுட்களிலே அவருக்கு அணி செய்யும் மோதகம் (01) தானே தோன்றி யவர் (02), அஷ்டமூர்த்திகளின் சார மாக உள்ளவர் (03), ஸருவயிற்றினை யுடையவர் (04) அவரின் திருநடனம் (05) தனக்கு ஒருதலைவன் இல்லாதவர் (06) விக்கினங்களை அழித்துப்பக்தர் பக் கம் நிற்பவர் (07) பிறவிக்கடலை நீக்கு தற்கு அருள்பவர் (08) எனும் கருத்துக் களும் 9 வது செய்யுளில் இதனைப்படித் தலால் ஏற்படும் பலனும் கூறப்படுகின்றன.

**ஸ்ரீகணேசமானஸ பூஜாவில் :**

முதலாம் செய்யுளிலே கணேசரை வணங்குதலும் தொடர்ந்து வரும் 2—12 வரையுள்ள செய்யுட்களிலே ஆவாஹனம் ஆசனமளித்தல், பாத்யம், அர்க்யம், ஸ்நானம் முதலிய உபசாரங்களை மான சிகமாக விநாயகருக்கு செய்தலைக்குறிப் பிட்டுக் கடைசியான 14 வது செய்யுளிலே இதன் பலன் கூறப்படுகின்றது. இங்கு அகப்பூசை கூறப்படுவது கவனித்தற்பாலது தியானிக்கும் பக்தர்களை அதிபௌதிக, அதிதைவிக, அத்யாத்மிக எனும் மூவகைத் துன்பங்களிலிருந்து பாதுகாக்கும் ஸ்ரீமஹா கணபதித்ரைலோக்யமோஹன கவசமும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

விநாயகதத்துவக் கருத்துக்களை இலக்கிய நயம் பொருந்தக்கூறும் சில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யுட்களை எடுத்துக் காட்டலாம். எடுத்துக்காட்டுகளாக கணேசபஞ்சரத்னத்திலே வரும்.

அகிஞ்சனார்த்திமார்ஜனம்
சிரந்தனோக்தி பாஜனம்
புராரிபூர்வநந்தனம்
ஸுராரிகர்வசர்வணம்
ப்ரபஞ்சநாசபீஷணம்
தனஞ்ஜயாதிபூஷணம்
கபோலதானவாரணம்
பஜே புராணவாரணம் // ( 04 )

என்பதையும், கணேசாஷ்டகத்திலே நடனமாடும் கணபதிபற்றிவரும்

ஸரத்னஹே மகண்டிகா
நிநாதநூபுரஸ்வனைஹி
ம்ருதங்கதாலநாதபேத
ஸாதனாநுரூபதஹ் /
திமித்திமித்ததோங்கதே
யிதேயி சப்ததோ
விநாயகஹ சசாங்க
சேகரோக்ரதஹ்ப்ர நிருத்யதி //

என்னும் செய்யுளையும் சுட்டிக்காட்டளாம் இவற்றிலே கூறப்படும் கருத்துக்களும், ஓசை நயம் இசை நயம் முதலியனவு கவனித்தற்யலன, இரண்டாவது செய்யுளிலே நடனகணபதியைத் தத்ரூபமாகவே கவிஞர் நம் கண்முன் கொண்டுவந்து நிறுத்துகிறார். கூறும் பொருளுக்கேற்ற ஓசை நயமும் இலங்குகின்றது.

மேலும் கணபதிபற்றிய காயத்ரீ மந்திரங்களையும் குறிப்பிடலாம். எடுத்துக் காட்டுகளாக.

ஓம் ஏகதந்தாய வித்மஹே
வக்ரதுண்டாய தீமஹி /
தந்நோ தந்தி
ப்ரசோதயாத் //
( கணபதி அதர்வசீர்ஷ )

ஓம் தத்கராய வித்மஹே
ஹந்திமுகாய தீமஹி /
தந்நோ தந்தி
ப்ரசோதயாத் //
( மைத்ராயணீய சங்கித )

ஓம் தத்புருஷாய தீமஹி
மஹாதேவாய தீமஹி /
தந்நோ தந்தி
ப்ரசோதயாத் //
( வைத்திரீய ஆரண்யகநாரயணோபநிஷத் )

ஓம் லம்போதராய வித்மஹே
மஹோதராய தீமஹி /
தந்நோ தந்தி
ப்ரசோதயாத் //
( அக்னி புராணம் )

ஓம் மதோத்கடாயவித்மஹே
வக்ரதுண்டாய தீமஹி //
தந்நோ தந்தி
ப்ரசோதயாத்/ //
( அக்னிபுராணம் )

ஆகியவைற்றைக்கவனிக்கலாம்.

ஓம் ஸ்ரீ கணேசாய நமஹ
ஓம் ஸ்ரீ கணேசனுக்கு வணக்கம்
ஓம் ஸ்ரீ மஹாகணபதயே
நமஹ / ஓம் ஸ்ரீ மஹாகணபதிக்கு
வணக்கம்
ஓம் கம் கணபதயே நமஹ
ஓம் கம் கணபதிக்கு வணக்கம்
ஓம் ஸ்ரீ விநாயகாய நமஹ
ஓம் ஸ்ரீ விநாயகனுக்கு வணக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய ஈழத்து நாணயங்களில் இந்துத் தெய்வங்கள்

பேராசிரியர் சி. க. சிற்றம்பலம் அவர்கள்
(தலைவர், வரலாற்றுத்துறை,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்)

0.1. **அறிமுகம் :**

ஈழத்துச் சமய வரலாற்றில் நாணயங்கள் பெறும் முக்கியத்துவம் இற்றைவரை சரிவர மதிப்பிடவில்லை. ஈழத்து வரலாற்றைப் பௌத்த, சிங்களக் கண்ணோட்டத்தில் அணுகியது போன்றே நாணயங்களிற் காணப்படும் இலச்சினைகளுக்கும் விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளன. பௌத்த மதமே அரசாங்க மதமெனப் பறைசாற்றும் நம்நாட்டுப் பாளிநூல்களிற் பௌத்தத்திற்கு நம்நாட்டு மன்னர்கள் கொடுத்த பேராதரவு பற்றிப் பலவாறு புகழ்ந்துரைக்கப்பட்டாலும் கூட, இந்நாணயங்களில் புத்தரது உருவம் பொறிக்கப்படாமல் இருப்பது ஆச்சரியத்துக்குரியது. ஆனால் இந்தியாவிலோ எனில் கிறிஸ்தவ சகாப்த காலத்திலேயே குஷானிய மன்னர்களின் காலத்தில் இந்துக் கடவுளர் போல் கௌதம புத்தரும் நாணயங்களிற் சித்தரிக்கப்பட்டுள்ளார். இதே காலப் பகுதியில் ஈழத்திலும் புத்தருக்கான கற்சிலைகள் அமைக்கப்பட்டிருந்தும், நாணயங்களில் ஏன் புத்தர் சித்தரிக்கப்படவில்லை என்பது புதிராகவே உள்ளது.

0 2. **அச்சுக்குத்திய நாணயங்கள் :**

இந்தியா, ஈழம் போன்ற நாடுகளிற் கிறிஸ்தாப்தத்திற்கு முன்னரே நாணயங்கள் புழக்கத்திற்கு வந்து விட்டன. கி. மு. 6ஆம் நூற்றாண்டிலாவது இவை புழக்கத்திற்கு வந்திருக்க வேண்டுமெனக் கருதப்படுகின்றது. இவற்றைப் 'புராண' என இந்திய இலக்கியங்கள் குறிக்கின்றன. பெரும்பாலும் வெள்ளி அல்லது செப்புத் தகட்டில் வெட்டப்பட்டுச் சதுரம் அல்லது நீள் சதுரமான தோற்ற முடையனவாக இவை காணப்படுகின்றன. பல்வேறு இலச்சினைகளும் இவற்றில் காணப்படுகின்றன. இவற்றை ஆங்கிலத்தில் ''பஞ்ச்மார்க் கொயின்ஸ்'' (Punch marked coins) என்பர். இந்திய நாணயங்களில் முன்னூற்றுக்கு மேற்பட்ட இலச்சினைகள் உள. ஆரம்பத்தில் இவை வணிகக் குழுக்களாற்றான் வெளியிடப்பட்டன. எனினும், இவற்றுக்கு மன்னரது அனுமதி பெறப்பட்டிருந்தது. பெரும்பாலும் இவற்றின் முன் பக்கத்தில் மட்டுமே இலச்சினைகள் உள. சில நாணயங்களிற் பின் பக்கங்களிலும் இலச்சினைகள் காணப்படுகின்றன. இத்தகைய ஈழத்துப் பழைய நாணயங்களைப் பாளி நூல்கள் 'கஉறபன' என அழைக்கின்றன. கர்ஷபண என்ற வடமொழியின் பிராகிருத வடிவமே இஃதாகும். இந்நாணயங்கள் தென்னிந்தியாவிலிருந்து ஈழத்திற்குக் கொண்டுவரப்பட்டன என ஈழத்து நாணயங்களை ஆராய்ந்த கொட்றிங்ரன் கருத்துத் தெரிவித்துள்ளார்[1]

நம்நாட்டு நாணயங்களின் இலச்சினைகளாகப் பின்வருவன காணப்படுகின்றன, எருது, யானை, குதிரை, சூரியன், பிறை. கருடன், சக்கரம், சுவஸ்திகா, மீன், மரம், நாய், சிங்கம், மயில், மூன்று வளைவுகளுடன் காணப்படும் கட்டிடம் போன்றவையே இவையாகும். சமய வளர்ச்சியின் ஆரம்ப நிலையைக் குறிக்கும் இயற்கை வழிபாட்டிற்குரிய இலச்சினைகளாக இவற்றினைக் கொண்டாலுங்கூட, பிற்பட்ட காலத்தில் இந்து சமயக் கடவுளரோடு இவை நெருக்கமான தொடர்பைக் கொண்டுள்ளன. எருது இரண்டு நிலைகளில் இந்நாணயங்களிற் சித்தரிக்கப்பட்டுள்ளது. ஒன்று எருதாகவுள்ள நிலை. மற்றையது இதன் குளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகிய ' நந்தி பாதம் ' வழிபாட்டுப் பொருளாகச் சித்தரிக்கப்பட்டுள்ள நிலை. யானை பிற்பட்டகாலத்திற் பல தெய்வங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது. யானை முகத்தினை உடைய விநாயகரை விட இந்திரன், முருகன், ஐயனார், போன்றோரின் வாகனமாகவும் பிற்பட்ட காலத்தில் இது சித்திரிக்கப்பட்டுள்ளது. கஜலக்ஷ்மி உருவங்களிலும் யானை முக்கியம் பெறுகின்றது.

சிங்கம் துர்க்கைக்குரிய வாகனமாக அமைந்துள்ளது. குதிரை ஐயனாரின் வாகனமாகும். தீங்கு விளைவிக்கும் சக்திகளை விரட்டும் தன்மை நாய்க்கு இருப்பதால் அதுவும் இங்கே சித்தரிக்கப்பட்டுள்ளது எனக் கொண்டாலும் நாய் ஐயனார், வைரவர் போன்ற தெய்வங்களுடன் இணைத்துக் கூறப்படுவதும் அவதானிக்கத்தக்கது. வில்லைக் கூட உருத்திர மூர்த்தத்திலுள்ள சிவன் வைத்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

கருடன் விஷ்ணுவோடு இணைந்துள்துள்ளது. இவ்வாறே விஷ்ணு வணக்கத்துடன் சக்கரமும் முக்கியம் பெற்றுள்ளது. மயில் கந்தனுக்குரியது. சூரியன், சந்திரன் ஆகியோர் ஆரம்பத்தில் தனித்தனித் தெய்வங்களாக வழிபட்டனர். பின்னர் சிவ வணக்கத்துடன் அவை இணைந்தன. சுவஸ்திகா கூடப் பிற்பட்ட காலத்திற் பௌத்தத்தோடு இணைக்கப்பட்டாலும் சூரிய வழிபாட்டுச் சின்னமாகவே ஆரம்பத்தில் இது கொள்ளப்பட்டது. மீனுக்கும் மச்ச அவதாரமெடுத்த விஷ்ணுவுக்குமுள்ள தொடர்பும் ஆராயற்பாலது. இவ்வாறே மீனாட்சியாகக் காட்சி தரும் தேவி இப்பெயரைத் தாங்கியுள்ளமைக்குப் பிராமிக் கல்வெட்டுகளிற் சான்றுகள் உள. மரங்கள் செழிப்பின் சின்னங்களாகும். மரம் வழிபாட்டுப் பொருளாகவும் விளங்கியது. இதற்கான இலக்கிய, தொல்லியம், நாணயச் சான்றுகள் உள. இத்தகைய கருத்தையே மிகப் பழைய யக்ஷி உருவங்கள், மரக்கிளைகளைத் தொட்டு நிற்கும் பாவனையிலுள்ள சிற்பங்கள் ஆகியன எடுத்தியம்புகின்றன.

இந்துசமயத்தின் பழைய கோயில்களும் மரங்களின் கீழே தான் அமைந்திருந்தன. பிற்காலத்தில் அழியாத பொருட்களினால் கோயில்கள் நிரந்தரமான ஓர் இடத்திற் கட்டப்பட்டபோது இவை தல விருட்சங்களாயின. இந்து சமயக் கடவுளரும் இம்மரங்களோடு இணைக்கப்பட்டது வரலாறாகும். கடம்பு முருகனுக்குரிய மரம், மதுரை மீனாட்சியும் கடம்பவன வாசியே. திருமாலுக்குக் காயாம்பும், துளசியும், சிவனுக்கு அரசு, கொன்றை, ஆல், வில்வம் போன்ற மரங்களும் விருப்புடைய மரங்களாகின. மூன்று வளைவுகளுடன் இந்நாணயங்களிற் காணப்படும் சின்னத்திற்குப் பலவித விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. சிலர் இதனை மலை என்றும் கூறுவர். மலையும் சமய வளர்ச்சியின் ஆரம்ப நிலையில் வழிபாட்டிற்குரிய பொருளாகவே அமைந்து இருந்தது. பின்னர் தான் முருகன், சிவன் ஆகியோர் உறையுமிடமாகக் கொள்ளப்பட்டது. ஆனால் பாக்கரோ எனில் வட இந்தியாவில் கோசாம்பி என்ற இடத்திற் கிடைத்த கி.மு. 2ஆம் நூற்றாண்டுக்குரிய நாணயமொன்றில் காணப்பட்ட இதே போன்ற உருவங்களுக்கு அறிஞர் கொடுத்த விளக்கத்தினை ஆதாரமாகக் கொண்டு இதனைக் கோயில் என விளக்கமளித்துள்ளார்.[2] இவர் கூறும் கோசாம்பி நாணயத்தில் இச் சின்னத்தின் மேல் எருது காணப்படுவதால் இதனைச் சிவன் கோயில் என்று கூறுவாருமுளர். ஈழத்திலும் இச்சின்னத்தின் மேல் பிறை, மயில் ஆகியன காணப்படுவதால் இவை முறையே சிவ, முருக, வழிபாட்டிற்குரிய கோயில்களாக இருக்கலாமென எண்ணுவதற்கும் இடமுண்டு.

இச்சந்தர்ப்பத்தில் கந்தரோடையிற் கிடைத்த கி.மு. 2ஆம் நூற்றாண்டிற்குரிய பாண்டியருடைய செம்பு நாணயங்கள் பற்றிக் குறிப்பிடுதல் அவசியமாகின்றது. இது பற்றி ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம். இந் நாணயங்களில் அச்சுக்குத்திய நாணயங்களில் காணப்படும் இலச்சினைகளான மரம், மலை, யானை, குதிரை போன்றன மட்டுமன்றிக் கோயிலைச் சித்ரிதிக்கும் உருவங்களோடு சிவ வணக்கத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திணைச் சுட்டி நிற்கும் முழுவோடு கூடிய திரிசூலம் காணப்படுவதும் நோக்கற்பாலது.

**0 . 3 . அச்சில் வார்க்கப்பட்ட நாணயங்கள் :**

இலச்சினைகளைக் குத்தி உருவாக்கப் பட்ட நாணய வகைகளைத் தொடர்ந்து உருவாக்கப்பட்ட நாணயங்கள் அச்சில் வார்க்கப்பட்ட நாணயங்களாகும். (Diest ruck coins) இலச்சினைகள் பல ஒருங்கி ணைந்து அச்சில் வார்க்கப்பட்டதால் இவை இவ்வாறு பெயர் பெற்றன. ஆரம்பத்தில் ஒரு பக்கத்திலும், பின்னர் இருபக்கங்களி லும் இவ் இலச்சினைகள் உருவாக்கப்பட் டன. வட்டம், நீள்சதுரம் ஆகிய தோற் றங்களிலுள்ள இவை வெள்ளி செம்பு ஆகிய உலோகங்களிற் காணப்பட்டாலுங் கூட வெள்ளி நாணயங்கள் மிக அருகியே காணப் படுகின்றன. பெரும்பாலும் கிறிஸ்தாப்த காலத்திற்கு முன்னருள்ள ஒரு சில நூற் றாண்டுக் காலத்தில் இவை புழக்கத்திற்கு வந்து விட்டன. இத்தகைய நாணயங்கள் கந்தரோடை, வல்லிபுரம், இரணைமடு, மாதோட்டம், பூநகரி, முல்லைத்தீவு, அநு ராதபுரம், திஸமகாராம ஆகிய இடங்களிற் கிடைத்துள்ளன. இவற்றில் எருது, பிறைச் சந்திரன், சூரியன், நந்திபாதம், யானை, குதிரை, சிங்கம், மலை, தண்டுடன்கூடிய சுவாஸ்திகா, திரிசூலம், பல்வேறு கோண வடிவங்கள் ஆகியன இலச்சினையாகவுள் ளன. இத்தகைய இலச்சினைகள் இந்துக் கடவுளரோடு தொடர்புடையன என்பது ஈண்டு நோக்கற்பாலது. சில நாணயங்களில் எருது மட்டும் முன்பக்கத்தில் நோக்கப்பட இதற்கு முன் நிறைகுடம் போன்ற இலச் சினையுமுண்டு.

இன்றும் சில நாணயங்களின் முற்பக் கத்தில் மரம், தண்டுடன் கூடிய சுவஸ்திகா, மலை, யானை ஆகியனவும், பிற்பக்கத்திற் தண்டுடன் கூடிய சுவாஸ்திகாவும் காணப் படுகின்றன. இத்தகைய இலச்சினைகளைப் பௌத்த மதத்தோடு இணைத்துக் கூறு வாருமுளர். எவ்வாறெனில் யானை புத்த ரின் பிறப்பையும், மரம் அவர் ஞான ஒளி பெற்றதையும், தண்டுடன் கூடிய சுவஸ் திகா அவரின் தர்ம போதனையையும், மலை (சேத்தியம்) அவரின் பரிநிர்வாண நிலையையும் குறிக்கின்றன என்பது அவர் களது கருத்தாகும். ஆனால் இத்தகைய குறியீடுகள் பௌத்தத்திற்கு முன்னரே இந்துசமயத்தோடு தொடர்புடையனவா கக் காணப்பட்டன என்பது ஈண்டு நோக் கற்பாலது. யானை, எருது ஆகியன இந்துக் கடவுளரின் வாகனங்களாகவுள்ளன. இவ் வாறே மரவணக்கமும் ஆதியானது. மர வணக்கத்தினை எடுத்துக் காட்டும் குறியீடு கள் பெருங் கற்காலப் பானை ஓடுகளில் மட்டுமன்றிப் பிராமிக் கல்வெட்டுகளிலும் உள. சுவஸ்திகா சூரியனைக் குறிக்கின்றது எனக் கூறுவர். தண்டுடன்கூடிய சுவஸ்திகா கூடக் குறியீடாகப் பிரமிக்கல்வெட்டுகளிற் காணப்படுகின்றது. இவ்வாறே மலை வணக் கமும் ஆதியானது. இதனால் இத்தகையன நாணய வகையிற் காணப்படும் குறியீடுகள் பல இந்து மக்களின் மத்தியில் வழக்கி லிருந்த வழிபாட்டு மரபுகளை எடுத்துக் காட்டுகின்றன எனலாம்.

அடுத்து இந்த நூற்றாண்டின் ஆரம் பத்திற் பாக்கரால் முல்லைத்தீவு, அநுரா தபுரம், திஸமகாராம ஆகிய இடங்களிற் கிடைத்த இந்நாணயங்களைப் பற்றித் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் எமது கவனத்தை ஈர்ப்பனவாகவுள்ளன. முல் லைத்தீவில் கிடைத்துள்ள நாணயங்களில் முற்பக்கத்திலுள்ள உருவத்தை இவர் கடவுளது உருவம் என இனங்கண்டுள்ளார். இவ்வுருவம், சில சமயங்களில் இருதலை முத்தலைச் சூலங்களைக் கையிலேந்தி நிற்பது போன்றும் சித்தரிக்கப்பட்டுள்து. இந்நாணயங்கள் பலவற்றில் முன்பக்கத்தில் எருதின் உருவம் உண்டு. இவற்றின் பின் பக்கத்தில் சுவஸ்திகா, எருது, இலையுடன் கூடிய கும்பம் ஆகியன காணப்படுகின்றன. இவை சிவ வழிபாட்டினைக் குறிப்பவை யாக அமையலாம்.

இச்சந்தர்ப்பத்தில் இலையுடன் கூடிய கும்பம் பற்றிக் குறிப்பிடுதல் அவசியமா கின்றது. பாக்கர் இதனைப் பூர்ணகும்ப மென்றே விளக்கம் தந்துள்ளார். கும்ப ரூபத்தில் தெய்வத்தினை யாசிக்கும் நிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட இந்து சமயத்திலுண்டு. இதனால், கும்பமும் தெய்வத்தின் குறியீடாக அமைந்திருக்கலாம். இக்கும்பங்களை ஆரம்பத்தில் மண் முட்டிகளில் வைப்பதே வழக்கம். வேப்பிலையே அப்போது பயன்படுத்தப்பட்டது. பின்னர்தான் மாவிலை வேப்பிலை பெறும் இடத்தினைப் பெற்றது. இந்நாணயங்களிலுள்ள மற்றோர் சிறப்பு யாதெனில் இவற்றில் ஆண், பெண் தெய்வங்கள் சித்திரிக்கப்பட்டுள்ளமையே. சில நாணயங்களில் முன்பக்கத்தில் பெண்ணின் உருவமும் பின்பக்கத்தில் சுவஸ்திகா, படுத்திருக்கும் எருது, இலையுடன் காணப்படும் கும்பம் ஆகியனவும் காணப்படுகின்றன. இத்தகைய நாணயங்கள் அநுராதபுரத்திலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அநுராதபுர நாணயங்களில் நிற்கும் இருக்கும் நிலையிலுள்ள ஆண் - பெண், தெய்வங்கள் உள.[3] இங்குள்ள பெண் தெய்வம் சில நாணயங்களிற் சூலமேந்திக் காணப்படுகின்றன. இதனைத் துர்க்கை எனலாம். இருக்கும் நிலையிலுள்ள ஆண் பெண் தெய்வங்களுமுள. வழக்கமாக இவை வலது காலைக் கீழே தொங்கவிட்டு இடது காலை ஆசனத்தில் மடித்த வண்ணம் காட்சி தருகின்றன, இங்கு கிடைத்துள்ள வட்ட வடிவமான செம்பு நாணயங்களின் முன்புறத்தில் நிற்கும் நிலையிலுள்ள தெய்வமும் அதன் பக்கத்தில் மானின் உருவமும் பின்பக்கத்தில் ' ஓம் ' என்ற வடிவமும் உண்டு எனப் பாக்கர் குறிப்பிட்டுள்ளார்.[4]

## 0 . 4 லக்ஷ்மி நாணயங்கள் :

மேற்கூறிய நாணயவகையில் மிகப் பிரபல்யமான கலை வடிவமாகத் திகழ்வது இரு பக்கமும் யானையினால் அபிஷேகம் செய்யப்படும் கஜலக்ஷ்மி வடிவமாகும். இதனால் இந்த நாணயங்களை லஷ்மி நாணயங்கள் என அழைக்கப்படுகின்றன. இவை கிறிஸ்தாப்த காலத்திற்கு முற்பட்ட இரண்டாம், முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகும். இவற்றில் சித்திரிக்கப்படும் யானை கூட மழைவளத்தின் சின்னமென்ற ஐதீகம் உண்டு. இது மேலும் லக்ஷ்மியின் செழுமைத் தத்துவத்தைச் சித்திரிக்கின்றது எனலாம். அத்துடன் யானையும் அரச பலத்தின் சின்னம் ஆகும். அரசனுக்கு யானைப் படை அதிக பலத்தைக் கொடுப்பதால் பலமான அவனது ஆட்சி நாட்டிற்கு நல்வாழ்வையும் வளத்தையும் அளிக்கின்றது. இத்தகைய வளம், பலம், செழுமை ஆகியவற்றின் சின்னமே கஜலக்ஷ்மி மூர்த்தமாகும். இம்மூர்த்தத்தில் யானைகள் தாமரைத் தண்டின்மேல் நிற்பது போன்றும் சித்திரிக்கப்பட்டுள்ளன. இவற்றின் முன்பக்கத்தில் தாமரை மலரில் நிற்கும் நிலையிலான லக்ஷ்மி உருவமுண்டு. இவ்வுருவம் கை, கால்களில் வளையல்களுடனும் காணப்படுகின்றன. லக்ஷ்மியின் கமல ஆசனத்தில் இருந்து இரு மருங்கும் வெளிக்கிளம்பும் தாமரைத் தண்டுகளில் நிற்கும் இரு யானைகள் லக்ஷ்மிக்கு அபிஷேகம் செய்வது போன்று காட்சி தருகின்றன. இந் நாணயங்களின் மறுபக்கத்தில் சுவஸ்திகா உருவங்கள் உள. இத்தகைய கஜலக்ஷ்மியின் உருவங்கள் கி. மு. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த வட இந்தியப் பௌத்த கலைப்பீடங்களானபாரூட், சாஞ்சி, புத்தகாயா ஆகிய இடங்களிலுள்ள தோரணங்களிலும் நாணயங்களிலும் சித்திரிக்கப்பட்டுள்ளன. பின்னர் வீடுகளின் வாயில் நிலைகளிலும் இவை செதுக்கப்பட்டன. சங்க இலக்கியங்களிலும் இது பற்றிய குறிப்புண்டு.

கஜலக்ஷ்மி ஈழத்தின் கலை மரபில் ஒரு நிலையான இடத்தினைப் பெற்றிருக்கின்றாள் என்று கூறினால் மிகையாகாது. ஈழத்தின் பழைய தாதுகோரபுங்களிற் காணப்படும் யக்ஷி என வர்ணிக்கப்படும் பெண் சிற்பங்கள் இவற்றுட் குறிப்பிடத்தக்கன. அபயகிரி விகாரையில் கையிற் தாமரையுடன் காட்சியளிக்கும் யக்ஷி உருவமொன்றுண்டு.[5] இவ்வாறே அபயகிரித் தாதுகோபுரத்திற் காணப்படும் யக்ஷி உருவங்கள் தாமரை மலருடன் காட்சியளிப்பதும் குறிப்பிடத்தக்கது. இவை கி. பி இரண்டாம், மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகும்.[6] இவற்றுள் சேதவனத் தாதுகோபுரத்தில் தாமரை மலரைக்கையிலேந்திக் காணப்படும் உருவம் மிகச் சிறப்பாக அமைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்த்தெய்வ வழிபாட்டின் எச்சங்கள் பலவும் ஈழத்தின் பழைய நாணயங்களிற் காணப்படும் உருவங்களில் சித்திரிக்கப்பட்டுள்ளன. பாக்கர் இது பற்றி ஆராய்ந்த போது முல்லைத்தீவு, திஸமகாராம, அநுராதபுரம் ஆகிய இடங்களிற் கிடைத்துள்ள நாணயங்களைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளார். முல்லைத்தீவில் கிடைத்துள்ள நீள் சதுரமான செம்பு நாணயங்களின் முன்பக்கத்தில் ஓர் உருவம் இரு கரங்களிலும் மலர்த் தண்டுடன் சித்திரிக்கப்பட, பின்பக்கத்தில் சுவஸ்திகாச் சின்னம் உளது. இத்தகைய நாணயங்கள் திஸமகாராமவிலும் உள. இவை பெண்தெய்வமாகிய லக்ஷ்மியைக் குறிக்கலாம். அநுராதபுரத்தில் இத்தகைய நாணயங்கள் காணப்பட்டபோதும் ஏழு நாணயங்களில் இருந்த நிலையிற் பெண் தெய்வத்தின் உருவம் சித்திரிக்கப்பட்டுள்ளது. இதில் தெய்வத்தின் இடது கால் மடித்தும், வலது கால் தொங்கவிடப்பட்டுமுள்ள பாவனையிற் காணப்படுகிறது. இதன் ஒரு கை தொடையைத் தொட மற்றைய கை தோள் அளவு உயர்ந்து மலருடன் காணப்படுகிறது. தலைமுடி விரிந்த நிலையில் உள்ளது. [7] அநுராதபுரத்திற் கிடைத்த வட்டவடிவமான செம்பு நாணயங்களில் பெண் தெய்வம் பலவாறு சித்திரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நாணயங்களிற் காணப்படும் லக்ஷ்மி உருவங்கள் ஸ்ரீ சூக்கத்தில் லக்ஷ்மி பற்றி வரும் வர்ணனையைப் பெருமளவு ஒத்துக் காணப்படுகின்றன. [8] இக்கஜலக்ஷ்மி நாணயங்கள் ஈழத்தின் ஆதி நாகரிக மையப் பிரதேசங்களிற் காணப்படுவது ஈண்டு குறிப்பிடத்தக்கது. இவ்விடங்களிற் கந்தரோடை, மாந்தை, வல்லிபுரம், ஆனைக்கோட்டை, பூநகரி, முல்லைத்தீவு, அநுராதபுரம், சிலாபம், திஸமகாராம, நிந்தவூர் ஆகியன குறிப்பிடத்தக்கன.

செம்பினாலான இவை நீள் சதுர வடிவிலமைந்துள்ளன. இவற்றின் முன்பக்கத்திற் தாமரையிலுள்ள லக்ஷ்மி உருவமும் பின்பக்கத்தில் தண்டுடன் கூடிய சுவஸ்தி காவும் காணப்படுகின்றன. கந்தரோடை போன்ற இடங்களிற் கிடைத்துள்ள நாணயங்களில் கலை அம்சம் சிறப்புற்றுக் காணப்படுகின்றது. இவற்றின் முன்பக்கத்தில் தாமரை மலரில் லக்ஷ்மி நிற்பதும், இத் தாமரை மலரிலிருந்து இரு தண்டுகள் லக்ஷ்மியின் இரு பக்கங்களிலும் மேலெழுந்து தோள்வரை சென்று தாமரை மலர் பூத்துக் காணப்பட, அவற்றின் மேல் இருயானைகள் தும்பிக்கையால் இத்தெய்வத்தினை அபிஷேகம் செய்வது போலச் சித்திரிக்கப்பட்டுள்ளன. சிலசமயம் இத்தெய்வத்தின் பாதம்வரை நிலை கொண்டுள்ள தாமரை மலரிலிருந்து தாமரை மலருடன் கூடிய சில தண்டுகள் வெளிக்கிளம்புவது போலவும் சித்திரிக்கப்பட்டுள்ளது.

அநுராதபுரத்திற் கிடைத்த நாணயங்களில் யானைக்குப் பதிலாகப் புள்ளிகள் மாத்திரமே உண்டு. நிந்தவூரிலுள்ள லக்ஷ்மி நாணயங்களில் நிற்கும் நிலையிலுள்ள இத் தெய்வத்தின் பக்கத்திலே சில குறியீடுகளும் காணப்படுகின்றன. இத்தகைய குறியீடுகள் முன்பக்கத்தில் மாத்திரமன்றிப் பின்பக்கத்திலும் காணப்படுகின்றன இந்நாணயங்கள் எல்லாவற்றிலும் மேற்கூறியவாறு பின்பக்கத்தில் தண்டுடன் கூடிய சுவஸ்திகா உருவம் காணப்படுகிறது. சில நாணயங்களிற் தண்டுடன் கூடிய சுவஸ்திகாவுடன் நந்திபாதம், முட்டியுடன் கூடிய பூ, மரம், எருது ஆகியனவும் சித்திரிக்கப்பட்டுள்ளன. முன்பக்கத்திலுள்ள பெண் உருவம், யானை ஆகியனவற்றையும் பின்பக்கத்திலுள்ள தண்டுடன் கூடிய சுவஸ்திகாவையும், சில அறிஞர்கள் முறையே புத்தரது பிறப்பு, தர்மபோதனை ஆகியவற்றின் குறியீடுகள் என வாதிட்டாலுங்கூடப் பெரும்பாலான அறிஞர்கள் இவை லக்ஷ்மி நாணயங்களே என்று வாதிடுவது இன்று பலராலும் ஏற்கப்பட்டுள்ளது. அத்துடன் சுவஸ்திகா போன்ற குறியீடுகளும் காலத்தாற் பௌத்த மதத்திற்கு முற்பட்டவை என்பது ஏற்றுக்கொள்ளப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுள்ளது. ஈழத்தில் திருமாலின் வழிபாடு வேரூன்றியிருந்தமையானது இவை இரண்டுக்குமிடையே இழைவிட்டோடும் ஒ'றுமையை எடுத்தியம்புகின்றது.

### 0.5. முடிவுரை

ஈழத்து இந்துத் தெய்வங்களின் வழிபாட்டு மரபின் தொன்மையை நாணயங்கள் மாத்திரமன்றிக் கிறிஸ்தாப்தத்திற்கு முந்திய மட்பாண்டங்கள், பிராமிக் கல்வெட்டுக்கள் ஆகியனவற்றுட் காணப்படும் குறியீடுகளும் உறுதி செய்கின்றன. குறியீடுகள் அக்கால மக்களின் வழிபாட்டு மரபுகளைப் பிரதிபலிக்கும் எச்சங்களாக விளங்குகின்றன என்றால் மிகையாகாது. இத்தகைய மட்பாண்டங்கள் ஈழத்தின் ஆதிக் குடியேற்ற மையப் பிரதேசங்களிற் பெறப்பட்டதோடு இவை கி. மு. 1000 ஆண்டு தொடக்கம் காணப்படுகின்றன.[8] இவ்வாறே பிராமிக் கல்வெட்டுகளும் ஈழத்தின் மிகப்பழைய கல்வெட்டுகளாகும்.[9] பௌத்தம் கி. மு. 3ஆம் நூற்றாண்டில் ஈழத்திற்கு அறிமுகமான போது அம்மதத்திற்குரிய துறவிகளுக்கு வழங்கப்பட்ட தானங்களை எடுத்தியம்பும் இக்கல்வெட்டுகளிற் காணப்படும் குறியீடுகள் பௌத்தம் பரவ முன்னர் ஈழத்தவர் (தற்காலச் சிங்களமொழி பேசும் மக்கட் கூட்டத்தினர் உட்பட) இந்துக்களாக விளங்கினர் என்பதையும். பின்னர் இவர்கள் பௌத்தத்தை அனுஷ்டித்தாலும் தமது பழைய இந்து வழிபாட்டு நெறியின் அம்சங்களைக் குறியீடுகளாக இக்கல்வெட்டுகளிற் பொறிக்கத் தவறவில்லை என்பதையுமே எடுத்துக் காட்டுகின்றன. முருகனுக்குரிய 'வேல்' இப்பானை ஓடுகளிற் குறியீடாகப் பரவலாகக் காணப்படுகின்றது. இச்சந்தர்ப்பத்தில் இத்தகைய உலோகத்தில் அமைந்த வேலானது ஈழத்தின் ஆதிக்குடியேற்ற மையப் பிரதேசங்களில் குறிப்பாக அநுராதபுர மாவட்டத்திலுள்ள பின்வேவ, புத்தளம் மாவட்டத்திலுள்ள பொம்பரிப்பு, யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள கந்தரோடை ஆகிய இடங்களில் அகழ்வாய்வின்போது கிடைத்தமை குறிப்பிடத்தக்கது.[10] இவ்வாறே இருதலைச் சூலமும் பிராமிக் கல்வெட்டுகளில் குறியீடாகக் காணப்படுகின்றது.[11]

'சிவ' வணக்கத்துடன் தொடர்புடைய முத்தலைச் சூலம்' பானை ஓடுகளிற் காணப்படுவது போன்று ஆனைக்கோட்டையிற் கிடைத்த 'வெண்கல முத்திரையிலும்' குறியீடாக இடம் பெற்றுள்ளது.[12] இதனால் இச்சூலமானது ஆரம்பத்தில் ஒரு தனியான வழிபாட்டு நெறியாக விளங்கிக் காலக்கிரமத்தில் ஒருதலைச்சூலம் (வேல்)முருகவணக்கத்துடனும், 'முத்தலைச்சூலம்' சிவ வணக்கத்துடனும் இணைந்தன எனலாம். சிவ வணக்கத்துடன் தொடர்புடைய 'நந்தியின் பாதம்' பிராமிக் கல்வெட்டுகளிற் குறியீடாகக் காணப்படுவது போன்று திருமாலின் வழிபாட்டுக்குரிய சக்கரம்,[13] பிரமனுடன் தொடர்புடைய 'அங்குசம்' ஆகியனவும் இக்கல்வெட்டுகளிற் குறியீடாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன.[14] பலராமனுக்குரிய 'கலப்பையும்' இதே கல்வெட்டுகளில் இடம் பெற்றுள்ளமையும் நோக்கற்பாலது.[15]

மேற்கூறிய தொல்லியற் சான்றுகள் கி. மு. 3ஆம் நூற்றாண்டில் பௌத்தம் ஈழத்தில் கால்கொள்ள முன்னர் இந்நாட்டின் ஆதியான நெறியாக இந்து நெறியே விளங்கியது என்பதை எடுத்தியம்புகின்றன. இவ்வாறே பண்டைய ஈழத்தில் சிவ விஷ்ணு, முருக கணபதி தாய்த்தெய்வ வழிபாட்டு நெறிகள் ஆகியன கிறிஸ்து பிறப்பதற்கு பல நூற்றாண்டுகட்கு முன்னரே தழைத்தோங்கியதை இலக்கிய, கல்வெட்டுச் சான்றுகள் உறுதி செய்கின்றன.[16] எனினும் இக்காலத்திற்குரிய இந்துக் கடவுளரின் சிலைகள் அருகியே காணப்படுகின்றன. காரணம் இவையாவும் அழியும் பொருட்களான சுதை, மரம், ஆகியனவற்றால் பெரும்பாலும் ஆக்கப்பட்டன. கல்லில் சிலைகளை வடிக்கும் மரபு பரவலாக இக்காலத்தில் இந்துநெறியிற் காணப்படவில்லை. எனினும், இத்தகைய போக்கிற்குப் புற நடையாக அமைவதுதான் கிட்டத்தட்ட 2000 ஆண்டுகள் பழைமை வாய்ந்த கல்லில் வடிக்கப்பட்ட விநாயகரின் சிற்பமாகும். இது அநுராதபுர மாவட்டத்திலுள்ள மிகுந்தலையில் உள்ள, கண்டக சேத்திய என்ற பௌத்த வழிபாட்டிடத்தில் கிடைத்துள்ளது ஈழத்திற் காணப்படும் மிகப்பழைய இந்துநெறிக்குரிய சிற்பம் என்று இதனைக் கூறிவிடலாம்.[17]

UNIVERSITY OF JAFFNA LIBRARY



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உசாத்துணை நூல்கள் :**


1. Codrington. H. W. Ceylon Coins and Currency ( Colombo ), 1924.
2. Parker. H. Ancient Ceylon Reprint ( New Delhi ), 1984, பக் 507.
3. மே. கூ. நூல், பக். 482 — 487.
4. மே. கூ. நூல். பக். 487 ... 488.
5. Paranavitana,s. Art of the Ancient Sinhalese ( Colombo ), 1971, Plate. 9.
6. மே. கூ. நூல், Plates. 4, 9, 12.
7. சிவசாமி வி. 'யாழ்ப்பாணக் காசுகள்' நான்காவது அனைத்துலகத் தமிழா ராய்ச்சி மகாநாட்டில் வாசிக்கப்பட்ட கட்டுரை, 1974, பக். 26 — 36
8. Sitrampalam, S. K. The Megalithic Culture of Sri Lanka, Unpublished Ph. D. Thesis, University of poona ( Poona ), 1980.
9. Paranavitana,s. Inscriptions of Ceylon, Vol. I ( Colombo ), 1970.
10. Sitrampalam, S. K. மே. கூ. க. 1980.
11. Paranavitana,S. மே. கு. நூல், 1970, பக். XXVI
12. Ragupathy, P. Early Settlements in Jaffna - An Archaeological Survey, ( Madras ), 1987. பக். 199.
13. Paranavitana, S. மே. கு. நூல், 1970. பக். XXVI. இல. 20, 35, 36;
14. மே. கு. நூல், 1970 பக். XXVI. இல. 23
15. மே. கு. நூல், 1970, பக். XXVI. இல. 31
16. சிற்றம்பலம், சி. க. ஈழத்து இந்துசமய வரலாறு பாகம் 1, கி. பி. 500 வரை. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, ( கொழும்பு ), 1996.
17. Ellawala, H Social History of Early Ceylon ( Colombo ), 1969, பக். 158—159


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ பலசரக்கு சாமான்கள்
★ வீட்டுப் பாவனைப்பொருட்கள்

ஆகியவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள

நாடவேண்டிய ஸ்தாபனம்

V

# இராசம் றேடிங்கோ

கண்டி வீதி, சாவகச்சேரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள்
★ ரயர், ரியூப் வகைகள்
★ வாகன பற்றறிகள்
★ ஒயில், ரின்னர் வகைகள்

மலிவான விலையில் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய இடம்

# அருள்விநாயகர் வர்த்தக நிலையம்

262, பரம் சாலை, சாவகச்சேரி.

# ★ அருள் விநாயகர் ★

3, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுபமுகூர்த்தப் பட்டுப் புடைவைகளின்
கைராசியான ஸ்தாபனம்

# சீமாட்டி புடைவைக் கடல்

122, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம்

---

★ ஆங்கில மருந்து வகைகள்
★ ஆயுள்வேத மருந்து வகைகள்
★ அபிடேகத் திரவியங்கள்

ஆகியவற்றை மலிவான விலையில் பெறவும்
ஆய்வுகூட பரிசோதனைகளைச் செய்யவும்

# வேல் பார்மசி

கண்டி வீதி, சாவகச்சேரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலசரக்குப் பொருட்கள்
மளிகைச் சாமான்கள்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய நிறுவனம்

# இராசேஸ் பலசரக்கு மாளிகை

பிரதான வீதி, கொடிகாமம்.

உங்கள் இல்லத்தில் நிகழும் வைபவங்களுக்கேற்ற

- சொக்கட்டான் மணப்பந்தல்
- தகரப் பந்தல்
- மணவறை
- கதிரைகள்

என்பவற்றை வாடகைக்கு பெற்றுக்கொள்ளவும்

தரமான கிறில், கேற் மற்றும்
மின் ஒட்டுவேலைகட்கும்

# முருகேஸ் இரும்புத் தொழிற்சாலை

அல்லாரை வீதி, மீசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கான அபிவிருத்தி திறமுறைகள்

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்கள்
( துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம். )

யாழ்ப்பாணக் குடாநாடு இலங்கையில் சிறப்பான பண்புகள் கொண்டதொரு புவியியற் பிரதேசமாகும். குடாநாட்டுக்கான அபிவிருத்தி திறமுறைகளை முன்மொழிய முன்னர் இப்பிரதேசத்தின் புவியியல் வரலாறு இன்றைய சமூக பொருளாதார நிலைமைகளைக்கவனத்தில் முதற்கொள்ள வேண்டியது அடிப்படையாக அமைய வேண்டும். இத்தகைய காரணிகளை கவனத்தில் எடுக்கப்படாதவிடத்து இப்பிரதேசத்தின் அபிவிருத்தியினை நன்முறையில் முன்னெடுப்பது கடினமாகலாம். இப்பிரதேசத்தில் மக்கள் நீண்ட காலமாக குடியிருந்து வருவதுடன், அதன்வழியாக இங்கு காணப்படும் இயற்கை வளப்பயன்பாடு, நிலப்பயன்பாடு, நிலவுடமை, நிலவாட்சி முறைகள், சமூகப்பொருளாதார நிலைமைகளும் விழுமியங்களும் தனித்துவமானதும், சிக்கலானதுமாகக் காணப்படுகின்றன. புதிய அபிவிருத்திப் பிரதேசங்கள் போல் அல்லாது ஏற்கனவே சிக்கலான பண்புகள் கொண்ட குடாநாடு போன்ற பிரதேசங்களில் அபிவிருத்தி முயற்சி மேற்கொள்ளப்படும்போது மக்களின் பங்களிப்பு முக்கியமாக அமைகிறது.

யாழ்ப்பாணக் குடாநாடு பலதீவுகளை உள்ளடக்கி 1126 சதுர கிலோமீற்றர் பரப்பைக் கொண்டது. குடாநாடு இரண்டு பிரதான கடநீரேரிகளால் ஊடுருவப்பட்டு மூன்று பிரதான நிலத்திணிவுகளை (வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி) கொண்டுள்ளது. குடாநாட்டின் எந்தவொரு இடமும் கடல்நீர் நிலையிலிருந்து எட்டுக் கிலோமீற்றருக்கு மேற்படவில்லை. இதன் தெற்கு, மேற்குப் பகுதிகள் கடனீரேரிகளாலும் கிழக்கு வடக்குப் பகுதிகள் இந்து சமுத்திரத்தாலும் சூழப்பட்டுள்ளது. இதனது தெற்கு, மேற்கு கரையோரங்கள் சேற்றுக் கரையோரங்களாகவும், வடக்கு கரையோரம் பாறைகளைக் கொண்டும், கிழக்குக்கரையோரம் மணற்பாங்கானதாகவும் காணப்படுகின்றது. குடாநாட்டின் நிலப்பரப்பு சமதரையாக இருப்பதுடன் இதன் ஆகக்கூடிய தரை, உயரம் பத்து மீற்றருக்கு குறைவாகவேயுள்ளது. நிலம் சமதரையாக இருப்பதால் அதனை யாதொரு தேவைக்கும் பயன்படுத்தக் கூடிய பண்பு உயர்வாகவுள்ளது. கண்டி, நுவரேலியா போன்ற மாவட்டங்கள் மலைப் பிரதேசங்களாக இருப்பதால் அங்கு மென்சாய்வு கொண்ட மலைச்சரிவுகள் பள்ளத்தாக்குகளில் மாத்திரமே குடியிருப்புக்கள், பயிர்ச்செய்கைகள் போன்றவற்றை மேற்கொள்ளமுடியும் குடாநாடு சிறியபரப்பாக இருப்பினும் அது தன்னுள் பலவகையான மண்வளத்தினை கொண்டு இருப்பது பல பயிர்களைச் செய்வதற்கு உகந்ததாக அமையும். மேலும் குடாநாடு மயோசீன் சுண்ணக்கற்பாறைகளால் உருவாக்கப்பட்டு தரைக்கீழ் நீர் வளத்தைப் பெற்று இருப்பதால் நன்னீர்ப் பரப்புக்களில் வருடம் முழுவதிலும் பயிர் செய்யக்கூடிய வாய்ப்பும் குடியிருப்புக்களின் விருத்திக்கும் ஏற்றதாக அமைந்துள்ளது. இப்பிரதேசத்தின் வருட மழை வீழ்ச்சி ஐம்பது அங்குலத்திற்கு மேற்பட்டதாகவும் வெப்பநிலை 81⁰ பரனைட்டாக இருப்பினும் பருவகாலத்திற்குரிய மழைவீழ்ச்சி ஒழுங்கும் வெப்பநிலைப் போக்கும் மத்திய தரைக்காலநிலையை ஒத்தசில காலநிலைப் பண்புகளைக் கொண்டுள்ளது. இப்பிரதேசத்தின் காலநிலையும் மண்வளமும் பழச்செய்கை, காய்கறிச்செய்கைக்கு ஏற்றதாகவும், மேலும் உற்பத்தியாகும் விவசாயப் பொருட்கள் தரமானதாகவும் உள்ளது. இப்பிரதேசத்தின் இயற்கை வளங்களில் கடல்வளம்மிக்கதாகவும் 244 கிலோமீற்றர் நீளமான கரையோரத்தைக் கொண்டுள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளது. இக்கடற்பிரதேசங்கள் மீன்பிடிக்கும் நன்முறையில் பயன்படுத்தப்பட்டு வருகின்ற போதிலும் சூழவுள்ளபிரதேசத்தை விருத்தி செய்யக்கூடிய வாய்ப்புக்கள் நிறையவே யுண்டு. இயற்கைக் கனிமரங்களில் சுண்ணக் கல், மணல் சிறியளவில் களி முதலியனவும் தாவரங்களில் பனையும் முக்கியவளமாக வுள்ளன.

இப்பிரதேசத்தில் மக்கள் செறிந்து வாழ்வதற்கு மேற்கூறிய பௌதிக காரணி கள் மட்டுமின்றி, இப்பிரதேசம் காலத் துக்கு காலம் இயற்கை அனர்த்தங்களுக்கு உட்படுவதும் மிகக்குறைவாகவேயுள்ளது. கடற்கொந்தளிப்பு, புயல்வெள்ளப்பெருக்கு எரிமலைத்தாக்கம், வறட்சி மண்ணரிப்பு போன்ற இயற்கை அனர்த்தங்கள் அல்லது வெட்டுக்கிளி, கறையான், எறும்பு முத லிய உயிரினங்களால் ஏற்படும் அனர்த்தங் களும் மிகக்குறைவு. இத்தகைய சாதக நிலைமை மக்கள் குடியிருப்பு வளர்வதற்கு வசதியாக உள்ளது.

இப்பிரதேசம் நீண்ட காலமாக தொடர்ச்சியான குடியிருப்புக்களை கொண்டிருந்தமைக்கு அத்தாட்சிகள் உண்டு யாழ்ப்பாணராச்சியம் 13ஆம் நூற்றாண்டில் உருவாகியபோது யாழ்ப்பாணக்குடாநாடே அதன் மையப்பரப்பாக அமைந்திருந்தது. அன்றிலிருந்து இன்றுவரை குடாநாட்டு மக்கள் செறிவாக வாழும் பகுதியாக இருந்து வருகிறது இருபதாம் நூற்றாண் டுக்கு முன்னர் விவசாயம் மீன்பிடி அத னுடன் இணைவான சிறுகுடிசைக் கைத் தொழில்களும், முக்கியமாகவிருந்தன.

இருபதாம் நூற்றாண்டில் இருந்து படிப் படியாக உள்ளூர் விவசாய மீன்பிடி உற் பத்திதிறனில் மாற்றம் ஏற்பட்டதுடன் சேவைத்தொழில்களிலிருந்தும் வருமானம் அதிகரித்து வரத்தொடங்கியமையும் குறிப் பிடத்தக்கது. இந்த நூற்றாண்டின் முற் பகுதியில் குடாநாட்டின் பொருளாதார வளர்ச்சியில் சிங்கப்பூர், மலேசியா முதலிய நாடுகளுக்கு தொழில்வாய்ப்புகளுக்காக சென்றவர்களின் பங்களிப்பு முக்கிய இடத் தைப்பெற்றது. 1950, 1960 களில் தென் னிலங்கையில் சேவைத்தொழில் புரிந்தவர் களின் எண்ணிக்கை கணிசமானதாக அதிக ரித்ததுடன் அவர்கள் வாயிலாக கிடைத்த பொருளாதாரப் பங்களிப்பு குடாநாட்டு செயற்பாட்டுக்கு முக்கியமானதாக அமைந் தது.

1970களில் குடாநாட்டை சேர்ந்தவர் கள் குறிப்பாக கல்வி கற்றவர்கள் முக்கிய மாக நைஜீரியாவுக்கும் மற்றும் சில ஆபிரிக்க நாடுகளுக்கும் தொழில் நிமித்தம் இடம் பெயர்ந்தனர்.

1980 களிலிருந்து மேற்கைரோப்பா கனடா, அவுஸ்ரேலியா நோக்கிய இடப் பெயர்வு அதன் வாயிலாககிடைத்த வரு மானமும், குடாநாட்டின் பொருளாதார செயற்பாட்டில் முக்கிய இடத்தை வகித் தது. இன்று கனடாவில் ஒரு இலட்சத் துக்கு மேற்பட்டோரும், இங்கிலாந்தில் ஐம்பதினாயிரம் பேரும் பிரான்ஸில் ஐம்ப தினாயிரம்பேரும் ஜேர்மனியில் நாற்பதி னாயிரம்பேருக்கு மேற்பட்ட யாழ்ப்பாணத் தவர்கள் வாழ்வது குறிப்பிடத்தக்கது. இத னால் யாழ்ப்பாண குடாநாட்டின் இன் றைய பொருளாதார செயற்பாட்டிலும் வருங்கால பொருளாதார அபிவிருத்தி முயற்சிகளிலும் இடம்பெயர்ந்து உலகின் பல்வேறு நாடுகளிலும் வாழும் யாழ்ப்பா ணத்தவர்களின் பங்கு முக்கியமானதாக அமையும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் சனத் தொகை 1946இல் நான்கு அரை இலட்ச மாகவும் இன்று அண்ணளவாக எட்டு இலட்சத்திற்கு மேற்பட்டிருக்கலாம் என வும் மதிப்பிடப்படுகிறது. இலங்கைத்தீவின் குடிசனத்தொகை 1946ன் பின்னர் மூன்று மடங்காக அதிகரித்துள்ளது. அதாவது ஆறுமில்லியனாக இருந்த சனத்தொகை இன்று பதினெட்டு மில்லியனாக அதிகரித்து உள்ளது. குடாநாட்டின் சனத்தொகை, பிறப்புவீதம் இலங்கையின் பிறப்புவீதத்தை ஒத்திருந்தபோதும் வெளியிடப் பெயர்வு காரணமாக அதிகரிப்பு இரண்டு மடங்கா கவேயுள்ளது. 1946 பின் அதிகரிப்பு குடி வெளியிடப் பெயர்வுக்கு முக்கிய காரணம் குடாநாட்டுக்குள் இலங்கையின் ஏனைய பிரதேசங்களை ஒத்த அபிவிருத்தி ஏற்பட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லை பொருளாதார முதலீட்டுயின்மை அதன் வாயிலாக வேலைவாய்ப்பு பெருக் கப்படாமையால் மக்கள் இடம்பெயர தள் ளுவிசை காரணமாக அமைந்தது. இப் பிரதேசத்தில் வழங்கப்பட்ட கல்வியும் இடப்பெயர்வுக்கு சாதகமாக அமைந்தது. சுருக்கமாகக்கூறின் யாழ்ப்பாணம் தொழில் படைகளை வழங்கும் பிரதேசமாக இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

1970ஆம் ஆண்டுகளின் பின்னர் தமிழர் போராட்டம் தொடங்கிய காலத்திலிருந்து இப்பிரதேசம் இன்று வரை முக்கியமான தாக விளங்கிவருகிறது. 1977 களின் பின் னர் நாட்டில் ஏற்பட்ட இனக்கலவரம் கார ணமாக இப்பிரதேசத்தை சேர்ந்த தென் னிலங்கை வாழ்மக்கள் பெரும் பொருள் நஷ்டப்பட்டு, தொழில்வாய்ப்பு இழந்தும் அகதிகளாக 1977 – 1984 காலப்பகுதிவரை கு'டாநாட்டுக்குள் இடம்பெயர்ந்து வந்த னர் இதனால் குடாநாட்டு குடிசனத் தொகை இக்காலப்பகுதியில் சிறிதளவு அதி கரித்ததுடன், பொருளாதார அபிவிருத்தி யும் ஏற்பட்டது. 1984க்குப் பின்னர் ஈழப் போராட்ட நடவடிக்கைகள் அதிகரிக்க தொடங்கிய பின்னும் 1987 – 1989 காலப் பகுதியில் இந்திய அமைதிப்படை யுத்தத்தி னாலும் குடாநாட்டுப் பொருளாதார நட வடிக்கைகள் பெரும்பாதிப்புக்கு உட்பட்டு பெருமளவு சொத்துக்கள் அழிக்கப்பட்டன.

1990இல் ஏற்பட்டயுத்தத்தினால் இப் பிரதேசத்திலிருந்து தென்னிலங்கைக்கும் சர்வதேசத்திற்கும் இடம் பெயர்ந்தனர். இதனைத்தவிர தீவுப்பகுதிகளைச் சேர்ந்த வர்களும் (வேலணை, புங்குடுதீவு, மண்டை தீவு, காரைதீவு) வலிகாமம் வடக்குப்பகுதி கட்டைக்காடு, முள்ளியான், ஆனையிறவு, இயக்கச்சி மக்களும் குடாநாட்டுக்குள் இடம்பெயர்ந்தனர் இதனால் குடாநாட் டின் பொருளாதாரம், ஆரம்ப நிலையிலி ருந்த கைத்தொழில்கள் சேவைத் தொழில் கள் என்பன நலிவடைந்து பல செயலிழந் தன. மீன்பிடித்துறை கடற்பரப்புக்களை இழந்ததால் பெரும்பாதிப்புக்கு உட்பட் டது. விவசாயத்துறை உற்பத்தித்திறன் குறைவடைந்துள்ளது. யுத்தம் காரணமாக மக்கள் வாழ்ந்த இடங்களை விட்டு இடம் பெயர்ந்தமையால் விவசாயம், மீன்பிடி என்பவற்றில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள் ளது. போக்குவரத்துப் பாதைகள் தடைப் பட்டதாலும் இப்பிரதேசத்தின் வழமை யான ஏற்றுமதிகள் குறிப்பாக புகையிலை, சுருட்டு மிளகாய், வாழைப்பழம் வெங்காயம் திராட்சை, மீன், கருவாடு 'முதலியவற்றில் உற்பத்திகள் குறைவடைந்தும் சிறுதொ கையே வெளிமாவட்டங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றது. மீன்பிடி விவசாயம் மூலமும் கிடைத்த வருமானங்கள் பெரு மளவு குறைந்துள்ளது. இப்பிரதேசத்தில் யுத்தத்தினால் ஏற்பட்ட தேவை கருதிசில புதியஉணவுப்பயிர்கள் முன்னரிலும் பார்க்க கூடுதலாக உற்பத்தி செய்யும் போக்கு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக காய்கறிப்பயிர் கள், தானியப்பயிர்கள் யுத்தத்தின் கார ணமாக எரிபொருட் பற்றாக்குறைவு, மூலப் பொருட்பற்றாக்குறைவு காரணங்களால் பலதொழில்கள் மூடப்பட்டாலும் உள்ளூர் மூலப்பொருட்களைக் கொண்ட சிறுசிறு கைத்தொழில் முயற்சிகள் முன்னெடுக்கப் பட்டன.

உதாரணம்: பனைசார்தொழில்கள்

இப்பிரதேசத்தின் பொருளாதார அபி விருத்தியை பின்வரும் நிலைப்பாடுகளில் நோக்கலாம்:

(1) யுத்தம் முடியும்வரை— அதனை சமாளிப்பதற்கும் அனர்த்தங்களுக்கு ஈடு கொடுக்கக்கூடிய அடிப்படைத் தேவை களை பூர்த்தி செய்யும் நோக்கில் கிடைக் கக்கூடிய வளங்களைப் பயன்படுத்தி நாளா ந்த வாழ்க்கைத் தேவைகளை நிறைவேற் றல் விவசாயம், மீன்பிடி, சிறுகைத் தொழில் முயற்சிகளைப் பேணுதல்.

(2) இப்பிரதேசத்தின் அபிவிருத்தியை சமாதானம் கிட்டிய பின்பு முன்னெடுப் பது இதில் உடன் தேவையும், நீண்ட தோர் தேவையும் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும் இடம்பெயர்ந்த மச்கள் தத்தம் குடியிருப்புக்களுக்கு மீளச் சென்று புனருத் தாரணப் பணிகளை மேற்கொள்ளல் புன ருத்தாரணப் பணிகள் செய்யும் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்திகளை உள்வாங்கியதாக அமைதல் வேண்டும். புனருத்தாரணப் பணிகள் கிராமத்துக்கு கிராமம் வேறுபட்டனவாகவும் அழிவுகளுக்கு ஏற்ப அணுகுமுறைகளும் திறமுறைகளும் வேறுபட்டனவாகவும் அமையவேண்டும். வேலைவாய்ப்பு, பௌதீகக் கட்டுமானங்களின் புனருத்தாரணம் வீடமைப்பு முதலியவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படல் வேண்டும்.

நீண்டகாலநோக்கில் பின்வரும் திறமுறைகளை குடாநாட்டு அபிவிருத்திகளில் கடைப்பிடித்தல்.

(1) குடாநாட்டிற்கான ஒரு குடிசன விருத்திக் கொள்கையை வகுத்து அதன் அடிப்படையில் அபிவிருத்திகளை மேற்கொள்ளல் வேண்டும். அதாவது ஏற்கனவே ஒரு சதுரகிலோமீற்றருக்கு 750 பேர் வாழ்வதாலும் தரைக்கீழ் நீர் பயன்பாடு மட்டுப்படுத்தப்பட்டு இருப்பதால் குடாநாட்டுக்குள் வெளிப்பிரதேசத்து மக்களை ஈர்க்கக்கூடிய முறையில் அபிவிருத்திகளை மேற்கொள்ளாது இப்பிரதேசத்து மக்களின் ஒரு பகுதியினரை பெருநிலப் பிரதேசத்துக்கு இடம்பெயரக்கூடிய வகையில் அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். குடிசனத்தொகை வளர்ச்சி தொடர்ந்து 1% மாக இருத்தல் நலம். குடாநாட்டுக்குள் இன்றைய குடிசனப் பரம்பலில் மாற்றம் ஏற்படுத்தவேண்டும். குடாநாட்டின் கிழக்குப்பிரதேசத்தில் கொடிகாமம், பளை, மருதங்கேணி, பச்சிலைப்பள்ளி முதலியன சிறிய நகர்களாக விருத்திசெய்யப்படல் வேண்டும்.

(2) குடாநாட்டின் நன்னீர், விவசாய நிலங்கள் முதலியன பற்றாக்குறையாக இருப்பதனால் வலிகாமம் பிரதேசத்தில் செம்மண், நன்னீர்ப்பிரதேசம், விவசாய நடவடிக்கைகளுக்கு தொடர்ந்தும் வைத்திருக்கக்கூடிய முறையில் நிலப்பயன்பாடு அமையவேண்டும் விவசாயத்திற்கு பொருத்தமற்ற நிலங்கள், குடியிருப்புக்கள் கைத்தொழில் இடஅமைவு கைத்தொழில் விருத்திக்கு முழுவதற்குமான ஒரு தெளிவான நிலப்பயன்பாட்டுக்குக் கொள்கை கடைப்பிடிக்க வேண்டும். யாழ்ப்பாணக் குடாநாட்டின் விவசாயத்தில் புதிய பயிர்கள் அறிமுகப்படுத்தப்பட்டிருப்பதனால் தொடர்ந்தும் அவை நிலை பெறக்கூடியதாக இருத்தல். பொருளாதார ரீதியில் வருவாயை கொடுக்கக்கூடிய புதிய பயிர்கள் அறிமுகம் செய்ய முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

உதாரணம்; ஒலிவ், பேரிந்து மற்றும் பழவகைகள், விவசாயத்துறையில் நவீனத்துவம் மூலமும் புதிய பயிர்களை அறிமுகப்படுத்துவதன்மூலமும் உற்பத்தியைப் பெருக்கக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளனவேயொழிய வேலைவாய்ப்பை பெருமளவில் பெருக்கக்கூடிய சந்தர்ப்பங்களும் இல்லை. விவசாயத்துறையில் வேலை விரும்பும் வேலைப்படையும் இல்லை.

மீன்பிடித்துறையின் விருத்திக்கு சிறந்த வாய்ப்புக்கள் இருந்த போதிலும், மீனவ புனருத்தாரணமும் மீனவத்தொழில் புனருத்தாரணமும், துறைமுக வசதிகளும் விருத்தி செய்யப்படல் வேண்டும். யாழ்ப்பாணக்குடாநாட்டில் கல்விசார்ரீதியாகவே தொழில்களை உருவாக்கக்கூடிய வாய்ப்புக்கள் நிறையவேயுள்ளன. 3ஆம் மட்டகல்வி நிறுவனங்களின் வளர்ச்சிக்கான வாய்ப்புக்கள் முன்னெடுக்கப்பட்டு அவற்றின் மூலம் தொழில்கள் பெருக வேண்டும். யாழ்ப்பாணப் பிரதேசத்தில் இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமே வேறு எந்த நிறுவனங்களிலும் பார்க்க கூடுதலான வேலைவாய்ப்புக்களை அளிக்கும் நிறுவனம். ஒவ்வொரு அமெரிக்க நகரங்களிலும் அமைந்துள்ள பல்கலைக்கழகங்களே கூடுதலான வேலைவாய்ப்பை வழங்குகின்றன. குடாநாட்டில் பல்கலைக்கழக விரிவாக்கமும், புதிய தொழில்நுட்ப கல்லூரிகள், பல்கலைக்கழக இணைப்புக் கல்லூரிகள், முதலியவற்றை ஏற்படுத்துவதன் மூலம் ஒருபக்கம் கல்வி வசதியை விரிவாக்கியும் மறுபக்கத்தில் வேலைவாய்ப்பையும் உருவாக்கிக் கொள்ளலாம். நூல் எழுதுதல் பிரசுரம், அச்சுத்தொழில் முதலியவை வளர்ச்சி பெறுவதற்கானசாதக சூழ்நிலை இங்கு காணப்படுகின்றது. மேலும் இத்தொழில்களுக்கு ஏற்ற கல்வியறிவு உடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

225.4 MEE AR

தொழிற்படை இங்குண்டு. எனவே குடா நாட்டின் பொருளாதார தொழில்வாய்ப்பு வளர்ச்சிக்கு ஏற்ற கல்வி விருத்தியும்.

இப்பிரதேசத்தின் பொருளாதார அபிவிருத்திக்கு இங்குள்ள குடியிருப்புக்கள், போக்குவரத்துப்பாதைகள், துறைமுகங்கள் முதலியன நன்னிலையில் இருக்கவேண்டியது அத்தியாவசியமாகும். இப்பிரதேசத்தின் போக்குவரத்தை எடுத்து நோக்குகையில் கடநீரேரிகளால் துண்டிக்கப்பட்ட தீவுகளை கொண்ட தீபகற்பமாக இருப்பதால் சிறந்த வலைப்பின்னல் ஒன்று அமைய வேண்டும். தற்போதைய வீதிவலைப்பின்னல் ஓரளவு திருப்திகரமாக உள்ளபோதும் இவற்றின் தரம் உயர்த்தப்பட்டு அத்துடன் பெருநிலப் பகுதியையும் குடாநாட்டையும் தீவுப்பகுதியையும் இணைக்கும் புதிய பாதைகள் அமைக்கப்பட வேண்டும்.

அவையாவன :

1. கிழக்குகரையோரம் – பருத்தித்துறையிலிருந்து முல்லைத்தீவை இணைக்கும் பெரும்சாலை
2. பூநகரி – தாம்போதி
3. வேலணை – அராலித்துறை தாம்போதி
4. ஊர்காவற்றுறை, காரைதீவு, தாம்போதி
5. வரணி, அம்பன் குடத்தனை, மணற்காடு, பெருஞ்சாலை
6. பலாலிவீதி – பலாலி விமானநிலையத்திலிருந்து யாழ்நகர் வரை ஒரு அரசபாணி வீதியாக மாற்றப்படல் வேண்டும்.

இன்றையவீதி வலைப்பின்னல் அடர்த்தியை மேலும் விருத்தியாக்குவது தேவையற்றது ஒன்றாகும். இதற்குப் பதிலாக குடாநாட்டுக்கு ஒரு சுற்றுப்போக்கு வரத்துப்பாதை அமைக்கப்படுமாயின் குடாநாட்டின் போக்குவரத்து தேவையை இலகுவாக பூர்த்தி செய்யமுடியும். தற்போது கொடிகாமம் – காங்கேசன்துறை புகையிரதப்பாதை அழிவுற்ற நிலையில் உள்ளது. இப்பாதையை புனருத்தாரணம் செய்வதுடன் கொடிகாமம், வரணி, நெல்லியடி, செல்வச்சந்நிதி, பலாலி, காங்கேசன்துறையை இணைக்கும் புதியபுகையிரதப்பாதை அமைக்கப்பட்டு ஒரு சுற்றுப்பாதையாக விருத்தி செய்யப்படுமிடத்து இப்பாதை குடாநாட்டின் முக்கியநகர்களை இணைப்பதால் குடாநாட்டில் கிராம - நகரங்களுக்கிடையிலான போக்குவரத்துத் தேவைகளை பூர்த்தி செய்யும். ஆகவே குடாநாட்டின் போக்குவரத்து பிரச்சினைக்கு இதுவே சிறந்த தீர்வாகும்.

குடாநாட்டின் ஏற்றுமதி, இறக்குமதி கைத்தொழில்களுக்கு காங்கேசன்துறை முகம் சர்வதேசதுறைமுகமாக விருத்தி செய்யப்படல்வேண்டும். இதனைத் தவிர பருத்தித்துறை, ஊர்காவற்றுறை, வல்வெட்டித்துறை ஆகியன சிறிய துறைமுகங்களாக விருத்தியாக்கப்பட்டு அவை மீன்பிடி சுற்றுலாத்துறை கைத்தொழில், வர்த்தகம், வளர்ச்சிக்கும் முக்கிய பங்கு வகிக்கும்.

பலாலிவிமான நிலையம் நன்முறையில் விருத்தி செய்யப்பட்டு சர்வதேச, உள்ளூர் விமானப்போக்குவரத்தில் முக்கியபங்கை வகிக்கலாம். குடாநாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பலாலிவிமான நிலையத்தின் அபிவிருத்தியும் முக்கியமான தொன்றாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட ஆலோசனைகள் அபிவிருத்தி முயற்சியில் கவனத்தில் எடுக்கப்படுமாயின் இப்பிரதேசத்தின் வளர்ச்சியை முன்னெடுப்பது இலகுவாகும்.

249690

ARCHIVES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்திநெறியும் மணிவாசகரும்

பேராசிரியர் கலாநிதி நா. சுப்பிரமணியன் அவர்கள்
(தலைவர், தமிழ்த்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.)

சமயமரபிலே பக்தி என்பது வழிபாட்டு முறைமைகளுக்கு அடிப்படையாகஅமைந்த நம்பிக்கை சார்ந்த பற்றுறுதியைக் குறித்து நிற்பது. இப்பற்றுறுதியில் தலைநின்றவர் மணிவாசகர். பக்தி மரபின் வரலாற்றிலே மணிவாசகர் வகிக்கும் இடம் தொடர்பான ஆய்வு மிக விரிவான நிலையில் மேற் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும். அதற்கான தொடக்கநிலைச் சிந்தனைகள் சில இங்கே முன்வைக்கப்படுகின்றன.

பக்தி என்பது பொதுவாக ஒரு குறிக் கோளை அடைவதற்கான வழியாகவே கருதப்பட்டு வருகின்றது. குறித்த ஒரு பயனை எய்துவதற்கு இறையருளை நாடும் ஒரு அணுகுமுறை என்ற பொருளிலேயே அது வழங்கி வந்துள்ளமையினை வழி பாட்டு நெறிகளும் இலக்கியங்களும் உணர்த்தி நிற்கின்றன.

**''நான் உனக்குப்பால், தயிர், நெய் முதலிய அவிர்ப்பாகங்களைத் தருகிறேன் நீ எனக்கு வீரர்களான புதல்வர்களையும் பசுக்களையும் செல்வத்தையும் தருவாயாக''**

எனயாசிக்கும் வேதகால வேள்விமுறை தொடக்கம் இன்று ஆலயங்களில் நிகழ்த் தும் வேண்டுதல்கள் வரை பயன்கருதும் பக்தி நிலையே புலப்படுகின்றது.

இவ்வாறு வேண்டப்படும் பயன்கள் இருவகையின. ஒன்று உலகியல் சார்ந்தது மற்றது ஆத்ம ஈடேற்றம் பற்றியது. மேற் கூறிய வேத வேள்விமுறை உலகியல் சார்ந்த பக்திக்குப் பொருத்தமான எடுத் துக்காட்டாகும். இரண்டாவது வகையான ஆன்ம ஈடேற்றம் என்பது உலகியல் வாழ்க்கையிலிருந்து விலகுவதாகும். உலகியல் ஈடுபாடு துன்பத்திற்கு ஏது என் பதை உணர்ந்து அதிலிருந்து விடுபடுவ தற்கு இறையருளை நாடுவதே இந்த இரண்டாவது வகையின் நோக்கமாகும். இறையடியார்கள் பலரதும் பக்தி இவ் வகைக்கு உதாரணமாகும். அப்பர், சம்பந்தர், சுந்தரர், காரைக்காலம்மை யார், அருணகிரிநாதர் முதலிய பலரின் பக்திப்பாடல்களிலே இந்த ஆத்த ஈடேற்ற நோக்கம் பல நிலைகளிலே புலப்படுத்தப் பட்டுள்ளது. மணிவாசகரின் பாடல்களிலும் இவ்விரண்டாவது நோக்கம் காணப்படு கின்றது. திருச்சதகம், நீத்தல் விண்ணப் மம், கோயின் மூத்த திருப்பதிகம் ஆகிய பாடற்பகுதிகளில் இதனை நன்கு அவதானிக்கலாம்.

**''கைதானெகிழவி டேனுடை**
**யாயென்னைக் கண்டுகொள்ளே''**

**''சடையவனே தளர்ந்தேனெம்**
**பிரானென்னைத் தாங்கிக் கொள்ளே''**

**''அடியேனுன் அடியார்**
**நடுவுளிள்ருக்கும் அருளைப் புரியாய்''**

என அமையும் பாடவடிகள் இதற்குப் பொருத்தமான சான்றுகளாகும்.

இவ்வாறு ஒரு குறிக்கோளை முன் வைத்து இறைவனின் அருளை வேண்டி நின்ற மணிவாசகரே வேறொரு சந்தர்ப் பத்திலே ''எனக்கென்று ஒரு குறிக்கோள் இல்லை. நீ எதை விரும்புகிறாயோ அதையே நான் குறிக்கோளாகக் கொள்ளும் நிலையில் உள்ளேன்'' என்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'' வேண்டத் தக்க தறிவோய் நீ**
**வேண்ட முழுதும் தருவோய் நீ**
**வேண்டும் அயன்மாற் கரியோய் நீ**
**வேண்டி யென்னைப் பணிகொண்டாய்**
**வேண்டி நீயா தருள்செய்தாய்**
**அதுவே நானும் வேண்டினல்லால்**
**வேண்டும் பரிசொன் றுண்டென்னில்**
**அதுவும் உந்தன் விருப்பன்றே ''**

என்ற (குழைத்தபத்து) பாடலில் இந்த நிலையே புலப்படுகின்றது.

இதனை நோக்கும் போது மணிவாசகர் ஒரு நிலையிலே குறிக்கோளுடன் பக்தி செலுத்தியிருந்தாலும், இன்னொரு நிலையிலே குறிக்கோளைக் கடந்து இறைவனுடைய அருளிலே தன்னை முழுமையாக ஒப்படைத்து அவன் விருப்பே தன் விருப்பு எனக்கருதத் தொடங்கி விட்டமை தெரிகிறது.

இறைவனிடம் தன்னை முழுமையாக ஒப்படைக்கும் இந்த இரண்டாவது நிலையே பக்தியின் உயர்ந்ததும் முழுமையானதுமான நிலை என்பதற்கு ஐயமில்லை. இதனை வடமொழியிலே '' ஈஸ்வரார்ப் பணம் '' என்பர் பகவத்கீதையிலே கண்ணன் அர்ச்சுனனை நோக்கி

**'' மய்யேவ மனஆதத்ஸ்வ மயிபுத்திம் நிவேசய நிவஸிடியஸி மய்யேவ அகுதஊர்த்வம் ந சம்சய ''**

**[ '' என்னிடத்தே மனதை வைத்து என்னிடத்துப் புத்தியைச் செலுத்துவாயாக பின்பு என்னிடத்தே வசிப்பாயாக '' ]**
**[ பக்தியோகம் — 8 ]**

**'' ஸர்வதர்மான் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ ''**

**[ '' தர்மங்களையெல்லாம் அறவே தியாகம் செய்து விட்டு என்னையே சரணடைக '' ]**
**[ மோக்ஷசந்யாச யோகம் — 66 ]**

என்றும் அழைப்பது இந்த நிலைக்குத்தான்.

இந்தநிலை எய்தியவர்களுக்கு இறைவனிடம் பக்தி செலுத்துவதென்பது குறிக்கோளை அடிப்படையாகக் கொண்ட ஒரு செயல் அல்ல அவர்களுக்கு எதுவுமே குறிக்கோள் அல்ல. இயல்பாக உள்ளத்திற் பெருகும் அன்பு ஊற்றாகவே அவர்களது பக்தி அமையும். இவர்கள் பக்தி சொலுத்தாமல் இருக்க முடியாமையாற் பக்தி செலுத்துபவர்கள். ஆத்ம ஈடேற்றம் என்ற வீடுபேறு கூட இவர்களுக்கு வேண்டிய தில்லை. இறைவனை வணங்க வேண்டும் என்ற உணர்வினால் மட்டுமே வணங்குகின்றார்கள். இதனையே சேக்கிழார் பெருமான் திருத்தொண்டர் புராணத்தில் திருக்கூட்டச் சிறப்புக் கூறுமிடத்து.

**'' கூடும் அன்பினிற் கும்பிடலேயன்றி**
**வீடும் வேண்டா விறலின் விளங்கினார் ''**

என்பதன் மூலம் புலப்படுத்துகிறார். இத்தகைய பக்திக்குச் செயல் வடிவு கொடுத்த நாயன்மார் பலர். அவர்களுள் கண்ணப்பர் தலைநிற்கிறார். அவர் காளத்திநாதருக்குச் செய்த 'கண்தானம்' அவரைப் ''பொருவில் அன்புருவம்'' நிகரற்ற அன்பின் வடிவம்-எனப்பாராட்ட வைத்தது. இத்தகு பக்தி நிலையை அனுபவ வெளியீடாக எமக்குத் தந்தவர் என்ற வகையிலேயே மணிவாசகர் பக்திப் பாவலர் வரிசையிலே தலைநிற்கிறார். பக்தியிலக்கியம் படைத்த ஏனைய அடியவர்களிலிருந்து மணிவாசகர் வேறுபட்டு உயர்ந்து நிற்பதற்கு அவர் புலப்படுத்திய அந்தப் பக்தி நிலையே முக்கிய அடிப்படை ஆகிறது.

இவ்வாறு இறைவனிடம் தன்னை முழுமையாக ஒப்படைத்து அதன் விருப்பே தன் விருப்பாக அவர் கொண்டதன் மூலம் எய்திய பயனை அவரது ஒரு பாடலிற் புலப்படுத்துகிறார்.

**''தந்துன் றன்னைக் கொண்டதென் றன்னைச்**
**சங்கரா ஆர்கொலோ சதுரர்**
**அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்**
**யாதுநீ பெற்றதொன் றென்பால்**
**சிந்தையேகோவில் கொண்டவெம் பெருமான்**
**திருப்பெருந் துறையுறை சிவனே**
**எந்தையே ஈசா உடலிடம் கொண்டாய்**
**யானிதற் கிலனோர் கைம்மாறே''**

( கோயிற்றிருப்பதிகம் - 10 )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என் உள்ளத்தையே இருப்பிடமாகக் கொண்ட பெருமானே நீ உன்னை எனக்குத் தந்து என்னைப் பெற்றுக் கொண்டாய் நான் உன்னைப் பெற்றதால் முடிவற்ற ஆனந்தம் எய்தினேன். என்னை நீ பெற்றுக் கொண்டதால் என்னபயனடைந்தாய்? எம்மிருவரில் யார் திறமையுடையவர்? யான் உனக்கு எவ்வித கைமாறும் செய்யும் நிலையில் இல்லையே''

என அவர் கூறுகின்றார். மேற்படி பாடல் திருவாசகத்தில் மட்டுமன்றித் தமிழ்ப்பக்தி இலக்கிய மரபிலேயே முடிமணி எனப் பாராட்டத்தக்க பொருட்சிறப்புடையது. பக்தியின் மூலம் ஒருவர் எய்தக்கூடிய அதி உயர்ந்த அநுபவத்தை இப்பாடல் புலப்படுத்தி நிற்கிறது. திருவாசகம் தேன் எனவும் தமிழ் பக்தியின் மொழி எனவும் பாராட்டப்படுவதற்கு அதன் இத்தகைய பாடல்களே சான்றாவன.

மணிவாசகரின் வரலாறும் திருவாசகப் பாடல்களின் காலவரன்முறையும் இற்றை வரை முழுமையான ஆய்வுக்குட்படுத்தப் பட்டதாகத் தெரியவில்லை. அவ்வாறு ஆய்வுக்குட்படுத்தப்பட்டால் பக்தியநுபவ நிலையிலே திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம் என்பன தொடக்க நிலையையும் குழைத்தபத்து, கோயிற்றிருப்பதிகம் என்பன முதிர்ந்த நிலையையும் காட்டுவன என்பது புலப்படும். தொடக்கத்திலே தன்னை ஆட்கொள்ள வேண்டும் என்ற ஆத்ம ஈடேற்றத்தைக் குறிக்கோளாகக் கொண்ட அவர் ஈற்றில் அக்குறிக்கோளையும் கடந்து தன்னை முழுமையாகவே இறைவனிடம் ஒப்படைத்து விடுவது தெரிகிறது. இவ்வாறு ஒப்படைத்ததன் மூலம் தாம் பெற்ற அநுபவத்தைக் குழைத்தபத்து கோயிற்றிருப்பதிகம் ஆகியவற்றின்மேற்படி பாடல்களிற் புலப்படுத்தி எம்மையும் அந்நிலைக்கு ஆற்றுப்படுத்துகிறார்; எந்தக் குறிக்கோளுமின்றி இறைவனிடம் எம்மை முழுமையாக ஒப்படைத்தால் எமக்குக் கிடைப்பது பேரானந்த அநுபவம் என்பதை உணர்த்துகிறார். இதுவே மணிவாசகர் எமக்குக்காட்டிய பெருநெறி ஆகும். மணிவாசகரைப் பக்திநெறியின் சிகரமாக நாம் கணிப்பதற்கு அடிப்படையும் இதுவே.

---

ஆன்மா தெய்வத் தன்மை வாய்ந்தது. அது சடப்பொருளின் கட்டுக்குள் அகப்பட்டுக் கொண்டிருக்கிறது என்று வேதர்கள் கூறுகின்றன. பூரணத்துவம் பெற்றவுடன் இந்தக் கட்டு சிதறி விடும். அதாவது விடுதலை. நிறைவுறாத நிலையினின்றும் விடுதலை. மணத்தினின்றும் துன்பத்தினின்றும் விடுதலை என்று கூறுகிறார்கள்.

**சுவாமி விவேகானந்தர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெல், புழுங்கல், என்பன குற்றவும்
அரிசி, குரக்கன், மிளகாய், சீயாக்காய்
என்பவற்றை அரைக்கவும்

நம்பிக்கையுடன் நாடவேண்டிய
நிறுவனம்

V

# விக்னேஸ்வரா

அல்லாலை வீதி, மீசாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீசாலை மாவடிப் பிள்ளையார் கோவில்

கும்பாபிஷேக மலர் சிறப்புற்று

வெளிவர எமது நல்லாசிகள்

வாழ்த்துக்கள்

திரு. சு. சங்கரப்பிள்ளை

(இளைப்பாறிய அதிபர்)

மீசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலசரக்குப் பொருட்கள்

அழகுசாதனப் பொருட்கள்

குளிர்பான வகைகள்

வீட்டுப் பாவனைப் பொருட்கள்

எதுவானாலும் மலிவான விலையில்பெற

## திருவருள் வியாபார நிலையம்

கண்டி வீதி, மீசாலை.

---

கும்பாபிஷேக மலர் சிறக்க
எமது வாழ்த்துக்கள்



## அருண்
புடைவை மாளிகை

கொடிகாமம்.

---

உங்களுக்குத் தேவையான

22, கரட் தங்க நகைகளைப்
பெற்றுக் கொள்ள



## இந்திரன்ஸ்

நவீன சந்தை, சாவகச்சேரி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ திருமண விழாவா?
★ பூப்புனித நீராட்டு விழாவா?
★ பிறந்தநாள் வைபவங்களா?
★ கோவில் திருவிழாக்களா?
★ பாடசாலை நிகழ்வுகளா?

உங்கள் நிகழ்வுகள் எவையாயினும் அவற்றை உங்கள் எண்ணம் போல, உயிரோவியங்களாக அசையும் படப்பிடிப்பிலும் அசையாப் படப் பிடிப்பிலும் சிறந்த அதிநவீன PANASONIC 3500 வீடியோ கமெராக்களையும் ஏ.வி 55 மிக்சரையும் ஏ – 1 கனன் கமெராக்களையும் பயன்படுத்தி படங்களாக்கிக்கொள்ள என்றும் நாடுங்கள்.



# கிருபா வீடியோ அன்ட் போட்டோ

அல்லாரை வடக்கு, மீசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பே சிவம்

பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணன் அவர்கள்
( தலைவர், இந்துநாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். )

உலக சமயங்களிடையே ஒரு பொது ஒற்றுமையைக் காணவிழையும் போது அன்புதான் அனைத்துக்கும் மூலாதாரமாக அமைகின்றது என்ற உண்மையை நாம் அனைவரும் உணர்வோம். வேறுபாடுகள் எவையாக இருப்பினும் அவை அனைத்தையும் கடந்து தனக்குத்தானே நிகரெனத் திகழ்வதே அன்பு. ஆத்மீக உலகில் அளவற்ற சக்தியாக விளங்குவதும் இந்த அன்பு ஒன்றேயாகும். அடியார்கள் இறைவன்மீது அன்புடையோராக விளங்கச் செய்யும் அரிய சாதனமும் இந்த அன்பேயாகும். எமது சமயநெறியின் ஊற்றாக விளங்கும் வேதங்களிலும் புராணங்களிலும் திருமுறைகளிலும் அன்பின் மேன்மை சிறப்பாக எடுத்துக் கூறப்படுகின்றது. அன்பே எமது சமயத்தின் அடிப்படை. காலம், தேசம், இடம் ஆகிய வேறுபாடுகளைக் கடந்த ஓர் அற்புத சக்தியே அன்பு. உலகியல் நிலையிலும் ஆத்மீக நிலையிலும் அன்பு மிக உயரிய இடத்தைப் பெற்று மனித மேம்பாட்டிற்கு உறுதுணையாக இருந்து வருகின்றது. தனிமனிதனைக் குடும்பத்தோடும் குடும்பத்தைச் சமூகத்தோடும் சமூகங்களை நாட்டோடும் நாடுகளை உலகத்தோடும் இணைப்பதோடு மட்டுமின்றி ஆன்மாக்களை இறைவனோடு இணைக்கும் மாபெரும் சக்தியாகவும் அன்பு மிளிர்கின்றது. வள்ளுவரது வாக்கினால் அன்பின் சிறப்பை நாம் உணரலாம்.

**அன்பின் வழியது உயிர் நிலை; அஃதிலார்க்கு
என்பு தோல் போர்த்த உடம்பு**

எனவும்

**அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு**

எனவும்

அன்பு போற்றப்படுகின்றது.

'அன்பே சிவம்' என்பது திருமந்திரக் கோட்பாடு சைவநெறியைப் பொறுத்தவரை திருமூலரது இவ்விளக்கம் சிறப்பாகப் பொருந்துவதாகும். இறைவன்மீது அன்பு செலுத்துவதும் இறைவன் அடியார் மீது அன்பு செலுத்துவதும் ஆன்மீக மேம்பாட்டிற்கென உறுதுணையாக நிற்கும் குருவின் மீது அன்பு செலுத்துவதும் சைவநெறியில் சிறப்பாக இடம்பெறும் அம்சங்கள். சைவத்தின் வழி அடியார் மீது அன்புடையராதல் மிக உயர்ந்த செயலாகப் போற்றப்படுகின்றது. வைணவத்திலும் அன்பின் மேன்மை பேசப்படுகின்றது. பகவத்கீதை கூறும் பக்தி யோகம் அன்பைப்பற்றியதாகும். அன்பின் அடிப்படையில் பிறர்பசி தீர்த்தபின் தன் பசி தீர்ப்பதே உயர் தருமம் என வைணவம் கூறும். ஓரறிவு உயிர்க்கும் உறுகண் செய்யாதே என்பது சமணக் கோட்பாடு. இவ்வாறே ஏனைய சமயங்களும் அன்புக்கு உயரிடம் அளித்துள்ளன. இத்தனை சமயங்களும் அன்பு என்ற அச்சில் இயங்குவது குறிப்பிடத்தக்கது. மனிதகுல மேம்பாட்டிற்கும் அன்பே உறுதுணை என்பதும் தெளிவாகின்றது. கீழைத்தேய சமயச் சான்றோர்கள் அன்பு அனைவருக்கும் பொது என்ற கோட்பாட்டினை விளக்கி உள்ளனர்.

இறைவனை ஆத்மீக சாதகன் ஒருவனாலேயே உணரமுடியும். ஊனக்கண்ணால் காணமுடியாது. அது போன்றே அன்பையும் நாம் இன்னது எனச்சுட்டிக் காட்ட முடியாது. ஆனால் எமது உள்ளத்தினால் உணர்ந்து அனுபவிக்க முடிகின்றது. இறைவன் அன்புமயமானவர் என்பதை எடுத்துக்காட்டவே திருமூலர் 'அன்பே சிவம்' எனக் குறிப்பிட்டுள்ளமை கவனிக்கத்தக்கது. அன்பை இறைவனுக்கு நிகராக ஒப்பிட்டுள்ளார். சமயநிலையில் அன்பின் வழியே ஏற்படும் உணர்வு பக்தியாக மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றது. இறைவன் மீது நாம் செலுத்தும் அன்பே பக்தி எனப் போற்றப்படுகின்றது. அதேபோன்று எமக்கு ஞானத்தை வழங்கி எம்மை ஆத்மீக வழியில் மேம்படுத்தும் குருவின் மீது காட்டும் அன்பு குருபக்தி எனச்சிறப்பிக்கப்படுகின்றது. எச்சூழலிலும் எப்போதும் மாறாத அன்புணர்வே பக்தியின் அடிப்படை எனவே ஆன்மீக வாழ்வின் வாயிற்படியே அன்புதான்.

சீவகாருண்யமே மோட்சவீட்டின் திறவுகோல் என்ற வள்ளலாரின் வாக்கும் இதனை வலியுறுத்தும்.

உடைமை உணர்வைப் போக்குவதே அன்பின் வெளிப்பாடு. நெஞ்சில் தூய அன்புடையோரிடம் உடைமை உணர்வு தலையெடுக்காது. 'நான்' என்பது அகப்பற்று; 'எனது' என்பது புறப்பற்று; இவை இரண்டையும் அறச் செய்வதே சமயத்தின்பணி அவை அறுந்து விட்டால் உடைமை உணர்விலிருந்து நாம் விடுபடலாம். தன்னிடமிருப்பதைத் தேவைப்படும் பிறருக்குக் கொடுப்பதில் இன்பம் காணப்பழகுவது அன்பின் முதற்படி.

மனித வரலாற்றிலே சமயம் இன்றியமையாத இடத்தைப் பெற்றுள்ளது. காலங்காலமாக மனிதன் தனது வாழ்க்கைத் தத்துவத்தைப் பற்றியும் அதன் முக்கியத்துவத்தைப் பற்றியும் இடையறாது சிந்தித்து வந்துள்ளான். தனக்கு அப்பால் ஒரு சக்தி இயங்கி வருவதை அவன் பரிபூரணமாக நம்பியதன் விளைவாகவே சமய உணர்வுகள் பரிணமிக்கத் தொடங்கின. இவ்வாறு பண்டு தொட்டு மனித சிந்தனையில் சமயம் ஓர் இன்றியமையாதஇடத்தைப் பெற்று வந்துள்ளதோடு மனிதன் பண்புள்ளவனாக மிளிர்வதற்குரிய ஊட்டசக்தியாகவும் அது விளங்கியுள்ளது. இதனடிப்படையில் சமயம் மனிதனது வாழ்வாகவே அமைந்து விடுவதோடன்றி அவனது ஆன்மாவுக்கு ஒளியாகவும் பாதையாகவும் தீபமாகவும் விளங்குகின்றது. மனிதன் அடைய முயலும் இலட்சியமாகிய உள்பொருள் பற்றிய அறிவை உறுதிப்படுத்துவதும் அவனை ஆன்மீக வாழ்வில் முழுமைபெறச் செய்வதும் சமயத்தின் பணி என அறிஞர் கருதுவர். சமயத்தின் வழி உயர் இலட்சியத்தை அடைவதற்கு இறைவன்மீது அன்பு செலுத்துதல் உறுதுணை புரியும். இக்காரணத்தினால் தான் திருமூலர் அன்புடைமையில் அன்பைச் சிவனோடு இணைத்துக் கூறியுள்ளார். அன்பின் ஊற்றே அறமாய் விரிகின்றது: அன்பின்றி அறமில்லை; அருள் இல்லை; இன்பமில்லை; இதனால் தான் மிகவும் உயர்வான மாசற்ற தூய உண்மையின்பத்தை திருமூலர் சிவமெனப் போற்றினார். அன்பின் தீவிரத்தால் சிவம் வாய்க்கும், அன்பே சிவமாகும் என்று அறிஞர் கூறுவர். அறியாதார் அன்பு வேறு சிவம் வேறு என்பர். அன்பே சிவமென்று அறிந்தவர் தமது அன்பே சிவந்துலங்கக் காண்பர். அன்பே இன்பச் சிவமாகும். தேனும் இனிமையும் போல பாலும் சுவையும் போல பூவும் மணமும் போல அன்பும் சிவமும் ஒன்றேயாம்.

**அன்புஞ் சிவமும் இரண்டெடன்பர் அறிவிலார்**
**அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்**
**அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்**
**அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே.**

அன்பு மிகப்பெரிது; அது அனைத்தினும் பெரிய சிவனுடனே பிரியாது பின்னிக் கிடந்தது என்பதை 'சுடுபொடியாடிக்குப் பின்னிக் கிடந்ததென் பேரன்புதானே' எனத்திருமூலர் குறிப்பிடுகின்றார். அன்புடன் உள்ளம் நெக்குருகும் அடியார்க்கே இறைவனை எய்த முடியும் என்ற உண்மையை,

**அன்பொ டுருகி அகங்குழைவார்க் கன்றி**
**என்பொன் மணியினை எய்தவொண்ணாதே**

என்ற அடிகளால் விளக்கிக் காட்டுகின்றார். அன்பையுருக்கி இறைவனை ஏத்துங்கள் என மனித குலத்திற்குத் திருமூலர் வழிகாட்டுகின்றார்.

**'என் அன் புருக்கி இறைவனை ஏத்துமின்**
**முன் அன் புருக்கி முதல்வனை நாடுமின்'**

என எம்மை இறைவழிபாட்டிற்கு ஆற்றுப்படுத்துகின்றார். அன்புள்ளவர்க்கே இறைவன் துணையாவான் என்பதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'அன்பினுள் ளாகி அமரும் அரும்பொருள்**
**அன்பினுள் ளார்க்கே அணைதுணையாமே'**

என தெளிவாகக் கூறுகின்றார். அன்பு செய்வாரை சிவன் அறிவன் எனத்திருமூலர் சுட்டிக்காட்டுகின்றார். உயிருள்ள போதே திருவருளுக்குப் பாத்திரராக வேண்டும் என்பதே சமயநெறி காட்டும் உண்மை, இவ்வுலகில் நமக்குத்துணை இறைவன் திருவருள் ஒன்றே. உள்ளத்தில் அன்பும் சிவமயமான உயிர்களிடத்தில் அருளும் கொண்டெழுக வல்லார்க்கு இறைவன் அருள் மகிழ்ந்து அன்பு செய்யும் இறைவன் அன்பர்க்கன்பன் என்பதைத் திருமூலர்,

**கொழுந்தன்பு செய்தருள் கூரவல் லார்க்கு**
**மகிழ்ந்தன்பு செய்யும் அருளது வாமே.**

எனப் போற்றுகின்றார்.

இறைவன் அன்பிற் கலந்த ஆன்மாவின் இருவினைப் பிறவியும் மறைந்தொழியும் என்பதை

**அன்பிற் கலவி செய்து ஆதிப்பிரான் வைத்த**
**துன்பப் பிறவி முடிவது தானே**

எனத் திருமூலர் தெளிவுபடுத்துகின்றார். இவ்வகையில் பார்க்குமிடத்து இறைவன்மீது அன்பு செலுத்தி அவன் அருளுக்குப்பாத்திரமாகும் ஒருவனது வாழ்வு முழுமைபெற்றதொன்றாக அமைந்து விடுகின்றது இவ்வாறு இறைவன் அருளுக்குப் பாத்திரராகி உயர்வடைந்த எண்ணற்ற அடியாரது வரலாறுகளைத் சமயநூல்கள் கூறுகின்றன. இக்காரணத்தினால் தான் இறைவன்மீது அன்பைச் செலுத்தும் வாய்ப்பினைத்தரும் சமயம் வாழ்வின் பகுதியன்று; அது வாழ்வின் முழுமை என தீர்க்கதரிசிகளும் இறைவனடியார்களும் விளக்கியுள்ளனர். இறைவனோடு அன்பின் வழி ஒருமைப்படுதல் உயர்ந்த சமய அனுபவமாகும் இந்த ஒருமைப்பாடு பற்றிய உள்ளுணர்வே சமய அனுபவத்தின் உச்சக்கட்டமென்றும் கூறலாம். எத்தகைய வேறுபாடுகளுமற்று மனித மேம்பாட்டுக்கெனத் தன்னை அர்ப்பணித்துக் கொள்வதே அன்பை அடிப்படையாகக் கொண்ட சமயவாதியின் இலட்சியமாகும்.

ஒவ்வொரு சமயநெறிக்கும் முறையான கிரியைகள் உண்டு. அவை அவ்வவ் சமய நெறி நிற்கும் மனிதரது உள்ளங்களிலே சமய உணர்வையும் சமய அனுபவத்தினையும் வளர்ப்பன. மனிதன் அறநெறியில் முழுமை பெறுவதற்குரிய அறவியற் கோட்பாடுகளை ஒவ்வொரு சமயநெறியும் தன்னளவிற் கொண்டு விளங்குகின்றன. அவை ஆன்மீகப் பணியை இறைவனாகிய இலட்சியத்தை நோக்கி நடத்திச்செல்லும் வழியையுடையனவாயிருக்கின்றன, அவை போதிக்கும் போதனைகளுக்கும் சாதனைகளுக்கும் அன்பே அடிப்படை என்பதும் குறிப்பிடத்தக்கது.

சமயம் நிரூபிக்கமுடியாத கோட்பாடுகளையும் அறிவுக்குப் பொருத்தமில்லாத கருத்துக்களையும் உடையது என்றும் நிரூபித்து அறியக்கூடிய கொள்கைகளையும் அறிவுக்குப் பொருந்தும் கருத்துக்களையுடையது அறிவியல் என்றும் விளக்கம் கூறுவர். இவ்வகையில் விளக்கம் தருவோர் சில சமயங்களில் சமயம், அறிவியல் ஆகிய இரண்டையும் முரண்பட்ட துறைகளாகக் கருதுகின்றனர். உண்மையில் இவ்விருதுறைகளும் மனித வாழ்வின் மேம்பாடு பற்றிச் சிந்திப்பனவே. புற உலகை மனித வாழ்வுக்கு ஏற்றதாகவும் எளியதாகவும் அறிவியல் மாற்றியிருக்கின்றது. கற்கால மனிதனின் இடர்ப்பாடுகளையும் தற்கால மனிதனின் வாழ்க்கை வசதிகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால் அறிவியல் வளர்ச்சியின் பயனைத் தெளிவாக உணரலாம். ஆனால் புறஉலகப் பொருள் வாழ்க்கை மட்டுமே மனிதனுக்கு மகிழ்ச்சியையும் அமைதியையும் தந்து விடுவதில்லை. புற வசதிகளைக் கொண்ட மனிதர்கள் பலர் மன அமைதியின்றி அல்லற் படுவதையும் காணமுடிகின்றது. எம்மில் பலரும் அத்தகைய அனுபவ நிலைக்குத் தள்ளப்படுகின்றோம். அறிவியல் துறைகள் ஆராய்கின்ற புற உலகம் மனித வாழ்வின் ஒரு பகுதி. மனிதனின் அகம் மற்றொரு பகுதி. மனிதனது அகம் வளர்ந்து பயன் படவில்லையெனில் புறவசதிகளாலும் சமய வாழ்வாலும் நற்பயன் ஏதுமில்லை மனிதனது அகவளர்ச்சிக்கும் இயக்கத்திற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சாக இருப்பது உயிர் இதனை ஆன்மா என்போம். உயிருக்கும் இறைவனுக்கு முள்ள தொடர்பை ஏற்படுத்தும் சக்தி அன்பு ஒன்றுக்கே உண்டு அகவாழ்க்கை மலர்ச்சிக்கு அன்பு என்றென்றும் உறு துணையாக அமையும்.

இறைவனை அன்போடு இணைத்து அடியார்கள் பாடியுள்ள பாடல்கள் இச் சிந்தனைக்கு உரமூட்டுவனவாக உள்ளன.

அன்பெனும் பிடியுள் அகப்படு மலையே
அன்பெனுங் குடில் புகும் அரசே
அன்பெனும் வலைக்குள் படுபரம் பொருளே
அன்பெனும் கரத்தமர் அமுதே
அன்பெனுங் கடத்துள் அடங்கிடுங் கடலே
அன்பெனும் உயிர் ஒளிர் அறிவே
அன்பெனும் அணுவுள் அமைந்த பேரொளியே
அன்புருவாம் பரசிவமே

என்பதே அப்பாடல் இறைவனை அன்பின் உருவாகச்சிறப்பிக்கின்றது இப்பாடல்.

அன்புக்கு செல்வம், வறுமை என்ற தடைகளில்லை. குசேலர் ஏழையாக இருந்த போதும் இறைவனிடத்தே அன்பு செலுத்தி திருவருளைப் பெற்றார். அன்பு ஏழை களுக்குரிய தனம் ஆகும். அன்பு செலுத்த எந்த இடமும் பொருத்தமே காடு, மலை, ஆலயம், கடற்கரை, சோலை எதுவும் பொருந்தும். கண்ணப்பர் திருக்காளத்தி யில் இறைவன் மீது அளப்பற்ற அன்புடன் பணி செய்தவர். இறைவன் மீது அடியார் கள் அன்பு செலுத்தி உய்வு பெறுவதற் கென்றே மேற்குறித்த அமைதியான இடங் கள் இறைவனது வழிபாட்டிற்குரிய திருக் கோயில்களாகவும் தலங்களாகவும் தீர்த்த விசேடம் பெற்ற இடங்களாகவும் எழுச்சி பெற்றன. அன்பு எல்லா உயர்வையும் தரும். அன்புள்ளத்துடன் இறைவன் திரு நாமங்களை ஒருமுறையாவது கூறினும் வினைகள் வெந்து போகும். இறைவனது நலந்தரும் நாமத்தை அன்புடன் ஓதினால் கிடைக்கும் பலன் பற்றி திருமுருகாற்றுப் படை வெண்பா குறிப்பிடுகின்றது.

——— ... நெஞ்சில்
ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும்
முருகா என்றோதுவார் முன்.

மாணிக்கவாசகசுவாமிகள் தமது திருவாசக அச்சோப்பதிகத்தில் இறைவனே அன்பை அடிப்படையாகக் கொண்ட பக்திநெறியை அறிவித்துத் தம்மை சிவமாக்கியதாகக் குறிப்பிடுகின்றார்.

முத்திநெறி அறியாத
மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப்
பழவினைகள் பாறும் வண்ணஞ்
சித்தமலமறுவித்துச்
சிவமாக்கியெனையாண்ட
அத்தனெனக் கருளியவாறார்
பெறுவாரச்சோவே

மாணிக்கவாசகர் திருச்சதகத்தில் இறைவனிடம் கேட்டவரம்.

'இடையறா அன்புனக்கென் ஊடகத்தே
நின்றுருகத் தந்தருள்'

என்பதாகும். காரைக்காலம்மையார் 'இறவாத இன்ப அன்பு' வரமாக அரு ளும்படி இறைவனை வேண்டினார். திரு வடி மறவாத பேரன்பினை அருளும் வண்ணம் வேண்டுதல் செய்தார். வீரவாகு தேவர் முருகனிடம் கேட்ட வரம்.

கோல நீடிய நிதிபதி
வாழ்க்கையும் குறியேன்
மேலை இந்திரன் அரசினைக்
கனவிலும் வெஃகேன்
மாலயன் பெறு பதத்தையும்
பொருளென மதியேன்
சால நின்பதத் தன்பையே
வேண்டுவன் தமியேன்

என்பதாகும். இறைவன் பதத்தில் அன் பைச் சொரிதலே உயர்ந்த பேரின்பம் எனக்கருதி ஞானிகளும் அருளாளர்களும் அந்த அன்பு ஒன்றையே தத்தமது பாடல் களில் தெளிவுபடப் போற்றியுள்ளனர். எமது சமயநெறியின் மூலமென விளங்கும் இருக்கு வேதத்தில், அன்பின் மேன்மை போற்றப்படுகின்றது.

"எல்லா மாந்தரும் இணக்கமாய் வாழ்ந்து வருவார்களாக எல்லோரும் அன்புடன் உரையாடட்டும். அனைவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளங்களிலும் ஒற்றுமை உணர்வு நில வட்டும். எல்லோரும் பகைமையை வளர்க்காத அறிவைப் பெறட்டும். மூதறிஞரான பெரியோர் எந்தக்காலத்திலும் கடவுள் அறிவு பெற்று அவரை வழிபடுவதிலேயே தம் காலத்தைக் கழித்தது போல நீங்களும் நல்லறிவு பெற்றுக் கடவுள் வழிபாட்டில் முனைந்திருங்கள் உங்கள் அனைவர் உள்ளங்களிலும் ஒரே வகையான உயர்ந்த பாவனை இருந்து வரட்டும். நீங்கள் அனைவரும் ஒருவர் மற்றவருக்கு உதவிக் கொண்டு தத்தம் காரியங்களைச் சிறப்பாகச் செய்து முடியுங்கள் ''

மக்களிடையே அன்பு மேலோங்கி வளர வேண்டுமென்ற உயர்ந்த கருத்தை வேதங்கள் அறிவுறுத்தியுள்ளமை தெளிவாகின்றது.

மக்களிடையே அன்பை அடிப்படையாகக் கொண்ட உணர்வு வளரவேண்டும் என்பதை ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸர் விரும்பினார். உண்மையான பக்தியும் சிரத்தையும் ஒருவனிடத்திலே நிரம்பியிருப்பின் இறைவனை உணர்வதில் எத்தடையும் இருக்காது எனக்குறிப்பிட்டார். உயர்ந்த சமய அனுபவநிலைக்கு அன்பே அடிப்படை என விளக்கியுள்ளார். இவரது சீடராகிய சுவாமி விவேகானந்தர் தமது சிகாகோ பிரசங்கத்தில் வெளிப்படுத்திய கருத்துக்கள் இங்கு குறிப்பிடத்தக்கவை.

பிறருடைய கொள்கைகளை வெறுத்தொதுக்காத பண்புடைமை - அக்கொள்கைகளை ஏற்றுக் கொள்கின்ற பொதுநோக்கு என்னுமிரண்டையும் உலகிற்குக் கற்பித்த சமயத்திற்கு நான் உரியவன் எனப்பெருமை பாராட்டுகின்றேன். எல்லாச் சமயங்களையும் அன்பினொடு நோக்குகின்ற பண்புடைமையிலே எங்களுக்கு நம்பிக்கையுண்டு

என்ற அவரது குறிப்பிலிருந்து அன்பினால் அனைவரையும் அரவணைக்கும் உயர்ந்த பண்பு தெளிவாகின்றது.

எல்லாப் பிறவிகளிலும் கிடைத்தற்கரிய பிறவி மானுடப்பிறவி. மனிதன் தனக்குள்ளிருக்கும் தெய்வத்தை உணர வேண்டுமெனில் அதற்குரிய பிரயாசையை வளர்த்துக் கொள்ளவேண்டும். அதுவே அன்பு. இந்த அன்பு 'நம்முள் தெய்வம் இருக்கின்றது' என்ற உண்மையை உணர்த்த வல்லது. அன்பு மயமான வாழ்வு ஒன்று தான் எம்மை இறைவனது சந்நிதிக்கு அழைத்துச் செல்ல வல்லது என்பதை அடியார்களினதும் அருளாளர்களினதும் வாழ்க்கை அனுபவங்கள் எமக்கு எடுத்துக் காட்டுகின்றன. இத்தகைய சிந்தனைகளின் பின்னணியில் பார்க்கும் பொழுது தான் திருமூலர் அருளிய 'அன்பே சிவம்' என்ற கோட்பாடு எத்துணை கருத்தாழமிக்கது என்பது தெளிவாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பாபிஷேக மகிமை

''பிரதிஷ்டாவித்தகர், கிரியாகான கலாமணி
சிவாகமஞானசாகரம்'' சிவஸ்ரீ கி. சோமசுந்தரக் குருக்கள்

உலகத்தில் மக்களாகிய நாம் எம்மை நல்வழிப்படுத்தச் செய்யும் புண்ணியங்கள் பதிபுண்ணியம் பசுபுண்ணியம் என இரண்டாக வகுக்கப்பட்டுள்ளது. பதிபுண்ணியம் கடவுள் சம்பந்தமான கைங்கரியங்கள், ஆலயத்திருப்பணி முதலியன பசுபுண்ணியம் ஆன்மாக்கள் சம்பந்தமான புண்ணியச் செயல்கள் அவை, மனிதர்களிடம் அன்பு வைத்து அவர்கட்குதவுதல், வறியவர்கட்கு உண்டிகொடுத்தல் கஷ்டமானகாலங்களில் உதவுதல் பாடசாலை கட்டுதல் கல்வி கற்பித்தல் மிருகங்களிடத்தில் அன்புவைத்து அவைகளைப் பேணிவளர்த்தல் என்பன. பதிபுண்ணியம் பற்றி இவ்விடத்தில் நோக்குவோம் பதிபுண்ணியம் கோவில் கட்டுவித்தல் கோவில் கட்டப் பொருள் கொடுத்தல் ஆலயத்திற்குத் தேவையான திருப்பணிகள் செய்தல் கும்பாபிஷேகம் செய்வித்தல் அதற்கு வேண்டும் திரவியங்கள் கொடுத்துதவுதல் ஆகியன இப்புண்ணியங்களைச் செய்வதற்குத் தக்கதாகவும் மக்கள் வழிபட்டு ஈடேறுவதற்கு அமைவாகவுமே ஆலயங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. இந்து மதம் மனிதனுடைய வாழ்க்கையோடு தெய்வவழிபாட்டையும் தெய்வீகத் தன்மையையும் பின்னிப்பிணைந்தே அமைந்துள்ளது. அதற்கேற்ப ஆலயங்களில் நித்திய நைமித்தியங்கள் நடைபெறுகின்றது. அவ்வண்ணம் நித்தியம் நைமித்தியங்கள் நடைபெறுங்காலங்களில் மக்கள் வழிபாடும் அவைக்கேற்ப அமைகிறது.

நித்தியம் வந்து வழிபடுகிறவனுக்கு ஆலயத்தில் நடைபெறும் நித்தியபூசை ஓர் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் அமைக்கிறது. அதன்படிவந்து வணங்கும் ஓர் அடியவனுக்கு நித்தியமும் ஆலயத்தில் இறைவனைவந்து வழிபடுவதனால் அவன் மனமும் உடலும் புனிதமடைந்து அதன் பின் அவன் செய்யும் காரியங்கள் எல்லாம் நன்றாக நடைபெறுகிறது. அத்துடன் மனிதன் இறைவழிபாட்டோடு தமது வேண்டுதல்களை இறைவனிடத்தில் நேர்த்தியாக வைத்து வழிபடும்போது பக்திபூர்வமான அவ்வழிபாட்டினால் நினைத்த காரியங்கள் கைகூடுகிறது. அதனால் அவனுக்குத் தொடர்ந்து தெய்வநம்பிக்கை மேலோங்குகிறது. இதனால் இறைவனுக்கு நடைபெறும் விழாக்கள் கும்பாபிஷேகம் போன்ற நைமித்திய விழாக்களில் மனம் பதிந்து அவைகளைச் செய்து தரிசித்து உய்வடையும் நிலைக்கு வருகின்றான்.

இவ்வண்ணம் செய்யும் வழிபாட்டுக்குரிய நைமித்திய காலங்கள் மகோற்சவம் கும்பாபிஷேகம் போன்றவை. மகோற்சவம் வருடம் ஒருமுறை நடைபெறுவது. கும்பாபிஷேகம் அப்படியல்ல ஆகக்குறைந்தது ஓர் ஆலயத்தில் பன்னிரண்டு வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும். இவ்வகையில் நடைபெறும் கும்பாபிஷேகத்திற்குரிய காரணங்கள் ஆலயம் பலநூற்றாண்டு காலம் சென்றதாக இருந்து பழுதடைந்து அவைகளை இடித்துப்புனரமைப்புச் செய்து கும்பாபிஷேகம் செய்தல். ஆலயத்தில் இறைவன்திருவுருவச்சிலைகளுக்குச் சாத்தும் மருந்து அல்லது ஸ்தூபிக் கலசம் பழுதடைந்து ஸ்தூபி கோபுரம் மண்டபம் என்பவற்றின் வர்ணங்கள் பழுதாகியுள்ள நிலையில் அவற்றைப் புதுப்பித்துச் செய்தல் (இது 12 வருடங்களுக்குக் கொருமுறை அவசியம் செய்யப்பட வேண்டியது.) இதைவிட நாட்டின் அவல நிலைகள் காரணமாக நித்திய நைமித்தியங்கள் தடைப்படுதல், கள்வர்களின் தீய செயலால் பாதிக்கப்படுதல் என்பவற்றிற்காக உடனடியாக செய்ய வேண்டிவரும் பிரதிஷ்டை எனப் பலவகைப் படும். இவை ஆவர்த்தனம், புனராவர்த்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனம், சம்புரோட்சின அந்தரீகப் பிர திஷ்டை என ஆகமங்களில் வகுக்கப்பட் டுள்ளது. இவ்வண்ணம் நடைபெறும் கும் பாபிஷேகத்தின் முதற்படியாக பாலஸ் தாபனம் செய்யப்படுகிறது. கும்பாபிஷே கத்திற்குமுன் ஆலயம் திருப்பணி செய்ய வேண்டி அங்குள்ள மூர்த்திகளைப் புதிய சிறியதோர் ஆலயத்தைத் தற்காலிகமாக அமைத்து அதில் பிரதிஷ்டை செய்வதே பாலஸ்தாபனம் எனப்படும், அதன்பின்பே ஆலயத் திருப்பணி ஆரம்பமாகிறது. அதில் சகலமக்களும் பங்குகொள்கிறார்கள் அதன் மூலம் தம்மாலியன்றவகையில் பணமாகவும் பொருளாகவும் சிரமதானமாகவும் திருப் பணிக்கு உதவுகிறார்கள். அதனால் திருப் பணி நிறைவுக்கு அழகிதோர் ஆலயம் உருவாகின்றது. இத்திருப்பணியினால் மக்கள் பதிபுண்ணியம் செய்யும் நிலைக்கு உயருகிறார்கள். இவ்வண்ணம் பதிபுண் ணியம் கிடைக்கும். திருப்பணியினால் ஆலய அமைப்புக்கள் அழகுற அமைந்து நிறைவுற்றதும் அவ்வாலயம் மகாகும்பா பிஷேகத்திற்குத் தயாராகிறது.

ஆலய பரிபாலகர்களும் ஆலய சிவாச் சாரியரும் கலந்து ஆலோசித்து நல்ல சுப முகூர்த்தத்தில் மகாகும்பாபிஷேகத்திற்கு நாட்குறிக்கிறார்கள். கும்பாபிஷேகத்திற்கு மக்களிடமிருந்து நிதிசேகரிக்கப்படுகிறது. பன்னிரண்டு வருடங்களுக்கு மேல் நடை பெறும் கும்பாபிஷேகத்தைத் தரிசிக்கும் பேறு பின் கிடைக்காமற் போய்விடுமோ என்கின்ற ஆர்வத்தில் மக்கள் மனமுவந்து பொருளைக் கொடுக்கிறார்கள். அதனால் கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறுகி றது. மகாகும்பாபிஷேகத்தின் முக்கிய அம் சங்கள், கிரியாரம்பம், தீபஸ்தாபனம், அவாமிஸ்தாபனம், எண்ணெய்க்காப்பு, மகாகும்பாபிஷேகம், தசதர்சனம், அன் றைய விசேட உற்சவம் என்பனவாகும். இவை கும்பாபிஷேக காலம் தவிர மற்றைய காலங்களில் நடைபெறாத தொன்றாகும். தரிசிக்க முடியாததுமாகும்.

**கிரியாரம்பம் :**

முதலில் விநாயகரை வணங்கி அவரிடம் அனுக்ஞை பெற்றுக் கிரியை ஆரம்பித்தல். இது விநாயகருடைய வரப்பிரசாதம். புதிய ஆலயத்திற்கு முதல் முதலாகத் தீபம் வைத்து ஒளி யேற்றுதல், புதிய ஆலயத் துள் யந்திரங்களைத் தாபித்து மூர்த்தி களை ஸ்தாபித்தல். அதன்பின்பு அடிய வர்கள் எல்லோரும் சென்று இறைவன் திருவுருவச் சிலையைத் தொட்டு எண்ணெய் சாத்துதல் ஸ்தூல லிங்கமாக எத்திசை யிலும் காட்சி கொடுக்கும் ஸ்தூபி விமானம் அபிஷேகம் மகாகும்பாபிஷேகம் இவைக ளைத் தரிசித்தல் கிடைத்தற்கரிய பேறா கும். அதன்பின்பு நடைபெறும் தசதர்சனம் இறைவனுக்கு மகாகும்பாபிஷேகம் நிகழ்ந்து திருக்கதவம் சாத்தி அதன்பின் கண்ணாடி பசுமாடு பூரணகும்பம் தீபம் என்பவற் றோடு அந்தணர்கள் யஜமான் சுமங்கலிகள் அடியார்கள் புடைசூழத் திருக்கதவம் திறக் கப்பாடித்திறந்து முதன்முதலாக இறைவ னைத் தரிசிக்கச் செய்யும் காட்சி தெய் வீகக் காட்சியாகும். அந்த நல்வேளையில் கண்ணாடியில் தெரியும் இறைவன் பிரதி விம்பத்தைத் தரிசித்தல் சாலச்சிறந்த தொன்றாகும். முதன்முதல் இறைவன் அலங்காரரூபராய் மங்கள தர்சனத்தோடு காட்சியளிக்கும் போது வணங்குவத னால் இறைவன் சகல செல்வ போகங்க ளைக் கொடுக்கிறான் என்று ஆகமங்கள் கூறுகின்றது. கும்பாபிஷேகத்தின் பின் முதன்முதலாக நடைபெறும் மகா அபி ஷேகம் நிகழ்ந்து அதன் பின் மணவாளக் கோலவடிவில் இறைவன் வீற்றிருக்கும் போது அர்ச்சனை செய்து வழிபடுபவர்க்கு இறைவன் நல்ல திருவருளைப் பாலிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறான். அன்று நடைபெறும் முதலாவது உற்சவம் மிகவும் சிறப்புவாய்ந்தது. இறைவன் அலங்கார ரூபராய் அடியார்கள் வழிபடுவதற்கெளிதாய் வீதியில் காரணமூர்த்தியாய் காட்சி தரும் போது அப்பெருமானின் அலங்காரரூபமே கண்கள் வழியாக மனத்தில் பதிகிறது. அன்றைய தெய்வீகக் காட்சி என்றும் மனதை விட்டகலாது. இவ்வண்ணம் மகாகும்பாபிஷேக தரிசனம் மிகவும் மகத்துவம் வாய்ந்தது. பெருந் சாந்தி என்றும் இதைச் சொல்வர். எவ்வகைப் பாபங்களையும் சாந்திப் படுத்தும் கிரியைகள் எல்லாம் கும்பாபிஷேகத்தில் நடைபெறுகிறது. இதனால் ஆலயம் சிறக்க நாடு சிறக்கிறது. மக்கள் சிறப்புடன் வாழ்கிறார்கள். ஆண்டவன் திருவுருவேறும் தன்மை அமைந்து திருவருளை அருள் வெள்ளமாகப் பொழிகின்றான். அக்கருணை வெள்ளத்தில் நனைந்த மக்களுக்குக் குறைவில்லை நிறைவே. இவ்வண்ணம் பல விதமாகத் திருவருள் மகத்துவம் வாய்ந்தது. மகாகும்பாபிஷேகம் எவ்வண்ணம் நோக்கினும் இதன் பயன் சாலச் சிறந்ததே. தரிசிப்பவர்கள் என்றும் பயனடைவார்கள் என்பது திண்ணம்.

---

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் — விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கலந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ பாடசாலை உபகரணங்கள்
★ பாலர் வகுப்புமுதல் உயர்தர வகுப்பு வரையான பாடநூல்கள்
★ அலுவலக காகிதாதிகள்
★ மாதிரி பயிற்சி வினாத்தாள்கள்

மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளுமிடம்

◆

**ஆசீர்வாதம் பொத்தகசாலை**

23, தனங்களப்பு வீதி, சாவகச்சேரி.

---

சகலவித விசேட வைபவங்களுக்கும்
வர்ணப்படம் பிடிக்கவும்,
வீடியோ படம் எடுக்கவும் நாடுங்கள்

♠

# வீடியோ ரங்கன்

கைதடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு நகரிலுள்ள ..... ......

* M/S NINE HEARTS COLOUR LAB
* M/S PHOTO CHROME COLOUR LAB

ஆகிய நிறுவனங்களில்
தங்களின் வர்ணப்படச் சுருள்களைப்
பிரதியாக்கம் செய்வித்துக்
குறுகிய காலத்தில் வழங்கும் முகவரும்...

ஒலி, ஒளி வெற்று நாடாக்கள்,
கறுப்பு, வெள்ளை வர்ணப்படச்சுருள்கள்,
சகலவித கமரா, மணிக்கூட்டு பற்றறிகள்
ஆகியவற்றையும் மலிவான விலையில் பெற்றுக்கொள்ள
யாழ்நகரில் ஒரே ஸ்தாபனம்

# மக்ஷெல் கவுஸ்

20 யூபிலி பஜார், (சீமாட்டி அருகாமை),
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்குத் தேவையான சகலவிதமான
புடைவை வகைகள்

மலிவுவிலையில் கிடைக்க
நாடவேண்டிய இடம்

↓

# கைராசி புடைவையகம்

கண்டி வீதி, கொடிகாமம்.

---

பாடசாலை உபகரணங்கள்
புதினப் பத்திரிகைகள்
மணிக்கூடு, ரேடியோ வகைகள்
அழகுசாதனப் பொருட்கள் யாவும்பெற

விஜயம் செய்ய வேண்டிய இடம்

# அருள் நாயகி புத்தகசாலை

பேருந்து நிலையம், கொடிகாமம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகலவிதமான பலசரக்கு
மளிகைப் பொருட்களையும்

மொத்தமாகவும் சில்லறையாகவும் மலிவான
விலையில் கொள்வனவு செய்ய

V

# உதயகுமார் களஞ்சியம்

கண்டி வீதி, கொடிகாமம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமயத் தளத்தில் பரத நாட்டிய அழகியல்

கலாநிதி சபா. ஜெயராசா அவர்கள்

அழகின் அடிப்படைகளைத் தேடுதல் இந்து சமய அழகியலின் அறிகைத் தள மாக அமைந்தது. அழகு என்ற எண்ணக் கருவானது முருகு, வடிவு, அணி, ரசம், சௌந்தர்யம், சந்தம், சாயல், சுந்தரம் லாவண்ணியம், சத்தியம், சிவம் என்ற பல் வேறு அடிப்படைகளில் இந்து சமய அழகி யலில் எடுத்தாளப் பட்டுள்ளது.

யாதாயினும் ஒரு தனிமத்தினால் (ELEMENT) மட்டும் அழகு தோன்று வதில்லை. பொருத்தமான நிலையில் நிக மும் தனிமங்களின் இணைப்பு வழியாகவே அழகு மிளிரும் என்பது " இசைவு " என்ற எண்ணக்கருவினால் தமிழ் மரபிலும், "சம்யோக" என்ற பதத்தினால் வட மொழியிலும் விளக்கப்படலாயிற்று " பரத நாட்டிய அழகியலானது " இசைவு " என்ற தளத்தையும் ஒவ்வொருவராலும் இனங் காணப்படும் புலக்காட்சி (PERCEPTION) என்ற செயற்பாட்டையும் ஒருங்கிணைக் கின்றது. ஒவ்வொருவரதும் உள்ளத்தோடும் அறிகையோடும், அனுபவங்களோடும், அவரவர்க்குரிய புலக்காட்சியானது ஒன் றிணைந்து நிற்கும்தன்மையுடையது. தனி யாளுக்குரிய விருப்பும், உந்தலும் இந்து சமய மரபிலே "காமம்" எனப்படும் காமம் என்பதைக் கர்மத்துக்கு இட்டுச் செல்லா வண்ணம் தடுத்தல், இந்து சமய அழகியலின் ஒரு பிரதான பரிமாணமாக அமைந்தது. காமத்தைத் தெய்வீகப்படுத்தி அழகின் அனுபவிப்பை சுயநலத்திலிருந்து சுயநலமறுப்புக்குநகர்த்தும் கலைநுணுக்கங் கள் பரதநாட்டிய அழகியலிலே மேற்கொள் ளப்படுகின்றன.

அழகு பற்றிய தேடலை முன்னெடுத்த மேலைப்புல அழகியலாளர் பொதுவாக இருநிலைகளிலே துருவப்படுத்தி நின்றனர். அவர்களுள் ஒரு சாரார் முற்றிலும் "புறவயமாக" அழகை அணுகினர். இன் னொரு சாரார் புறவயத்தை அடியோடு நிராகரித்து, "அகவயமான" முறையிலே அழகைத் தேடினர். ஆனால் இந்துப் பாரம் பரியத்தில், சிறப்பாக பரதநாட்டிய அழகி யலில் அகவயமும், புறவயமும் என்ற இரு பண்புகளும் இணைத்து நோக்கப்படுகின் றன. "கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்" என்ற தொடர் அகவய நிலைப்பட்ட அழகின் தரிசனமா யிற்று அணி அல்லது அலங்காரம் பற்றிய இலக்கணங்கள் அழகை ஆய்வு செய்யும் புறப்பரிமாணங்களாகவும் அமைந்தன. பரதரின் நாட்டிய சாஸ்திரம் அகநிலை மரபையும், புறநிலை மரபையும் ஒன் றிணைத்துக் காட்டுகின்றது.

வாழ்க்கையிற் காண்பவற்றை நேரடி யாகக் பிரதி பண்ணல் அழகியற் கூறாகப் பரத நாட்டியத்திலே கருதப்படவில்லை. வாழ்க்கை காட்சிகளை உள அமைப்பின் வழியாகப் புத்தாக்கம் செய்து தெய்வீகத் தூண்டல் வழிப்படுத்தி வழங்குதல் பரத நாட்டியத்தில் இடம் பெறுகின்றது.

நிருத்தம் எனப்படும் தூய ஆடல் அழகினையும் நிருத்தியம் எனப்படும் அபி நயத்துடன் இணைந்த அழகினையும் பரத நாட்டியம் ஒன்றிணைத்தல் அருவ, உருவ நிலைகளிலே இறைவனைத் தேடும் அழகுப் பாரம்பரியமாயிற்று. நாட்டிய சாஸ்திரத் திலே கூறப்பட்டுள்ள 108 கரணங்களும், அசைவு வடிவிலே கலைச் சிந்தனைகளை வெளிப்படுத்திநின்றது. சிதம் பரம் ஆல யச்சிற்பங்களில் கரணங்கள் செதுக்கப் பெற்றுள்ளமை அவற்றுக்கும் இறை சிந் தனைகளுக்குமுள்ள தொடர்பைப் புலப் படுத்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" அடிபேரில் பாதாளம் பேரும் அடிகள்
முடிபேரில் மாமுகடுபேரும் - கடகம்
மறித்தாடும் கைபேரில் வான்திசைகள்
பேரும் அறிந்தாடும்ஆறு என் அரங்கு"

என்ற காரைக் காலம்மையாரின் பாடல் இறை பொதிந்த ஆடற் கருத்துக்களை மேலும் மீளவலியுறுத்துகின்றது.

உடற்கோலங்களால் மேற்கொள்ளப் படும் ஆங்கீஹ அபிநயம், ஒப்பனைக் கோலங்களால் வெளிக்கொண்டுவரப்படும் ஆஹார்ய அபிநயம், மொழிக்கோலங் களால் ஆக்கப்பெறும் வாசீக அபிநயம், மன வெழுச்சிக்கோலங்களுக்குத் தளமாக அமையும் சாத்வீக அபிநயம் என்ற அனைத்தும் பரம் பொருளை அடையும் நோக்கத்தைக் குவியப்படுத்தல் வேண்டும் என்பது இந்து ஆடல் இலக்கியங்களால் தொடர்ச்சியாக வற்புறுத்தப் படுகின்றது.

இம்மையை நிலை மாற்றம் செய்த லாகிய எண்ணக்கருவுடன் தொடர் புடையை வடமொழிச் சொல்லாக "அல்லௌகிகம்" அமைந்தது. உலகு கடந்து செல்லும் முடிவிலியாகிய பரம் பொருள் பற்றிய தேடலை பரதநாட்டியம் முன்னெடுத்தது. "எண்ணுதற் கெட்டா எழில் ஆர் கழல் இறைஞ்சி" என்ற அடி கள் இந்துப் பாரம் பரியத்தில் அழகு பற் றிய நீண்ட அறிகையைப் புலப்படுத்தும்.

பரதநாட்டிய அழகியல், ஆடல் வழி யாகப் பிரபஞ்சம் பற்றிய தேடலை முன் னெடுத்தது. வேதாந்தம், சித்தாந்தம் ஆகிய இரு சிந்தனை அருவிகளும் பிரபஞ்சம் பற்றிய தேடலை ஆழ்ந்து விளக்குகின்றன. பிரபஞ்சம் பற்றிய தேடலில் சிவமே முழு முதற் பொருளாக இயம்பப் பெற்று சிவ தாண்ட வத்தின் வழியாகப் பிரபஞ்ச இயக் கம் விளக்கப்படலாயிற்று. சிவதாண்டவத் தின் பிரபஞ்சத் தொடர்புகளைக் காரைக் காலம்மையாரும், மணிவாசகரும் அநுபூதி நிலையில் நின்று விளக்கும் பொழுது, உடல், உயிர், உலகு, பிரபஞ்சம் முதலாம் இயக்கக் கூறுகளின் சமநிலையும், சீர்மை யும் பற்றி எத்துணை சித்திரிப்புக்களைத் தருகின்றார்களோ, அத்துணை சித்திரிப் புக்களையும் பாதநாட்டிய அழகியல் உள் வாங்கி நிற்கின்றது.

உலகு பற்றிய இருப்பு "சத்" என் றும், உணர்வின் தொழிற்பாடு "சித்" என்றும், உன்னதமாகிய இருப்பு, பரம் பொருளாகிய "ஆனந்தம்" என்றும் விளக்கப்படும் தெய்வீகத் தொடர்புகள் சிவதாண்டவத்தில் குறிப்பிடப்படுகின்றன. ஆனந்தமே சௌந்தர்ய மாகின்றது. இந் தத் தொடர்புகளின் ஆடல் நிலைப்பட்ட தும், முத்திரைகள் நிலைப்பட்டதும், அபி நயங்கள் நிலைப்பட்டதுமான ஆக்கங் களைப் பரதநாட்டியம் தன்னகத்தே கொண்டுள்ளது.

அழகு என்பது உருவநிலையிலும் வெளிப்படுத்தப் படுத்தப்படலாம். அருவ நிலையிலும் வெளிப்படுத்தப் படலாம், அருவங்களுக்கு உருவங்கள் கொடுத்தலும் உருவங்களை அருவங்களாக்குதலும் பரத நாட்டியத்தின் அழகியற் பரிமாணங்களா கின்றன. இந்நிலையில் நடப்பியல் (REALISM) தளத்தையும், இலட்சிய வியல் (IDEALISM) தளத்தையும் பரத நாட்டியம் ஒருங்கிணைத்து நிற்கின்றது.

சூரியன், சந்திரன், மழை, காற்று, தீ, என்றவாறு இயற்கைத் தெய்வங்கள் மீது இசைப்பாடல்களைப் புனைந்து வழி படும் மரபு இருக்குவேதத்திலே கூறப்பட் டுள்ளது. சிலப்பதிகாரத்தில் ஞாயிறு போற்றுதும், திங்களைப் போற்றுதும், மாமழைபோற்றுதும் முதலாம் தொடர்கள் இயற்கையைத் தெய்வீகப்படுத்தும் அறிகை யினை வெளிப்படுத்துகின்றன. இயற்கைப் பொருள்களைத் தெய்வீகப்படுத்தி இயக்கு தல் பரதநாட்டிய அழகியலின் உள்ளடக் கமாகின்றது.

இந்துப்பாரம்பரியத்தில், வேள்விகளை இயற்றலும், சடங்குகள் மேற் கொள்ள லும், வழிபாட்டு முறைமையின் பரிமாணங் களாக அமைந்தன. அவற்றை அடியொற்றி மலர்ச்சியுற்ற சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நாற்பொருள்கள் வாயிலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவும் மேற்கொள்ளப்படும் தெய்வீகத் தேடல்கள் பரதநாட்டியப் புனைவுகளிலே எடுத்தாளப்படுகின்றன.

பரதநாட்டியத்தின் படிமலர்ச்சியில் அநுபூதி இலட்சியவியல் (MYSTICAL IDEASISM) ஒரு பிரதான பரிமாணமாக அமைந்தது. பரத நாட்டியத்தின் மூன்று பெரும் தளங்களாக அமையும் தாளம் பாவம், இராகம் ஆகியவற்றுக்குரிய விளக்கங்கள் அநுபூதி இலட்சியவியல் சார்ந்ததாக அமைக்கப்பட்டன. வாழ்க்கையிலும் மேலான — மனத்திலும் மேலான — சிந்தனையிலும் மேலான — உன்னதங்களை நோக்குதல் அநுபூதி இலட்சியவியலில் அடங்கும். தாளமும், பாவமும் இராகமும் இறைவனால் அருளப் பெற்ற அனுபவங்களைக் கண்டமை, அநுபூதி இலட்சியவியலின் பண்பைப்புலப்படுத்தும். இவற்றின் தொடர்பில், பேசாப்பொருளைப் பேசுதலும், அடையமுடியாப் பொருளை அடைய முயற்சித்தலும், சிந்திக்கமுடியாத பொருளைச்சிந்தித்தலும் பரதநாட்டிய அழகியலின் உள்ளார்ந்த மதுரங்களாகின்றன.

இந்து அழகியலானது உள்ளொளித் தூண்டலை (SELF ILLUMINATION) அடிப்படையாகக் கொண்டது மனிதரிடத்து ஆழப்புதைந்துள்ள உள்ளொளியை வெளிக் கொண்டு வருதல் இந்துக்கல்விமரபின் உள்ளடக்கமாக அமைந்தது. இக்கருத்தை சுவாமி விவேகாநந்தர் பின்வரும் உயர் நிலை வாக்கியங்களினால் வெளிப்படுத்தினார்.

(அ) ''மனிதரிடத்துப் புதைந்துள்ள பூரணத்துவத்தை வெளிப்படுத்துவதே கல்வி'

(ஆ) ''ஆகுக ஆக்குக''

நீண்டகல்விக்கும், பயிற்சிக்கும், மன அடக்கத்துக்கும் பின்னரே பரதநாட்டியத்தை ஆற்றுகை செய்தல் வேண்டும். இந்துக்கல்விப்பாரம்பரியத்தில் விளக்கப் பெறும் ''ஆகுக'' என்பது கற்றறிந்து ஒங்குதலைக் குறிப்பிடும். ''ஆக்குக'' என்பது கற்றவற்றை ஆற்றுகை செய்தலைக் குறிப்பிடும். இவ்வகையில் இந்து சமயக் கல்விச் சிந்தனைகளுக்கு முழுமையான வடிவத்தை பரதநாட்டியம் வழங்கிவருகின்றது.

இந்து அறிவாய்வியலை (EPISTEMO LOGY) ஆடல் வடிவிலே வெளிப்படுத்தும் கலையாக்கமாகப் பரதநாட்டியம் விளங்குகின்றது. பரப்பிரமமும் அதன் வெளிப்பாட்டு வடிவங்களும் இந்து அறிவாய்வியலின் விளக்கப்பொருள்களாகவுள்ளன. அறியாமை அல்லது அவித்தையில் இருந்து ஒருவரை மீட்டெடுக்க ஆடல் துணை செய்ய வேண்டும் என்பது பரதநாட்டியக் கலையின் உயரிய நோக்கங்களுள் ஒன்றாகக்கருதப்படுகின்றது.

மெய்ப்பொருளைக் கண்டறிவதற்குரிய உடல் நிலைப்பட்ட செயற்பாடுகள் பரதநாட்டியத்திலே முன்னெடுக்கப்படுகின்றன. ''முழுஉடலையும் மாலையாக்கி இறைவனுக்குச் சமர்ப்பித்தல்'' என்றகருத்து பரதநாட்டியக் கல்வியின் உயரிய குறிக்கோள்களுள் ஒன்றென அமைகின்றது. புலக்காட்சி, நினைவு, பொது அறிவு, தெய்வீக அறிவு, என்ற நிலைகளில் ஒரு தொடர்ச்சியான கட்டமைப்பைக் கொண்ட பரதநாட்டியம் அனைத்து அசைவுகளையும், தெய்வீகமயப்படுத்தும் உன்னதங்களை முன்னெடுக்கின்றது. ''கண்காள் காண்மின்களோ'' ''செவிகாள் கேண்மின்களோ,'' 'நெஞ்சே நீ நினையாய்'' ''வாயே வாழ்த்து கண்டாய்'' போன்ற தொடர்கள் உடலியக்கச் செயல்கள் அனைத்தையும் தெய்விகப்படுத்தும் பக்தி நெறிப்பாரம்பரியத்தின் தொடர்ச்சியையும் வளர்ச்சியையும் புலப்படுத்தி நிற்கும். அவற்றை உள்வாங்கிய நிறைவு கொண்ட கலையாகப் பரதநாட்டியம் முகிழ்ந்தெழுந்துள்ளது.

பரதநாட்டிய அழகியல் பற்றிச் சிந்திக்கும் பொழுது, சமூகப்பதிகைக்கும் (Social Formation) கலைக்குமுள்ள தொடர்புகள் ஆராயப்படவேண்டியுள்ளன. சமூக அசைவியக்கங்கள் பரதநாட்டிய ஆக்கத்தையும் அழகியலையும் பாதித்து வந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைகளின் உருவாக்கம், கருத்தியல்களின் உருவாக்கம், முதலியவை சமூகப்பதிகையுடன் இணைந்த செயற்பாடுகளாகும். சமூகப்பதிகையின் போது மேலாண்மை செலுத்தும் வலுக்கள் கலைகளின் ஆக்கத்துக்குரிய காப்பரண்களாகவும் செயற்படும் எமது மரபிலேநிலம்சார் வள்ளல் இருக்கைகள், குறுநிலஆட்சிகள்,பேரரசுகள், முதலிய மேலாண்மை வலுக்கள் இயங்கி வந்தன. இந்த மேலாண்மை வலுக்களின் அரவணைப்பிலே பண்பாட்டு வலுக்களும் புலமை வலுக்களும், கலையாக்கச் செயல்முறைகளும், தொழிற்படலாயின. பரதநாட்டிய வளர்ச்சியானது மேலாண்மை வலுக்களின் செல்வாக்கினைப்பல தளங்களிலே எடுத்துக் காட்டுகின்றது. இந்தியசமூக இயக்கத்திலே நிகழ்ந்த ''சமஸ் கிருதமயப்பாடு'' பரதநாட்டியத்தின் மீது செல்வாக்குச் செலுத்தியிருத்தல் பலதளங்களிலே வெளிப்படுத்துகின்றது.

கலை பற்றிய அறிகை (Cognition) யானது சமூக வரலாற்றின் நடப்பியலை அறிந்துகொள்ளும் முறையாகின்றது. பரதநாட்டியம் பற்றிய அறிகை எமது பண்பாட்டில் நிகழ்ந்த விசைகளைத் தெரிந்து கொள்ளத்துணை செய்கின்றது.

எமது சமூகத்தில் அண்மைக்காலமாக நிகழ்ந்து வரும் புலப்பெயர்வுகளில் பரதநாட்டியமும், பாரம்பரியமான வழிபாட்டுக்கோலங்களும் புதிய பரிமாணங்களைப் பெறத் தொடங்கியுள்ளன. தாகம் ம்க்க தாயக நினைவுகளையும், பண்பாட்டு நினைவுகளையும் (Culturalmemory) இங்கிருந்து புலம்பெயர்ந்து சென்றோர் ஐரோப்பிய, அமெரிக்க, அவுஸ்ரேலியக் கண்டங்களிலே மீட்டெடுப்பதற்கு பரதநாட்டியம் ஆழ்ந்த குறியீடுகளைத் தொகுத்து வழங்குகின்றது.

---

**References :**


1. Nandikeswara
   Abhinayadarpanam
   Manomohanghosh
   Calcutta, 1975

2. Ananda K. Coomaraswamy
   The dance ef shiva
   Sagar publications
   New delhi, 1971

3. Mulk Raj Anada
   The Hindu view of Art
   Asia publishing House
   New delhi 1957

4. An Approach to the Indian
   Theory of Aat and Aesthetics
   Sterling Publishers Pvt Ltd,
   New Delhi, 1·77

5. The Natyasastra
   The Royal A SiaticSociety
   of Bengal
   Calcutta, 1950


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவர்சில்வர் பொருட்கள்
அழகுசாதனப் பொருட்கள்
அன்பளிப்புப் பொருட்கள்
சப்பாத்து வகைகள்
ஆகியவற்றிற்கு
நாடவேண்டிய இடம்

## செவ்வந்தி

7 நவீன சந்தை உட்புறம்,
சாவகச்சேரி.

நவீன டிசைன்களில்
சகல விதமான
பிடைவை வகைகளையும்
பெற்றுக் கொள்ள நாடுங்கள்

## நாதன் பிடைவை

EB. 7, சந்தை
சாவகச்சேரி.

மங்கையர் கண்கவரும்
வண்ண வண்ண
சேலைகளுக்கு
நாடவேண்டிய இடம்

## நிலா பிடவையகம்

20, நவீன சந்தை
சாவகச்சேரி.

உங்கள் இல்லத்துக்கு
தேவையான சகலவிதமான
பாவனைப் பொருட்கள்
ஆகியவற்றை
தெரிவு செய்ய

## அபிரா
பல்பொருள் அங்காடி

கொடிகாமம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களின்
மருந்துத் தேவைகளுக்கு
நம்பிக்கையுடன்
நாடுங்கள்

## வதனா மருந்தகம்

**VATHANA DISPENSARY**

பஸ் நிலையம், சாவகச்சேரி.

---

தங்களின் சகலவிதமான
துணிகளையும்
றைகிளீன் செய்துகொள்ள
நம்பிக்கையுடன்
நாடவேண்டிய இடம்

## அம்பாள் சலவைத்தொழிலகம்

உரிமை: கா. கணேசலிங்கம்

மாவடிப்பிள்ளையார் வீதி,
மீசாலை.

---

சகலவிதமான
ஆங்கில - தமிழ் தட்டச்சு
வேலைகளுக்கும்,
றோணியோ
வேலைகளுக்கும்
நம்பிக்கையுடன் நாடுங்கள்

## வே. பூபாலசிங்கம்

ஐயா கடையடி, மீசாலை.

---

உங்கள் களைப்பைப்
போக்கிக்கொள்ள
சிற்றுண்டி, தேனீர்,
குளிர்பானம்
அருந்த நாடுங்கள்

## சந்திரன் சிற்றுண்டியகம்

யாழ். வீதி, மீசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*with the compliments*

*of*

# SRI VIGNESWARA
# ★ STORES ★

## GENERAL MERCHANTS & COMMISSION AGENTS

| | |
|---|---|
| Nominated whole Saler for: | *UNILEVER CEYLON LTD* |
| Stockists for: | *LANKA MILK FOODS CWE LTD,*<br>*DARLEY BUTTER & Co LTD,*<br>*CEYLON TOBACCO Co LTD,* |
| Direct Dealers for | *CEYLON NEUTRITIONAL FOODS - LTD, (NESTLE)*<br>*DELMEGE FORSTH & Co LDT.* |

V

Branch:
R. V. T.
104, Stanly Rd,
JAFFNA.

148, Kandy Road,
Chavakachcheri.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ பலசரக்குப் பொருட்கள்

★ தரமான அரிசி வகைகள்

★ கேக் தயாரிக்கும் பொருட்கள்

★ பால்மா வகைகள்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய நிறுவனம்

# சண்முகம் அன் சன்ஸ்

நவீன் சந்தை,
கண்டி வீதி,
சாவகச்சேரி

---

நம்பிக்கையின் நட்சத்திரம்

# கீதா ஜுவல் ஹவுஸ்

12, நவீனசந்தை
சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானசம்பந்தர் விடுதூது

கலாநிதி நா. ஞானக்குமரன் அவர்கள்
(சிரேஸ்ட விரிவுரையாளர் – மெய்யியல்துறை
தலைவர், நுண்கலைத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.)

மூன்று வயது நிரம்பிய பாலகனாம் ஞானசம்பந்தரின் அழுகுரல் கேட்டு இரக்கம் மீதுரப்பெற்று அம்மை அப்பராய் எழுந்தருளி இறைவன் ஞானப்பாலை ஊட்டிய வரலாற்றைக் காண்கின்றோம். இரப்போர் குரல் கேட்டு அபயமளிப்பது போல் ஞானப் பாலை அருளியது மாத்திரமன்றித் தந்தையின் கேள்விக்குப் பதிலாய் 'தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடிக் சாடுடைய சுடலைப்பொடி பூசிக் காட்சியளித்த கருணைக் கடலாகவும் காண்கின்றோம். இவ்வகையில் திருஞானசம்பந்தப் பெருமான் இறைவனால் ஆட்கொண்டருள் சொரியப்பட்டமையாலேயே ஆளுடைய பிள்ளையாராய் நாமம் கொண்டதும் காணற்கரியதாகும்.

இறைவனே ஆன்மீக நாட்டத்தின் உயிர் பொருளும் மையக்கருவுமாகும். பேரின்ப மயமாய் அன்பின் பிறப்பிடமாய் ஞானத்தின் ஒளிரூபமாய் அமையப் பெற்றவர் சர்வலோக நாயகனான ஈசனே யாவார். இவ்விறைவனை, பரம்பொருளை அடைதலே நம் வாழ்வின் இலட்சியமாகவும் உயர் இலக்கும் ஆகின்றது பரம்பொருள் உண்மைத்தத்துவத்தின் தெளிவை உலகியல் வாழ்வின் கோலத்தில் இலகுவாக்கி உணர்த்துகின்றமை ஆன்மிகத்தில் பக்குவப்பட்ட ஆன்மாக்களுக்குச் சாத்தியமாகின்றது. அருவம், உருவம், அருவுருவம் எனும் முத்திற மேனியைக் கொண்டவனான இறைவன் காட்சிக்கெளியோனாய் ஞானசம்பந்தருக்கமைந்தமை குறிப்பிடத்தக்கதாகும். 'தோடுடைய செவியனாய்' கண்டுவந்த குழந்தையின் உள்ளங்கவர் கள்வனாக இறை பெருமான் விளங்குகின்றார் என்பது குழந்தையின் பக்குவப்பட்ட உயர்நிலையைச் சுட்டாது சுட்டி நிற்கின்ற தொன்றாகும். இங்குதான் குழந்தையான சம்பந்தப்பெருமான் தன் உள்ளத்தைப் பறிகொடுத்த நிலைமையும் தெளிவிற்குரியதாகின்றது தனது உள்ளத்தினுள் புகுந்த பெருமான், தனது உள்ளத்தைக் கவர்ந்து விட்டதனை உணர்ந்த போதில் அவ்வுணர்வின் வெளிப்பாட்டை வெளிப்படுத்துவதற்கான ஊடகத்தைக் கையாளுவதில் சம்பந்தப்பெருமானின் சிறப்பும் நுட்பமும் வியக்கத்தக்கதும் நயக்கத்தக்கதுமாகும்.

இலௌகீக நிலையில் தலைவன், தலைவியருக்கிடையே எழுகின்ற அன்பும் அவ்வன்புப்பிணைப்பின் ஆழமும் அவர்களிடை எழும் பிரிவு உணர்த்தும் உணர்வும் அவ்வுணர்வின் ஊடாக உணர்ந்து கொள்ள வைக்கும் உறவின் காத்திரத் தன்மையும் புரிந்து கொள்ளவதற்குற்குச் சாதகமான ஊடகங்களாகும். இதே ஊடகத்தைப்பயன்படுத்தி அதாவது தலைவன் தலைவி பாவத்தில் இல்லறத்தின் கோலத்தில் பக்குவப்பட்ட ஆன்மாவுக்கும் பரம்பொருளுக்கும் இடையிலான நெருக்கத்தை, பிரியாப் பிணைப்பை, பிரிவின் துயரத்தைப் புலப்படுத்தும் பாங்கு சிறப்பிற்குரியதாகும். இலௌகிக நிலையில் தெரிந்த உறவின் ஆழத்தை, இணைப்பின் பிணைப்பை முதன்மைப்படுத்தி அதன் வழி தெய்வீக நிலையுறவை உணர்த்துமாறு காட்டுவது மேன்மைக்குரியதாகும். தலைவன் தலைவி எனும் பாவத்தில் இலௌகிக உறவின் ஆழத்தை வெளிப்படுத்தும் மரபானது பழந்தமிழ் இலக்கியங்கள் முதலாய் செழித்துப்பரவியுள்ளமை அறிதற்குரியதாகும். பெருமானைத் தலைவனாயும் பக்குவப்பட்ட ஆன்மாவைத் தலைவியாகவும் ஏற்கின்ற பாங்கில் சிவானுபவமாகிய காதலின் பத்தை பிரேமையனுபவத்தை அகப்பொருட்டுறையில் புலப்படுத்துகின்ற சிறப்பை திருஞானசம்பந்தர் வாக்கில் கண்டுவக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாம். சுருத்தொருமித்த இருவர் தமக்கிடையே ஏற்பட்டுள்ள அன்பின் ஆழத்தை பிரிவெனும் நிலையில் தெளிவுற அறிந்து கொள்வது இயல்பானதே — அதேபோல இங்கும் திருஞானசம்பந்தர் தம்முள்ளத்திலே பொங்குகின்ற காதலனுபவத்தை தூது எனும் வடிவத்தில் அமைத்து வெளிப்படுத்துகின்றார். தமிழில் வழங்கும் தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களில் தூது ஒன்றாகும். தலைவன் தலைவிக ளிடையே அமைந்துள்ள மாறாக்காதலை அன்னம், புறா, மயில், கிளி, குயில், பூவை வண்டு, அன்றில், மேகம், நெஞ்சு, தென்றல் போன்றவற்றின் உதவியுடன் வெளிப்படுத்தி தூதனுப்பும் மரபினை பிரபந்தத் திரட்டு போன்றன சுட்டிநிற்கின்றன.

திருஞானசம்பந்தரும் பக்குவப்பட்ட ஆன்மாவான தன்னைத் தலைவியாக உருவகித்து தாம் நேசங்கொண்ட தலைவனாகத் தோணிபுரத்தீசனையும் கணபதீச்சரத்து ஈசனையும் திருத்தோணிபுரத்திருப்பதிகத்திலும், திருச்செங்காட்டங்குடித் திருப்பதிகத்திலும் முறையே கையாண்டிருப்பது நோக்கத்தக்கதாகும். திருஞானசம்பந்தர் அனுப்பும் தூதானது இலக்கிய நயமும் ஆன்மீக மணமும் இணைந்து விசுவதாகின்றது. ஆன்மீக விளிப்பிற்கு தலைவன் தலைவி பாவத்தைச் சம்பந்தரைப் போல சமய குரவரில் மணிவாசகப்பெருந்தகையாரும் பயன்படுத்தியுள்ளார். திருஞானசம்பந்தர் தம்மைத் தலைவியாகப் பாவனை செய்ய மணிவாசகப் பெருந்தகை தமது திருக்கோவையாரில் தம்மைத் தலைவனாகப் பாவனை செய்து இறைவனை நோக்குகின்ற தன்மை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்

பரம்பொருள் எனும் தலைவியின் பக்குவப்பட்ட தன்மையை உணர்ந்து கூப்பிட்ட குரலுக்கு இரங்கிப் பாலூட்டி ஆதரித்துக் காட்சிக்கெளியனாய்த் தோற்றமளித்த தன்மை ஏலவே காணுதற்கரிய தொன்றாகும். தன் நேசத்தைப் புரிந்த தலைவன் பின் ஏனோ தானோ வென்று ஒதுங்கியது போல நின்ற நிலையில் பிரிவுத்துயர் மாளாது தன் உள்ளங்கவர் கள்வனிடம் தனது உள்ளக்குமுறலை வெளிப்படுத்தத் தலைவி முனைவது இலக்கியத்திலும் சரி இலௌகீகத்திலும் சரி ஏற்புடைய தொன்றேயாகும் 'தன் எழில் கொண்டார்' என்றும் 'தன் நலங்கொண்டார்' என்றும் விளம்பும் தலைவி தலைவனுக்குத் தனது மனத்திடை எழும் செய்தியைத் தூதாக அனுப்புவதற்குரிய தகுதி கொண்டவற்றைத் தேடுகின்றாள். தோணிபுரமானது 'தொல்பறவை சுமந்து ஓங்கும் தோணிபுரமாகும். தமது இணையைப் பிரியாது ஒன்றி வாழும் வாழ்வினைப்பல பறவைகள் கொண்டு விளங்குகின்றன. சில பறவைகள் பிரிவுத்துயரைப் புரிந்துணர்ந்து வாழும் பாங்கின. இவ்வமையில் தன்மீது அன்பு மீதுரப் பெற்ற தலைவன, தன்னை முழுமையாகக்காட்சியளித்து ஆட்கொண்ட நாயகன் பாற் தன்னிலையை உணர்த்துவதற்குத் வண்டு, கொக்கு, கோழி, நாரை புறா, அன்னம், அன்றில், குயில், பூவை, கிளி, எனும் பறவைகளை நாடுகின்ற தன்மையைக் காண்கிறோம்.

கரிக்குருவிக்கும், நாரைக்கும், பன்றிக்கும், இன்னருள் புரிந்த தலைவன் மாட்டு பறவையினங்களின் வழி அனுப்பும் தூது பயனுடையது எனும் கருத்து தலைவியிடத்து ஏற்பட்டுள்ளது போலும்.

'வண்டரங்கப் புனற்கமலம் மதுமாந்திப்பெடையினொடும்
ஒண்டரங்க இசைபாடும் அளியரசே'

என அரசவண்டைத் தலைவியார் அழைக்கின்றார். சுரும்புகள் பெடை சகிதம் மது உண்டு மகிழ்ச்சியோடு திரிகின்றன. இவ்வாறு திரியும் வண்டினிற்குப் பெண்ணின் பிரிவுத்துயர் தெரிந்திருக்கு மென்பது வெளிப்படை. அவ்வண்டிற்கு தனது தலைவனைப் பற்றிச் சுட்டும்போது கலங்கரை விளக்கம் போலச் சடைமுடியில் ஒளியைப் பிரகாசிக்கும் பிறையை அணிந்துள்ளான் என்றும் எலும்பு மாலைகளை மார்பில் ஏந்தியுள்ளான் என்றும் சுட்டுகின்றார். இவையிரண்டும் தலைவனை மற்றோரிடமிருந்து பிரித்து வெளிப்படையாக இனங்காட்டும் இரண்டமிசங்களாகும். இலகுவில் என்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவனை இனங்கண்டு தான் படும் துயரத்தை எடுத்துக் கூறமாட்டாயோ எனத் தூதுரைக்கின்றாள்.

இறைவன் இசையில் இலயித்து இன்புறுபவன். இதனை நன்குணர்ந்தவர் ஞானசம்பந்தர். அவரது பாடல்களில் வண்டின் இசை நயம் அதிகம் எடுத்தாளப்பட்டிருப்பது நோக்குதற்குரியது. 'குழலின்னிசை வண்டின்னிசை' என்றும் 'மண்ணார் சோலைக் கோலவண்டு வைகலும் தேனருந்திப் பண்ணார் செய்யும்' என்றும் 'பண்தான் கெழும் வண்டு யாழ் செய்' என்றும் 'வண்டெல்லாம் நசையால் இசை பாடும்' என்றும் 'நுண்சிறை வண்டினம் காவிவாய்ப் பண்செய்யும்' என்றும் வண்டின் இசைக் கோலம் இலக்கிய நயத்தோடு பிறிதிடங்களில் உரைக்கப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது. இங்கும் இசைவேந்தனின் மனதை யீர்ப்பதற்கு உரிய தகுதியை வண்டினமே பெரிதும் பெற்றிருக்கிறதோ எனும் எண்ணம் தலைவியைச் சூழ்ந்திருப்பதால்தான் போலும் இசைபாடும் அளி அரசைத் தூதுக்குரிய தகுதிப்பொருளாகக் கொண்டதென எண்ணத்தூண்டுகின்றது.

நெய்தல் நிலப்பண்பில் இரங்கற் பொருள் முதன்மைக்குரியதாகும். நாயகனைப் பிரிந்து தினமும் நாயகன் வரவை வழிமேல் விழிவைத்து நோக்கி ஏங்கிவாழும் நாயகிகள் வாழ்வியற்கோலம் அங்கு பொதுமைக்குரியதாகும். இந்நிலப்பரப்பில் வாழும் குருகு (கொக்கு), நாரை போன்றன பிரிவின் துயரை உணர்ந்திருக்கும் பறவைகளென எண்ணத்தக்கவைகளாகும். இப்பறவைகள் தமது நிலையை தலைவனுக்கு எடுத்துரைக்கச் சிறந்ததெனத் தலைவியை எண்ண வைக்கின்றன. இதன் அழுத்தம் காரணமாகவே திருச்செங்காட்டங்குடித்திருப்பதிகத்தில் இத்தூதுச் செய்தியே பெரிதும் பரவி வருவது காணலாம். இணைபிரியாத நாரையே, வெண்குருகே, தாராவே என விளித்து உதவி கேட்கின்ற தலைவியின் நிலையே அப்பறவைகளுக்குத் தலைவியின் பிரிவாற்றாமையை உணர்த்த போதியதாகின்றது. அதனைவிட 'ஒரு அடியாள் இரந்தாள் என்று ஒரு நாளேனும் சென்று சொல்வீர்களா' என வேண்டுவது தலைவியின் பணிவையும் புலப்படுத்தப் போதியதாகின்றது. இதற்கும் மேலாக உலகத்து அறப்பலி கொள்வானுக்கு என்னவர் கோடல் அழகியதோ எனும் கேள்வி தலைவனுக்குப் பழியேற்படா வண்ணம் தன் உள்ள விருப்பையும் உணர்த்தும் பாங்கில் அமைவது காணலாம். தலைவனைக் காணாது தான் கொண்ட பசலை நோயை மலர்மாலை அணிந்து விளங்கும் தலைவனுக்கு உரைக்கவேண்டியதலைவி பசலையை ஒரு நோயாகவே இனங்கண்டுள்ளமை இங்கு உவக்கத்தக்கதாகும். நோயை தீர்க்க பிணி தீர்க்கும் வைத்தியநாதனான இறைவனே வரவேண்டுமென்பது வெள்ளிடைமலையாகின்றது. இவ்வாறெல்லாம் உரைத்தும் திருப்தி அடையாத தலைவி பசலை எனும் பச்சிளம் குழந்தையைப் பெற்றெடுத்துள்ளாள் எனத்தலைவனுக்கு உணர்த்துமாறு கேட்பது சிகரம் வைத்தாற்போல் அமைகின்றது. இங்கு நோயாக முன்கண்ட பசலை குழந்தையாக உருவகிக்கப்படுவது தலைவி கொண்ட துயரை, துயரின் ாத்திரத்தன்மையைப் புலப்படுத்துவதாகின்றது. தலைவனுக்கும் தலைவிக்குமிடையில் எழுந்த உறவின் விளைவாகக் குழந்தை மலர்வதுபோல தலைவன் மேல் கொண்ட தீரா உறவு பசலை எனும் குழந்தைக்கு மூலமாயிற்றென்பது பக்குவப்பட்ட ஆன்மாவின் பிரேமையை வெளிப்படுத்தும் ஒரு நுட்பமாகின்றது.

அழகு மிகுந்த சோலைகளில் பறவைகளைக் காணுகையில் தனது நிலைமையை கங்கையை முடியில் கொண்ட தன் பண்பாளனான தலைவனுக்குத்தூதுவிடத் தலைவி முனைகின்றாள் உள்ளத்தில் பொங்குகின்ற வேட்கை, கோழி, புறா, அன்னங்கள் ஆகியவற்றினையும் தூதுக்கனுப்பத் தூண்டுகின்றன. குறிப்பாக அன்னத்தைத் தூதுக்கனுப்புகையில் 'திருவடியே கூடுமாறு கூறிரே' எனும் சொல்லாட்சிகள் தலைவனோடு இணைவதற்கான இலௌகீக நிலையைக் காட்டுவதற்கும் மேலாக இறைவனது திருவடிகளை நாடி விடுதலைப்பேறாம் உயர் நிலையை நாடும் ஆன்மாக்களின் தாடலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
249690

யனுவத்தையே சுட்டுவதாக அமைவது குறிப்பாக நோக்கற்பாலதாகும்.

இணைபிரியாத ஜோடிப் பறவையாக அன்றிலைப் பெரும்பாலான இலக்கியவாசிரியர்கள் கையாண்டிருப்பது காணுதற்குரியது. இங்கும் தலைவி தன்னைப் பீடித்திருக்கின்ற கூர்மையதான பசலை நோயைத் தலைவனுக்குணர்த்த அழைப்பதனைக் காணுகின்றோம். தலைவன் தலைவியர்க்கிடையில் தூது செல்லவல்ல ஒரு பொருளாய் தென்றல் விளங்கவல்லது. அதே வேளை பசலை நோயை மிகுதிப்படுத்தும் தரத்தையும் தென்றல் ஆற்றவல்லதாக இலக்கியங்கள் எடுத்தாண்டுள்ளன. இங்கு தலைவி ''தென்றலார் புகுந்துலவுந் திருத்தோணிபுரத்துறையுங் கொன்றைவார் சடையார்க்குத்'' தனது தூதை அனுப்புகின்ற பாங்கு தன்னுளம் புரிந்த தென்றலின் நிலையை குறிப்பால் அன்றிலுக்குணர்த்தித் தனது வேண்டுதலை அழுத்தமாக்கும் அடிப்படைக்குரியதாகின்றது.

அழகிய தோற்றமும் குரலும் கொண்டநாகணவாய் பறவையைப் போற்றும் தலைவி தலைவனிடம் தூதுக்கழைக்கும் வகையில் அழைக்கின்றாள். தனது பசலையானது மெய்யானதென்பதனை வலியுறுத்தும் வகையில் எடுத்துரைக்க வேண்டுகின்றாள் இனிய மொழியால் கூவியழைக்க வல்ல குயிலைத் தனது தலைவனைத் தன்னிடத்தே வரவழைக்கும் பொருட்டு கூவியழைக்க வேண்டுவதும் காண்கின்றோம். இறைவனை தன்னிடத்தே வரவழைப்பதற்கு வேண்டுகின்ற பாங்கு இதுவரை தலைவனிடத்தில் தன்னிலைமையைப் புலப்படுத்தச் சொன்ன தன்மையினின்று சிறிது வேறுபட்டதாய் தலைவனே தன்னிடம் வரவழைக்குமாறு நோக்குகின்ற நுட்பத்தைக் காண்கின்றோம் இவ்வகையில் திருத்தோணிபுரத்துத் திருப்பதிகத்தை நோககுகையில் இறுதியில் கிளியினைத் தலைவி அழைப்பது மேலும் பொருத்தமானது போல் அமைகின்றது. வண்டு, குருவி, கோழி, நாரை, புறா, அன்னம், குயில் போன்றவற்றைத் தூதுக்கழைத்த தலைவி பூவை நல்லாளை மாத்திரம் போற்றி வேண்டியமை நுட்பமாக நோக்கலாம். ஆனால் கிளியை அழைக்கும் போது 'தேனொடுபால்' வழங்க உள்ள நிலைக்குச் சென்று விடுகின்றாள். — குயிலைக் கொண்டு 'கோனாரை யென்னிடத்தே வரவொருகாற் கூவாயே' எனக் கேட்ட தலைவி கிள்ளைமொழி பேசவல்ல கிளியிடத்துத் தன்னிலமையை நேரடியாகக் கூறுமாறு கேட்காது 'பிறையாளன் திருநாமமெனக் கொருகாற் பேசாயே' எனக் கேட்பது ஆச்சரியந்தரக் கூடியதாகும். தன் தலைவனது நாமத்தைப் பிறர் சொல்லக் கேட்பதில் இருப்பதான இன்பங்கருதி நாயகி கேட்பதெனும் தன்மை அமைவது ஒருபுறம் உண்மையாகலாம். அதேவேளை குழந்தை நிலையில் அம்மை அப்பரை அழைத்த குரல் கேட்டுக் காட்சிக்கெளியனாய் தோற்றமளித்த தனது தலைவன் கிளியின் மழலைக் குரலொலி கேட்டுக் காட்சியளிக்க மாட்டானோ எனும் ஆதங்கமும் 'பிறையாளன் திருநாமமெனக்கொரு காற் பேசாயே' எனக் கேட்கத் தூண்டியிருக்கலாம். தலைவன் தன் திருநாமம் பேசாநாவும் ஒரு நாவோ எனும் உண்மைக்கு அடித்தளமாய் அமைவது மாத்திரமன்றி 'செவிகாள் கேண்மின்களோ' எனும் தன்மைக்குப் பாத்திரமான தலைவன் நாமத்தை உணர்த்தி நிற்பதாகின்றது.

இவ்வகையில் பறவைகளின் தன்மைக்கேற்ப நுட்பமான முறையில் தேர்ந்தெடுத்துத் தூதினைத் தலைவனுக்கு எடுத்துரைப்பது போலச் சக ஆன்மாக்களுக்கும் பக்குவிகளுக்கும் ஒருங்கே தூதனுப்புகின்ற சிறப்பில் தூதின் பிறிதொரு பரிணாமத்தை ஞானசம்பந்தப் பெருமான் திருத்தோணி புரத்துத் திருப்பதிகத்தினூடாகவும் திருச்செங்காட்டங்குடித் திருப்பதிகத்தினூடாகவும் உணர்த்தி நிற்கின்றாரென்றால் மிகையாகாது. தம்மைவிரும்புவோர் படுந்துயரம் பொறாது உடன் அருள் புரியும் ஈசனின் பெருமைக்கமைவாக அனைத்து ஆன்மாக்களும் இறைவன் பால் கொள்ளும் மாறா அன்பிற்கு வழிகாட்டல் தரத்தக்கதாக இத் தூதனுபவம் எடுத்தாளத்தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலசரக்குப் பொருட்களை
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள

# சிவா ரேடிங் கோ

டச்சு வீதி, சாவகச்சேரி.

---

சாவகச்சேரி நகரில்... .. ......

அழகு சாதனப் பொருட்கள்,
அன்பளிப்புப் பொருட்கள் பெற
"மங்களா அழகுச் சோலை"

பலசரக்குப் பொருட்களை மலிவாக வாங்கவும்
கேக் தயாரிப்பு பொருட்களை பெறவும்
"மங்களா விற்பனை நிலையம்"

றேடியோ, மணிக்கூடுகள், கசட்,
வர்ணப்படச்சுருள், விளையாட்டுப் பொருட்களை
மலிவாகப் பெற்றுக்கொள்ள

## மங்களா

பிரதான வீதி, சாவகச்சேரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீசாலை மாவடி விநாயகர்

**மகா கும்பாபிஷேக மலர்**

சிறப்புற வாழ்த்துகிறோம்

# சஹரன் டீ. பிரகாஸ்

**(தேவா)**

கண்டி வீதி,
சங்கத்தானை,

சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாவகச்சேரி நகரில்...

சிற்றுண்டிப் பொருட்கள்
குளிர்பான வகைகள்
தேநீர் அருந்த

சிறந்த இடம்

# கிருயோன் குளிரகம்

## KIRUYON Cool & Coffee Bar

2, நவீன சந்தை, கண்டி வீதி, சாவகச்சேரி.

---

மீசாலை மாவடிப் பிள்ளையார்
கும்பாபிஷேக மலர் சிறக்க எமது நல்வாழ்த்துக்கள்

V

# குறிஞ்சி ஜவுளி சமுத்திரம்

6, நவீன சந்தை, சாவகச்சேரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தால் வாங்குவீர்கள்!
வாங்கினால் திருப்தியடைவீர்கள்!!

இன்றைய தலைமுறையினருக்கேற்ற
திருமணப் பட்டுச்சேலைகள்
பட்டு வேட்டிகள், ரவிக்கைத் துண்டுகள்
சேட்டிங் சூட்டிங்

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்த
றெடிமேற் ஆடைகள்

அனைத்தையும் கொள்வனவு செய்ய
நாடவேண்டிய ஸ்தாபனம்

# வாணி ரெக்ஸ்

◆

# செல்வம் ஸ்ரோர்ஸ்

10—11 நவீன சந்தை உட்புறம், சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'விநாயக பரத்துவமும் வெள்ளை மாவடியானும்'

## ஒரு நோக்கு.....

சி. க. சிவசுப்பிரமணியம், B. A. அவர்கள்
( ஆசிரியர் )

**விநாயகரின் தோற்றம் :**

**''பிடியதனுருவுமை கொளமிகு கரியது''**

தேவர்கள் கஜமுகாசுரனின் கொடுமை யைத் தாங்கமாட்டாது பரம்பொருளான சிவபெருமானிடம் முறையிட்டனர். ''கஜ முகாசுரனை வெற்றி கொண்டு தேவர்கள் துயர் துடைக்கும் பொருட்டு நாம் ஒரு புத்திரனைத் தோற்றுவிப்போம்'' என சிவன் திருவாக்களித்தார். அவர் பார்வதி யுடன் திருக் கைலாயமலையிலுள்ள, மந்திர சித்திர மண்டபத்துக்கு எழுந்தருளினார். அங்கு காணப்பட்ட சமஷ்டிப் பிரணவத் திலும், வியஷ்டிப் பிரணவத்திலும் சிவனும் சக்தியும் திருக்கண் சாத்தினார்கள். அவை யிரண்டும் களிறும் பிடியுமாகிச் சேர்ந்தன. பின்னர் பிடியிலிருந்து, ஐந்து திருக்கரங்க ளையும், மூன்று திருக்கண்களையும் கொண்ட யானை முகத்துடனான பிரண வப் பொருளாம் விநாயகர் எனும் பாலகர் தோன்றினார். செம்மை நிறங் கொண் டிருந்த அப்பாலகன் அம்மையப்பரை வணங்கி நின்றபோது, அவர்கள் ''உன்னை உள்ளன்போடு வழிபடுபவர்களுக்கு வரும் இடையூறுகளைக் களைந்து இன்னருள் செய்க'' என ஆசி வழங்கினர். விநாயக ருக்கு ''பிள்ளையார்'' என்ற பெயருடன் விக்னேஸ்வரர், கணபதி வக்கிரதுண்டர் எனும் திருநாமங்களும் வழங்கி வருகின்றன. பிரணவப் பொருளாக விளங்கும் விநாயகப் பெருமானே, வெள்ளைமாவடியில் விரும்பி உறைந்துள்ளார். திருவருள் பாலிக்கும் பொருட்டு, திரு நீல கண்டமாய் காட்சி அளித்தமையால் திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் எனும் திருநாமம் கொண்டு விளங்குகின்றார்.

**திருவுருவத் தோற்றம் :**

**''பண்ணியமும் வெண்கோடும் பசாங்குசப்
படையும் நண்ணிய செய்கைத்தல நாதா''**

விநாயகர் ஒரு கொம்பு, இருசெவிகள், மூன்று திருக்கண்கள், நான்கு திருத்தோள் கள், ஐந்து திருக்கரங்கள், ஆறெழுத்து டையவராய், வழிபடுவோரின் பிறவித் துயர் துடைப்பவராக விளங்குகின்றார். பூதமாய், தேவராய், ஆணாய், பெண் ணாய், உயர்திணையாய், அஃறிணையாய் எல்லாமாய் நிற்கும் விநாயகருடைய திரு மேனி, இடையின் கீழ் பூத உடம்பாய், இடை முதல் கழுத்துவரை தேவஉடம்பாய் தலை மிருகத்தலையாய், கொம்பு உடைய பகுதி ஆணாய், கொம்பற்ற பகுதி பெண் ணாய், யானைத்தலை அஃறிணையாய், தேவ உடம்பு உயர்திணையாய் விளங்குவ தைக் காணலாம்.

விநாயகருடைய செவி தாழ்ந்து, முதம் போலக் காட்சியளிப்பதானது, இடர்படும் ஆன்மாக்கள் திருவடியை வழிபட்டு நின் றால். முக்தியை விரைந்தெய்திட, காதுகள் காற்றெறிந்து உதவுகின்றமையைக்காட்டும் அகில உலகங்களும் அவருடைய மணிவயிற் றில் அடங்கிக் கிடப்பன என்ற குறிப்பை அவருடைய மத்தள வயிறு புலப்படுத்து கின்றது. அவர் கையிலுள்ள மோதகம் இன்பத்தையும் அவரது ஊர்தியான பெருச் சாளி உலகப் பற்றையும் குறிக்கின்றன.

ஐந்து திருக்கரங்களையுடைய விநாய கர், ஐந்தொழில் புரியும் பரம்பொருளே யாம். அவருடைய கும்பம் ஏந்திய திருக் கரம் படைத்தலையும், மோதகம் ஏந்திய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கரம் காத்தலையும், அங்குசம் ஏந்திய திருக்கரம் அழித்தலையும், பாசம் ஏந்திய திருக்கரம் மறைத்தலையும், தந்தம் ஏந்திய திருக்கரம் அருளலையும் குறிக்கும். இவ்வாறாக, தத்துவார்த்தப் பொருளாக விளங்கும், மாவடியானது மகோற்சவம், ஆடிமாதபூர்வபக்க ஆறாம்நாள் தொடங்கி பூரணையன்று நடைபெறும் தீர்த்தோற்சவத்துடன் நிறைவுறும். இம் மகோற்சவம் பஞ்ச கிருத்திய தத்துவத்துடன் இணைந்த நைமித்த கிரியையாக விளங்குகின்றது. கொடியேற்றம் படைத்தலையும், இரண்டாம் நாள் தொடங்கி வேட்டைத் திருவிழா வரையிலான வாகனத் திருவிழாக்கள் காத்தலையும் குறிக்கின்றன. வேட்டைத் திருவிழாவன்று பஞ்ச கிருத்திய தத்துவப் பொருளாகிய விநாயகப்பெருமான் போர்க் கோலம் பூண்டு, அடியவர்கள் பல்வேறு விநோத வேடங்கள்தாங்க, ஆரோகணித்து கிராமப் பிகந்தம் செய்வது வழக்கம். இது பல்வேறு காரணங்களையொட்டி தற்போது வசதிப் பிரவேசத்துடன் மட்டும் நடாத்தப் படுகின்றது. வேட்டைத் திருவிழாவானது வாழை வெட்டி வேட்டைப் பொருளாக ஆன்ம நிவேதனம் செய்வதோடு நிறைவுறுகின்றது. இதனையடுத்து வரும் இரதோற்சவத்தன்று, மீசாலை மக்கள் மட்டுமன்றி அயலூர்களிலும் இருந்து மக்கள் திரண்டு வந்து நேர்கடன்களை நிறைவேற்றுவர். பால் செம்பு எடுத்தும், காவடி எடுத்தும் கற்பூரச்சட்டி ஏந்தியும், அங்கப் பிரதட்சணம்செய்தும், தமது பாவதோஷங்களை நிவிர்த்தி செய்துகொள்வர்.

**விநாயக வழிபாடு :**

**''விநாயகனே வெவ்வினையை**
**வேரறுக்க வல்லான்''**

நினைத்த மாத்திரத்தில், நினைத்த இடத்தில் ஆவாகணமாகும் மூர்த்தம், விநாயகரன்றி வேறொருதெய்வமுமில்லை. இவர் கோமயத்திலும், மஞ்சளிலும், அறுகம்புல்லிலும், வெல்லத்திலும், கல்லிலும் எழுந்தருளி அருள் பாலிக்கும் ஞானக்களஞ்சியமாக விளங்குகின்றார். அடியவர்களுக்கு எளியவராகி, அவர்கள் செய்யும் பிழைகள் பொறுத்து அனுக்கிரகிக்கும் கருணை வடிவினராக விளங்குகின்றார். இந்த வகையில் வெள்ளைமாவடியில் வீற்றிருக்கும் மூலமூர்த்தம், பிள்ளை வடிவத்துக்குரியதாக, அளவில் சிறியதாக, கருங்கல்லில் வடித்தெடுத்த திருமூர்த்தமாய் எழுந்தருளி உள்ளது. ஆனைமுகத்தோனுக்கு ஆற்றும் சிறப்பு வழிபாடாக தோப்புக்கரணமிட்டு தலையில் குட்டிடுதல் விளங்குகின்றது. இவ்வழிபாட்டு மூலம் அடியவர் பிழை பொறுத்து அருள் பாலித்த வரலாறு புராணங்களிலே கூறப்பட்டுள்ளது.

**தேவர்கள் குட்டிக் குட்டிட்டமை :**

முன்னொரு காலத்தில் இந்திரன் அசுரேந்திரனைப் போரில் வென்றான். அவன் கவலை மிகக்கொண்டு, சுக்கிராச்சாரியரிடம் முறையிட்டான். அவர் ஆலோசனைப்படி விபுதை எனும் அசுரப் பெண்ணுக்கும், வசிட்ட முனிவர் பரம்பரையில் வந்த, மகாத முனிவருக்கும் கயாமுகாசுரன் அவதரித்தான். அவனுடன் அவுணச் சேனையும் தோன்றியது. கயாமுகாசுரனும் அவுணர்களுமாக தேவர்களைத் தேடித் தேடிச் சென்று வருத்தினர். தேவர்கள் திருக்கயிலை மலைக்குச் சென்று சிவபெருமானிடம் அபயம் கேட்டு நின்றனர். சிவசக்தியின் அருட்பிரசாதமாக ஆனைமுகன் உருவெடுத்தான். விநாயகக்கடவுள், கயாமுகாசுரசனைச் சங்காரம் செய்யத் திருவுளங்கொண்டு அசலன் மீதேறிப் பூதப்படைகள் சூழ போருக்குச் சென்றார். கயாமுகாசுரனுடன் போரிட்டபோது, அவன் சிவனிடம் பெற்ற வரவலிமையறிந்து தனது திருக்கோட்டில் ஒன்றினைத் திருக்கரத்தால் முறித்தெடுத்து எறியஅவன் மயக்குற்றான். மயக்கொழிந்த கயாமுகாசுரன் பெருச்சாளியாக உருவெடுத்து, விநாயகர் முன்னேவர அவனை வாகனமாக ஏற்றுக்கொண்டார். இவற்றையெல்லாம் கண்டு மகிழ்வுற்ற தேவர்கள், தாமும் உலகத்தோர் வழிபடும் முறையில், முட்டியாகப் பிடித்த இரு கரங்களினாலும் தலையில் குட்டித் தோப்புக் கரணம் இட்டு வழிபாடாற்றினார். கயாமுகாசுரன் புராண வரலாற்றினை அடியொற்றி, வெள்ளைமாவடிப் பிள்ளையார் ஆலயத்தில் விநாயக விரதத்தின் இருபதாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாள் கயமுகாசுரன் சங்காரம் நடைபெற்று வருகின்றது. அடியார்கள் விநாயகர்படை யாக வேடம் தாங்கிவர, வேழமுகத்தோன் கயாமுகசுரனைச் சங்கரிக்கும்நிகழ்வு பக்திப் பரவசமாகக் கொண்டாடப்படுகின்றது.

**அகத்தியர் பிள்ளையாரைக் குட்டி வழிபட்டமை :**

அகத்தியர் வடதிசையிலிருந்து தென் பொதிகை நோக்கி வந்து குடக மலையில் சிவபூசை செய்து தியானத்திலிருந்தார். இந்திரனின் வேண்டுகோளுக்கு இணங்க, பிள்ளையார் காகமாக வந்து அகத்தியரின் கமண்டத்தைக் கவிழ்த்து, நீரை நதியாகப் பெருக்கெடுக்க வைத்தார். அகத்தியர் சினங்கொண்டு, காகத்தைக் கலைக்க, அது சிறுவனாக மாறியது. அகத்தியர் சிறுவ னைக் குட்டி நிற்க, பிள்ளையார் அகத்தி யருக்கு சுயரூப தரிசனமளித்தார். அகத்தி யர் தம்மைப் பொறுத்தருள வேண்டி தன் சிரசில் கரத்தால் குட்டி வழிபட்டு, விநாய கர் அருள் வேண்டினார்.

**இராவணன் குட்டி வழிபட்டமை :**

இராவணன் சிவபெருமானை வழிபட்டு ஆண்டாண்டு காலம் இலங்காபுரி அழியா திருக்க வேண்டி, ஒரு சிவலிங்கத்தைப் பெற்றான். அந்த ஆத்மலிங்கத்தை இடை யில் எங்கும் வைத்துவிடாது இலங்கைக்குக் கொண்டு செல்லுதல் வேண்டும். வழியில் வைத்தால் அதனை நிலத்திலிருந்துபெயர்த் தெடுக்க முடியாது. எனவே பயபக்தியுடன் இராவணன் அதனை எடுத்துக் கொண்டு இலங்கைக்குச் சென்ற போது பிள்ளையா ரின் திருவிளையாட்டினால் அவனுக்கு இயற்கை உபாதை உண்டாகியது. அவன் இலிங்கத்தைக் கீழே வைக்க முடியாது தவித்துக் கொண்டிருக்கையில், விநாயகர் வேதியச் சிறுவனாக அவன்முன் தோன்றி னார். இராவணன் சிவலிங்கத்தை அச்சிறு வனிடம் கொடுத்து விட்டு இயற்கைக்கடன் கழிக்க அப்பால் சென்றான். அவன் திரும்பி வந்த போது வேதியச் சிறுவன் சிவலிங் கத்தைக் கீழே வைத்திருப்பதைக் கண் டான். அதனைப் பெயர்த்து எடுக்க முடி யவில்லை. கோபமடைந்த இராவணன் சிறுவனின் தலையில் ஓங்கிக் குட்டினான். அப்போது ஓங்கி வளர்ந்த விநாயகர் அவ னைத்தூக்கி எறிய, அவன் தன் பிழை உணர்ந்து தன் இருபது கரங்களினாலும் பத்துத் தலைகளிலும் குட்டிவணங்கினான்.

**அறுகம்புல் அர்ச்சனை வழிபாடு :**

ஒரு முறை விரகதாபமுற்ற இயமனின் தேஜஸிலிருந்து அனலாசுரன் தோற்றி னான். அவன் அண்ட சராசரங்களையெல் லாம் சாம்பலாக்கிக் கொண்டிருந்தான். இதனைக் கண்ட இந்திரனாகிய தேவர்கள் விநாயகரைத் துதித்து வேண்ட, அவர் அனலாசுரனைத் துதிக்கையால் எடுத்து விழுங்கினார். அப்போது அவர் வயிற்றி லிருந்து தோன்றிய வெப்பம் அண்டசரா சரங்களையும் தாக்கியது. அப்பொழுது எல்லோரும் கூடிச்சென்று விநாயகப் பெரு மானை அறுகம்புல்லினால் அர்ச்சனை செய்ய அவர் வெப்பம் தணிந்தது. இத னால் மகிழ்ந்த விநாயகர் "அறுகம் புல்" இல்லாத பூசை அதற்குரிய முழுமையான பலனைத் தராது என்று அருளினார் அறு கம்புல் இல்லாதவிடத்து வன்னிப்பத்திரம் சாத்தி வழிபடலாமென விநாயக புராணம் கூறுகின்றது.

**விநாயக சதுர்த்தி விரத மகிமை :**

எல்லா மாதங்களிலும் வரும் பூர்வ பக்க சதுர்த்தியில் இவ்விரதம் அனுட்டிக் கப்படுகின்றது. பர்வதபத அரசனுடைய மகளாகப் பிறந்த உமை, சிவனை அடைய அனுஷ்டித்த விரதம் விநாயக சதுர்த்தி விரதமாகும். நளன், கர்த்தமன் போன்ற

UNIVE… LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னர்கள் விநாயக சதுர்த்தியை அனுஷ்டித்து உயர்நிலை எய்தினர். இந்திரன் திருவழுஞ்சுழியில் மணலினால் விநாயகர் திருஉருவம் அமைத்து வழிபட்டான், அந்த இலிங்கத்தைத் தேவலோகம் எடுத்துச் செல்ல விரும்பிய போது அதனைப் பெயர்த்து எடுக்க முடியாது போயிற்று. எனவே தேவேந்திரன் ஆவணித் திங்கள் சதுர்த்தி திதியில் இத்தலத்துக்கு வந்து வழிபட்டுச் செல்வவதாகக் கருதப்படுகின்றது. சதுர்த்தியில், சங்கட சதுர்த்தியும் செவ்வாய்க்கிழமைகளில் வரும் சதுர்த்தியும் சிறப்பானவை என விநாயக புராணம் கூறுகின்றது.

வெள்ளைமாவடி ஆலயத்தில் மாதாந்த சதுர்த்தி உற்சவ திருநாளாகக் கொண்டு பிள்ளையாருக்கு உகந்த நிவேதனமான மோதகத்தை தலை மோதகமாகவும் சொரி மோதகமாகவும் படைத்து வழிபாடாற்றப் படுகின்றது. இங்கு ஆவணிச் சதுர்த்தி விஷேட அபிஷேக அர்ச்சனையுடன் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

தத்துவப் பொருளாகிய விநாயகப் பெருமான் வழிபடுபவர்களுக்கு எளியாராகி, அடியார் குறை தீர்த்தருளும் வண்ணம் வெள்ளை மாவடித் தலத்தில் திருநீலகண்டப் பிள்ளையாராக வீற்றிருந்து அருள் பாலித்து வருகின்றார். அவர் திருவடி போற்றி உய்வு பெறுவோமாக.

''எப்போதகத்தும் நினைவார்க்கிடரில்லை
கைப் போதகத்தின் கழல்''

---

இந்த மனிதப் பிறவி பெற்றதால் நீ பாக்கியவான் உன்னால் முடியுமளவுக்கு ஆண்டவனைத் துதி செய் நீ கஷ்டப் பட்டு உழைக்க வேண்டும். உழைக்காமல் எதையும் அடைவது முடியாது உலகச்செயல்களில் ஈடுபட்டு இருந்தாலும் தினந்தோறும் பிரார்தனைக்கும் ஞான சாதனைக்கும் ஒரு சிறிது நேரத்தையவது ஒதுக்க வேண்டும்

— ஸ்ரீ சாரதாதேவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ விவசாய இரசாயனப் பொருட்கள்

★ உரவகைகள்

★ தெளி கருவிகள்

★ கால்நடை உணவு வகைகள்

ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ள நம்பிக்கையுடன்
நாடவேண்டிய ஸ்தாபனம்

V

# பிள்ளையார் ஸ்டோர்ஸ்

கண்டி வீதி,

சாவகச்சேரி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகலவிதமான

★ பட்டுப் புடைவைகளும்

மற்றும்

★ றெடிமேற் ஆடைகளும்

பெற்றிட நாடவேண்டிய
ஓரே ஸ்தாபனம்

V

# நியூ செலெக்சன்

13, நவீனசந்தை உட்புறம் சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்குத் தேவையான
மளிகைப் பொருட்களை மலிவான
விலையில் பெற்றுக்கொள்ள

# முருகன் களஞ்சியம்

(பலசரக்கு வியாபாரம்)

கண்டி வீதி, மீசாலை.

பலசரக்குப் பொருட்கள்
அழகுசாதனப் பொருட்கள்
பாதணிகள்
ஆகியவற்றை மலிவான விலையில்பெற
நாடவேண்டிய நிறுவனம்

# கருணா பல்பொருள் வாணிபம்

கண்டி வீதி, மீசாலை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தால் வாங்குவீர்கள்
வாங்கினால் திருப்தியடைவீர்கள்

ஜவுளி உலகின் இன்றைய முன்னோடிகள்

திருமணப்பட்டுச் சேலைகள்
வேட்டி சால்வைகள்
ரவிக்கைத் துணிகள்
சேட்டிங் சூட்டிங்

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட
றெடிமேற் ஆடைகள்

நாடவேண்டிய இடம்

V

மகாநதி புடைவையகம்

4, புதிய சந்தை, சாவகச்சேரி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோயில்களின் தல இலக்கிய மரபில் திருவூஞ்சல்கள்

திரு. ப. கணேசலிங்கம் அவர்கள்
( விரிவுரையாளர் - இந்துநாகரிகத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் )

இந்தியாவிலும் ஈழத்திலும் தோற்றுவிக்கப் பெற்ற திருத்தலங்கள் மீது நாயன்மார்கள், ஆழ்வார்கள் மற்றும் பிற்பட்ட காலத்துப் புலவர்கள், அறிஞர்கள், சித்தர்கள், பக்தர்கள் ஆகியோர்கள் பல்வேறு வகையான அருட்பாடல்களைப் பாடிப் போற்றித் துதித்திருக்கின்றார்கள். இத்தலங்களை மையப்படுத்தி ஓர் இலக்கிய மரபு அல்லது தோத்திர மரபு அல்லது பிரபந்த இலக்கிய மரபு அல்லது தல இலக்கிய மரபு தோன்றி வளர்ந்து வருகின்றதை நாம் அவதானிக்கலாம். இந்துத் திருத்தலங்கள் மீது தலபுராணங்கள் இயற்றுகின்ற மரபு இந்நாடுகளில் மட்டுமல்லாது தென்கிழக்காசிய நாடுகளிலும் மற்றும் இந்துக்கள் பரந்து வாழ்ந்து திருக்கோயில்கள் அமைத்து வழிபாடு இயற்றுகின்ற நாடுகளிலும் காணப்படுகின்றன. சிறப்பாக கோயில்கள் நிறைந்த பகுதிகளாக விளங்குகின்ற இந்தியாவிலும், ஈழத்திலும் ஏராளமான தல இலக்கியங்கள் அவ்வப்போது வாழ்ந்த நாயன்மார்களாலும் ஆழ்வார்களாலும் பக்தர்களாலும் சித்தர்களாலும் புலவர்களாலும் இயற்றப்பட்டு வந்தன.

தல இலக்கியங்கள் பொதுவாக கோயில் கொண்டெழுந்தருளியுள்ள இறைவனின் பெருமைகள், மூர்த்தி, தல தீர்த்த விசேடங்கள், வழிபட்டு முத்தியடைந்தோர் வரலாறுகள், அற்புதங்கள், நாட்டுச் சிறப்பு, நகரச் சிறப்பு போன்ற இன்னோரன்ன விபரங்களைப் பாடு பொருளாகக் கொண்டவை. அதாவது இறைவனின் புகழை ஒரு தலத்துடன் இணைத்து, அத்தலத்தின் பெருமையினையும், அங்குள்ள தீர்த்தத்தின் பெருமையினையும் அவ்விறைவனின் பெருமையினையும் இத்தல இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன.

ஈழத்திலுள்ள திருக்கோயில்கள் மீது தோத்திரங்கள் பாடுகின்ற மரபானது நாயன்மார்கள் காலத்திலும் காணப்பட்டன. ஈழத்திலே உள்ள திருத்தலங்களை முதன்மைப்படுத்திப் பாடுகின்ற தல இலக்கியங்களில் முதன் முதலில் தோன்றியது பதவியாவிற் கிடைத்த செய்யுளேயமைகின்றது. இக் கருத்தினைப் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை "சைவக் கோயிலைப் பாடும் ஈழத்து இலக்கியங்களுள் இன்று கிடைக்கும் ஈழத்தவராற் பாடப்பட்ட மிகத் தொன்மையான செய்யுளாகப் பதவியாச் செய்யுள் காணப்படுகின்றது" எனக் கூறியுள்ளமை இங்கு கவனிக்கத்தக்கது. ஈழத்திலுள்ள பாடல்பெற்ற சிவத்தலங்களாக விளங்குகின்ற திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் ஆகிய தலங்கள் மீது திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளும், சுந்தரமூர்த்தி நாயனாரும் திருப்பதிகங்களைப் பாடியருளியுள்ளார்கள். நாயக்கர் காலப் பகுதியில் வாழ்ந்த அருணகிரிநாத சுவாமிகளும் ஈழத்திருநாட்டிலுள்ள முருகத்தலங்கள் மீது திருப்புகழ் பாக்களைப் பாடியுள்ளார்கள். நாயன்மார்களது திருப்பதிகங்கள் பாடுகின்ற மரபினைத் தொடர்ந்து ஈழத்துத் திருக்கோயில்கள் மீது பிரபந்த வகைகளைப் பயன்படுத்தி அவ்வப்பொழுது வாழந்த அருளாளர்கள், புலவர்கள், கவிஞர்கள் பல்வேறு தோத்திரங்களையும் புகழ் பாக்களையும் தல புராணங்களையும் திருவூஞ்சல்பாக்களையும் பாடியருளியுள்ளார்கள்.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சிக் காலங்களிலே, சைவக் கோயில்களுக்கு ஏற்பட்ட அழிவையும் சைவ சமயத்திற்கு ஏற்பட்ட தீங்கையும் கண்ட ஒல்லாந்தர் ஆட்சிக் காலப் புலவர்கள் தலங்களைப் போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களிடையே சமயப்பற்றை ஏற்படுத்தவே இத்தல இலக்கியங்களைப் பாடியிருக்க வேண்டும். தமிழ் நாட்டில் விஜய நகர நாயக்க மன்னர் ஆட்சிக் காலத்தில் இஸ்லாமியப் படையெடுப்பினால் கோயில்கள் அழியும் நிலையேற்பட்ட பொழுது தலங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துத் தல புராணங்கள் தோற்றும் பெற்றமையை காண முடிகின்றது. ஈழத்திலும் அப்படியான ஒரு சூழ்நிலையிலே, அதாவது போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சிக் காலங்களில் இந்துக்கோயில்களுக்கு அழிவு ஏற்பட்ட நிலையிலே இத்தகைய தல சம்பந்தமான பிரபந்தங்கள் தோற்றம் பெற்றுள்ளன.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சியினை அடுத்து ஈழத்தில் ஆங்கிலேயர் ஆட்சி நிலவிய பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்து இலக்கியங்கள் பரவலாகவும், பலவகையினவாகவும் தோற்றப் பெற்றன. வழிபடு தலங்களையும், தலமுறை தெய்வங்களையும் போற்றும் செய்யுளிலக்கியங்களுடன் சைவ சமயத்தின் உண்மைப் பொருளை, சைவக் கிரியைகளை எல்லாம் வசன நடையில் விளக்கும் இலக்கியங்களும் பத்தொன்பதாம் நூற்றாண்டில் எழுந்துள்ளன. இந்து இலக்கியங்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டில் இவ்விதம் வளர்ச்சியடைய அந்தக் காலப் பின்னணியும் அப்பின்னணியிற் செயற்பட்ட நாவலரது இயக்கமுமே காரணமாக அமைந்தன.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோற்றம் பெற்ற இந்து இலக்கியங்களைச் செய்யுளிலக்கியங்கள், வசன இலக்கியங்கள் என வகைப்படுத்தலாம். செய்யுளிலக்கியங்கள் முன்னைய காலப் பகுதியிலேயே தோன்றிய இந்து இலக்கியங்களைப் போன்று இந்துத் தலங்களையும், தலை முறை தெய்வங்களையும் போற்றுவனவாகவே காணப்படுகின்றன. பொதுவாகக் கூறின் ஈழத்தில் நல்லூர், திருக்கோணேஸ்வரம், நகுலேஸ்வரம், மாவிட்டபுரம் முதலான தலங்களின் பேரிலே அதிக இலக்கியங்கள் எழுந்துள்ளன எனலாம்.

இந்து மக்கள் இந்து சமயக் கடவுளர்களான விநாயகர், முருகன், சிவன், சக்தி, விஷ்ணு, வைரவர் ஆகிய தெய்வங்களுக்கு சிறிய அளவிலும் பெரியளவிலும் திருக்கோயில்கள் அமைத்து வழிபாடியற்றி வருகின்றார்கள். இத்திருத்தலங்களை மையப்படுத்தி தல இலக்கியங்கள் பாடுகின்ற மரபு இந்தியாவிலுள்ள திருக்கோயில்களிலும் ஈழத்திலுள்ள கோயில்களிலும் தோன்றி வளர்ந்ததைக்காணமுடிகின்றன. இத்தகைய தல இலக்கியங்களை ஆக்கிப் பேணுகின்ற பணியிலே ஈழத்திலும், இந்தியாவிலும் ஒவ்வொரு காலகட்டப் பகுதியிலும் தோன்றி வாழ்ந்த இந்துசமயப் பெரியார்கள் (அறிஞர்கள்) சான்றோர்கள் ஈடுபட்டுழைத்து வந்துள்ளார்கள். ஈழத்திலே யாழ்ப்பாணத் தமிழ் அரசர் காலந் தொடக்கம் அண்மைக் காலம் வரை வாழ்ந்த இந்து சமய அறிஞர்கள், இந்து சமயத்திற்கு ஆற்றிய பங்களிப்புக்களில் திருத்தலங்களை முதன்மைப்படுத்தி பல பிரபந்தங்களை இயற்றுகின்ற பணிகளில் ஈடுபட்டமை இங்கு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

பிரபந்தம் என்பது பிர — மிகுந்த பந்தம் — கட்டு என்னும் இரு சொற்களாலாய தொடர் ஒவ்வொரு பிரபந்தமும் யாதாயினும் ஒரு கட்டினால் கட்டப்படுவது என்பது பொருள். தமிழிலுள்ள பிரபந்தங்கள் தொண்ணூற்றாறு வகையின எனக் கூறப்படுகின்றது. ஈழநாட்டுப் புலவர்களாலும் இந்திய நாட்டுப் புலவர்களாலும் பாடப்பட்ட பிரபந்தங்கள் முப்பதுக்கு மேற்பட்ட வகையினவாகும். அவையாவன: அகவல், அந்தாதி, அம்மானை, இரட்டை மணிமாலை, இருபாவிருபஃது, உலா, ஊஞ்சல், ஒருபாவொருபஃது. கலம் பகம், கலித்துறை, கலிப்பா. கலிவெண்பா, காதல், காவியம், கீர்த்தனை, கும்மி, குறவஞ்சி, கோவை, சதகம், சிந்து. தூது, நான்மணி மாலை, பள்ளு, பிள்ளைத் தமிழ், புராணம், மடல், மான்மியம், மும்மணிமாலை, மும்மணிக் கோவை, விருத்தம், வெண்பா முதலியன. ஊஞ்சல் (ஊசல்) ஈழத்து, இந்தியப் புலவர்களால் பெரிதுஞ் சிறப்பாகக் கையாளப்பெற்ற பிரபந்தங்களுள் இதுவுமொன்றாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊஞ்சல் என்ற சொல்லுக்கு இணையாக அதைக் குறிக்க ''ஊசல்'' என்னும் சொல்லும் இலக்கியங்களில் கையாளப்படுகின்றது. மலையாள மொழியில் ஊஞ்சல் என்பது ஊஞ்ஞான், ஊஞ்ஞல் என்றும் வழங்கப்படுகின்றது. குஞ்ஞால் என்றும் ஊஞ்சலை அழைப்பதாகத் தெரிகின்றது. இதைக் குஞ்சலம் என்று வழங்குவதையும் காணலாம். ''தாப்பு'' என்றபெயரும் ஊஞ்சலைக் குறிக்க இலக்கியங்களில் வழங்கப்படுவதைக் காணலாம். ''தான் நிற்கும் நிலையினின்று முன்னும் பின்னும் அசைதல்'' என்னும் பொருள் கொண்ட ஊஞ்சலை நாம் நன்னூல் போன்ற இலக்கண நூல்களில் குறிப்பிடப்படும் தாப்பிசைப் பொருள் கோளுடன் ஒப்புநோக்கிச் சிந்திக்கலாம்.

''இடை நிலை மொழியே யேனைய் ரிடத்தும்
நடந்து பொருளை நன்னுதல் தாப்பிசை''

என்பது நன்னூல் நூற்பா. அபிநயம், நேமிநாதர், இலக்கண விளக்கம், இலக்கணக் கொத்து, தொன்னூல் விளக்கம், சுவாமிநாதம், முத்துவீரியம், தமிழ்நூல் போன்ற பல இலக்கண நூல்கள் தாப்பிசைப் பொருள்கோளை இதே பொருள்பட விளக்குகின்றன இங்குச் சுட்டப்படும் ''தாப்பு'' என்பது தாப்பு என்பதின் திரிந்த வடிவமாக கருதப்படுகின்றது எனவே ஊஞ்சல், தாப்பு, தாப்பு இடைநிலை விலக்கு என்பன தம்முள் தொடர்புடையனவாகக் கருதத்தக்கன ஊஞ்சலைக் குறிக்க ஊசல், துருவை, துடுப்பு, தூரி, விண்டாட்டு என்ற சொற்கள் நிகண்டுகளில் வழங்கப்படுகின்றன.

ஊஞ்சல், ஊசல் என்ற இரண்டு சொற்களும் இலக்கியங்களில் பயின்று வருகின்றன சங்க இலக்கியங்களில் ''ஊசல்'' என்ற சொல் மட்டுமே பயின்று வருகின்றது. ஊஞ்சல் என்னும் சொல் முதன் முதலில் வில்லிபாரதத்தில் தான் இடம்பெறுவதாகத் தெரிகின்றது. இலக்கிய ஆட்சிகள் அனைத்தையும் வைத்து நோக்குப்போது, ஊசல் என்பதே மிகுதியாக ஆளப்பெற்றிருக்கின்றது. அதன் வினைவடிவங்களாக ஊக்க, ஊங்க என்பன சங்க இலக்கியங்களில் பயின்று வந்துள்ளன. மொழியியல் ஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்கள் 'ஊஞ்சல்'' என்பதினின்று ஊசலைத் தோற்றுவிக்கின்றார். உந்து—உஞ்சு, உஞ்சு—உஞ்சல், உஞ்சல்—ஊஞ்சல் என்று ஊஞ்சலுக்கு விளக்கம் தந்து, பின்னர் அந்த ஊஞ்சலினின்றும், ஊசலை வருவித்துக் காட்டுகின்றார்.

தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு. துளு, கொலாமி, நாய்க்கி, பர்ஜி கதபா போன்ற பல மொழிகளில் ஊஞ்சல் சொல் பல்வேறு இடங்களில் இடம்பெறுகின்றது. எனவே ஊஞ்சல் என்ற சொல்லை முந்தைய வடிவமாகவும் அதனின்று தோன்றிய வடிவமாக ஊசல் என்ற சொல்லையும் கொள்ள முடிகின்றது. இயல்பாகத் தோற்றம் பெற்ற ஊஞ்சலாட்டம் பொழுது போக்கு ஊஞ்சலாக உருப்பெற்ற பின்னர் ஊஞ்சலாடுகின்ற வழக்கத்தைக் கிராமப் புறங்களில் அதிகமாகக் காணவியலாது. சில விழாக்காலங்களில்இவ்வாட்டம்ஆடப்பெறுவதுண்டு. ஆலயவிழாக்களில் திருவிழாநாளின்போது இறைவன் இறைவியை நீராட்டி அலங்கரித்து ஊஞ்சலில் வைத்து மணம் செய்வித்து, ஆட்டி இன்புறுகின்றனர் இறையடியார்கள் இந்த ஊஞ்சலுக்கென்றே சில கோயில்களில் ஊஞ்சல் மண்டபங்கள் அமைந்திருக்கின்றது. மணவிழா அல்லது ஊஞ்சல்விழா அந்த மண்டபத்தில் நடைபெறுகின்றது. அப்போது ஊஞ்சல் பாடல்கள் பாடப்படுகின்றன. சிலதலங்களில் அவ்வாறு விழாவின் போது ஊஞ்சல் பாடல்கள் பாடப்படாமல் புலவன் தன் கற்பனையின் வளத்தை மட்டுமே கொண்டு இவ்வூசல் இலக்கியம் படைக்கப்படுவதுண்டு. அதற்கெனப் புலவர்களால் ஊஞ்சல் பாடல்கள் பாடப்படாதபோது, பழம் இறைப்பாடல்களைப் பாடுவதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர். சைவசமய ஆலயங்களில் திருவாசகத்தின் திருப்பொன்னூசல் பகுதியையும், வைணவ சமயத்துக் கோயில்களில் அஷ்ட பிரபந்தத்தில் அடங்கியுள்ள நாயகர். நாயகியார் ஊஞ்சல்களையும் இசையுடன் பாடி மகிழ்கின்றனர். மணவிழாவின் போது ஊஞ்சலில் மணமக்களை வைத்துப் பிறர் ஆட்டி அவர்களை மகிழ்விக்கின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னர். அவ்வகையிலமைந்த ஊஞ்சல் ''திருமண ஊஞ்சல்'' என்று அழைக்கப்படும் இறைவன் இறைவியரைப் புகழ்ந்து பாடும் பாடல்களை இவர்களுக்குப் பாடுவதும் உண்டு. ஊஞ்சல் பாடல்கள் என்று பொதுவாக வழக்கிலுள்ள பாடல்களுடன், பாடுவோர் கற்பனையைக் கலந்து பாடுவதும் உண்டு. சில நேரங்களில் அவர்களுக் கென்று ஊஞ்சல் பாடல்கள் எழுதப்படுவதுமுண்டு. அவ்வாறு எழுதப்படுபவர்கள் எழுதியவருக்குத், தொகை கொடுத்து வந்தனர். இந்நிலை செல்வந்தர்கள் நிலையிலுள்ளோர்களுக்கு மட்டுமே நடைபெற்றிருக்கின்றது. இப்பொருள்பெறும் பலன் பாட்டு நோக்கமின்றி பொது நிலையில் வாழ்த்தும் வண்ணம் - செய்திகளைக்கூறும் வண்ணம் ஊஞ்சல் பாடல்கள் அமைவதும் உண்டு. இவையன்றி, பண்டிகைகளின் போதும் ஊஞ்சலாடுவதைச் சில இடங்களில் காணமுடிகின்றது. ஓணம், திருவாதிரைப் பண்டிகைகளின் போது ஊஞ்சலாடுவதை கேரள மக்கள் வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர். அதையொட்டி அப்பகுதியைச் சார்ந்த தமிழ் நாட்டு மக்களும் இப்பண்டிகைகளில் ஊஞ்சலாடுவதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர். ஊஞ்சல் வகையினைப் பொதுநிலையில் இரண்டாகப்பகுக்கலாம்.

1. இலக்கிய ஊஞ்சல்
2. நாட்டுப்புற ஊஞ்சல்

இவ்விரண்டிற்கும் அடிப்படையிலே வேறுபாடுண்டு.

இலக்கியம் என்ற வகைப்பாடு மேலும் இளைக்கக் கூடிய தன்மைத்து. இதனை அடிப்படை நிலையில், இலக்கிய ஊஞ்சல், ஊஞ்சல் இலக்கியம் என்ற இரண்டாகப் பகுக்கலாம். இலக்கிய ஊஞ்சல் என்பது இலக்கியத்தில் ஊஞ்சல் என அமையும். சங்ககாலந் தொடர்ந்து இன்றுவரை எழுந்திருக்கின்ற இலக்கியங்களில்வரும் ஊஞ்சல் தொடர்பான குறிப்புகள் இதன்பாற்படும் ஊஞ்சல் இலக்கியம் என்பது, குறிப்புகள் உறுப்புகளாக மாற்றம் பெற்று - அவை இலக்கிய வகையாக உருவெடுத்து சிற்றிலக்கியம் என்ற முத்திரையைப் பெற்றதைக் குறிக்கும். வேறுவகையில் சொல்வதானால் வளர்ந்து வாழும் ஊஞ்சல் சிற்றிலக்கியங்களைக் குறிக்கும். இவ்விரண்டில் முன்னது தொடக்கம் பின்னது தொடர்ச்சி அல்லது வளர்ச்சியாகும்.

இலக்கியப் பகுதியைத் தொடர்ந்து விழாவூசல் விழா வல்லா ஊசல் என்று இரண்டாக்க முடியும். விழாக்கள் என்னும் போது பண்டிகைகளும் அதன்கண் அடங்குதல் முறைமை. திருமணம், ஓணம், திருவாதிரை, ஆடிப்பெருக்கு, நலுங்கு போன்ற காலங்களில்- விழாக்களில் - பண்டிகைகளில் ஆடப்படும் ஊஞ்சல் அவ்வப் பெயரைத் தாங்கி நிற்கும். திருமண ஊஞ்சல் என்பது இரண்டாகக் காண இடமளிக்கின்றது. பொதுவாக உள்ள ஊஞ்சல் பாடலை அதாவது, பொன்னூஞ்சல் பாடல்களையோ, நாயகியார் ஊஞ்சல், நாயகரூஞ்சல் இவற்றின் பாடல்களையோ பாடி மணமக்களை ஊஞ்சலில் வைத்து ஆட்டி மகிழ்விப்பதும், ஆடி மகிழ்வதும்முதல்வகையினது. மணமகனும் - மணமகளும் எழில் கோலம் கொண்டு திருமண மேடையில் அமர்ந்திருக்கும் காட்சியைக் கண்ட புலவன் புகழ்ந்து ஊஞ்சல் பாடல்களைப் படைப்பது இரண்டாம் வகை. இங்குப் புலவன் பாடும் பாடல்களில் பாடப்படுவோரின் முன்னோர் சிறப்பு, அவர்தம் பெருமை பண்பு இவற்றுடன் அவர்களைப் புகழ்ந்து வாழ்த்துதல் போன்றன இடம் பெறும். முன்னர் ஒரு குறிப்பிட்ட இறைவன் அல்லது இறைவி பற்றி - இறைவன், இறைவி இருவர் பற்றி ஊஞ்சல் பாடல்கள் பாடியிருப்பான். அவற்றையே பின்வருவோரும் திரும்பவும் இசையும் பக்தியும் பெருகப்பாடி அத்தலத்து இறைவன். இறைவியரை பரவுவதும் உண்டு. அது அந்தந்த ஆலயத்திற்கு என்று விழாக் காலமாகக் கொள்ளப்பட்ட நாட்களிலே மட்டும் நிகழும். அப்போது இருவரின் உருவமும் மூலஸ்தானத்திலிருந்து – நேரம் பார்த்து- நாள் பார்த்து வெளிக்கொணரப் பட்டு நீராட்டப்படும். ஊஞ்சல் சுத்தம் செய்யப்பட்டு, பொட்டு வைத்து அலங்காரம் செய்யப்படும். குறித்த நேரத்தில் ஊஞ்சல் மண்டபத்திலோ, ஊஞ்சலுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கென்று அமைக்கப்பட்ட இடத்திலோ துணி களிட்டு ஒப்பனை செய்யப்பட்டு இறைவன் இறைவி ஊஞ்சலில் வைத்துப் பாடல்பாடி ஆட்டப்படுவர். அதனைக் கல்யாண உற்சவம் என்றும் ஊஞ்சல் விழா என்றும் அழைப்பர். ஓணவிழா என்பது திருமாலின் பிறப்பு நாளான ஓணநாளில் கொண்டா டப்படுவது இன்றைய தமிழகத்தில் இவ் விழா கொண்டாடும் வழக்கில்லை. ஆனால் பழந்தமிழ் நாட்டின் பகுதியாகிய சேர நாட்டில் இவ் விழா மலையாள மக்களால் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. ஆனால் இது ஒரு சமய விழாவாக இல்லாமல் நாட்டுவிழாவாகக் கொண்டாடப்படுவது குறிப்பிடத்தக்கது. இன்று ஆவணி அவிட் டம் என்று குறிக்கப்படும் ஒன்றே அன்று ஓண நாளாகக் கருதப்பட்டது, இன்றும் கேரளா விலும் அதை ஒட்டிய தமிழ் நாட்டுப் பகு தியிலும் ஊஞ்சல் இடம்பெறுகின்றது. தமிழ் நாட்டுப்பகுதியில் ஊஞ்சலை ஓணநாள் மட் டும் அதற்கென்று அமைக்கப்பட்டு இருக் கின்ற கால்களில் மாட்டி ஆடி மகிழ்வர். மற்ற நாட்களில் அவற்றைக் கட்டி வைத்து விடுகின்றனர். இரண்டு மரங்களுக்கிடையே ஒரு மரத்தைக் கட்டி அதில் ஊஞ்சல் தொங்கவிட்டு ஆடி மகிழ்கின்ற வழக்கம் கேரளாவில் இன்றும் உள்ளது. இந்த நாளில், நாட்களில் ஆடப்படுகின்ற ஊஞ்சல் ஓணவிழா ஊஞ்சல் அல்லது ஓண ஊஞ்சல் என்றுஅழைக்கப்படுகின்றது. இதுபோன்றே மற்ற விழாக்களும் அவ்வப் பெயருடன் ஊஞ்சல் இணைய அமைகின்றன.

விழாவல்லாத ஊஞ்சலை இறைத் தொடர்பு ஊஞ்சல், தனிமனிதத் தொடர்பு ஊஞ்சல் என்று இரண்டாக்கலாம். இறைத் தொடர்பு ஊஞ்சல்கள் சைவம், வைணவம் வீர சைவம், பௌத்தம் என்ற நான்கு மதங்களுக்கும் அமைவதால் அவற்றையும் மதப்பெயர் கொண்டு குறிக்கலாம். இவ் விறைத்தொடர்பான இலக்கியத்தை இதன் தொடர்பு நிலையில வாழ்த்துப் பாடல், வாழ்த்து இலக்கியம் என்று முறைப்படுத் தலாம். வாழ்த்துப்பாடல் என்பது ஊஞ்ச லில் இறைவன் இறைவியை வைத்து முன் னையோரின் பக்திப் பனுவல்களை மதத் திற்கேற்பப் பாடி மகிழ்வது. இரண்டாவது வகையினது இறைத் தொடர்பான ஊஞ்சல் சிற்றிலக்கியத்தைச் சுட்டுவது. இறைநிலை ஊஞ்சல் வேறுவகையில், இறைவன், இறைவி இறையடியார் என்றும் பாகுபடுத்தப்படும். தனி மனிதர்கள் பற்றிய ஊஞ்சல்கள், மன்னர், தலைவர், ஊர்த்தலைவர், பொது மாந்தர் (செல்வந்தர்) போன்றோருக்கு அமைந்திருப்பதை அறிகின்றோம். இவற் றை நாம் குலம், குலமின்மை அல்லது சார் பின்மை என்ற வகையிலும் காணலாம். வேளாளருக்கும், செங்குந்தருக்கும் அமைக்கப்பட்டிருக்கின்ற ஊஞ்சல்கள் குலச் சார்பினவாகின்றன.

ஊஞ்சல் பற்றிய குறிப்புகளும், செய்தி களும் பல்வேறு நிகழ்ச்சிகளுடன் தொடர்பு படுத்தப்பட்டுப் பேசப்படுகின்றன. இத் தன்மை கால அமைப்பிற்கேற்பவும், இலக் கியத் தன்மை, சூழல் இவற்றைப் பொறுத் தும் தம்முள் மாற்றும் பெற்றமைகின்றன. ஊஞ்சல் பற்றிய செய்திகள் சங்ககாலம் தொடங்கி இன்றைய இலக்கியம் வரை பரவலாக இடம்பெற்று வருகின்றன. இலக்கியங்களில் வருகின்ற "ஊஞ்சல்" "ஊசல்" என்ற சொற்கள் குழை, குண்ட லம், போன்றன ஆடுவதையும் மன உளைச் சலையும் குறிப்பதாக அமைகின்றன. பக்தி இலக்கியத்தில் அமைந்துள்ள திருப்பொன் னூசல் ஊஞ்சல் பாடல்கள் நமக்கு ஊஞ்சல் பாடல்களின் — ஊஞ்சல் சிற்றிலக்கியத்தின் வளர்ச்சியைக் காட்டுகின்றன. தலைவன், தலைவியரைக் கொண்டு நடந்து வந்த ஊசல் இங்கு இறைவனுக்குச் செல்கின்றது ஊசல் இலக்கியத்திற்கு முன்னோடிகளாய் தோற்றத்திற்கு ஏதுவாய் இப்பாடல்கள் அமைந்துள்ளன. ஊசல் தனியான தொரு இலக்கிய வகையாக வளர, இதுவே அடிப் படை யாயிற்றெனலாம். மன்னனையும் இறைவனையும் புகழ்ந்து பாடுவதாக இவை அமைகின்றன. சிற்றிலக்கிய வகைகள் சில ஊஞ்சல் பற்றிய குறிப்புகளைத் தந்து நிற்கின்றன. கலம்பகம், பிள்ளைத்தமிழ் இவற்றிலும் ஒரே வழி உலக இலக்கியத் திலும் அவை இடம் பெறுகின்றன. கலம் பகத்தில் பதினெட்டு உறுப்புகளுள் ஒன்றாக ஊசல் அமைகின்றது. எனவே அவ்வகை யில் பெரும்பாலான கலம்பக இலக்கியங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க்ள் ஒரு பாடல் ஊசல் பாடலாக அமை கின்றது. கலம்பகத்தில் தொடக்க காலத் தில் பாட்டுடைத் தலைவரே ஊசலாடு மாறு அமையாது பெண்கள் ஊசலாடிக் கொண்டு தலைவனைப் புகழ்ந்து பாடுமாறு அமைந்துள்ளது.

ஊசல் இலக்கியங்கள் ஒவ்வொன்றும் தோன்றிய காலத்தைத் தெளிவாக வரை யறுக்க இயலவில்லை. முதல் ஊசல் இலக் கியம் தோன்றிய காலமும் தெளிவாகப் பெறமுடியவில்லை. எனினும் கிடைத்த ஊசல் இலக்கியங்களைக் கொண்டு அதன் காலத்தைப் பதினேழாம் நூற்றாண்டிற்குப் பின் தோன்றத் தொடங்கியதாகக் கூறலாம் பதினெட்டுப் பத்தொன்பதாம் நூற்றாண்டு களில் இவ்விலக்கிய வகை மிகுந்த செல் வாக்குப்பெற்றிருப்பதைக் காணலாம். ஆழ் வார்களும் நாயன்மார்களும் மக்களிடம் பக்திப் பரவசமூட்டும் இலக்கியங்களைப் பாடிச் சென்ற காலக்கட்டத்தில் கடவுளை வாழ்த்தும் உணர்வு மக்களிடை மிகுந்து காணப்பட்டது. அவர்கள் கடவுளே எல் லாமாய் எண்ணிச் செயல்பட்டனர். அத் துடன் தொழுதனர். புராணக்கதைகளை யும், கடவுள் தொடர்பான செவிவழிச் செய்திகளையும் மக்கள் பெரிதும் ஏற்றுக் கொண்டனர். இதனால் பல சிற்றிலக்கி யங்கள் பக்திப் பொருண்மையைக் கொண்டு உருவெடுக்கத்தொடங்கிற்று அவ்வகையில் ஊசலும் ஒன்று. கோயில் வழிபாடும் விழாக்களும் அக்கால கட்டத்தில் பெருகி யதால் அவையும் ஒரு வகையில் இச்சிற் றிலக்கியங்களின் தோற்றத்திற்குக் காரண மாய் அமைந்தன. கோயிகளில் ஊஞ்சல் மண்டபங்கள் சைவம், வைணவம் என்ற பாகுபாடின்றி இருசமயக் கோயில்களிலும் அமைக்கப்பட்டிருந்தன. ஊஞ்சல் விழா வின் போதும், வசந்த காலங்களில் கொண்டாடப்படும் வேறு சில விழாக்களி லும் இப்பாடல்களைப் பாடுகின்றனர். ஊஞ்சல் விழாக்கள் இன்றும் கொண்டாடப் பட்டுவருகின்றது.

திருத்தலங்களை மையப்படுத்தி எழுந்த தல இலக்கியவகைகளுள் ஒன்றாக விளங் குகின்ற திருவூஞ்சல்கள் பல சுவடிகளாக இந்திய நாட்டு நூலகங்களிலே இன்றும் காணக்கூடியதாகவுள்ளது. ஊஞ்சல் இலக் கிய சுவடிகளாக அங்கயற் கண்ணம்மை பொன்னூஞ்சல், அரங்கநாதரூசல், அரங் கநாயகன் பேரில் ஊசல், அழியா விலங் கியம்மன் ஊசல், ஆயிரவர் பேரின் ஊஞ்சல் ஆவுடையார் பேரில் ஊஞ்சல், ஊஞ்சல் கவிதைகள், காரநாதர் முத்தாலம்மை ஊஞ்சல், குமாரபுரி முத்தாலம்மை ஊஞ் சல், குமாரபுரி முத்தாலம்மன் ஊசல், கொங்கணரூசல், சட்டைநாதர் திருப் பொன்னூசல், சடகோப ரூஞ்சல், சிவகாமி அம்மை ஊஞ்சல், சிவகிரியூஞ்சல், சிவப் பிரகாசர் ஊஞ்சல், தருமபுரம் தேனமிர்த நாயகி பொன்னூஞ்சல், தன்னை விநாய கர் ஊஞ்சல், திருவரங்க ஊசல், திருவூசல் திருவூஞ்சல், நம்பெருமான் ஊஞ்சல், நாச்சியார் ஊஞ்சல், நாச்சியார் ஊசல், நத்மாசினி பேரில் ஊஞ்சல், பச்சை நாயகி பேரில் ஊஞ்சல், பதிகம், பரசமய கௌரி ஊஞ்சல், பெரிய நாயகி அம்மன் பேரில் ஊஞ்சல், மதுரகவியாழ்வார் ஊஞ்சல், மதுரகவியாழ்வார் ஊசல், மாணிக்குழி வாமன புரீசர் ஊஞ்சல், மாரியம்மன் ஊசல், வள்ளியம்மன் தெய்வயானை பேரில் ஊஞ்சல் பாட்டு, விஜயராகவப் பிள்ளை ஊஞ்சல், விஜயராகவப் பெருமான் ஊஞ் சல், வேளாளர் ஊஞ்சல், வைத்தமாநிதிப் பெருமான் ஊஞ்சல், ரங்கநாயகன் ஊஞ் சல் ஆகியன விளங்குகின்றன.

இந்தியாவிலும் ஈழத்திலும் அமைந்து விளங்குகின்ற திருத்தலங்கள் மீதும் அங்கு றையும் இறைவன், இறைவி பேரில் பல திருவூஞ்சல்கள் அவ்வப் பொழுது வாழ்ந்த இந்திய, ஈழத்துப் புலவர்களால் இயற்றப் பட்டுள்ளன. திருத்தலங்கள் மீது பாடப் பெற்ற திருவூஞ்சல்களாக அத்தியடி விந யகர் ஊஞ்சல், அராலி முத்துமாரியம்மன் ஊஞ்சல், அல்வாய் விநாயகர்மீது ஊஞ்சல், அறம்வளர்த்தம்மன் ஊஞ்சல், ஆறாதார ஊஞ்சல், எயிலம்மை ஊஞ்சல், ஏழாலை அத்தியடிவிநாயகர் ஊஞ்சல், கச்சிகொண்ட பாண்டீசர் ஊஞ்சல், கதிரேசர் ஊஞ்சல்ா கந்தவனநாதரூஞ்சல், கலியாண ஊஞ்சல், கலியாணபுர அங்கயற்கண்ணம்மைஊஞ்சல், கவாணவத்தை வைரவர் ஊஞ்சல், காந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிஅம்மன்ஊஞ்சல், காரைக்குடி மீனாட்சி சுந்தரேசர் திருவூஞ்சல், காரைநகர் திண்ண புர சுந்தரேசர் திருவூஞ்சல், காலிக்கதிரே சர் ஊஞ்சல், கும்பாழவளை விநாயகரூஞ் சல், குலசேகரம் அறம் வளர்த்த அம்மன் மீது ஊஞ்சல், கைலாசப் பிள்ளையார் ஊஞ்சல், கொங்கணரூஞ்சல், கொழும்பு முத்துவிநாயகர் ஊஞ்சல், சங்கிரி சென்ன கேசவப்பெருமான் ஊஞ்சல், சந்திரசேகர விநாயகரூஞ்சல், சித்திவிக்னேசுரர் ஊஞ்சல், சித்திவிநாயகரூஞ்சல், சிவகாமியம்மன் ஊஞ் சல், சிவப்பிரகாசர் ஊஞ்சல், சிவபெருமான் ஊஞ்சல், சீரங்கநாயகர் திருவூசல், சீரங் கத்துநாயகி திருவூசல், சுப்பிரமணிய பிள்ளைபேரில் கல்யாண ஊஞ்சல், சுப்பிர மணிய ஆறாதார ஊசல், திருக்கடன் மல்லைதாயற் ஊசற்பிரபந்தம், திருக்கல் யாண ஊசல், திருக்குருகூர் வல்லியார் ஊசல், திருப்பெருப்பேற்று முருகன் திரு வூசல், திருப்போரூர் முருகன் மீது ஊசல் திருவரங்க ஊசற்றிருநாமம், திருவரங்கத்து ஊசல், தில்லையாட்டி மாரியம்மன் திரு வூஞ்சல், துணைவை அரசடியிற் சண்முகர் ஊஞ்சல், தென்கோவை வெள்ளெருவை விநாயகரூஞ்சல், தொண்டைமண்டலவேளா ளரூசல், நகுலேசர் ஊஞ்சல், பத்திரகாளி ஊஞ்சல், பரசமய கோளரியார் திருவூசல் பரமதேசிகர் ஊஞ்சல், பருத்தித்துறை சித்திவிநாயகரூஞ்சல், பார்த்தசாரதி பெரு மாள் ஊசற்றிருநாமம், பாலையடிவால விக்னேசுவரர் ஊஞ்சல், பிள்ளையார் ஊசற் றிருநாமம், பெரியபுல சணபதீசுவரர் ஊஞ் சல், பொன்பற்றிச் செல்லியம்மை ஊசல், போக்கலை வள்ளிமணவாளர் திருவூசல், மண்டலக்கோட்டை வண்டுவனப் பெருமா ளூஞ்சல், மண்டூர் கந்தசாமிமீது லீலாசங் கர மாணவரூஞ்சல், மணவாளமாமுனி ஊசற்றிருநாமம், மயிலணி ஊஞ்சல், மயி லூர் குமரநகர் பொன்மாரியப்பன் ஊஞ் சல், மயிலை சுப்பிரமணியர் ஊஞ்சல், மாணிக்குறிவாயணபுரீசர் ஊஞ்சல், மாதசற் பிள்ளையார் ஊஞ்சல், மாரியம்மை ஊஞ் சல், மானிடரூசல், மீனாட்சி சுந்தரேசர் திருவூசல், மீனாட்சியம்மை ஊசல், முத்தா லம்மன் ஊஞ்சல், முத்துமாரியம்மை ஊஞ் சல், முருகன் ஊசல், மூளாய்ச்சித்திவிநா யகர் ஊசல், வடிவேலர் ஊஞ்சல், பதிகம் வண்ணைநகர் ஊஞ்சல், வண்ணை. வெங் கடேசப்பெருமாள் ஊஞ்சல், வதுளைக்கதி ரேசர் ஊஞ்சற்பதிகம், வல்லிபுரமாயன்மீது ஊஞ்சல், வல்லை வைத்தியேசர் ஊஞ்சல், வள்ளிமணவாளர் திருவூசல், வன்னியர்கள் ஊஞ்சல், வீரபத்திரர் ஊஞ்சல், வேதாந்த தேசிகர் ஊஞ்சல், வேதாரேணியர் ஊஞ்சல், வேலணை மகாகணபதிப் பிள்ளையார்மீது திருவூசல், ரங்கநாயகன் நலுங்கு ஊசல், திருக்கேதீச்சரநாதன் ஊஞ்சல், மாவை ஊஞ்சல், மாவைஊஞ்சற்பாக்கள், நயினை நாகபூசணி ஊஞ்சல், புலோலி பசுபதீச்சரப் பெருமான் திருவூஞ்சல், செல்வச்சந்நிதி முருகன் பெயரில் திருவூஞ்சல், சுன்னாகம் ஐயனார் ஊஞ்சல், வருத்தலைவிளான் மரு தடிவிநாயகர் ஊஞ்சல், வீமன்காமம் காமாட்சியம்மன் ஊஞ்சல், கரம்பன் விசுவ நாதசுவாமி திருவூஞ்சல், சரவணை பள்ளம் புலம் முருகமூர்த்தி திருவூஞ்சல், மாமாங் கர் ஊஞ்சல், திருக்கோவில்ஊஞ்சல், காரை தீவு பாலையடிவால விக்கினேஸ்வரர்கோயில் திருவூஞ்சற்பா, ஆரையம்பதி திருநீலகண்ட விநாயகர் ஊஞ்சல், திருக்கோணேசர்திரு வூஞ்சற்பதிகம், திருதம்பலகாமம் ஸ்ரீஹம்ச கமனாம்பிகாசமேத ஸ்ரீ ஆதிகோணநாயக சுவாமி திருவூஞ்சல், திருகோணமலை விஸ் வநாத சுவாமி (சிவன்) ஊஞ்சல், திருக்கோ ணமலைச் சிவன்கோயில் (சிவகாமியம்மன் ஊஞ்சல்) சிவயோகபுரம் - சிவகாமசுந்தரி சமேத நடராஜப்பெருமாள் திருவூஞ்சல், ஸ்ரீபத்திரகாளி அம்பாள் திருவூஞ்சல், திரு கோணமலை பத்திரகாளி ஊஞ்சல, திருக் கடலூர்படுக்கை ஸ்ரீபத்திரகாளியம்மை திரு வூஞ்சல், மகாமாரிதேவி திருவூஞ்சல். திருக் கோணமலை ஆலடிவிநாயகர் திரு ஊஞ்சல், சமாதுப்பிள்ளையார் திருவூஞ்சல், மனையா வெளி வல்லப சக்தி அம்பாள் ஊஞ்சல் மனையாவெளி (இராசமலை) திருச்சிற்றம் பலப் பிள்ளையார் ஊஞ்சல், திருக்கோண மலை உப்புவழிபெரிய தொடுவாய் சித்தி விநாயகர் ஊஞ்சல், நிலாவெளி சித்திவிநா யகர் ஊஞ்சல், சாம்பல்தீவு வடலியம்பதிப் பிள்ளையார் திருவூஞ்சல், சீனக்குடா ஸ்ரீசித் திவிநாயகர் திருப்பொன்னூஞ்சல், திருக் கோணமலை வில்லூன்றி கந்தசுவாமியார் திருவூஞ்சல், திருக்கோணமலை முத்துக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாரசுவாமி திருப்பொன்னூஞ்சல், வெருக லம்பதி ஸ்ரீசித்திரவேலாயுதசுவாமி திருவூஞ் சல் ஸ்ரீகிருஷ்ணபரமாத்மன் ஊஞ்சல் ஆகி யனவும் இன்னும் பல ஊஞ்சற் பாக்களும் காணப்படுகின்றன.

ஊசல் இலக்கியங்களைப் பாடுகின்ற புலவர்கள் பெயரமைக்கின்ற முறையைக் குறித்து வரையறை எதுவும் பாட்டியல் நூல்களில் கூறப்படவில்லை. ஆனால் ஊஞ் சலைப் பாட்டியல்கள் பொன்னூசல், மணி யூசல் என்ற சொற்களால் சுட்டுகின்றன. ஊஞ்சலுக்கு இலக்கணம் கூறும் அனைத்துப் பாட்டியல் நூல்களும், ஊசல் இலக்கியங்கள் ஆசிரியவிருத்தம் அல்லது கலித்தாழிசை யாப்பில் அமையவேண்டும் என்று குறிக்கின் றன. யாப்பு நிலையில் கழித்தாழிசை, ஆசிரியவிருத்தம் இரண்டையும் சுட்டுவன வும் அவற்றுள் ஒன்றை மட்டும் சுட்டுவன வும் அப்பாட்டியல்களிடையே காணப்படு கின்றன. பிள்ளைத் தமிழுக்குக் கூறுவன போன்று இங்கும் சுற்றத்தளவு, கிளைய ளவு என்பன பாட்டியல் பகுதிகளில் சுட் டப்படுகின்றன.

ஊஞ்சல் இலக்கியத்தின் ஒவ்வொரு பாடலும் "ஆடீர் ஊசல்" என்றோ "ஆடாமோ ஊசல்" என்றோ முடியவேண் டுமென்று பாட்டியல்கள் வரையறை தரு கின்றன. இவ்விரண்டையும் சுட்டும் அனைத் துப் பாட்டியல்களும் "ஆடீர்" என்பதை முன்னும் ஆடாமோ என்பதைப் பின்னும் அமைந்துள்ளன. இவ்வமைப்பு முறை இந்த இரண்டு சொற்களில் ஆடீர் என்பதற்கு முதன்மை கொடுத்தனரோ என்று எண்ண இடமளிக்கின்றது. கிடைக்கின்ற எல்லா ஊஞ்சல் இலக்கியங்களும் "ஆடீர்" என்றே முடிகின்றன. ஆடாமோ என்னும் முடிவில் எந்த ஓர் ஊசல் இலக்கியமும் முடிவு பெற் றதாகத் தெரியவில்லை.

ஊஞ்சல் இலக்கியங்கள், பாட்டியல் நூல்கள் கூறும் மங்கலப் பொருத்தம் முதல் கணப்பொருத்தம் வரையிலான பத்துப் பொருத்தங்களோடும் பெரும்பாலும் அமைந்து வருவதைக் காணமுடிகின்றது. சில இலக்கியங்களில் மட்டும் கணப்பொருத் தம் அமைஉவில்லை. ஊஞ்சல் இலக்கி யங்கள் பத்துப்பாடல்களைக் கொண்ட தாக அமையக் காண்கிறோம். ஊஞ்சலுக் கான பாடல் வரையறையைப்பற்றி, பெரும்பாலான பாட்டியல் நூல்கள் இலக் கணம் கூறவில்லை. இந்த வரையறையின் படி பெரும்பாலான ஊஞ்சல் இலக்கியங் கள் அமைய, சில இலக்கியங்கள் பத்துப் பாடல்களுக்கு மிகுந்தும் காணக்கிடக்கின் றன. ஊஞ்சல் இலக்கியங்கள் பெரும் பான்மையும் பாட்டுடைத் தலைவரின் பெயரினையே நூற் பெயராகக் கொண் டிருக்கின்றன. ஊஞ்சல், ஊசல், ஊசல் பாட்டு, ஊஞ்சல்பாட்டு, ஊஞ்சல்பா மாலை, ஊசல்பாமாலை, ஊஞ்சல்கவிதை, ஊஞ்சல் பதிகம், ஊசல்பதிகம், ஊசல் பிரபந்தம், ஊஞ்சல் பிரபந்தம் என்று அவற்றின் பெயரமைப்பின் இறுதித் தொடர்கள் விளங்குகின்றன. இன்னும் திருவூசல், கல் யாண ஊசல், திருக்கல்யாண ஊசல், நலுங்கு ஊசல் எனவும் அவற்றின் பெயர் கள் அமைகின்றன. பாட்டுடைத் தலைவ ரின் பெயரைச் சுட்டி அத்துடன் மீது ஊஞ்சல் என அமைகின்ற நிலையும் இந்த இலக்கிய வகையினுள் காணமுடிகின்றது. அவ்வகையில் முருகனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்ட ஊசல் முருகன் மீது ஊசல் என்பது போன்று அமையும். அனந்த கிருட்டிண ஐயங்கார் என்பவர் தமது நூலுக்கு மணவாளமாமுனி ஊசற் றிருநாமம் என்று பெயரமைக்கின்றார். ஆனால் இப்படி — ஊசற்றிருநாமம் என்று வேறு ஊஞ்சல் இலக்கியம் பெயர் பெற்ற தாகத் தெரியவில்லை.

ஊஞ்சல் இலக்கியங்கள் பத்துப்பாடல் களைக் கொண்டதாக இருக்க வேண்டும். என்பர். அவ்வரையறைக்குப் பெரும்பா லான இலக்கியங்கள் உட்பட்டிருக்கின்றன. சிலவற்றில் மிகுந்தும் காணப்படுகின்றன. கிடைக்கின்ற ஊஞ்சல் இலக்கியங்களைக் கொண்டு நோக்கும்போது பத்துப்பாடல் சிற்றெல்லையாகவும், இருபத்தெட்டுப் பாடல் பேரெல்லையாகவும் காணப்படு கின்றது. பதினொன்று, பன்னிரெண்டு பாடல்களைக் கொண்ட ஊசல், எண்ணிக் கையில் பத்துப் பாடல்களைக் கொண்ட இலக்கியங்களுக்கு அடுத்த நிலையில் அமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றது. பாடல் எண்ணிக்கை என்பது காப்புச் செய்யுளையும் உட்படுத்தியே கணக்கிடப்படுகின்றது; ஆனால் ஆசிரியர் சிலர் அவற்றை நீக்கிப் பாடலெண்ணிக்கையைக் கணக்கில் கொண்டு பாடுகின்றனர். அதனால் காப்பாக -- அவையடக்கமாக அமையும் பாடல்கள் மிகுந்து காணப்படுகின்றன. பத்துப் பாடல்களில் ஊஞ்சல் இலக்கியங்களை அமைத்தமைக்கும் காரணம் உண்டு. இறைவிழா போன்றவற்றில் தொடர்ந்து பாடினால் கால நீட்டிப்பு ஏற்பட்டு பின்வரும் நிகழ்ச்சிகளுக்குத் தடையேற்படும். அவை கருதியும் பொருள் நுகர்வு, புலப்பாட்டுச் சுருக்கம் போன்றன கொண்டும் அவை பத்துப்பாடல்களுக்குள் அமைக்கப்பட்டிருக்கலாம் ஊஞ்சல் இலக்கியத்தின் முன்னோடியாக இருக்கும் திருவாசகத்தின் திருப்பொன்னூசல் பகுதியும், பிள்ளைத்தமிழ் இலக்கியங்களின் ஊசல் பருவங்களும் பத்துப் பாடல்கள் கொண்டு அமைக்கப்பட்டிருந்தன. எனவே அவற்றை அடியொற்றி இலக்கியம் படைப்போரும் அந்தப்பாடல் எண்ணிக்கையைப் பின்பற்றி தம்இலக்கியப் படைப்புக்களை உருவாக்கியிருக்கின்றனர். கருத்துப் போக்கும், கற்பனை ஓட்டமும் பக்திபெருக்கும் பாடல்கள் மிகுந்தெழக் காரணமாகலாம். நூலின் தொடக்கம் காப்பாக அமைகின் கின்றது. ஒரு காப்புப்பாடல் அமைவது பெரும்பான்மை. சிறுபான்மை இரண்டு காப்புப் பாடல்களும் அமைகின்றன. செங்குந்தர் பிரபந்தத் திரட்டில் அமைந்துள்ள ஊசல் என்னும் சிற்றிலக்கியம் இரண்டு பாடல்களைக் காப்பாகக் கொண்டு அமைந்துள்ளது. தனிமனிதரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு நிகழும் ஊசல் சிற்றிலக்கியங்கள் விநாயகரைக் காப்புக்கடவுளாகத் தொழுகின்றன, சில இலக்கியங்கள் அவ்வாசிரியரின் விருப்பத்திற்கு இணைய வேறு கடவுளை, கடவுளரைக் காப்பில் போற்றுகின்றன. புலவோர் சிலர் தம்மையும், தாம்பாடுவோர் பாடல் இவற்றைக் குறித்த செய்திகளையும் நூலின் காப்பில் பாடுகின்றனர். சில நூல்கள் காப்புப் பாடலின்றி தொடக்கமே நூலாகச் செயல்கின்றது. நூல் பாடல்கள் பெரும்பான்மையும் ஒத்த நோக்குடையனவாகவே காணப்படுகின்றன.

ஊசல் இலக்கியத்தின் பாடல்கள் தமது ஈற்றடியிவ் ஆடீர் ஊசல் என்ற முடியைத் தாங்கி நிற்கின்றன. இப்படி முன்னிலைப் பன்மையாக ஆடீர் ஊசல் என அமைவதுடன் ஆடுக பொன்னூசல் என வியங்கோளாயும், ''ஆடூசல்'' என வினைத் தொகையாயும் அமைகின்ற நிலையினைக் காண்கின்றோம். ஊசல் இலக்கியங்களின் இறுதிப்பாடல் வாழ்த்துப் பாடலாக (வாழி) அமைகின்றது. ஒரு பாடலன்றி அவ்வகையில் இரண்டு பாடல்களையும் அமைப்பதை ஒரே வழி காணமுடிகின்றது. அந்த ஊஞ்சலில் பாடப்படுவோன் அவன் முன்னோன், சுற்றம், தொண்டர் போன்ற பலரையும் வாழ்த்தி இறுதியில் உலகும்- இந்த ஊஞ்சலும் வாழுமாறு அப்பாடல் வாழ்த்தி முடிகின்றது. சிலவற்றில் வாழி என்று குறிக்கப்பட்டும், சிலவற்றில் குறிக்கப்படாமலும் அமைகின்றன. இவற்றை ஊசலிலக்கியத்தின் உறுப்பு எனக் கொள்வதில் தவறில்லை. இறைவனோ, மக்களோ இவற்றின் தலை மாந்தர்களாக அமைகின்றனர். இறைநிலையில் இறைவன் இறைவி இருவரும் தலைமை பெறுகின்றனர். இறை அடியார்களும் சில இலக்கியங்களில் பாட்டுடைத் தலைமை ஏற்கின்றனர். மக்களுள் அரசர், உரைத்தவைர் அல்லது புலவரால் விரும்பப்படுவோர் தலைமை பெறுகின்றனர்.

மக்களுக்கும் கடவுளர்களுக்கும் ஊஞ்சல் பாடல்கள் பாடப்பட்டாலும் இறைவன் — இறைவியர் பற்றிய ஊஞ்சல் பாடல்களே மிகுதியாகக் காணப்படுகின்றன. மக்கள் தொடர்பு ஊஞ்சல் பாடல்கள் மிகுதியும் திருமண ஊஞ்சலாய் அமைகின்றன. இவை லாலிப் பாட்டு எனவும் அழைக்கப்படுவதுண்டு கோவில் நடைபெறும் டோலோற்சவம் போன்ற விழாக்களின் போது பக்திநிலை ஊஞ்சல் பாடல்கள் பாடப்படுகின்றன. இவை பெரும் பான்மையும் பக்தி இலக்கியங்களின் தொடர்களை ஆங்காங்கே கையாளுகின்றன. வள்ளி முருகன் போன்ற திருமணங்களை ஒப்பிட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுப்பிற்காலத்தில் பாடப்பட்ட பாடல்களும் லாலிப்பாட்டு என்று அழைக்கப்படுகின்றன. ஆனால் அவை ஊஞ்சல் அமைப்பினின்றும் மாறு படுகின்றன. சிலர் இறைவனைப் பாடுவதையும் லாலி என்று அழைக்கின் றனர் இப்பாடல்கள் பொதுவாக மக்களுக்கு அறுவுரை கூறும் வகையில் அமைந்தவை இறைவனும் இறைவியும் தலை சிறந்த கலைப்பிரியர்கள். கலை வடிவமாகவே பல அன்பர்களுக்குக் காட்சியளிக்கின்றனர். இறைவனும் இறைவியும் கலையின் உன்ன தமான இலக்காக விளங்குகின்றனர். பல் வேறு வகையான இசைப்பாடல்களிலே ஊஞ்சல் பாவும் ஒருவகையே ஆகும். இவ்வூஞ்சற் பாக்கள் பொது மக்களது இசை மரபினையடிப்படையாகக் கொண்ட துடன் பலரையும் தன்பால் ஈர்க்கவல்லது இறைவனைப் பற்றிய ஊஞ்சற் பாக்கள் பலரையும் ஈர்த்து, இறைவன் பாற்படுத்தி ஈடேற்றும் பாங்கில் அமைந்துள்ளன. குழந்தைகள், சிறுவர்கள், மணமக்கள் அரசர் முதலியோரை ஊஞ்சலில் வைத்து ஊஞ்சலாட்டிப் பாடி இன்புறச் செய்தல் போலப் பொதுவாக இறைவனுக்கும் இறைவிக்கும் நைமித்திய விழாமுடிவிலே, குறியாகத் திருக்கல்யாணத் திருவிழாவின் போது ஊஞ்சற் திருவிழா (டோலோற்ச வம்) நடாத்துதல் வழக்கமாகும் ஈழத்தி துள்ள திருக்கோயில்களில் நிகழும் நைமித் திய கிரியைகளான கும்பாபிஷேக தினம், வருடாந்த மகோற்சவத்தின் கொடியிறக் கத்திருவிழா, திருக்கல்யாண உற்சவம், (பூங்காவனத் திருவிழா) திருவெம்பாவை யின் இறுதி நாளான திருவாதிரை உற்சவம் ஆகிய தினங்களில் திருவூஞ்சல் பாடல் களைப் பாடி இறைவனுக்கு அர்ப்பணித்து மகிழ்விக்கின்ற வழக்கம் இன்றுவரை நடை முறையில் இருந்து வருகின்றது.

தொகுத்து நோக்கின் திருக்கோயில் களை மையப்படுத்தி தல இலக்கியங்களுள் ஒன்றாக விளங்குகின்ற திருவூஞ்சல் பாடல் களைப் பாடுகின்ற மரபு இந்தியா, இலங்கை நாடுகளிலேயுள்ள இந்துக் கோயில்களிலே இன்று வரை காணப்படு கின்றன. மேலும் இக்கட்டுரையில் ஊஞ்சல் சொல்லாய்வு, ஊஞ்சலும் ஊசலும், ஊஞ்ச லாடும் பண்பு, ஊஞ்சல் வகை தொகை — பகுப்பாய்வு, இலக்கியத்தில் ஊஞ்சல், ஊசல் சிற்றிலக்கிய உருவாக்கமும் காலமும் இந்தியாவில் சுவடி நிலையிலுள்ள திருவூஞ் சல்கள், இலங்கை, இந்திய நாட்டுத் திருக் கோயில்கள் மீது பாடப்பெற்ற திருவூஞ் சல்கள் ஆகிய இன்னோரன்ன விடயங்கள் நன்கு எடுத்து ஆராயப்பட்டுள்ளன.

---

**உசாத்துணை நூல்கள் :**


1. சதாசிவம் ஆ. (தொகுப்பாசிரியர்) ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம் கொழும்பு 1966.
2. அழகப்பராசு த (பதிப்பாசிரியர்), ஊஞ்சல் இலக்கியம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை 1983.
3. இலங்கைத் திருநாட்டின் இந்துக் கோயில்கள் இந்து சமயத் திணைக்களம் பிரதேச அபிவிருத்தி அமைச்சு (வெளியீடு) கொழும்பு 1984,
4. தில்லைநாதப் புலவர் ஆ. (ஆசிரியர்) செந்திநாதன் கனக சிவநேசபிள்ளை தில்லை. (தொகுப்பாசிரியர்கள்) தெய்வத் தமிழ்ப் பிரபந்தங்கள், யாழ் இலக்கிய வட்டம், யாழ்ப்பாணம், 1977.
5. கந்தையா வி. சீ. மட்டக்களப்பு சைவக் கோயில்கள், இந்து சமயத் திணைக்களம், பிரதேச அபிவிருத்தி அமைச்சு கொழும்பு 1983.
6. வடிவேல் இ திருக்கோணமலை மாவட்டத் திருத்தலங்கள், இந்து சமயத் திணைக்களம் கொழும்பு 1981.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரதான யாகசாலையில் சங்கல்பம்



பிரதான கும்பவீதிப் பிரதட்சணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்தூபி அபிடேகம்



மூலமூர்த்திக்கு குடமுழுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளைமாவடியான்

திரு. ஏ. சாம்பசிவமூர்த்தி அவர்கள்

வெள்ளைமா வடியினிலே வீற்றிருக்கும் விநாயகனே
கள்ளமிலா உன்அடியார் காணுகின்ற பெருங்கடலே
உள்ளமெல்லாம் உருகிநின்று உன்னையேநாம் வழிபடுவோம்
அள்ளி அள்ளி வழங்கிடுவாய் அருள்மிகுந்த ஞானமதை ! 1

மீசாலை தெற்கினிலே அல்லாரை வீதியிலே
மாசாலை மத்தியிலே மகிழ்ந்திருக்கும் விநாயகனே
காசாலே கோவில்கட்டிக் கனபேர்கள் பூசிப்போம்
பேசாமல் எமைக்காப்பாய் பெருவாழ்வு தந்தருள்வாய் ! 2

தமிழ்இசையை வளர்த்துவரும் தமிழர்களின் விநாயகனே ;
தமிழர்களின் இன்னல்களைத் தான்தீர்க்க உளமிலையோ?
தமிழிசையால் வாழ்த்திடுவோம் தமிழினிலே பூசைசெய்வோம்
தமிழர்களின் குறைகளையே தவிர்த்திட நீ வழிவகுப்பாய் ! 3

கொடியேற்றத் திருவிழாக்கள் கொள்கைகளை விளக்கிடவே
அடியார்கள் கொண்டாடி அகமகிழ்வர் எந்நாளும்
விடிவொருநாள் தமிழருக்கு வரவேண்டி வழிபடுவர்
கடிதில் அது வந்திடவே கணபதியே வரமருள்வாய் ! 4

படித்தவர்கள், பண்பாளர், பாமரர்கள் பலர்கூடி
எடுத்தமைத்த திருச்சபையின் இயக்கத்தால் இயங்கிவரும்
துடிப்பான எம்கோவில் தொழுபவர்கள் போற்றிடவே
படிப்புக்கள், பேச்சுக்கள் பயன்பெறவே நடத்திடுவர் ! 5

தமிழ்பேசும் தமிழ்மக்கள் தாம்வணங்கும் கணபதியாம்
அமிழ்தாக இனிப்பானே அவனருளை வேண்டிநிதம்
அமிழ்தான தமிழ்வேதம் அனுதினமும் பாடுவதால்
தமிழ்காக்கும் கணபதியே தமிழர்களைக் காத்திடுவாய் ! 6

தமிழ்மக்கள் அனைவருமே தமிழினிலே கையெழுத்து
அமிழ்தமென வைத்திடுநல் நாளினையே விரும்புகின்ற
தமிழ் மகனாம் விநாயகனும் வாழுகின்ற மாவடியில்
தமிழ்க்கோவில் போற்றிடுநல் தமிழ்அன்பர் கூடுமிடம் 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்களே தமிழ் உடையில் காட்சிதரும் நன்நாளைத்
தமிழர்களே ஆக்கிடவே தமிழ்அறிவைக் கொடுத்தருளும்
தமிழர்களின் ஆனைமுகன் தங்குமிடம் மாவடியாம்
தமிழ்க்கோவில் இலங்குகின்ற தமிழ்ப்பதியாம் மீசாலை ! 8

மாலயனும் காணாத மதிப்புறுநற் சிவனின்மகன்
ஆலமுண்ட கண்டன்மகன் அழகான தமிழ்காப்போன்
சீலம்கொண்ட சிறப்புமிகு சிற்றூராம் மீசாலைக்
கோலம்கொண்ட மாவடியான் கணபதியை வாழ்த்திடுவோம் ! 9

எல்லாரும் எந்நாளும் என்றென்றும் போற்றிடுவோம்
நல்லூராம் மீசாலை மாவடியான் கணபதியை
வல்லாராய் வாழ்வினிலே வளம்காக்கும் தமிழ்போற்றி
நல்லோராய்த் தமிழ்வேதம் நவின்றவனை வரழ்த்திடுவோம் ! 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகல விதமான

ஆங்கில மருந்துப் பொருட்களையும்
மலிவான விலையில்பெற

# அம்பிகா மருந்தகம்

கண்டி வீதி, சாவகச்சேரி.

---

மாவடிப் பிள்ளையார் கும்பாபிஷேக மலர்சிறக்க

## எமது நல்வாழ்த்துக்கள்

# சரவணபவன்

## ஆபரண மாளிகை

(தங்க, வைர, நகை வியாபாரம்)

பிரதான வீதி, சாவகச்சேரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீன டிசைன்களில்

22 கரட் தங்கநகைகளை
பெற்றுக்கொள்வதற்கு

விஜயம் செய்ய வேண்டிய இடம்



# வீ.எம்.கே. தங்கமாளிகை

கண்டி வீதி, சாவகச்சேரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகு சாதனப் பொருட்கள்
றேடியோ மணிக்கூட்டு வகைகள்
பாதணிகள்

ஆகியவற்றை மலிவான விலையில்பெற
நாடவேண்டிய நிறுவனம்



★ தேவன் பென்சி ★

பருத்தித்துறை வீதி, கொடிகாமம்.

---

பலசரக்குப் பொருட்கள்
உரவகைகள்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய நிறுவனம்

கண்ணன் களஞ்சியம்

கொடிகாமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீசாலையில்......

பலசரக்குப் பொருட்களா?

பாடசாலை உபகரணங்களா?

அபிடேகத் திரவியங்களா?

கேக் தயாரிக்கும் பொருட்களா?

கோழித்தீன், கால்நடை உணவு வகைகளா?

கம்பி ஆணி, வகைகளா

அலங்காரப் பொருட்களா?

**அனைத்தையும் மலிவான விலையில் பெற நாடவேண்டிய ஸ்தாபனம்**

# நகுலேந்திரா

## பல்பொருள் வாணிபம்

அல்லாரை வீதி, மீசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரங்கொடுக்கும் வெள்ளைமாவடியான்

வேலணையூர் வைத்தியர் சி. இராசரத்தினம், J. P. அவர்கள்
(இளைப்பாறிய அதிபர்)

### நாமகள் துதி

#### வெண்பா

மீசாலைப் பிள்ளையார் மேற்கவிதை நான் பாடக்
கூசாமல் நாவிலுறை நாமகளே — ஆசானைச்
செப்புங் கவிதை சிறக்கச் செய் மேலுமதிற்
தப்பும் வராமல் தவிர்.

### அர்பணம்

#### வெண்பா

இன்சுவை சேர் மாவடியில் என்றும் மீசாலையிலே
தென்புதருஞ் சித்தி விநாயகரே — என்னுடைய
பாக்களை அர்ப்பணித்தேன் பாடிப் பணிவோரும்
ஆக்கம் பெறவே அருள்.

மன்னுயிர்கள் மறையோதி வழிபாடாற்றி
மலந்துவகை பூத்தினிது வாழவென்றே
தன்னுடைய தனித்துவத்தின் பெருமையோடு
தான் தோன்றி மீசாலை ஊரினோர் பால்
இன் சுவைசேர் வெள்ளை மாவடியென்றோதும்
இனிய திருத்தலத்தினிலே கோயில் கொண்ட
அன்னை உமை மகனான பிள்ளையாரை
அனைவருமே அர்ச்சித்துப் போற்றுவோமே.

புரந்திட்ட பெருமையினை எடுத்துக் கூறி
போற்றுகின்றார் மீசாலைப் பிள்ளையாரை
வரங் கொடுக்கும் வெள்ளைமாவடியான் அந்த
வழமையினை இன்னமும் தான் மாற்றவில்லை
பரம் பொருளின் மகிமையினை எடுத்துக் கூறும்
பாக்கியத்தைப் பெற்றவர்கள் உபயஞ்செய்யக்
கரங்குவித்துக் கும்பிடுவோர் தொகையுமிப்போ
கணக்கின்றிப் பெருகுவதைக் காணலாமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதியிலே வாழ்ந்தவர்கள் பிள்ளையார்க்கு
அக்காலந் திருப்பணிகள் செய்து வந்தார்
பீதியின்றி வாழ வழி பிறந்ததாலே
பின்வந்தோர் புனரமைப்புச் செய்து வந்தார்
ஓதி வரும் நீலகண்டப் பிள்ளையாரும்
ஒவ்வாமை நிகழாமற் பேணி வந்தார்
தேதிவரக் கும்பாபிடேகம் செய்தல்
தெய்வத்திற் குற்சாகமுட்டும் தானே.

இடம் பெயர்ந்தேன் மீசாலையூர்க்குச் சென்றேன்
இருந்த இடம் பிரிந்த துயர் தாங்கவில்லை
அடம் பிடித்து மீசாலைப் பிள்ளையாரை
அர்ச்சித்தே ஆக்கினைகள் செய்து வந்தேன்
நடவடிக்கை எடுத்ததையும் நம்பி விட்டேன்
நான் அவரைப் பாட வழி பிறக்கவில்லை
கடமையினை நிறைவேற்றுகின்றேன் இத்தால்
கடவுளது திருவருளுக் கிதுவுஞ் சான்றே

விக்கினங்கள் வாராமற் தீர்க்க வல்ல
வெள்ளை மாவடியுறையும் பிள்ளையாரை
அக்கறையாய்ச் சென்று வழிபட்டு மேலும்
அர்ச்சித்தால் ஆசையெலாம் பூர்த்தியாகும்
பக்குவமாய் விழாவெடுத்துப் பூசை செய்து
பரவசமாய்த் துதிபாடித் துதிப்போருக்குஞ்
சிக்கலெலாஞ் சீக்கிரமாய்த் தீர்ந்து போகுஞ்
செல்வ மொடு செல்வாக்குஞ் சேரும் தானே.

பொங்கலோடுற்சவங்கள் விழாக்கள் செய்தே
பூசிக்கும் மீசாலையூரைச் சேர்ந்த
தங்கு நிழல் வெள்ளை மாவடியென்றோதும்
தலத்திலே தான் தோன்றியாக வந்த
துங்கமுகத் தூமணியைத் துதிப்போமனாற்
தூசாக வினையெல்லாம் தீர்ந்து போகும்
கங்குலெனப் பின்தொடரும் பிறவித் துன்பக்
கடலை நாம் கடந்து கரையேறலாமே.

முதுமை சேர் நீலகண்டப் பிள்ளையார்க்கு
முதல் வணக்கஞ் செலுத்துகின்ற மக்களூரில்
எது வரினும் பிள்ளையார் இருக்கும் போது
எங்களுக் கென்ன பயம் என்றோங்காத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமையினை மீசாலையூரிற் கண்டேன்
பொருந்துவது போலவே தெரியுதிப்போ
இதுவரையும் இடம் பெயராதிருக்கின்றார்கள்
இடம் பெயர்ந்தோர்க்குதவியதும் உண்மை தானே.

அன்னை பராசக்தி மகனாக வந்தோன்
அனைத்துலகும் முதல் வணக்கஞ் செய்யப் பெற்றோன்
கன்மவினை தீர்க்க மீசாலை வந்து
கனித்த வெள்ளை மாவடியிற் கோயில் கொண்டோன்
பின் நிகழப் போவதை முன் கனவிற் சொல்லிப்
பேணி வரும் அடியார்க்குதவி செய்தான்
இன்னுமருள் பாலிக்கும் பிள்ளையாரை
ஏத்துவோர்க்கிடரில்லை ஏற்றந்தானே.

மூர்த்தி தலந் தீர்த்தமெனும் மகிமையோடு
முதிர்ந்த வெள்ளை மாவடியிற் கோயில் கொண்டே
கீர்த்தியுடை நீல கண்டப் பிள்ளையாரும்
கேட்ட வரமத்தனையுங் கொடுப்பதாலே
பார்த்திருந்து பலன் பெற்ற மக்கள் ஊரிற்
பலகோடி திரண்டு குடமுழுக்குச் செய்து
நேர்த்திதனை நிறை வேற்றி வைத்ததாலே
நிலையான பேரின்பப் பேறுண்டாமே.

பேரன்போடாலயங்களனைத்துக் குந்தான்
பொதுவாக குடமுழுக்கு நிகழும் காலம்
பாரமைதி பரிசுத்தமிவற்றுக்காகப்
பல வருடங் கழித்து வரும் நிகழ்ச்சிகாணப்
பேரன் போடெதிர் பார்த்துக் கொண்டிருந்த
பெரியோருக்கக்கறையுண்டதனாலே தான்
தேரமருந் திருநீலகண்டனுக்குத்
திருமுழுக்கு விழா தொடரக் காண்கின்றோமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தையே மகிழ நல்லருள் புரிவாய்

சைவசித்தாந்த பண்டிதர் சங்கீதபூஷணம்
A. K. ஏரம்பமூர்த்தி அவர்கள்

தாளம் : ஆதி

இராகம் : ஹம்சத்வனி

**பல்லவி**

மாவடி விநாயகனே | வேழமுகனே ||
மங்கள கரனே | ப்ரணவ சொரூபனே ||

**அனுபல்லவி**

சேவடி தனைத் தொழுவார் | சிந்தையில் மர்ந்திடுவாய் ||
சிறப்புறக் கருமமெல்லாம் | விருப்பொடு வரங்கொடுப்பாய் ||
( மாவடிவிநாயகனே )

**சரணம்**

செந்தமிழ் மூன்றுஞ் செழிக்கும் | சுந்தர மீசாலைதன்னில் ||
சந்தத மருள் விளங்க | விந்தை பலவே புரிவாய் ||
அந்தமாதி யில்லா நாத | ஆகுவாகனா உல்லாசா ||
கந்தசோதரனே வந்து இது தருணம் |
சிந்தையே மகிழ நல்லருள் புரிவாய் ||
( மாவடிவிநாயகனே )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவருக்கும்
மாவடிப் பிள்ளையார்
திருவருள் கிடைக்கப்
பிரார்த்திக்கிறோம்

# திருக்கணித நிலையம்

(அச்சகம்)

மட்டுவில், சாவகச்சேரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீசாலை மாவடி விநாயகரின்
கும்பாபிஷேக மலர் சிறக்க எமது வாழ்த்துக்கள்



# நேசம் அழகு நகை

4, பிரதான வீதி, சாவகச்சேரி.

சகலவிதமான
அழகுசாதனப் பொருட்களையும்
சிறுவர்களுக்கேற்ற பாடசாலை பைக்
தண்ணீர் போத்தல்களைப் பெறவும்

## நாடவேண்டிய இடம்



# பிருந்தாவனம்

5, கண்டி வீதி, சாவகச்சேரி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகலவிதமான பட்டுப் புடைவைகளும்

மற்றும் றெடிமேற் ஆடைகளும்

கொள்வனவுசெய்ய நாடவேண்டிய ஸ்தாபனம்



# கல்பனா பட்டுச்சோலை

16, சிறப்பங்காடி, சாவகச்சேரி.

---

- எவர்சில்வர் பொருட்கள்
- அழகுசாதனப் பொருட்கள்
- வானொலி, மணிக்கூடு, செருப்புவகை
- மின் உபகரணங்கள்
- பெற்றோமாக்ஸ்

மலிவான விலையில் பெற்றுக்கொள்ள

# விமலாஸ்

9-15 நவீன சந்தை, சாவகச்சேரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீசாலை மாவடிப் பிள்ளையார் கோவில்
கும்பாபிஷேக மலர்சிறக்க வாழ்த்துக்கள்

## விக்னேஸ்வரா வெதுப்பகம்

புத்தூர்ச்சந்தி, மீசாலை.

* பலசரக்கு சாமான்கள்
* வீட்டுப் பாவனைப் பொருட்கள்
* எண்ணெய் வகைகள்

என்பவற்றை மலிவுவிலையில் கிடைக்க
நாடவேண்டிய இடம்

## விக்கினேஸ்வரா களஞ்சியம்

கண்டி வீதி, புத்தூர்ச்சந்தி, சாவகச்சேரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் மீது பக்தியுடன் தொடுத்த பாமாலை

# கீர்த்தனை

ஆக்கியவர்: **திருமதி தே. கிருஷ்ணசாமி அவர்கள்**
(யா. மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்)

இரகம்: **நாட்டை** தாளம்: **ஆதி**

**பல்லவி**

*மாவடி விநாயகனே மாம்பழம் கொண்டவனே*
*பூவடி தனைத்தொழுதே புவி மிசை வாழ்வோமே*
*(மாவடி)*

**அனுபல்லவி**

*மாவடியால் உனைப் பாடிப் பணிந்துமே*
*நாவடியால் நாமம் நாளும் இசைத்துமே*
*(மாவடி)*

**சரணங்கள்**

1. *தாளங்கள் மேளங்கள் தனியிடம் கொண்டிட*
*தாம்தரிகிடதக பாதங்கள் கொஞ்சிட*
*கீதம் தென்றலில் தேனிசை பொழிந்திட*
*நீ நடம் பயின்றிடம் திருநீல கண்ட வெள்ளை*
*(மாவடி)*

2. *மோதகம் ஏந்திய கரம் ஒன்று காத்திட*
*மூவுலகும் உனை முக்கண்ணா என்றிட*
*தேவு தருக்கன் எல்லாம் தீந்தமிழ் பாடிட*
*மேவு மீசாலை திருநீல கண்ட வெள்ளை*
*(மாவடி)*

3. *பக்தியுடன் அடியார் நாளுமே போற்றிட*
*அக்கணம் நீ வந்து அபயம் அளித்திட*
*விக்கினம் தீர்த்திடும் வித்தக விநாயகா*
*எக்குறையு மிலை இனி துணை அனுதினம்*
*(மாவடி)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னந்தோட்ட உரிமையாளருக்கோர் நற்செய்தி

உங்கள் கொப்பராக்களில் இருந்து
சுத்தமாகவும், அதிகளவும் தேங்காய்
எண்ணெய் பெறவும், தேங்காய் எண்ணெய்
பிண்ணாக்கு என்பவற்றை கொள்வனவு
செய்யவும் நாடவேண்டிய நிறுவனம்

# ஏசியன் ஓயில் மில்

பருத்தித்துறை வீதி, கொடிகாமம்.

நெல், புழுங்கல் குற்றவும்
அரிசி மிளகாய் அரைப்பதற்கும்
நாடவேண்டிய நிறுவனம்


# பயனியர் அரைக்கும் ஆலை

கண்டி வீதி, கொடிகாமம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவாசார்யர்கள் ஆசியுரை




நல்லை ஆதீன முதல்வரின் அருளாசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புதிய வசந்தமண்டபத்தில் உற்சவமூர்த்திகள்



திருப்பணிச்சபை செயற்குழு

இடமிருந்து:- திரு அ. கைலாயபிள்ளை, திரு. சோ. கணேசலிங்கம்
திரு சு. அருளானந்தசிவம், திரு ச. சந்திரகுமார், திரு. சி. இராமலிங்கம்
திரு. ஐ. மாணிக்கவாசகர், திரு. க சோமசேகரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைணவம் ஓர் அறிமுகம்

எஸ். வேதநாதன் எம். ஏ.
(சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I
இந்துநாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

## 1.0 முன்னுரை

விஷ்ணுவைப் பரம் பொருளாகக் கொண்டு வழிபடும் சமயத்தையே இன்று வைணவம் என்று அழைக்கின்றோம். சைவம், சாக்தம், வைணவம், காணாபத்தியம், கௌமாரம், சௌரம், என்ற இந்து சமயப் பிரிவுகளுள் வைணவம் தனிப் பெருஞ்சிறப்புடையதாக விளங்குகின்றது. இந்த ஆறு சமயப்பிரிவுகளையும் 'சண்மதங்கள்' எனவும் வழங்குவர் கி.பி. எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவராக அறியப்படும் அத்வைதம் போதித்த ஸ்ரீசங்கராச்சாரியரே இம்மதங்கள் ஆறையும் ஒழுங்குபடுத்தி மீண்டும் நிலை நிறுத்தினார். இதன் காரணமாகவே அவரைச் 'சண்மதஸ்தாபனாச்சாரியார்' எனவும் அழைப்பர்.

விஷ்ணு என்று பெயர்பெறும் கடவுளைப் பரம்பொருளாக கொண்ட கொள்கையையே வைணவசமயம் என்று இன்று அழைக்கின்றோம். உண்மையில் விஷ்ணு, நாராயணன் சங்கர்ஷணர், வாசுதேவர், கோபாலகிருஷ்ணர், திருமால் ஆகிய கடவுளர்களின் இணைப்பே வைணவமதமாக இன்று பரிமளிக்கின்றது எனலாம்.

வேதகால மக்கள் விஷ்ணுவை வழிபட்டனர். இருக்கு வேதத்திலுள்ள ஆறு சூக்தங்கள் விஷ்ணுவை முழுமையாகக் குறிப்பிடுகின்றன. ஏறக்குறைய நூறு இடங்களில் விஷ்ணு என்ற பெயர் இருக்கு வேதத்தில் இடம்பெற்றுள்ளது. விஷ்ணுவின் மூவடிச்சிறப்பை இருக்குவேதத்தில் காணமுடிகின்றது.

'விஷ்ணு' என்ற சொல்லானது வியாபித்த எனப் பொருள்படும் 'விஸ்' என்னும் சொல்லடியாகத் தோன்றியதாகும். இவ்வகையில் விஷ்ணு என்ற சொல்லுக்கு எங்கும் நீக்கமற நிறைந்திருப்பவர் அல்லது எங்கும் நுழையக்கூடியவர் எனப் பொருள் கூறலாம். பண்டைக் காலத்தில் வைணவ சமய முழுமுதற் கடவுளாக நாராயணனும் விளங்கினார். சதபதப் பிராமணத்தில் நாராயணன் என்ற சொல் முதன் முதலாகக் காணப்படுகின்றது. மைத்திராயணீய சம்கிதை, மைத்திராயணீய ஆரண்யகம் ஆகியவற்லும் நாராயணன் பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. மைத்திராயணீய சம்கிதையில் கேசவன், நாராயணன், விஷ்ணு மூன்று தெய்வங்களையும் இணைக்கும் காயத்திரி மந்திரம் காணப்படுகின்றது

வைணவ சமய வழிபாட்டில் இடம் பெறும் 'ஓம் நமோநாராயணாய' என்ற நாராயணனுக்குரிய எட்டெழுத்து மந்திரத்தை முதன்முதலில் நாராயணேபநிடதத்தில் காணமுடிகின்றது. நாராயணன் என்ற சொல்லுக்குப்பல பொருள் உண்டு. நாராயணன் என்ற சொல் நீர்மேல் உறைபவன் அல்லது நீர்மேல் உறங்குபவன் என்ற கருத்துடையதெனவும் கூறுவர். நாராயணன் என்ற சொல்லானது நரன், அயனம் என்ற இருசொற்சேர்க்கையினால் ஆனது. வேதங்களில் அயனம் என்றசொல் செல்லுதல், வழி, பாதை என்ற பொருளில் வழங்கப்பட்டுள்ளது. இவ்வகையில் நராகிய மானுடக்கூட்டம் இறுதியாகச் சென்றடையும் அல்லது சேருமிடம் நாராயணன் என்றாகும். இதிகாசங்களும் புராணங்களும் நாராயணனையும், விஷ்ணுவையும் வெவ்வேறாகப் பிரித்துப்பேசாமல் இருவரும் ஒருவரே என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றது.

ஒருமுறை சீடர்கள் இருக்கும் இடத்தைவிட்டு இராமானுஜர் விடை பெற்றுப் புறப்படும்போது சீடர்கள் மனம்வருந்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் தனது உருவத்தை விக்கிரகம் செய்வித்து அதில் தமது சக்தியை ஆவே சிக்கச்செய்து அவர்களிடம் கொடுத்தார். இதை இன்றுமுதல் எனது சொரூபமாகவே பாவித்துக் கொள்வீர்களாக மன அமைதி உண்டாகும் என்றார்.

சில நாட்களின் பின்னர் இவரது அவ தார ஸ்தலமான ஸ்ரீபெரும்பூதூர் வாழ் மக்கள் இவரது திருவுருவத்தைச் சமைத்து வேதவிதிப்படி பிரதிஷ்டை செய்துள்ளனர். அதேபோன்று ஸ்ரீரங்கத்திலும் சிலை ஒன்று செய்து காவேரியில் நீராட்டி புனிதப் படுத்தி பீடத்தில் அமர்த்தினர். இராமானு ஜர் பிரம்மமந்திரத்தை முகர்த்து அதன் வாயிலாகத் தமது பிராணனை அதில் பிர திஷ்டை செய்து அமைதியாக பரமபதப் பிராப்தியெய்தி மக்களின் கண்களுக்கு புல னாகாது மறைந்துவிட்டார்.

இன்றும் வைஷ்ணவ ஆலயங்களில் இராமானுஜர் ஆலயம் இருப்பதையும் அவர் விக்கிரகஸ்வரூபத்தில் இருப்பதையும் பார்க் கலாம் வைஷ்ணவ சம்பிரதாயத்தில் வட கலைவைணவம், தென்கலை வைணவம் என்ற இருபிரிவுகளிலும் இராமானுஜருக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

*வடகலையில்*

''இராமானுஜ தயாபாத்திரம் ஜ்ஞான வைராக்கிய பூஷணம் ஸ்ரீமத்வேங்கட நாதர்யம் வந்தே வேதாந்த தேசிகம் ... எனத் தொடங்கிப் பாராயணம் செய்யப் படுகிறது.

*தென் கலையில்*

''ஸ்ரீ சைலேச தயாபாத்திரம் தீபக்தியாதி குணர்ணவம் யதீந்திரப் பிரணவம் வந்தே ரம்யஜா மாதரம்முநிம்......
எனத் தொடங்கிப் பாடப்படுகிறது.

இராமானுஜர் அவதரித்த தினமான சித்திரைத் திருவாதிரை விஷ்ணு ஆலயங் களில் கொண்டாடப்படுகிறது. இராம + அனுஜன் என்பதில் அனுஜன் என்பது தம்பி இராமனின் தம்பி இலக்குவன். இராமாய ணத்தில் வால்மீகியால் இலக்குவனுக்குத் தரப்படுகின்ற ஜாதகமே இராமானுஜரின் ஜாதகம் எனக்கூறுவர். எப்படி திரேதாயு கத்தில் இராமனின் அன்புத் தம்பியாக சேவையாற்ற ஆதிசேடன் அவதரித்தாரோ அதேபோல் துவாபரயுகத்தில் கண்ணனின் தமையனாக திருமாலின் கட்டளைப்படி அவதரித்தாரோ கலியுகத்திலும் அந்த ஆதி சேடன் இராமானுஜனாக அவதரித்தார் என்று நம்பப்படுவதாலேயே வைஷ்ணவ ஆலயங்களில் அவரைத் தெய்வ நிலைக்கு உயர்த்தி வழிபடுகிறார்கள். பூஜையும் இறுதியாக இடம்பெறுகிறது.

இவருக்கு உடையவர், யதிராஜர், எம் பெருமானார், பாஷ்யக்காரர் இளையாழ் வார் என பெயர்கள் கூறப்படுகின்றன ஆதலால் நாமும் கீழ்வரும் சுலோகத்தைச் சொல்லி இராமானுஜனை வழிபட்டு அருள் பெறுவோமாக.

''யோ. நித்யமச்யுத பதாம்புஜ யுக்மருக்ம
வ்யா மோஹதஸ் ததிராணி த்ருணாயமேதே
அஸ்மத்குரோர் பகவதோஸ்ய
தயைகளிந்தோ
ராமானுஜஸ்ய சரணம் சரணம் பிரபத்யே

சங்கர்ஷணர் என்ற கடவுளும் வைணவ சமயத்தில் சிறப்பிடம் பெற்றிருந்ததை இலக்கியங்களும் கல்வெட்டுக்களும் உறுதி செய்கின்றன. சங்கர்ஷணர் என்ற சொல் வின் பொருள் உழுதல் அல்லது சாலிழுத் தல் என்பதாகும். இக்கருத்தானது இத் தெய்வம் விவசாயத்துடன் தொடர்புடைய தென்பதற்குச் சான்றாகும். முதன் முதலில் அர்த்த சாத்திரத்தில் சங்கர்ஷணர் குறிப் பிடப்படுகின்றார். மகாபாரதத்திலும் புரா ணங்களிலும் சங்கர்ஷணர் வைணவத் தெய் வமாகச் குறிப்பிடப்படுகின்றார். சங்கர்ஷ ணர் என்ற தெய்வத்தோடு பனைமரம் தொடர்புபடுத்தப்படுகின்றது. கி.மு. நான் காம் நூற்றாண்டிலே சக்கர்ஷண வழிபாடு மக்களிடையே செல்வாக்குப் பெற்றிருந்த தென அறிஞர் கருதுகின்றனர். சங்கர்ஷணர் வழிபாடு வடமதுரைப் பிரதேசத்தில் அதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம் செல்வாக்குப் பெற்று விளங்கியது. வாசுதேவர் என்றசொல் எல்லாப் பொருள் களிலும் உறைகின்றவர் எனப் பொருள் படும். 'வாஸ்' என்ற மூலத்திலிருந்து பெறப்பட்டதாகக் கொள்ளப்படுகின்றது. மகாபாரதமும், புராணங்களும் வாசுதே வரை இக்கருத்திலேயே குறிப்பிடுகின்றன. கி. மு முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த சாசனங்கள் சங்கர்ஷணர், வாசுதேவர் ஆகிய இருவரையும் ஒன்றாகச்சுட்டிநிற்கின் றன. பகவத்கீதையில் அர்ச்சுனன் அடிக்கடி வாசுதேவ கிருஷ்ணனை விஷ்ணு என்று விளிப்பதாகக் கூறப்பட்டுள்ளது. கி. மு. மூன்றாம் நூற்றாண்டைச் சார்ந்ததாக அறியப்படும் மகாநாராயண உபநிடதத்தில் விஷ்ணு, நாராயணன், வாசுதேவர் ஆகிய மூவரையும் இணைக்கும் காயத்திரிமந்திரம் ஒன்றுண்டு. சாந்தோக்கிய உபநிடதம் தேவகிமைந்தனாகிய கிருஷ்ணரைப் பற்றிக் குறிப்பிடுவதும் நோக்கற்பாலதாகும். கோபாலகிருஷ்ணனென்ற கடவுளும் வைண வத்தில் தனித்துவம் பெற்றிருந்தார். வாசு தேவகிகிருஷ்ணனின் பிறப்பும் வளர்ப்பும், கோபாலகிருஷ்ணனின் பிறப்பு வளர்ப்பும் ஒத்ததன்மையுடையதாகக் காணப்படுகின் றது. இவர்கள் இருவரும் ஒருவரே என்ற எண்ணம் கிருஷ்ண வழிபாட்டினரிடையே ஏற்படுவதற்கு இத்தகைய கதைகளும் கார ணமாக அமைந்திருக்கவேண்டும். 'மெய்யறி வாளர்கள் பலபெயரிட்டு அழைத்தாலும் மெய்ப்பொருள் ஒன்றே' என்ற இருக்கு வேதசமய தத்துவசிந்தனைப்படி விஷ்ணு நாராயணன், சங்கர்ஷணர், வாசுதேவர், கிருஷ்ணர், கோபாலகிருஷ்ணர் என்ற எல் லோரும் ஒருவரே என்பது உணரற்பாலது.

பண்டைக் காலத்தில் வைணவ சமயத் தைப் பல பெயரிட்டு அழைத்தனர். பாக வதம், பஞ்சராத்திரம், சாத்துவதம், ஏகாந் திகம் என்பன வைணவ சமயத்தைச்சுட்டி நிற்கும் பிற குறிப்பிடத்தக்க பெயர்களா கும். இச்சமய வழிபாட்டாளர்களை பாக வதர்கள், பஞ்சராத்திரர்கள், சாத்துவ தர்கள், ஏகாந்திகள் என இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. 'வைணவம்' என்ற சொல்லை முதன்முதலாக மகாபாரதத்தின் பிற்பகுதியிலேயே காணமுடிகின்றது. வைணவர்கள் என்ற பிரிவினர் மகாபாரதத் தின் இறுதிப்பகுதியில் மும்முறை பேசப்ப டுகின்றனர். (மகாபாரதம் xviii. 6, 97: 6.98; 6.103) இம்மதம் இன்று நூற்றிமுப் பத்தொன்பது கிளைகளைக் கொண்டதாக விளங்குவதாக அறிஞர் குறிப்பிட்டுள்ளனர். இவ்வாறு காலத்துக்குக்காலம் வைணவம் பலபெயர்களில் வளர்ந்து வந்துள்ளமை தெளிவாகின்றது.

## 1.1 தமிழ் இலக்கியத்தில் வைணவம்

பண்டைத் தமிழர்கள் வைணவக் கட வுளை 'மாயோன்' என்றும் 'திருமால்' என்றும் வழங்கினர். தமிழர் வகுத்த நான்கு நிலங்களுள் ஒன்றாகிய காடும் காடுசார்ந்ததுமாகிய முல்லை நிலத்துத் தெய்வமாக மாயோன் கொள்ளப்பட்டான் இதனையே 'மாயோன் மேவ காடுறை உல கமும்' என்று தொல்காப்பியம் குறிப்பிடு கின்றது. பெரும்பாணாற்றுப்படை திரு மாலைப் 'பாம்பணைப்பள்ளி அமர்ந் தோன்' எனவும், 'இருநிலங்கடந்த திருமறு மார்பின் முந்நீர் வண்ணன்' எனவும், வரு ணிக்கின்றது. பிரமன் விஷ்ணுவின் நாபிக் கமலத்தினின்றுந் தோன்றினான் என்ற வைணவ மரபையும் பொருநராற்றுப்படை

'நீலநிற உருவின் நெடியோன் கொப்பூழ்
நான்முக ஒருவற்பயந்த பல்லிதழ்த்
தாமரைப் பொருட்டின்''

எனக்குறித்து நிற்கின்றது. இச் செய்தி கலித்தொகையிலும் இடம் பெற் றுள்ளது. மாயோன் பிறந்த நாளின் சிறப் பினை மதுரைக்காஞ்சி

'கணங்கொள் அவுணர்க் கடந்த
பொலந்தார்
மாயோன் மேயஓண நன்னாள்'

என்கிறது. சிவனும், திருமாலும் ஒருவரு மாய் இணைந்து கோலங்காட்டுவது போல செக்கர் ரணமும் நீலக்கடலும் ஒன்றுடன் ஒன்று இணைந்து விளக்கும் குறிப்பை அக நானூறு குறிப்பிடுகின்றது. இது ஹரிஹர மூர்த்தத்தின் தொன்மைக்குச் சான்றாகின் றது. கலித்தொகை பாம்பை அணையாகவும் சக்கரத்தை ஆயுதமாகவும் கொண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டவன் திருமால் எனக் குறிப்பிடுகின்றது. திருமாலைப் போற்றுகின்றனவாகப் பரி பாடலில் ஆறு பாடல்கள் அமைந்துள்ளன. சிலப்பதிகாரத்திலும் வைணவ சமயத்தைச் சிறப்பிக்கும் குறிப்புகள் பல காணப்படுகின் றன. நாடுகாண்காதை காடுகாண்காதை களிற் பூலோக வைகுந்தமெனப் போற்றப் படும் திருவரங்கமும், திருப்பதியும் சிறப் பிடம் பெறுகின்றன பலராமனுக்கு ரிய கோயில் 'மாலிருங்குன்றம்' என்கிறது. சிலப்பதிகாரமும் இதனையே ''திருமால் குன்றம்'' எனக் குறிப்பிடுகின்றது. பண் டைத் தமிழர்கள் வாலியோன் (பலராமன்) வழிபாடு உடையவர்களாக விளங்கினர். பலராமன் வெள்ளை நிறமுடையவன்; கலப்பையை ஆயுதமாக உடையவன் ஒரு கையில் உலக்கையினை உடையவன்; பெருங் பனைக்கொடியினை உடையவன்; பெருங் குடியன் என்று கூறப்படுகின்றார். பலராம னுக்கு கலப்பை ஆயுதம் என்று கூறுவதால் இவர் உழவர்களின் தெய்வமாக ஆகிவிட் டார் என அறிஞர் குறிப்பிடுகின்றனர். சங்க இலக்கியங்களில் புறநானூறும், பரி பாடலும் பலராமனைத் திருமாலோடு சேர்த்து அவனுக்கு உடன்பிறந்தவனைப் போலக் கபிலரும் நற்றிணையில்

'மாயோன் அன்னமால் வளர்க்கவா அன் வாலியோன் அன்ன வயங்கு வெள்ளருவி'

என இருவரையும் ஒருசேரக் குறிக்கின் றார்.

பல்லவர் காலத்தில் தோன்றிய ஆழ் வார்களின்து பாசுரங்களான நாலாயிரம் திவ்வியப்பிரபந்த பாடல்கள்மூலம் வைண வம் தென்னாட்டில் சிறப்பாகப் பரிமளித் தது. தென்னாட்டில் வைணவம் மேம்பாட டைவதற்கு ஆழ்வார்கள் தொண்டாற்றி யதுபோல வடநாட்டில் வைணவத்தை மிகச்சிறப்பாக வளர்த்தெடுத்த பெருமைக் குரியவர்களாக குப்தமன்னர்களைக் குறிப் பிடலாம். சோழமன்னர்களும் வைணவ வளர்ச்சிக்கு உதவினார்கள் கம்பராமாய ணத்தில் வைணவம் பூரணத்துவம் பெறு கின்றது எனலாம். நாயக்க மன்னர்களும் வைணவ மதத்திற்கு ஆதரவு நல்கியதை தமிழ் இலக்கியங்கள் புலப்படுத்துகின்றமை குறிப்பிடற்பாலதாகும்.

## 1.2 ஐந்து திருமேனிகள்

வைணவம் இறைவனின் ஐவகைத் திருமேனிகளைக் குறிப்பிடுகின்றது. எம் பெருமானின் திருமேனி பரம், வியூகம், அந்தரயாமி, அர்ச்சை என்ற ஐந்து நிலை களில் விளங்கும் என்பது வைணவத்தின் அடிப்படைக் கொள்கையாகும். பரம் என் பது வைகுண்டத்தில் எழுந்தருளியிருக்கும் பரவாசுதேவனுடைய உருவமாகும். வியூ கம் என்பது பாற்கடலிலே அனந்தனாகிய ஆதிசேடனிலே பள்ளிகொண்டு படைத்தல் காத்தல், அழித்தல், சம்சாரபந்தத்தில் இருந்து கரையேற்றுதல் ஆகிய நான்கு தொழில்களையும் முறையே செய்யும் பிரத் தியும்னன், அநிருந்தன், சங்கர்ஷணன், வாசுதேவன் ஆகிய உருவங்களைக் குறிக் கும். விபவம் என்பது இராமன், கிருஷ் ணன் போன்ற எண்ணற்ற அவதாரத் திரு மேனிகளைக் குறித்துநிற்கின்றது. அந்தர் யாமி என்பது படைக்கப்பட்ட சீவராசிகள் யாவினுள்ளும் தோன்றாத் துணையாக நின்று அருள்பாலிக்கும் திருமேனியாகும். அதாவது எல்லோருடைய இதயத்திலும் எழுந்தருளியிருக்கும் இருப்பே அந்தர்யாமி எனப்படும். அர்ச்சை என்பது திவ்விய தேசங்களில் திருமேனிகொண்டு எழுந்தரு ளியுள்ள நிலையினையும், மற்றும் பக்தர்க ளின் வேண்டுகோளின்படி அவரவர் விருப் பத்திற்கேற்றவாறு திருமேனிகொண்டு நிற் கும் நிலையினையும் குறித்து நிற்கின்றது. ஆலயங்களில் விக்கிரகவடிவில் எழுந்தருளியி ருந்து அருள்பாலிக்கும் திருமேனிகளே அர்ச்சை எனப்படும். இவ்வாறு வைணவக் கடவுளர்களின் அருட்கோலங்கள் ஐந்து வகையினதாக விளங்குகின்றன.

## 1.3 அவதாரக் கோட்பாடு

வைணவசமயத்தில் தனிச்சிறப்புப் பெற்றுவிளங்குவது அவதாரக் கோட்பாடா கும். அவதாரம் என்ற சொல்லுக்கு ''கீழி றங்குதல்'' என்பது பொருளாகும். இச் சொல் தோன்றுதல், கீழிறங்குதல், பிறந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தல் ஆகிய மூன்று பண்புகளில் எதனையும் சுட்டவல்லது எனவும் அறிஞர் கருதுகின்றனர் அடியவர்களுக்கு அருள்புரிவதற்காகவே பரம்பொருள் தனது நிர்க்குலாப் பிரம நிலையிலிருந்து சகுணப் பிரமமாகக் கீழிறங்கி வருகின்றார். அவதாரம் என்ற சொல் புராணகாலத்தில் அவதாரக் கோட்பாடு சிறப்புற்றிருந்திருக்க வேண்டும் என எண்ண இடமுண்டு. இருக்கு வேதத்தில் விஷ்ணுவின் அகன்ற மூவடிச்சிறப்பு கூறப்படுகின்றது. வேத இலக்கியங்களில் வாமன கூர்மவராக மச்ச அவதாரங்களுக்கான கரு காணப்படுவதாக அறிஞர் குறிப்பிட்டுள்ளனர். வைணவ கடவுட் கொள்கையினை நோக்கும்போது எவ்வெப்போது அறம் அழிகின்றதோ அவ்வப்போது அவதாரம் ஏற்படும் எனக் கூறப்படுகின்றது. இதனை பகவத்கீதை

> "எப்பொழுதெல்லாம் அறம் அழிந்து போய் மறம் மேலெழுகிறதோ, அப்பொழுதெல்லாம் என்னை நான் பிறப்பித்துக் கொள்கின்றேன்" என்கிறது.

இதன்படி அவதாரங்களின் தொகை அளவற்றன என எண்ணமுடியும். நல்லோரைக் காப்பாற்றுவது தீயோரை அழிப்பது தர்மத்தை நிலைநாட்டுவது என்ற மூன்று நோக்கங்களின் பொருட்டு அவதாரம் நடைபெறுவதாக பிரமபுராணமும் மார்க்கண்டேய புராணமும் குறிப்பிடுகின்றன. இதனையே பகவத்கீதையும்

> 'நல்லோரைக் காப்பதற்கும் கெட்டவரைக் சுரந்தொடுக்கும் தர்மத்தை நிலை நாட்டுவதற்கும் யுகந்தோறும் நான் அவதரிக்கிறேன்' என்று குறிப்பிடுகின்றது.

பத்ம புராணத்தில் மேற்கூறப்பட்ட மூன்று நோக்கங்களுடன் தெய்வங்களின் நன்மையின் பொருட்டும் தகுதியுடையவர்களுக்கு முத்தி அளிக்கும் பொருட்டும் தான் அவதரிப்பதாக விஷ்ணுவே தசரத மன்னனுக்கு உணர்த்தியதாகக் கூறப்பட்டுள்ளது.

அவதாரங்களின் எண்ணிக்கை பத்து என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட போதும் இதிகாசங்களும் புராணங்களும் வெவ்வேறு எண்ணிக்கைகளைக் குறிப்பிடுகின்றன. மத்ஸியம் (மீன்) கூர்மம் (ஆமை) வராஹம் (பன்றி) நரசிம்மம் (மனித சிங்கம்) வாமனன் (குள்ளன்) பரசுராமன் இராமன் கண்ணன், புத்தன், கல்கி என்ற பத்து அவதாரங்களே பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டவையாகும். மகாபாரதத்தின் நாராயணீயப் பகுதியில் ஹம்சம், கூர்மம், மச்சம், வராகம், நரசிம்மம், வாமனம் இராமர் (பார்க்கவ) இராமர் (தசரத) சாத்வதர் (வாசுதேவன்) கல்கி ஆகிய பத்து அவதாரங்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளன. மகாபாரதத்தின் சாந்தி பர்வத்திலும் ஹம்சம், கூர்மம், மச்சம், வராகம், நரசிம்மம், வாமனம், பரசுராமர், இராமர், கிருஷ்ணர், கல்கி ஆகிய அவதாரங்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளது. மகாபாரதத்தின் பின்னிணைப்பாகவுள்ள ஹரிவம்சத்தில் வராகம், நரசிம்மம், வாமனம், தாத்தரேயர், யமதக்கினி, பரசுராமர், இராமர், கிருஷ்ணர், கல்கி அவதாரங்கள் கூறப்பட்டுள்ளன. மகாபாரதத்தில் அவதாரவரிசை, அவதார எண்ணிக்கை என்பவற்றில் வேறுபாடு காணப்படுவது போல புராணங்களிலும் இத்தகைய வேறுபாடுகள் காணப்படுகின்றன. வாயுபுராணம், நாராயணன், நரசிம்மம், வாமனம், தாத்தரேயர், மாந்தரி, யமதக்கினி, இராமர், வேதவியாசர், கிருஷ்ணர், கல்கி என்னும் பத்து அவதாரங்கள் பற்றிக் கூறுகின்றது. மச்சபுராணத்தில் கிருஷ்ணருக்குப் பதிலாக புத்தர் அவதார வரிசையில் இடம்பெறுகின்றார். பாகவத புராணம் அவதாரங்களின் எண்ணிக்கை **16, 22, 23** எனக் குறிப்பிட்டு மூன்று பட்டியலைத் தருகின்றது.

பஞ்சராத்திர நூல்களில் 39 அவதாரங்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளன. லிங்கபுராணத்தில் இடம்பெறும் மச்சம், கூர்மம், வராகம், நரசிம்மம், வாமனம், பரசுராமர், இராமர், கிருஷ்ணர், புத்தர், கல்கி என்னும் பத்து அவதாரங்களே மிகவும் பிர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரபல்யமானவை எனப் பாஜத்வா கூறுகின்றார். ஸ்ரீமாமல்லபுர ஆதிவராகக்குகை கோயிற் கல்வெட்டிலும் புத்தர் அவதாரமாக இடம்பெறுகின்றார். எனினும் ஆழ்வார்களின் பாசுரங்கள் புத்தரை விஷ்ணுவின் அவதாரமாகக் குறிப்பிடவில்லை என்பது குறிப்பிடற்பாலதாகும். சமண பௌத்தத்திற்கு எதிரான போராட்டம் நடந்துகொண்ட காலகட்டத்தில் ஆழ்வார்கள் புத்தரை ஓரவதாரமாகக்கொள்ளமாட்டார்கள் என்பது வெளிப்படையாகும். பெரியாழ்வார் விஷ்ணுவின் தசாவதாரங்களை

''தேவுடைய மீனமாய் ஆமையாய்
ஏனமாய் அரியாய்க் குறளாய்
மூவுருவிலிராமனாய்க் கண்ணனாய்க்
கற்கியாய் முடிப்பான் கோயில்''

எனத் தமது திருமொழியில் வரிசைப் படுத்திக் காட்டுகின்றார். ஆழ்வார்களது பாடல்களிலும் அவதாரங்களின் எண்ணிக்கை வெவ்வேறாகக் காணப்படுகின்றன. பூதத்தாழ்வாரும் பேயாழ்வாரும் ஆங்கு ஆங்கே அவதாரசெயல்கள் பற்றிக்குறிப்பிட்டுள்ளபோதும், பெரியாழ்வார் குலசேகராழ்வார், திருமங்கையாழ்வார், திருமழிசையாழ்வார் ஆகியநால்வருமே ஏனைய ஆழ்வார்களைவிட அவதாரக் கருத்துக்களுக்கு அதிகமுக்கியத்துவம் கொடுத்துள்ளனர். இராமகிருஷ்ண அவதாரங்களே சிறப்பாக இல்வாழ்வார்களைப் பெரிதும் கவர்ந்துள்ளன எனலாம். இராமாவாதாரத்தைப் போல் கண்ணாவதாரமும் ஆழ்வார்களைப் பெரிதும் கவர்ந்துள்ளது. குலசேகராழ்வார் திருமங்கையாழ்வார், நம்மாழ்வார் என்போர் கண்ணாவதாரத்தைச் சிறப்பித்துள்ளனர். வைணவத்தில் இடம்பெறும் அவதாரக்கோட்பாடு டார்வினின் கூர்ப்புக் கொள்கையோடு இயைந்து செல்வதாக அறிஞர் எடுத்துக்காட்டியுள்ளனர். இவ்வாறு அவதாரக்கோட்பாடு வைணவத்துக்கேயுரிய தனிச்சிறப்பம்சமாகும்.

## 1 4 வடகலையும் தென்கலயும்

வைணவத்தை வளத்தவர்களுள் ஆழ்வார்களுக்குப் பின்னர் இராமானுசர் குறிப்பிடத்தக்கவர் எனலாம். இவருடைய காலத்திற்குப் பின்னர் (கி. பி. 11ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி வைணவத்தில் பிளவேற்பட்டது. இதனால் தமிழ்நாட்டில் வடகலை தென்கலையென்ற இருவைணவப் பிரிவுகள் தோற்றம் பெற்றன. சரணாகதிக் கொள்கை (பிரபக்தி) பற்றியகருத்தில் ஏற்பட்ட கருத்துவேறுபாடே இப்பிரிவுகள் ஏற்பட்டமைக்குப் பிரதான காரணமாகும். இவற்றிற்கு வேதாந்ததேசிகரும் பிள்ளை லோகாச்சாரியாரும் தலைமைதாங்கினர். இறைவனின் அன்பைப்பெற அடியார்கள் இறைவனைத் தேடிப்பற்றிக் கொள்ளவேண்டுமென்பது வடகலைப் பிரிவினர் கருத்தாகும். குரங்குக்குட்டியானது தன்தாயைப் பற்றிக்கொள்வது போன்றதே இந்நிலை என்பது வடகலையினரின் விளக்கமாகும். இறைவனே அடியார்களைக் கைதூக்கி விடவேண்டுமென்பது தென்கலைப்பிரிவினரின் கொள்கையாகும். இவர்கள் தங்கள் கொள்கைக்கு விளக்கமாக தாய்ப்பூனை குட்டியைக் கவ்விச்செல்வதைக் குறிப்பிடுவர். வடகலையினர் வடமொழியிலமைந்து விளங்கும் வேத இலக்கியங்கள் முதலானவற்றை பிரமாணமாகக் கொள்வர். தென்கலையினர் தமிழ்மொழியிலமைந்து விளங்கும் ஆழ்வார்களின் நாலாயிரத்திவ்விய பிரபந்தப்பாசுரங்களைப் பிரமாணமாகக் கொண்டு அதன்வழி ஒழுகிவரும் பண்புடையவர்கள். விஷ்ணுவின் திருவடிகள் இரண்டையும் தவிர உயிர்களுக்குக் கதி இல்லை என்பதைக் குறியீடாகக் காட்ட அவனின் திருவடிகளைப்போல இடும்நாமத்திலும் வடகலையர் தென்கலையரிடையே வேறுபாடு காணப்படுகின்றது.

## 1.5 வைணவ உரைவளம்

வைணவம் ஏற்றம் பெற்றமைக்கு வைணவ உரை நூல்கள் பிரதான காரணமெனலாம். வைணவம் உரைவளத்தால் பரிமளிக்கின்றது. வைணவத்தைச் சிறப்பிக்கும் ஆழ்வார்களின் பாடல்கள் நாலாயிரத் திவ்யப்பிரபந்தமாகும். திவ்வியப்பிரபந்தங்களையும் அவற்றின் பொருட் சிறப்புகளையும் ஆழ்வார்களிடம் நேரில்பெற்று அவற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றினை உலகில் பரவச் செய்தவர் நாதமுனி
கள் ஆதலின் அப்பெரியாரையே முதல்
உரையாசிரியராகக் கொள்வது வைணவ
மரபாகும். அவர் முதலாகவந்த அவ்வுரை
உய்யக்கொண்டார், மணக்கார் நம்பி, ஆள
வந்தார் (நாதமுனிகளின் பேரர்), பெரிய
நம்பிகள், திருமாலையாண்டான், இராமா
நுஜர் காலம்வரையிலும் கேள்வி வாயிலா
கவே வளர்ந்து வந்து எம்பெருமானார்
காலத்தில்தான் வியாக்கியானம் பெயரில்
நூல்வடிவம் பெற்றது.

## 16 வைணவ ஆலயங்கள்

வைணவ வழிபாட்டுக்கென இந்தியா
விலும் ஈழத்திலும் வைணவத்திருத்தலங்
காணப்படுகின்றன ஈழத்தில் பொன்
னாலை ஸ்ரீவரதராஜப் பெருமாள் கோவில்
வண்ணை ஸ்ரீவெங்கடேச வரதராஜப்பெரு
மாள் கோவில் கோப்பாய் ஸ்ரீகிருஷ்ணன்
கோயில் கீரிமலை ஸ்ரீமத்நாராயணசுவாமி
கோயில் துன்னாலை ஸ்ரீவல்லிபுர ஆழ்வார்
சுவாமி கோயில் கோண்டாவில் வல்லிபுர
நாதர் கோயில் வட்டக்கச்சி ஸ்ரீரங்கநாதன்
கோயில் கள்ளிக்குளம் அனாதரட்சகன் ஆல
யம் முள்ளியவளை மகாவிஷ்ணு கோயில்
திருகோணமலை ஸ்ரீகிருஷ்ணன் கோயில்
கல்லடி ஸ்ரீகிருஷ்ணசுவாமி கோயில் குருக்
கள்மடம் ஸ்ரீகிருஷ்ணசுவாமி கோயில்
வக்கிஎல்ல ஸ்ரீநாராயணன் கோயில் தம்பி
லுவில் பெரியதம்பிரான் கோயில் குருக்கள்
ஸ்ரீலட்சுமி நாராயணர் கோயில் என்பன
குறிப்பிடத்தக்க வைணவத் திருத்தலங்க
ளாக விளங்குகின்றன. மேலும் தெகிவளை
மண்டூர், கல்முனை, களுவாஞ்சிக்குடி,
கிரான், பெரியபோரதீவு, வாழைச்சேனை
தெவிநுவரை ஆகிய இடங்களிலுள்ள ஸ்ரீ
மகாவிஷ்ணு என்ற பெயருள்ள கோயில்க
ளும் களுவாஞ்சிக்குடி, காரைதீவு, தம்புலு
வில், மண்டூர் முதலிய இடங்களிலுள்ள
ஸ்ரீமகாவிஷ்ணு கோயில் என்றபெயருள்ள
கோயில்களும் சிறப்புமிக்க வைணவத்திருத்
தலங்களாக விளங்குகின்றன. தமிழ்நாட்டு
வைணவம் வர்ணாசிரதர்மக் கோட்பாட்
டைப் புறந்தள்ளி வளர்த்தமைக்கு அழகர்
கோயில் ஓர் எடுத்துக்காட்டாகும். ஈழத்
தில் கோண்டாவில் கிழக்கில் அமைந்து
விளங்கும் ஸ்ரீவல்லிபுரநாதர் தேவஸ்தான
மும் சமூகமக்களால் வளமாகப் பரிபாலிக்
கப்பட்டு வளர்ந்து வருவது ஈழத்து வைணவ
சமய வரலாற்றில் குறிப்பிடற்பாலது.

## 17 முடிவுரை

இந்துசமயப் பிரிவுகளுள் வைணவ சம
யம் தனிப்பெருஞ் சிறப்புடையதாக விளங்
குகிறது. இச்சமயநெறி பல்வேறு காலகட்
டங்களில் பற்பல பெயர்களில் வழங்கிவந்
திருக்கின்றது. வைணவசமயத்தை வட
மொழி நூல்களும் தமிழ் இலக்கியங்களும்
பெரிதும் வளம்படுத்தியுள்ளன. பெயர்கள்
வேறுபட்ட போதிலும் வடமொழி இலக்
கியங்கள் கூறும் வைணவக் கடவுளர்களுக்
கும் தமிழிலக்கியங்கள் காட்டும் வைணவக்
கடவுளர்களுக்குமிடையில் பண்பு தொழில்
அடிப்படையில் ஒற்றுமைகள் உள்ளன.
வைணவத்தை வளர்த்தெடுப்பதில் உரை
நூல்களும் உறுதுணை புரிந்துள்ளன. வைண
வத்தில் தனித்துவம் பெற்றுவிளங்கும் அவ
தாரக் கோட்பாடுபற்றி இதிகாசபுராணங்
களும், நாலாயிரத்திவ்விய பிரபந்த பாசு
ரங்களும் சிறப்பாகக் குறிப்பிடுகின்றன.
இராமானுசருக்குப் பின் தமிழ்நாட்டில்
வடகலையினரும் தென்கலையினரும் வைண
வத்தை வளர்த்துள்ளனர். வைணவத்
திற்கே சிறப்பாயமைந்த விழாக்களும் விர
தங்களும் உள்ளன. தமிழ்நாட்டு வைணவம்
உயர்வு தாழ்வின்றி எல்லோருக்கும் ஏற்ற
மளித்தது போல ஈழத்து பல வைணவக்
கோயில்கள் இந்துக்கள் அனைவரையும்
இணைக்கும் சமய நிறுவனமாக விளங்கி
வருகின்றது. உயர்வு தாழ்வற்ற இந்து
சமயத்தை வளர்த்தெடுப்பதில் இந்துசமயப்
பிரிவுகளுள் வைணவம் வெற்றிபெற்றுள்
ளதுவெனலாம். இவ்வாறாக வாழும்
இந்துமதத்தில் வைணவம் இன்றும் மிகச்
சிறப்பாக விளங்கிவருகின்றமை குறிப்பிடற்
பாலதாகும்.

## உசாத்துணை நூல்கள்

Champakalakshmi R. Vaisnava Iconography in the Tamil Country. New Delhi 1981.
Gonda, J. Visinuism and Saivism A Comparison London 1970.
இலங்கைத் திருநாட்டின் இந்துக்கோயில்கள் பிரதேச அபிவிருத்தியமைச்சு கொழும்பு 1948
பி. ஸ்ரீ தசாவதாரவைபவம் சென்னை 1962.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீசாலை மாவடிப் பிள்ளையார்
கும்பாபிடேக மலர் சிறக்க
எமது வாழ்த்துக்கள்

எப். எஸ். மருந்தகம்

23/2 மணல்தறை ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

நவீன டிசைன்களில்
ஜீன்ஸ், சோட்ஸ், சேட்
போன்றவற்றை
தைத்துக் கொள்ள
நாடவேண்டிய இடம்

பிரியாஸ்

தையல் நிலையம்

அல்லாரை வீதி, மீசாலை.

திருமணம் மற்றும் முகூர்த்தப்
பட்டுப் புடைவைகளை எண்ணற்ற ரகங்களில்
உங்களின் எண்ணம்போற் தெரிவு செய்திட

ஜவுளி உலகில் நவீன முன்னோடிகள்

இளவரசி ரெக்ஸ்ரைல்ஸ்

57, நவீன சந்தை, சாவகச்சேரி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமய மரபில் பெண்மை

செல்வி. விக்னேஸ்வரி சிவசம்பு,
விரிவுரையாளர்,
இந்து நாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,
28-06-1997.

''பெண்மை'' எனும் சொல் கடைகுறைந்து பெண்ணென நின்று பின்னர் பெண்ணெனும் ஓர் இனத்தைக் குறிப்பதாயிற்று, இவ்வகையிலே பெண்மை என்பது அடக்கம், பொறுமை, தியாகம்,பரநலம், இரக்கம். அழகு, தொண்டு முதலியன அமைந்த ஒன்றாகும். மண், நீர், ஒளி, காற்று முதலியன சேர்ந்து மரமாதல் போல, அடக்கம் முதலிய குணங்கள் சேர்ந்து பெண்மையாகின்றன. சிறு சிறு நீர்த்துளி சேர்ந்து பரந்த நீர் நிலை என்னும் பெயர் பெறுதல் போ்லவும் சிறு சிறு பரல்கள் சேர்ந்து மலை என்னும் பெயர் பெறுதல் போலவும் அடக்கம் முதலிய குணங்கள் ஒன்றி அவை பெண்மை எனும் பெயர் பெற்றன. மேலும் அடக்கம் முதலியவற்றின் திரட்சி பெணமையாய்ப் பொலிவதையும் அடக்கம் முதலியவற்றால் இன்பம் விளைவதையும் நோக்கின் பெண்மை இன்பமாக விளங்காமல் இருக்கமாட்டாது. ஆகவே பெண்மையை இன்பநிலையெனக் கொள்ளல் எவ்வகையானும் பொருந்தும். மின்னல் யாண்டும் இயங்கினும் அதுதானே விளங்கித் தோன்றுவதில்லை. அதனை விளக்கித் தோன்றுமாறு தொழிற்படுத்துமிடத்தில் மட்டும் அஃது ஒளிரும், அது போலவே, இன்பம் யாண்டு பரந்து நிற்பினும், அது பெண்மையில் விளங்கி, நிகழ்ச்சியில் உணர்த்துவதாகும்.

பெண்மைக்கு இறைவன் தந்த பரிசு தாய்மை ஆகும். அருள்உள்ளம் தாய்மைக்கே உண்டு எனவேதான் இறையவரும் ஆணாகவும் பெண்ணாகவும் வடிவெடுத்தார் போலும். பெண்ணுக்கே, இல்லாள் எனும் சிறப்புப் பெயர் எமது சமூகத்தில் வழங்கப் படுகின்றது. குடும்பநலம் சமூக சேவை, மன்னிக்கும் இயல்பு, ஆகியவற்றுக்கு இலக்கணமாகப் பெண்மை யே திகழ்கின்றது. எனவே தான் பூமாதேவி, ஆகாயவாணி, கங்காதேவி என்று நிலத்தையும், வானையும் நீரையும் போற்றி வழிபடுகின்றோம். மேலும் விவசாய சமுதாயத்தில் உணவை உற்பத்தி செய்வதில் அவள் வகித்தபங்கு மிகவும் பிரதானமானது. நிலமடந்தை உணவை விருத்தி செய்வது போன்று பெண்ணும் இனவிருத்தியில் தனது பிரதான பங்களிப்பைச் செய்கின்றாள். இதனால் தான் தாய்மையும் நிலமும் ஒன்றாக உருவகப்படுத்தப்பட்டன. நிலம் தாயாகவே கருதப்பட்டது. இனவிருத்தியின் பங்களிப்புக்கு ஆண் பெண் எனும் இருசக்திகளின் இணைப்பு அவசியம் எனக் கருதப்பட்டது. இவ்வகையிலே தான் எமது இந்து சமயத்திலும் இச் சக்திகளின் அருவுருவ நிலையையே லிங்க தத்துவம் எடுத்துக் காட்டுகின்றது. எனவே இந்து சமய மரபிலே பெண்மைக்குச் சரிபாதிநிலை வழங்கப்பட்டுள்ளமையும் தெளிவாகின்றது.

பெண்மைக்குக் கொடுக்கப்பட்டுள்ள முக்கியத்துவத்தின் அடிப்படையில் தான் எமது சமயமரபிலே இறைவனது அர்த்தநாரீஸ்வரர், வடிவமும் விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. சிவம் சக்திக்குக் கொடுக்கும் உயர்வு தனது உடலிலே சரிபாதியாகக் கொண்டுள்ள சிறப்பாகும். இவ்வகையிலே இடப்பாகத்திலே அம்மையை இருத்தி அம்மையப்பனாய்த் திகழ்கின்றார்.

இதனால் தான் அத்தகைய இறைவனை உமாபதி, உமா மகேஸ்வரன், மாதொருபாகன் என்ற பரமனின் பெயர்களில் மட்டுமன்றி, அவன் எழுந்தருளி இருக்கும் ஆலயங்களில் கூட வடிவாம்பிகை சமேத முன்னேஸ்வரராகவும், ஸ்ரீகௌரியம்மை சமேத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேதீஸ்வரநாதராகவும், நகுலாம்பிகை சமேத நகுலேஸ்வரநாதராகவும், ஸ்ரீபார் வதி சமேத பாமேஸ்வரராகவும் அழைக்கப் படுகின்ற சிறப்பினைக் கொண்டு, எமது சமயமரபிலே பெண்மைக்கு வழங்கப்பட் டுள்ளமுக்கியத்துவத்தினை அறிந்து கொள் ள முடிகின்றது எனவே இந்த அடிப்படை யில் தான் எனது ஆய்வு இடம்பெறுகின் றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இக்கட்டுரையிலே எனது ஆய்வுக்கு ஆதாரமாக நாயன்மாரது பாடல்கள் பெரியபுராணம், பக்தி இலக்கியங்கள் என்ப வற்றையே முக்கிய தரவுகளாக எடுத்துக் கொண்டுள்ளேன். இந்த அடிப்படையில் இந்துசமய வரலாற்றில் பெண்கள் வகித்த தத்தமக்குரிய பங்குகள் எவை? என்பது பற்றிய கருத்துக்களை எடுத்துக் கூறுகின் றேன்.

இந்து சமயத்தின் கொள்கை மிக்க இலக்கியங்களான வேதங்கள், பிராமணங் கள், உபநிடதங்கள், இதிகாசங்கள், புரா ணங்கள், தர்மசாத்திரங்கள் போன்ற இலக்கியங்களில் பெண்கள் வகித்த இடத் தினைப் பற்றிய அடிப்படைச் செய்திகளை நோக்குவது அவசியமாகின்றது. அந்த வகையிலே வேதகாலத்திலே பெண்கள் சிறந்த அந்தஸ்துடன் விளங்கினர். இவர் கள் பருவமடைந்தோராய் தாய் தந்தைய ருடன் வசித்து வந்தனர். அக்காலத்தில் பாலிய விவாகம் நடைபெறுவதற்கு ஆதா ரம் காணப்படவில்லை. பருவம் அடைந்த பின்னரே பெண்கள் மணவாழ்வில் ஈடுபட் டனர். மனைவியர் தம் கணவர் செய்யும் சடங்குகளில் கலந்துகொண்டு இல்லத்தரசி யாக விளங்கினர். மேலும் மணமகளைப் பற்றிக் குறிப்பிடுகின்ற பாடல் மூலமாக பெண்ணுக்கு மணமகன் ஏதாவது பொருள் வழங்கியிருக்கக்கூடும் எனக்கருத இடமுண்டு இக்காலத்தில் மகளிர் சமுதாயச் சடங்குக ளில் சம உரிமையைப் பெற்றிருந்தனர் என்பதற்கு இருக்கு வேதத்திலே விஸ்வா வரா, அபாலா, உலோபா முத்திரை, சோஷா, இந்திராணி, சதி ஆகியோர் பாடி யுள்ள பாடல்கள் குறிப்பிடுகின்றன. மேலும் மங்கையர் மணம் விரும்பியவரை மணம் செய்துகொள்ள அனுமதிக்கப்பட்டனர். ஆனால் தாஸ்யூ வர்ணத்தாருடன் மட்டும் அதாவது ஆரியர்களின் பகைவர்களிடத்து மட்டும் உறவுகொள்ள அனுமதிக்கவில்லை எனலாம். பெண்கள் பொதுவாக வாழ்க்கை முழுவதிலும் பிறருடைய பாதுகாப்பிலேயே இருந்தனர். திருமணம் வரை பெற்றோரின் பாதுகாப்பிலும், பின்னர் கணவனின் பாது காப்பிலும் இருந்தனர். எனினும் பெண்க ளுக்குப் போதிய உரிமைகளை அச் சமுதா யம் வழங்கியிருந்தது. பெண்கள் விழாக்க களிலும், விருந்துகளிலும் விருப்புடன் கலந்து கொண்டு மகிழ்ந்தனர். தொடர்ந்து பிற்பட்ட வேதகாலத்தில் பருவம் அடைந்த பின்னரே பெண்கள் மணம் புரிந்தனர். விதவைகளும் மணம் செய்துகொள்ள அனு மதி வழங்கப்பட்டிருந்தது.

பிராமணங்களில் பெண்கள் பற்றிய சில உயர்வான கருத்துக்காணப் பட்ட போதிலும் அவர்கள் ஆண்களைப் போல அவைகளில் கலந்து கொள்ள அனுமதிக் கப்படவில்லை. கணவன் இறந்த பின்பு மனைவி உடன்கட்டை ஏறும் வழக்கமும் அக்காலத்தில் காணப்பட்டது. எதிர்த்துப் பேசாதவள் எவளோ அவளே இனியபெண் என ஐதரேய பிராமணம் கூறுகின்றது. கணவனுக்குப் பின்னரே மனைவி உணவ ருந்த வேண்டும் என்ற குறிப்பு சதபத பிராமணத்தின் மூலமாக தெரிய வருகின் றது. மேலும் பெண் மகவினைவிட ஆண் மகவே பெரிதும் விரும்பப்பட்டது. பெண் பிறந்தாலே அது துன்பத்தின் அடையா ளம் எனவும், ஆண்மகனே குடும்பத்தைக் காப்பான் எனவும் ஐதரேய பிராமணம் குறிப்பிடுகின்றது.

உபநிடதங்களில் பெண்களது நிலை பற்றி நோக்குவோமாயின் இக்காலப்பகுதி யில் ஆணும், பெண்ணும் சம உரிமை உடையவராக இல்லறம் நடத்துவதாகவும் கல்வியறிவு வாய்க்கப் பெற்றவர்களாகவும் இருந்தமைபற்றிய குறிப்புக்கள் காணப்படு கின்றன. மேலும் உபநிடதங்களில் கார்க்கி மைத்திரேயி, வாசனவி போன்ற பெண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் பற்றிய குறிப்புக்களும் காணப்படுகின்
றன. அந்தவகையிலே பிருகதாரணிய உப
நிடதத்திலே கார்க்கி, வாசனவி போன்
றோர் பற்றிய குறிப்புக்கள் காணப்படு
கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதிகாசங்களில் பெண்கள் பற்றிக்
குறிப்பிடுகையில் இதிகாசங்களுள் ஒன்றான
மகாபாரதத்திலே மனைவியானவள்
ஆணின்பாதி என்று குறிப்பிடப்படுகின்றது
மேலும் இவள் வாழ்க்கைக் கடமைகளை
நிறைவேற்றுவதற்கு ஆதாரமாக விளங்கு
பவள் என்றும் கூறப்படுகின்றது. இக்காலப்
பகுதியில் ஒருவன் பல பெண்களை மணப்
பது போன்று ஒருத்தி பலருக்கு மனைவி
யானமையும் குறிப்பிடத்தக்கது. இக்காலத்
தில் பெற்றோர் நிச்சயித்தவனே கணவ
னாயினான். ஆனால் உயர் குடும்பத்துப்
பெண்களிடையே இந்தஉரிமை 'சுயம்வரம்'
என்னும் திருமண முறையில் காணப்பட்
டது. இங்கு பெண் தான் விரும்பிய ஆற்றல்
மிக்க மணவாளனுக்கு பலர் அறிய மாலை
சூடினாள். எனவே இக்காலப் பெண்கள்
வீரம் வேண்டியவர்களாகக் காணப்பட்ட
னர் எனக் குறிப்பிட முடிகின்றது.

புராணங்களில் பெண்களது நிலை பற்
றிக் குறிப்பிடுகையில் பெண்கள் சிறந்த
கல்விமான்களாகவும் ஒழுக்க சீலர்களாக
வும் விளங்கினர். உதாரணமாக சாவித்தி
ரியின் வரலாற்றை எடுத்துக் கொண்டால்
அவள் தன் கணவனான சத்தியவானின்
உயிரை யமன் கவர்ந்து கொண்டு சென்ற
போது அவனைப் பின் தொடர்ந்து தனது
பதிபக்தியினால் அக்கடவுளின் உள்ளத்தை
நெகிழ்வித்து சத்தியவானை மீட்டுக் கொண்
டதாகக் கூறப்படுகிறது. பாகவத புராணத்
தில் இராஜபனன் என்பவனுடைய இருமக்
களும் தெய்வீக இயலையும் தத்துவ இயலை
யும் கற்றுப் புலமை மிக்கவர்களாக விளங்கி
யமை பற்றிய செய்திகள் குறிப்பிடப்படு
கின்றது. மேலும் புராணங்களில் ஆண்,
பெண் இருபகுதியினரும் சேர்ந்து சிலகுறிப்
பிட்ட கதைகளைக் கற்றதாகவும் குறிப்
புக்கள் காணப்படுகின்றது. இவ்வாறு
ஆண், பெண் இரு பகுதியினருக்கும் சேர்ந்து
கல்விகற்றதனால் அவர்களிடையே ஏற்
பட்ட காதல்மணங்கள் பற்றிய குறிப்பும்
காணப்படுகின்றது.

புராணகாலப்பகுதியில் பெண்கள் மிக
வும் சிறந்த நிலையில் விளங்கினர். இதற்கு
எடுத்துக்காட்டாக வைவஸ்த மனுவின்
மனைவி புத்திரஸ்டி யாகத்தில் தனக்கு
மகள்தான் பிறக்க வேண்டும் என்றுயாசித்
தாள். என்று கூறப்படுவதிலிருந்து அறிந்து
கொள்ள முடிகின்றது. மேலும் வாமண
புராணத்திலும் கன்னிப் பெண்களின் தரி
சனமே மங்களகரமானது என்று குறிப்
பிட்டுள்ளது. பெண்களுக்கு பதிவிரதா தர்
மம் தான் எல்லாதர்மத்தையும், தபஸ்யை
யும் விடச்சிறந்தது என்று கூறப்பட்டுள்
ளமையும் குறிப்பிடத்தக்கது இவ்வாறு
புராண காலத்தில் பெண்கள் பலவகை
களிலும் சிறப்பாக போற்றப்பட்டதை அவ
தானிக்க முடிகின்றது.

தர்மசாஸ்திரங்களில் பெண்களது நிலை
மற்றும் ஒழுக்கம் பற்றிப் பின்வருமாறு
கூறப்படுகின்றது ஆசார்ய மனுவின் கருத்
தின் படி பெண் ஒரு சமூகத்தைசீர் செய்
யும் சாதனம். பெண்மணிகளின் மூலம் குடும்
பத்தில் வளம் வளர்ந்து பெருகுகின்றது
எனக்கூறப்படுகின்றது. பெண்ணை அவம
தித்தால் அங்கிருந்து லக்ஷ்மிகடாட்சம்அகன்
றுவிடும் என்றும், ஒருகுலம் உயர்வடைய
வும் மற்றோரால் அறியப்படவும் ஸ்திரியே
காரணம் எனக்கூறுகிறார். மனுவின் கருத்
தின்படி பெண்களுக்கு நான்கு கடமைகள்
கூறப்படுகின்றது அந்த நான்கு கடமைகளு
மாவன எப்போதும் சிரித்த முகத்துடன்
இருப்பது, வீட்டுக்கடமைகளை திறம்பட
செய்கின்ற தன்மை, சுத்தமாக இருப்
பது, அதிக செலவு செய்யாது சிக்கனமாக
இருப்பது. என்பனவாகும். மேலும் தன்
மனைவியானவள் அருகில் இல்லாமல் எவ்
வித யக்ஞமும் செய்வதற்கு கணவன் அரு
கதை உடையவன் அல்ல என்பதையும்
மனு குறிப்பிடுகின்றார். தொடர்ந்து அவர்
குறிப்பிடுகையில் "எங்கே பெண்கள் மதிக்
கப்படுகின்றார்களோ அங்கே தெய்வங்கள்
மகிழ்ச்சியடைகின்றன" என்று பெண்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளின் மேம்பாட்டினைக் குறிப்பிடுகிறார். எனினும் மனுவே, பெண்ணைப் பற்றிக் குறிப்பிடும் சில கருத்துக்கள் பெண்ணை இழித்துரைப்பனவாகவும் பெண்ணுரிமைக்கு மாறாகவும் அமைந்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

தமிழ் இலக்கிய காலப்பகுதியினை எடுத்துக்கொண்டால். சேக்கிழாரது பெரிய புராணம் மற்றும் பக்தி இலக்கியம் என்பவற்றின் ஊடாக பெண்களது நிலை பற்றிய சிந்தனைகளை இங்கு இருகண்ணோட்டங்களில் ஆராயலாம். அதில் ஒன்று பெண்கள் இல்லறவாழ்க்கையில் இணைந்துள்ள நிலையில் அவர்கள் தத்தமது கணவன்மாருக்கு அனுசரனையாகவே இருந்து கொண்டு இந்து சமயத்திற்கு ஆற்றிய பங்களிப்பு, இரண்டாது இல்லற வாழ்வில் ஈடுபடாது நின்று கொண்டே பெண்கள் ஆற்றிய தொண்டுகள் ஆகும்.

இங்கு முதலில் இல்லறவாழ்வில் ஈடுபட்டுக் கொண்டே சமய வளர்ச்சிக்கு அளப்பரிய பங்களிப்பை வழங்கியுள்ள பெண்கள் நிலைபற்றி ஆராய்வோம். இவ்வகையிலே தம்மகனை அறுத்து சிவனடியார்க்குப் பிள்ளைக் கறிசமைக்க இசைந்த சிறுத்தொண்டரின் மனைவியார், சிவனடியார்க்கு உணவிட விதைநெல்லைக் கொண்டு வருமாறு யோசனை கூறிய இளையான்குடிமாற நாயனாரின் மனைவியார், விளக்கெரிக்கப் பணம் வேண்டித் தம்மை விற்ற கலியநாயனாரின் மனைவியார், நெல்லை வாங்கத் தம் தாலியைக் கொடுத்த குங்குலியக்கலயர் மனைவியார், அடியார் கால்களைக் கழுவக் கணவருடன் இணைந்து நீர்வார்த்த கலிக்கம்பர் மனைவியார், நாவுக்கரசருக்கு உணவிடுவதற்காக, மகன் அரவு தீண்டி இறந்து கிடக்கும் செய்தியையும் மறைத்து வைத்து, விருந்து உபசரித்த அப்பூதியடிகளாரின் துணைவியார், தம் கணவர் கலிக்காமர் வாளால் வயிற்றிற் கீறிக் கொண்டு குற்றுயிராய்க் கிடந்தபோது, அதனை மறைத்து சுந்தரரை வரவேற்பதற்கு உத்தரவிட்ட கலிக்காமர் மனைவியார், அடியார்க்குத் தம்மை ஈந்த போது கணவர் ஆணை வழி நின்ற இயற்பகைநாயனாரின் மனைவியார், மணமகள் கோலத்தில் இருந்தபோது மாவிரதியருக்குப் பஞ்சவடிக்காகத் தம் கூந்தலையே அரிந்து கொடுக்க இசைந்த மாணக்கஞ்சாறர் மகளார், போன்ற இன்னோரன்ன பெண்மணிகளது ஈடுபாடும் ஒத்துழைப்பும் இன்றேல் நாயன்மார்கள் தமது திருப்பணியினை எவ்வாறு மேற்கொண்டிருக்க முடியும்? எனவே இந்துசமயம் இத்தகைய சிறப்புமிக்க மாதரசிகளின் ஒத்துழைப்பால் வளர்ச்சி கண்டது என்பதையும் அதன் தொடர்ச்சியாகவே தான் இற்றைவரைக்கும் எமது சமயத்தின் உன்னதமான வளர்ச்சிக்கு இத்தகைய மகளிர் ஆற்றிவருகின்ற பங்களிப்புக்களும் எவராலும் மறுக்க முடியாதவை.

எனவே மேற்கூறப்பட்ட பெண்மணிகள் சமயத்தின் வளர்ச்சிக்கு அளப்பரிய பங்களிப்பினை வழங்கியுள்ளார்கள் என்பது வரலாறு காட்டும் உண்மைதான் எனினும் மகளிரின் இத்தனை சிறப்புமிக்க தியாகத்தினை எடுத்துக் காட்டும் அதேநேரம் அந்தப் பெண்களுக்கு இருந்த மனோநிலைக்கு சேக்கிழார் முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்றுதான் நான் கருதுகின்றேன் என்பதும் இங்கு குறிப்பிடத்தககது எனவே சேக்கிழார் பெண்மையை ஒரு சராசரிப் பெண்ணாகக் காட்டப்படாவிட்டமையையும் இங்கு உய்த்துணர முடிகின்றது.

மேலும் கணவன்மாருக்கு முன்னணியில் நின்று பெருந்தொண்டாற்றிய இரு பெண்மணிகள் பற்றியும் இங்கு ஆராய்வது இன்றியமையாதது. அந்த வகையிலே காரைக்காலம்மையார் சாதாரண பெண்ணாகக் காட்சிதந்து தெய்வப் பெண்ணாக அம்பலத்திலே பேய்க்கணங்களுள் ஒன்றாக விளங்குகின்றாள். இத்தகைய சிறப்புமிக்க அம்மையார் ஆண்ம நாயகனான இறைவனையே தன் ஒப்பற்ற தலைவனாகக் கொண்டார். இறைவனைப் பாடும்பேறும் பேய்வடிவும் வேண்டி நின்றார். இவ்வகையிலே திருவிரட்டைமணிமாலை, அற்புதத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவந்தாதி, திருவாலங்காட்டு மூத்ததிருப் பதிகம், என்னும் பாடற்றொகுதிகளைத் தந் தார். இவரை இறைவனே "அம்மையே" என்று அழைத்தார் என்றால் இவரது பெருமையை யார்தான் விரித்துரைக்கவல் லார்? எனவே சைவபக்தி இலக்கியத்தைப் பொறுத்தவரை நான்கு சமயகுரவர்களுக் கும் அடுத்துப்பாடிய சிறப்பு பெறுபவர் அம் மையாரே இவ்வாறாகச் சைவசமய வர லாற்றில் காரைக்காலம்மையார் மிகவும் முக்கியமான ஓர் இடத்தினைப்பெற்று விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

அடுத்து வம்பறாவரி வண்டுச் சதுக்கத் திலே ஞானசம்பந்தருடைய வரலாற்றுடன் இணைத்துப் பேசப்படுபவர் மங்கையற்கர சியார் அவர் சோழ அரசனின் மகள் கூன் பாண்டியனின் மனைவி, பாண்டியமன்னன் சமண சமயத்தைத் தழுவிக்கொண்டான். இதனால் மங்கையற்கரசியாரும் அமைச்சர் குலச்சிறையாரும் மனம் வருந்தினர். இவ்வாறான சூழ்நிலையிலே தான் சம்பந் தரும் நாவுக்கரசரும் திருமறைக் காட்டிற்கு விஜயம் செய்து அற்புதம் நிகழ்த்திய செய்தி கேட்டு மன்னனுக்குத் தெரியா வண்ணம் குலச்சிறையார் மூலம் தூது அனுப்பியதும் சம்பந்தர் பாண்டிநாடு அடைந்து மடத்தில் தங்க அனுமதி வழங் கியதும் எல்லாம் மங்கையர்க்கரசியாரது செயற்பாடுகளே. மேலும் சம்பந்தரை அரண்மனைக்கு அழைப்பித்து சமணரை வாதில் வெல்லச் செய்தமைக்கும் பாண் டியனது வெப்பு நோய்நீக்கி, அவன் மீண் டும் சைவனாகி பாண்டிநாட்டில் சைவம் தழைக்கச் செய்தமைக்கும் அச்சாணியாக, விளங்கியவர் இவரே அதனால்தான் சேக் கிழார் பெருமானும் "தென்னர்குலப்பழி தீர்த்த தெய்வப்பாவை" என்று பாராட் டினார் போலும்.

எனவே மங்கையர்க்கரசியாரைப் பொறுத்தவரை ஓர் கற்புள்ள பெண்ணா கவும் சமணனான தனது கணவனையே சைவத்திற்கு மதம்மாற்றிதன் மூலமாக மிகவும் அளப்பரிய சாதனை புரிந்தவளா கவும் காணப்படுகின்றமை இங்கு குறிப் பிடத்தக்கது. மேலும் இவர் ஒட்டு மொத் தமாக ஒரு அரசி என்றவகையில் நாட் டையே இந்துசமயத்திற்கு மாற்றிய பங்க ளிப்பினால் அவர் ஒரு உலகப் பொதுப் பெண்ணாக விளங்குகின்றார்.

தொடர்ந்து இல்லறவாழ்வில் ஈடுப டாது சைவத்தை வளர்த்தெடுப்பதில் பங்கு கொணட பென்மனிகள் பற்றி நோக் குவோம். அந்த வகையிலே தனக்கென்று வாழாமல் பிறர்க்கென்றே வாழும் பெரும் தகமை பகுத்தறிவுள்ள மனித இனத்துக்கு வேண்டப்படும் பண்புகளுள் தலையானது என்றால் அது மிகையாகாது இவ்வரிய பண் புள்ளோர் இன்று அருகி விட்டனர். என் றாலும் அறவே அற்று விடவில்லை. இவ் வகையிலே தமிழகம் தொன்று தொட்டே தியாகத்தில் சிறந்து விளங்கி வருகின்றது. பிறர்வாழத் தம்வாழ்வை அர்ப்பணிக்கும் ஆண்களும், பெண்களும் அக்காலத்தில் பலர் இருந்தனர், நாடும் ஏடும்போற்றும் அந்த மகான்களுள்ளே திலகவதியாரும் தனிச் சிறப்புடன் திகழ்கின்றார். கன்னிப் பெண்ணாகவே இருந்து சிவத் தொண்டு புரிந்து திருநாவுக்கரசரை சைவ உலகுக்குத் தந்து பெரும் பணிபுரிந்தவர் திலகவதியார் இவ்வாறாக திலகவதியார் சைவவாழ்வு வாழவில்லையாயின் திருநாவுக்கரசரது பெயர் திருத்தொண்டர் தொகையில் இடம் பெற்றிருக்க முடியாது. எனவே சைவ உலகுக்கு அப்பரைத் தந்த பெருமை திலகவதியாரையே சாரும். இதனால்தான் "தூண்டுதவ விளக்கு" என்று சேக்கிழா ரும் அவரைப் போற்றுகின்றமையும் குறிப் பிடத்தக்கது.

மேலும் இல்லற வாழ்வில் ஈடுபடாது சமயப்பணி புரிந்த பெண்மணிகள் வரி சையிலே பூம்பாவை சுந்தரருக்கு திரும ணம் பேசப்பட்ட முதற் பெண்ணான செந்திரு, மற்றும் சிங்கடியார், வனப்பகை யார் போன்ற பெண்மணிகளும் குறிப்பி டத்தக்கவர்கள். இங்கு, பூம்பாவையை உயிர்ப்பித்த சம்பந்தரை பூம்பாவையின் பெற்றார் திருமணம் செய்து கொள்ளும்படி வேண்டப்பட்டது அதற்கு சம்பந்தர் தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூம்பாவையை உயிர் பெற்றெழச்செய்த மையால் அவள் தனது மகளுக்குச் சமமா னவள் என்று கூறி மறுத்திருந்தார்: எனவே இத்தகையதொரு நிலையிலும் கூட பூம் பாவை சற்று மனங்கலங்கினள் அல்லள் எனவே, எமது சமய மரபிலே பலதிறப் பட்ட பெண் அடியார்களை நாம் கண்டு கொள்ள முடிகின்றது. அந்த வகையிலே பூம்பாவையை சம்பந்தர் மணம்புரிய மறுத் திருந்ததைக் கொண்டு இப்பெண் தன்கண வனைத் தேர்ந்தெடுக்கும் உரிமையைப் பெற்றிருக்கவில்லை என்றே கூற முடிகின் றது. ஆனால் ஆண்டாளை எடுத்துக் கொண்டால் வைஷ்ணவ நெறியைப் பின் பற்றிய பன்னிரு ஆழ்வார்களது வரிசை யிலே ஒரே ஒரு பெண் அடியாரான ஆண் டாள் கண்ணபரமாத்மா மீது ஆராக்காதல் கொண்டு வாழ்ந்தவர் அவர்தன் ஆற்றா மையைத் தவிர்த்துக் கொள்வதற்காக வில்லிபுத்தூரை ஆயர்பாடியாகவும் அங்கே யுள்ள மகளிரை ஆயர்குல மங்கையராகவும் பாவனை செய்து தனது திருப்பாவைப் பாசுரத்தைப் பாடினார் என்பது குறிப்பி டத்தக்கது. மேலும், திருமகள் அவதாரம் எனத்தோன்றி, திருக்கண்ணனையே காத லித்து இம்மண்ணுலகில் உள்ளளவும் அவன் ஒருவனையே எண்ணி அவனையே மணா ளனாக அடைந்தவள் ஆண்டாள். அவ ளது பிறப்பின் தன்மையிலிருந்தே அவள் தெய்வாம்சம் பொருந்தியவள் என்பது தெளிவாக விளங்குகுன்றது. எனவே ஆண் டாளை எடுத்து நோக்குகின்றபோது அவள் தனது காதலன் யார் என்பதை தீர்மா னித்துக் கொள்கின்ற சுயநிர்ணய உரிமை பெற்றிருந்தவளாகவே காணப்படுகின்றாள் என்பது இங்கு குறிபிடத்தக்கது.

இவ்வகையிலே பெண்கள் சைவசமய வளர்ச்சிக்குத் துணைநின்றனர் எனும் கருத்தினைப் பிற்காலத்தில் கச்சியப்ப முனி வரின் திருத்தணிகைப்புராணம் விளக்கி நிற்கின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது விநாயகரின் உடன் பிறந்தோனாகிய முரு கப் பெருமான் தன்மேலே தாவுதலால் கொன்றை சூடிய சிவபெருமானின் செஞ் சடை தொங்குகின்றது. அச்செஞ்சடை தொங்குகின்றது. அச்செஞ்சடைப் பிரா னின் திருத்தொண்டின் பெருமையை பொன்னாலும் பெண்ணாலும் இவ்வுல குக்கு அறிவுறுத்திய சம்பந்தர், திருநாவுக் கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகி யோன் திருவடிகளை வணங்குவோம் என்று திருத்தணிகைப்புராணம் கூறு கின்றது.

''முன்னாலும் துணைக் கரத்தோன்
–முருகவேள்
பிடித்திழித்து மொய்ம்பில் தாவப்
பின்னாலும் கதிர்ச்சலடிப் பிஞ்ஞகனார்
திருத் தொண்டின் பெருக்க வீறு
பொன்னாலும் பெண்ணாலும்
அறிவுறுத்தில்
வுலகினிடர் பொன்றி ஆண்ட
அந்நால்வர் பதக்கமலம் புகழ்ந்திறைத்தி
அரந்தை தீர்வாம்''

என்பது அப்பாடலாகும்.

இப்பாடல் மூலமாகக், சைவசமயகுர வர் நால்வரும் பெண்களைத் துணையாகக் கொண்டு சைவத் தொண்டாற்றிய சிறப் பினை எடுத்துக் காட்டியுள்ளார். தணி கைப்புராண ஆசிரியர், சம்பந்தர் செட்டிப் பெண் கணவன் பாம்பு கடித்து இறந்த போது அவனை எழுப்பியது பூம்பாவை யின் எலும்பை உயிர்ப்பித்தது. ஆகியதம் செயல்களாலும் மங்கையர்க் கரசியாரின் துணையாலும் சைவத்தைப் பரப்பினார். மேலும் திருநாவுக்கரசர் சமண, சமயத் தினின்று சைவத்திற்கு வந்து அதன் பெரு மையை பரப்பக் காரணமாக அமைந்தவர் அவருடைய சகோதரி திலகவதியார். சுந் தரரது பெருமை பரவையாரால் உலகறி யப் பெற்றதும் மாணிக்கவாசகர், பௌத் தர்களோடு வாது செய்த போது ஊமைப் பெண்ணை பேசவைத்து சைவசமயத்தின் பெருமையைப் பரப்பியமையும் குறிப்பிடத் தக்கது. எனவே சைவசமய வளர்ச்சிக்கு மகளிர் காரணகர்த்தாக்களாக அமைந்துள் ளமைமை நாயன்மாரது வரலாற்றுடன் அறிந்து கொள்ள முடிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு சைவப் பெண்மணிகள் சைவ சமயத்தைப் பல துறைகளிலும வளர்த்து வந்தனர். ஆடவரும் பலதுறைகளில் ஈடு பட்டு சமயநெறியில் இருந்து பிறழ்ந்தாலும் இன்றளவும் கூட சைவ இல்லங்களில் சைவம் இருந்து வருதல் பெண்களால்தான் என்பதனை திடமாகக் கூறலாம். மேலும் அம்மானை, ஊஞ்சல், பொற்சுண்ணம், தெள்ளேணம் முதலிய ஆடல்களிலும் சிவ பெருமானின் புகழைப் பாடிக் கொண்டு பெண்கள் ஆடினர் என்றுதான் திருஞான சம்பந்தரும், மாணிக்கவாசகரும் கூறுகின் றார்களேதவிர ஆண்கள் விளையாட்டில் இவற்றைக் கூறவில்லை என்பதும் இங்கு கவனிக்கத்தக்கதாகும். எனவே பெண்கள் தான் சமயத்தை வளர்ப்பவர்கள், அவர் களே வாழ்க்கையின் விளக்கு. அவர்களே ஆடவர்களுக்குச் சமய வழித்துணையான வர் என்னும் உண்மையை சம்பந்தரும், மாணிக்கவாசகரும் உணர்ந்திருந்தனர் என் பதற்கு பெண்களுக்குரிய இப்பாடல்களே தகுந்த சான்றாகின்றன.

அடுத்து, அனைத்திந்திய மரபைச் சிந் திக்கும் போது, ராஜாராம் மோகன்ராய், சுவாமி விவேகானந்தர் போன்ற மகான் களது சிந்தனைகளையும் இங்கு எதிர்கொள் கின்றோம். அந்த வகையிலே 18-ம் 19-ம் நூற்றாண்டுக் காலங்களில் பெண்கள் மீது விதிக்கப்பட்டிருந்த சதி என்று சொல்லப் படுகின்ற உடன்கட்டை ஏறுதல் போன்ற தர்மசாஸ்திர மரபுகளை உடைத்தெறிந்து சிறந்த பங்களிப்பினை நல்கியவர் ராஜா ராம் மோகன்ராய். இவ் வகையிலே இக் காலப்பகுதிகளில் பெண்களுக்கு இழைக்கப் பட்டிருந்த கொடுமைகளான உடன்கட்டை ஏறல், சிசுக் கொலை, பாலியல் விவாகம், பலதாரமணம் போன்ற இன்னல்கள் அக் காலப்பகுதியில் தோன்றிய அறிஞர், ஞானி கள் மற்றும் பெரியோரால் சீர்திருத்தப்பட் டன. இவ்வாறு சீர்திருத்தக் கருத்துக்களை முன்வைத்தவர்களுள் ராஜாராம் மோகன் ராய் அவர்களது பங்களிப்பும் குறிப்பிடத் தக்கது. இவரது பின்னணிக் கூடாக வந் தவர் சுவாமி விவேகானந்தர்.

இவ்வகையிலே இந்து சமயச் சிந்தனை களை பாரெங்கும் பரப்புவதில் முன்னின்று உழைத்தவர் சுவாமி விவேகானந்தர். இவர் இராமகிருஷ்ண பரமஹம்சரது போதனைகளை உலகெங்கும் பரப்புவதில் மிகவும் முக்கியமான பங்களிப்பினை வழங் கியவர். அவர் பெண்கள் பற்றிக் குறிப் பிட்ட கருத்துக்களுக்கு இந்து சமய மரபு சார்ந்த சிந்தனைகளே அடித்தளமாக அமைந்தன என்பதும் இங்கு குறிப்பிடத் தக்கது. இவ்வகையிலே அவர் பெண்கள் விடயத்தில் கூடிய அக்கறை கொண்டவர். பெண்கள் பற்றி அவர் குறிப்பிடுகையில் எந்த நாடு அல்லது சமுதாயம் பெண் களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வில்லையோ அந்தச் சமுதாயம் ஒருபோதும் உயர்வடைய மாட்டாது என்கிறார். மேலும் அவர் குறிப்பிடுகையில் பெண்களுக் கான கல்வியானது ஆத்மீகத்தை அடிப்ப டையாகக் கொண்டே புகட்டப்பட வேண் டும் எனவும் அவர்களுக்குப் பொருத்தமான தையல், மற்றுமலங்காரம் போன்ற கலை களையும் புகட்டக்கூடிய கல்வியே சிறந்தது என்றும் எடுத்துக்கூறினார். பாரதியார் கூட இளைஞர் பெண்கள் பற்றிய பாடல் கள் பாடுவதற்கு சுவாமி விவேகானந்தரது சிந்தனைகளே வழிகோலின. அவர் இலட் சியப் பெண்களை எடுத்துக் காட்டி அவர் கள் வாழ்க்கையை அதற்காகவே அர்ப் பணிக்க வேண்டும் என்கிறார். பிரமச்சாரி கள், விதவைகள் என்போர் கூட கல்விகற்க வேண்டிய அவசியத்தை அவர் வற்புறுத் தினார். எனவே சுவாமி விவேகானந்தர் பெண்கள் உயர்கல்வியினைக் கற்பதன் அவசியத்தை அவர் வற்புறுத்தியுள்ளமை யும் பெண்களுக்கென ஒருமட்டம் அமைக் கப்பட வேண்டும் என்பதையும் எடுத்துக் கூறியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. எனவே இந்தியப் பெண்களுடைய உயர் வுக்காக அவர் விட்டுச்சென்றுள்ள சிந்தனை கள் இன்றும் என்றும் பெண்கள் நிலை மேம் படுவதற்கு பொருத்தமானதாக அமைகின் றன. இவ்வகையிலே அவர் இந்தியப் பெண் மணிகள் இந்திய மரபிலேயே வாழவேண் டும் என்று விரும்பியமையும் இங்கு குறிப் பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்து இந்து சமயத்தைப் பொறுத்த வரை பெண்களும் மிகஊறித் திளைத் திருந்தனர். அன்னியர் வருகையால் சமுதாய மாறுதல்கள் ஏற்பட்ட காலத்தில் யாழ்ப்பாணத்தில் ஆறுமுகநாவலர் தோன்றி சீர்திருத்தவாதிகள், சமூக சேவையாளர்கள் எனப் பலரைத் தோற்று வித்து சைவர்கள் மத்தியில் தேசிய உணர் வுக்கு வித்திட்ட பெருமைக்குரியவர். சமூகத்திலே நிலவிய சாதிமுறையினை ஒழிந் தவர். ஆண்களும், பெண்களும் சரிநிகர் சமமாக வாழவேண்டும் என விரும்பியவர். விதவைகள் மறுமணத்தை ஆதரித்தவர். இந்திய விதவைகளின் துயரக் கண்ணீர் கண்டு கலங்கியவர். பெண்களுக்கு கல்வி அவசியம் என்பதை வலியுறுத்தியவர். இவ் வகையிலே பெண்கள் கற்பதன் அவசியத்தை மூன்றாம் பாலபாடத்திலே விரிவாகவும் விளக்கமாகவும் கூறியுள்ளதுடன் பெண் கள் வேதங்களைக் கற்கலாம் என்றும்கூறி பெண்கள் விடயத்தில் அக்கறை காட்டிய வர். மேலும் இவரது காலத்திலேயே யாழ்ப்பாணத்தில் கந்தபுராண கலாச்சா ரம் உருவானது. இவ்வாறு கந்தபுராண கலாச்சாரம் யாழ்ப்பாணத்தில் வேரூன்று வதற்கு பெண்களே காரண கர்த்தாக்க ளாக விளங்கியுள்ளனர் என்பதனை நாவ லர் பெருமானே யாழ்ப்பாணச் சமயநிலை எனும் நூலில் கூறியுள்ள பின்வரும் சிந்த னையும் இங்கு குறிப்பிடத்தக்கது

இருபதாம் நூற்றாண்டின் பாரதியார் பார்வையிலே ஆண், பெண் சரிநிகர் சமா னமாக வாழத்துணைபுரியும் ஒரே கருவி யைக் குறிப்பிடுகின்றார். இந் நிலையில் பெண் கல்வி பற்றிய பாரதியாரின் சிந் தனைகள் பலவாறு விரிந்து செல்கின்றது. அவர் பெண்கள் பற்றிக் குறிப்பிடுகையில் "பெண் உயராவிட்டால் ஆண் உயர முடி யாது" எனப் பெண்ணுரிமையைப் பற்றிக் கூறியுள்ள சிந்தனைகள் குறிப்பிடத்தக் கவை. மேலும் பாரதியார் பாரத நாட் டைப் பெண்ணாவே உருவகப்படுத்தி 'வந்தேமாதரம்" என நாட்டைத் தாயாக வழிபட்ட மரபு குறிப்பிடத்தக்கது. இவ் வகையிலே பாரதியார் பெண்ணின் சிறப் புக்கருதி தாய்மை, பெண்மை எனும் நோக்கில் பாடியுள்ள பாடல்களும் குறிப் பிடத்தக்கவை. இங்கு பாரதியார் தாய் மைக்கு எடுத்துக்காட்டாக

"மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையைக் கொழுத்துவோம்"

என்று பாடுகின்றார்.

முடிவாக நோக்குவோமாயின் கோட் பாட்டளவில் இந்துசமயம் பெண்மைக்குச் சமநிலையைக் கொடுத்திருக்கின்றது என் பது நாம் அறிந்த உண்மை. இந்திய சமூ கத்தின் வரலாற்றுப் போக்கை ஒட்டிச் சிந்திக்கும்போது இந்துக்களது வாழ்க்கை யில் ஆண்களை முன்னிறுத்திய சமுதாய அமைப்பிலே சகல வழிகளிலும் சமய வளர்ச்சிக்கு துணைநின்று அதனை வளர்த் தெடுக்கும் பெண்ணாகவே காணப்படுகிருள் இத்தகைய துணையிலும் கணவன் தவறு செய்யும் பட்சத்திலும் கற்புக்குப் பங்கம் ஏற்படாது. தனது பங்களிப்பைச் செய்வ தற்கு முன்னின்ற பெண்களையும் நாம் காணமுடிகின்றது. எனவே சமயம் என்ற அம்சத்தை முதன்மைப் படுத்தும்போது அதன் வளர்ச்சிக்குப் பெண்ணானவள் பல வகைகளிலும் தம்மை அர்ப்பணித்து வந் துள்ளாள் என்பதைத்தான் எமது வரலாறு காட்டுகின்றது.

## துணை நூல்கள்


| | | |
|---|---|---|
| 1 | ஆனந்தகுமாரசுவாமி, | சிவானந்த நடனம். (தமிழாக்கம் வித்தியாரத்தினம் — நவாலியூர் சோ. நடராசன்) 1980. |
| 2 | டாக்டர் M. S. சாந்தா | காரைக்காலம்மையாரும், அக்கமா தேவியும் ஓர் ஒப்பாய்வு — 1994. சென்னை. |
| 3 | வி. கலியாணசுந்தரனார் | பெண்ணின் பெருமை / வாழ்க்கைத்துணை 1975 சென்னை |
| 4 | ந. க. மங்களமுருகேசன் | இந்திய சமுதாய வரலாறு, 1946 சென்னை |
| 5 | சைவசித்தாந்த மகாசமாசம் | சென்னை சைவசமயச் சொற்பொழிவுகள் 1959 |
| 6 | சுவாமி விவேகாநந்தர் | பாரதப் பெண்மணிகள் |
| 7 | சரஸ்வதி அமுதன் | பக்தியிற் சிறந்த பாவையர் கதைகள் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

மீசாலை வெள்ளைமாவடி

திருநீலகண்ட விநாயகராலய மான்மிய

# தோத்திரப் பாடல்கள்

### நேரிசை வெண்பா

மாவடியி லப்பனே மாமணியே உன்றனது
சேவடியே பாடிப் பணிகின்றேன் — பாவடியால்
இம்மைச் சுகந்தா இருவினையும் தீர்த்தருளும்
அம்மைச் சுகமதுவும் தா.

## ஆசிரியப்பா

உலகெலாம் மதிக்க உயர்ந்து விளங்கும்
இலங்கா புரியின் எழில்பெறு சிரசாம்
யாழ்ப்பா ணத்தில் இலங்குறும் பதிகளில்
சைவநன் மக்கள் சுகசமாய் வாழும்
சாவகச் சேரியின் சார்பாய் அமைந்து
மாவும் பலாவும் வளம்பெற வளர்ந்து
கற்பக தருக்கள் கவின்பெற ஓங்கும்
மீசாலை என்னும் சீர்சால் பதியில்
முன்னொரு நாளில் முனிவரர் ஒருவர்
விக்கின விநாயக வித்தக மூர்த்தியை
ஆன்ம மூர்த்தியாய் அன்புடன் வைத்து
வழிபா டியற்றி வந்திடுங் காலையில்
டச்சுக் காரர் அக்கிர மத்துடன்
கோயில் குளங்களை அழித்தொழித் திடவே
தபோதனர் தாமும் தம்மிட த்திருந்த
உபாசனா மூர்த்திக்கும் ஊறு வருமென
உள்ளம் தளர்ந்து உரைதடு மாறி
அவ்விடம் நின்ற வெள்ளைமா அடியினில்
குழியது தோண்டிப் புதைத்து விட்டு
சிற்சில காலம் தியானத் துடனிருந்து
அண்ணல் அருளால் அவனடி அடைந்தனர்
சிற்சில காலம் சென்றதன் பின்னர்
டச்சப சாட்சியும் அழிந்தொழிந் திடவே
ஆங்கில ஆட்சி அடைந்திடு காலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் காணிக் குரியவ ரான
முகமாலை என்னும் மூதூர் வாசி
கேய ரத்தின முதலியார் என்பவர்
அவ்விடம் வந்து அயலில் வசித்த
முத்தனை நோக்கி முகமலர் வுடனே
எனது காணியிலும் கொள்ளினைக் கொத்து
இந்நா விதைமுதல் எனகொடுத் திட்டு
முகமாலை என்னும்தன் அகமது செல்ல
முதல்வர் சொற்படி முத்தனஎன பவனும்
கொள்ளது தன்னைக் கொத்திடும் வேளையில்
திருநீல கண்டத் தேளது ஒன்று
அங்கொரு துவாரம் வழியே உட்புக
அதுஒரு கொடிய தேளென் றஞ்சி
அவ்வழி அதனில் மறுமுறை கொத்தலும்
அந்த அடியவர் அந்நாள் மறைத்த
விநாயக மூர்த்தியின் உருவினிற் படுதலும்
குருதி கொப்பளித்து வருவதை நோக்கி
ஆச்சரி யத்தோ டற்புத வசத்தனாய்
ஆயுதம் தனையும் அவ்விடம் விட்டு
தனது குடிசையில் தனிமையிற் சென்று
ஊணுடன் உறக்கமும் ஒழிந்திட் டயர்ந்திட
கயமுகக் கடவுளும் கனவினில் தோன்றி
உன்றன் விசனப உடனே ஒழிக
என்றனை எடுத்து நீரினில் ஆட்டி
மாவடி தன்னில் வளம்பெற நிறுத்தி
உன்றன் உணவை என்முன் வைத்து
நீரினால் தெளித்து நிரம்ப உண்கென
அயர்ந்து முத்தனும் அயர்வொழிந் தெழுந்து
கனவோ நனவோ எனக்கலங் கிட்டு
பெருமான் சொற்படி பெருமையாய்ச் செய்து
முகமாலை சென்று முதலியார் தனக்கும்
இப்பெரு நிகழ்ச்சியை இனிதாய் இயம்பிட
அவரும் உடனே அவ்விடம் வந்து
சிறுகவே குடிசையொன் றுடனே இயற்றி
அப்பெரு மானை அதிலே இருத்தி
பொங்கற் கோயிலாய்ப் புகழ்பட நடாத்தி
சிற்சில காலம் சென்றதன் பின்னர்
அயலவர் எல்லாம் அடியவ ரெல்லாம்
அற்புத மூர்த்தியின் அருளது தன்னால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பனுக் காக ஆலயம் அமைக்க
முதலியார் தன்னுடன் முயன்றிடு காலையில்
ஆலயம் தன்னை அழகுடன் அமைக்க
காடது தன்னில் மரம்தறித் திடுகையில்
மரமது தறித்ததை மாபெரும் குற்றமாய்
ஆலய மனேச்சரை அன்றே அழைத்து
நீதி பதிதான் சிறையினிற் றள்ள
அன்றைய இரவே அவர்தம் மனைவி
முடத்து நோயால் முனங்கி அழுதிட
வைத்திய முறைகளால் மாறுதல் இன்றி
அப்பரின் சூலைபோல் அதிகரித் திடவே
விக்கினேஸ் வரனின் விளையாட்டென வுணர்ந்து
தரும கர்த்தாவை தளையினில் நீக்கிட
சம்மந்த மூர்த்தி தடவிய விபூதிபோல்
அவரும் விபூதி அளித்த மாத்திரையில்
நோய்தான் நொடியிற் பறந்து விடவே
அவன்செய லெனவே அனைவரும் வாழ்த்தினர்
நீதி பதியும் நிறைவுறு மனத்தராய்
திருப்பணி அதற்கு திறம்பட உதவினர்
பட்டுக் குடையும் பரிசாய் அளித்தனர்
இன்னோரன்ன அற்புத நிலைமையில்
அடியார் எல்லாம் அணிபெறக் திரண்டு
அப்பன் ஆலயம் அழகுற அமைத்து
நித்திய பூசை நிறைவாய் நிகழ்கையில்
முதலியார் அவர்களும் சிவபத மடையவே
அவரின் வழிவழி யாக வந்த
பச்சிலைப் பள்ளியின் மணிய காரன்
கணபதிப் பிள்ளையாம் பெருமக னாரும்
அவரைத் தொடர்ந்து அவர்மக னான
சரவண முத்துவாம் நொத்தா ரிசுவும்
படிமுறை யானே பரிபா லனம்செய்து
ஆலய மண்டபம் அனைத்துமே ஆக்கி
நித்திய பூசையொடு நைமித் திகமும்
மகோற்சவ மாகும் மாபெரும் விழாக்களும்
வளர்பிறை போல வளர்ந்து வருகையில்
அந்த நாளில் அயலில் வசித்த
ஆண்டார் எனும் அறம்கா வலர்தான்
ஆலயம் தன்னின அருகாய் உள்ள
தனது காணியையும் தலைவற் காக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கோர் தீர்த்தக் கேணியும் அமைத்து
சப்பறம் தேரையும் தாமே செய்வித்து
சப்பற விழாவை தானே நடாத்தி
சந்ததி சந்ததி யாக நடைபெற
ஒழுங்கும் செய்து உயாபதம் எய்தினர்
இந்த வகையில் இவ்வா லயம்தான்
பக்க ஆலயங்களை பரிவார மாக்கொண்டு
நடு நாயகமாய்த் திகழ்ந்து வருகையில்
கோயிலில் மாத்திரம் களவெடுத் துண்ணும்
அம்பல வாணியாம் அந்தணன் ஒருவன்
ஒருநாள் இவ்வா லயத்தனும் புகுந்து
களவினைச் செய்து வெளியே வருகையில்
எங்கள் இறைவன் திருவருட் திறத்தால்
கண்ணொளி மறைத்து மரத்தினில் ஏற்றி
தருமகர்த்தாவை தானே நேரில்
கனவினில் கண்டு காரியம் விளக்கி
அப்பனே நீசென் றன்னவன் தன்னை
அன்பு முறையில் அகற்றி விடுகென
சரவண முத்துவாம் தர்ம கர்த்தாவும்
அடுத்த நாட்காலை ஆலயம் வந்து
கனவினிற் கண்டதை நனவிலும் கண்டு
அண்ணல் சொற்படி அவன்றனை இறக்கி
அன்புடன் விபூதியை அளித்திட் டிடவே
மறைந்த கண்களும் பார்வை பெற்றிடவே
எத்தனை கோவில் எடுத்தெடுத் துண்டேன்
இந்தத் தெய்வமே என்னைப் பிடித்ததென்று
முன்னொரு கோவிலில் களவாய் எடுத்த
வில்வ மாலையும் இறைவற் களித்து
அன்புடை மனத்தொடும் அகன்றே போயினன்
இன்னோ ரன்ன அற்புதத் திடையே
சீருடை மனேச்சரும் சிவலோ கம்செல
அவரைத் தொடர்ந்து அவர்மக னான
பிள்ளையர் எனப்படும் ஏரம்பர் அவர்களும்
அன்னவர் பின்னர் அவர்மக னான
விநாசித் தம்பி எனப்படும் வள்ளலும்
ஆலயம் தன்னை அழகுற நடாத்தி
ஏரம்ப மூர்த்தியின் இணையடி எய்த
அன்னார் தன்னின் அன்புடை மகனாம்
சங்கைக் குரிய சபாரத் தினமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருளுக் குரியஇவ் வாலயம் தன்னை
ஆகம விதிப்படி ஆளும் நிலைமையில்
கலியுக வரதனாம் கந்தக் கடவுளும்
இங்கெழுந் தருளத் திருவுளம் கொண்டு
பக்க லாகப் பண்பாய் அமர்த்தினர்
அடியார் பக்தியை ஆழமாய்க் கொண்ட
சிதம்பர நாத தேசிகர் அவர்களும்
ஆலய முன்றலின் அண்மைய தாக
குருபூசை மடத்தைக் குணமாய் அமைத்து
நால்வர் குருபூசை நலம்பெற நடாத்தினர்
அன்பர் வேலுப் பிள்ளை அவர்கள்
வாசகன சாலையை வளம்பெற அமைத்தனர்
இத்தலம் தன்னின் எழில்பெறு கீர்த்தியை
இவ்வொரு நாவால் இயம்பவும் போமோ
மாசம் தோறும் வருவதாம் சதுர்த்தியில்
விழாவும் பூசையும் விநயமாய் நடைபெறும்
மார்கழி மாச வளர்பிறைச் சஷ்டியின்
முன்வரு கின்ற மூவேழு நாட்களும்
அடியார் எல்லாம் அன்புறக் கூடி
காப்புக் கட்டிக் கதையினைக் கேட்டு
விரத மனுட்டித்து வரம்பல பெறுவர்
சித்திரை தொடங்கும் சிறந்த காலத்தில்
கந்த புராணப் படிப்பும் தொடங்கி
பக்தர்கள் எல்லாம் பக்தியாய்க் கேட்டு
கந்த முருகனின் கடாட்சமும் பெறுவர்
திருவெம் பாவைச் சீர்பெறு நாட்களில்
அதி காலையிலே அடியவர் கூடி
வாழ்த்தி வணங்கி வழிபட் டேத்தி
வாதவூ ரடிகள் சரிதமும் கேட்டு
உள்ளம் உருகி உவந்து பூசிப்பர்
இறுதி நாளாம் திருவா திரையில்
சிதம்பர நடேசன் திருவருட் பற்றொடு
திருவிழா எடுத்து தீர்த்தமும் ஆடி
ஊஞ்சலும் ஆட்டி உள்ளம் உருகுவர்
வெள்ளிக் கிழமைகள் மாலைகள் தோறும்
கூட்டுப் பிரார்த்தனை குணமாய் நடைபெறும்
ஆடிஅமா வாசைக் கடுத்து வருகின்ற
மகோற்சவ கால மாபெரும் நாட்களில்
தென்ம ராட்சியின் சீர்பெறும் அடியவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டம் எல்லாம் சிறப்புறக் கூடிடும்
பாலசுந்தரம் எனும் பண்புறு புரோகிதர்
ஆலய பூசையை அழகுற நடாத்துவர்
கணித பஞ்சாங்க கர்த்தா வான
சிதம்பர நாதக் குருக்கள் அவர்கள்
கொடியேற்று விழாவைக் குணமாய் நடத்துவர்
ஆலய மனேச்சரின் அடியினில் வந்த
ஆறு முகம்எனும் அருந்தவச் செம்மல்
தெய்வானைப் பிள்ளையாம் சீர்பெறு மனையுடன்
அட்ட, மங்கலம் அழகுற வனைந்த
கொடியது தன்னை மங்கல மாக
தெய்வ வாசம் எனுப்சீர்பெறு மனையில்
சங்கற்ப மூலம் பூசனை புரிந்து
அலங்கா ரத்துடன் ஆலயம் சேர்ப்பர்
தம்மிற் பின்னுமித் தொண்டு நடைபெற
ஆவணம் மூலம் ஆவன செய்தனர்
பெருமான் மீது பெரும்பக் தியினால்
ஊஞ்சலும் பாடி உதவி உள்ளனர்
அந்த விழாக்களில் அண்ணன் தன்னொடு
தம்பி முருகனும் கூடிவலம் வருவர்
ஐம்மூன்று திருவிழா அடியவர் நடாத்த
பூங்கா வனமும் பொலிவுற நடைபெறும்
மகோற்சவ விஷய உண்மைக் கருத்தாம்
படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல்
அருளல் என்னும் ஐம்பெருந் தொழிலையும்
கொடியேற்றம் திருவிழா தேரொடு தீர்த்தம்
மௌனோற் சவம்எனும் ஐந்தினும் கண்டு
மனம் பூரிக்க வாழ்த்தி வணங்குமின்
தம்ப விம்ப கும்பம் எனும்
மூன்றிலும் இறைவனை முன்னிலைப் படுத்தி
பண்புறப் பார்த்து பராவி வணங்குமின்
பதி பசு பாச முப்பொருள் உண்மையை
கோவில் தன்னிலும் கொடிமரம் தன்னிலும்
ஒக்க நோக்கி ஒருமனப் படுமின்
தேர்த்திரு நாளாம் நன்னாள் அதனில்
அடியவர் எல்லாம் அன்புறக் கூடி
வாழ்த்தி வணங்கி வழிபட் டேத்தி
ஆடிப்பாடி அருள்பெற் றேகுமின்
அடுத்தநல் நாளாம் தீர்த்த பூரணையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதியில் அமைத்த அற்புத தீர்த்தத்தில்
தீர்த்தமும் ஆடிச் செவ்வனே வாழ்மின்
தென்ம ராட்சியின் திலகமாய் விளங்கிய
இப்பழம் பதிதான் பண்புடன் சிறக்க
அடியவர் பற்பலர் ஆலயம் திருத்தியும்
வசந்த மண்டபம் வளம்பெற அமைத்தும்
சுப்பிர மணியமாம் தொண்டரின் தலைமையில்
சித்திரப் புதுத்தேர் சீர்பெற இயற்றியும்
திருப்பணி செய்து சிறந்துவாழ் வடைந்தனர்
இன்ன தன்மைகள் எழில்பெறச் சிறந்த
இவ்வா லயம்தான் இன்னமும் சிறக்க
திருப்பணி வேலைகள் சிறப்புடன் ஓங்க
உங்கள் பொருட்கள் உங்களுக் குதவ
பொருள்கள் உள்ளவர் பொருளுடன் வாரீர்
அன்ன தற்றவர் அன்புடன் வாரீர்
வந்து வந்து வாழ்த்தி வணங்குமின்
சுந்தர ரேசனைச் சூழ்ந்து வணங்குமின்
அழகு முருகனை அன்பாய் வணங்குமின்
அடியார் தம்மையும் அன்புடன் பணிமின்
அன்னை தந்தையரையும் அன்பாய் பேணுமின்
பஞ்சாட் சரஜெபம் பாங்காய்ச் செபிமின
மூலஸ் தான முடியின் நிழலினை
காலால் மிதித்து கடவா திருமின்
திரைஎன் பதுவே பாச மாகும்
பாசம் பதியை மறைத்து நிற்கையில்
சுற்றிக் கும்பிடும் வழக்கம் விடுமின்
பசுத்தான் பதியை நோக்கி நிற்கையில்
குறுக்கே போகும் வழக்கம் விடுமின
வீண்கதை தன்னைக் கோவிலிற் பேசி
குளிக்கப் போய்ச் சேற்றை பூசாதிருமின்
குழந்தை குட்டிகளை கோவில் தனனில்
குழப்படி இன்றி கும்பிடப் பழக்குமின
புராணப் படிப்பு படிப்பவர்க் கல்ல
அன்புறக் கேட்டு அருளினைப் பெறுமின்
லம்போ தரன்என தன்னைப் பழித்த
சந்திரன் தனக்கு சாபம் இட்டு
அன்னவன் தன்னை அந்நநா ளதனில்
பாரா திருக்க பணித்தவா சரணம்
முன்னொரு நாளில் முழுப்பொய் சொன்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனந்தன் சாபம் அகற்றிவாய் சரணம்
இன்னொரு நாளில் இளையவன் தன்னொடு
மாம்பழக் கனிக்காய் மறுதலித் திட்டு
இறைவனே உலகம் எனச்சா தித்து
வெற்றி பெற்ற வீரனே சரணம்
ஒற்றைக் கொம்பே ஓரெழுத் தாணியாய்
பாரதம் எழுதிய பரனே போற்றி
காஞ்சிப் பதியில் கருணைபா லிக்கும்
விகட சக்கர விநாயகா போற்றி
சிற்றம் பலத்தே சிறந்தினி திருக்கும்
கற்பக விநாயகக் கடவுள் போற்றி
கதிர்கா மத்தி லிருந்தருள் புரியும்
மாணிக்கப் பிள்ளை மலரடி போற்றி
நம்பி யாண்டார் நம்பி தனக்கு
பாடம் சொல்ன பரனே போற்றி
எடுத்த கருமம் இடையூ றகற்றும்
விக்கின விநாயகத் தேவே போற்றி
பக்தி யுடனே பரவுவார் தமக்கு
பதினாறு பேறும் தருவாய் போற்றி
அன்புடன் நோக்கி அழுவார் தமக்கு
அட்ட ஐஸ்வரியமும் அளிப்பாய் போற்றி
மூவேழ் சுற்றமும் முரணுறு நரகிடை
ஆழா மேயருள் அரசே போற்றி
வல்லபை சமேத மணாளா போற்றி
பிரணவப் பொருளாம் பெருந்தகை போற்றி
மூஷிக வாகன முதல்வா போற்றி
தாளி யறுகின் தாராய் போற்றி
இடரைக் களையும் எந்தாய் போற்றி
தோழா போற்றி துணைவா போற்றி
உறவே போற்றி உயிரே போற்றி
எமதமை உய்யக் கொள்வாய் போற்றி
சித்தி விநாயகத் தேவே போற்றி
போற்றி போற்றி ஜயஜய போற்றி.

### நேரிசை வெண்பா

சித்தி விநாயகரைத் தேர்மீ தினிற் கண்டு
பக்தியுடன் பாடுவார் பாவங்கள் — அத்தனையும்
சூரியனைக் கண்ட பனிபோல மாறுமே
காரியத்திற் கண்ணா யிரு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திபுத்தி நாயகரைத் தேர்மீ தினிற் பார்த்து
பக்தியுடன் பாடிப் பரவுவார்—இத்தலத்தில்
பல்லாண்டு வாழ்வடைந்து பாலகரைப் பெற்றெடுத்து
செல்வார் சிவலோகம் தான்

ஆடிஅமா வாசைக் கடுத்துவரும் பூரணையில்
தேடியே இத் தீர்த்தம் ஆடினால்—நாடிவரும்
துன்பங்கள் எல்லாம் தூர அகன்றுவிடும்
இன்மே எந்நாளும் தான்

## விருத்தம்

வெள்ளை மாவடி வேழ முகத்தனே
உள்ளந் தேர்ந்தன தன்பதை வேண்டியே
தெள்ளிதாயுன் கதையினைச் செப்பினன்
வெள்ள மாய்ப்பொழி வாயருள் தன்னையே

இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!

திருச்சிற்றம்பலம்

இயற்றியவர்
அமரர் சு. சுப்பையா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

### மீசாலை திருநீலகண்ட

## வெள்ளைமாவடிப் பிள்ளையார்

# திருவூஞ்சல்

சீரேறு சிந்தனைச்செஞ் சடையிற் சூடும்
சிவனுமையாள் பெற்றெடுத்த செம்ம லாகிப்
பாரேறு மீசாலை நகரி னோர்சார்
பல்வளஞ்சேர் மாவடியாந் தலத்தில் மேவும்
காரேறு கயமுகமெய்ஞ் ஞானக் கன்றாம்
கருணைபொழி சித்திவிநா யகன்தன் மீதே
பேரேறு தமிழிசையால் ஊஞ்சல் பாடப்
பிறப்பறுக்கும் ஐங்கரநீ துணைசெய் வாயே.

மேருமலை பொதியமலை தூண தாக
விளங்கியபொற் கயிலைமலை விட்ட மாக
ஏருலவு நால்வேதம் கயிற தாக
இணங்கியநற் பிரணவமே பலகை யாக
நாரதனே முதன்முனிவர் வடந்தொட் டாட்ட
நானிலத்தோர் வானிலத்தோர் நாடிப் போற்ற
சீருலவு வலவையொரு பங்கில் வைக
சித்திவிநா யகதேவே ஆடீ ரூஞ்சல்.

இடையொடுபிங் கலைவிளங்கும் தூண தாக
இலங்கிடுநற் சுழுமுனையே விட்ட மாக
அடையிலெங்கும் நிறைஅன்பு பலகை யாக
ஆனந்த ஞானமதே கயிற தாக
நடைதகுநற் தருமமுண்மை பொறைமுன் நண்ணி
நற்சுருதி முறைநவின்று வடந்தொட் டாட்ட
திடமுடைய வெள்ளைமா வடியில் மேவும்
சித்திவிநா யகதேவே ஆடீ ரூஞ்சல்.

அண்டர்பணிந் துடனாக முனிவர் போற்ற
அருமறைகள் பிரணவம தாய்நின் றாட்ட
தொண்டர்பலர் பணிந்துன்னை புகழ்ந்து நாட
துகளில்எண் ணெண்கலைகள் துதித்துப் பாட
எண்திசையில் உலகதனில் யாரும் போற்ற
எழில்மேவு முகில்கள்படி சோலை சூழ்ந்தே
அண்டிநிறை நிதிமிகுமீ சாலை மேவும்
அணிசித்தி விநாயகரே ஆடீ ரூஞ்சல்

கொங்குலவு தருமலரின் மணங்கள் வீச
கோதறுசெஞ் சடைமுடிமேல் கொன்றை வாசம்
தங்குகங்கை முடிஎருக்குச் சடையி லாடச்
சாரணர்கந் தருவர்இன் னரர்கள் பாட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கொளிசேர் மேலுலகத் தரம்பை மாரும்
பொலிவுதரு மமரரும்மெய்க் கீர்த்தி நாட
சிங்கவரி யாசனம்மா வடிவாய்க் கொண்ட
சித்திவிநா யகதேவே ஆடீ ரூஞ்சல்.

மஞ்சனவே றொருபயனைக் கருதா ராகி
வளர்பொருளை வரையாது கொடுப்போர் நாளும்
மிஞ்சவிடு நீர்சென்று வாழை தெங்கு
மிருகன்னல் கமுகுடனே வருக்கை சூதம்
விஞ்சிவளர் வயல்களொடு வாவி சூழும்
வெள்ளைமாவ டிஎனுமெய்த் தலத்தில் மேவும்
செஞ்சுடரோன் எனஒளிரும் மேனி யானே
சித்திவிநா யகதேவே ஆடீ ரூஞ்சல்,

மங்குல்பொழி ஆற்றினது வழியால் வந்து
மடைஉடைத்து வளம்நிறைந்த கழனி பாய
தங்கியநற் செந்நெலுடன் கன்னல் ஓங்கித்
தகமைபெறு கதிரீன்று விளைந்து சாய
அங்கணுறு கழனிபுடை சூழ வைகும்
அழகுசெறி மாவடிநற் தலத்தில் மேவும்
திங்களணி சடைமுடியான் அருளால் வந்த
சித்திவிநா யகதேவே ஆடீ ரூஞ்சல்.

முண்டகநீ ழலிற்சங்கு முத்தம் ஈன
முழுமதியி னொளியெனச்செங் குமுதம் விள்ள
கொண்டநற வங்குதிக்கும் பதைத்து வாளை
குதித்தெழுந்து கமுகமரக் குலையிற் பாய
உண்டைசெறி துவர்க்காய்கள் சிதறி வீழும்
உயர்வளஞ்சேர் மீசாலை தன்னில் மேவும்
தொண்டர்தொழு வெள்ளைமா வடியிற் சேரும்
சுத்தசித்தி விநாயகரே ஆடி ரூஞ்சல்

மத்தகய முகன்புரியும் இடுக்கண் எல்லாம்
வானவரும் பொறுத்தலரி தாகி வாடி
பத்தியுடன் கயிலைமலை சென்று நாதன்
பதம்பணிந்து தமதுதுயர் பலவும் கூற
அத்திமுகப் பிள்ளையுனை ஏவ வந்து
அமரருக்காய்க் கயமுகனைப் பொருது கொன்று
சித்தியொடு மீசாலைமா வடியில் மேவும்
சித்திவிநா யகதேவே ஆடீ ரூஞ்சல்

மும்முறையாத் தீக்கைபெற்ற மறையோர் நாளும்
மொழியுமறை முறைநெறியால் முன்னே வந்து
கைம்முறையால் விதிமுறையால் ஈரெட் டென்னும்
கருதுமுப சாரமுடன் கசிந்து செய்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மையினில் நல்வாழ்வு நல்கி என்றும்
இருமையிலும் கதியுதவ இனிது மேவும்
செம்மைதரும் அடியார்கள் செறிமீ சாலைச்
சித்திவிநா யகதேவே ஆடி ரூஞ்சல்.

சீர்மேவு சிவசமயம் என்றும் வாழி
திகழ்மறைநூல் ஆகமங்கள் புராணம் வாழி
பார்மேவும் ஆவினங்கள் மிகவும் வாழி
படிந்துமழை பொழிந்திடுமே கங்கள் வாழி
ஏர்மேவும் வேளாளர் குலமும் வாழி
எழில்மறையோர் அரசருடன் வணிகர் வாழி
ஊர்மேவும் மீசாலை உள்ளோர் வாழி
உயர்சித்தி விநாயகனே வாழி வாழி

## எச்சரீக்கை

திருமேவிய கரிமாமுகத் தேவே — எச்ச ரீக்கை
தேனார்மொழி மானாமுமை செல்வா — எச்ச ரீக்கை
கருமேவிய பாசாடவி களைவாய் — எச்ச ரீக்கை
காங்கேயனுக் கண்ணா வருட்கண்ணா — எச்ச ரீக்கை

காசார்முலை வலவைக்கொரு காந்தா — எச்ச ரீக்கை
கழுநீர்மலர் நிகராகிய காலா — எச்ச ரீக்கை
பாசாங்குச தரனேஉயர் பரனே — எச்ச ரீக்கை
பாகீரதி தரவேவரு பாலா — எச்ச ரீக்கை

மண்ணாதிய வெல்லாந்தரு வள்ளா — எச்ச ரீக்கை
வானாகிய வாகேறிய பாதா — எச்ச ரீக்கை
எண்ணார்தொழிற் கிடையூறுசெய் யிறைவா— எச்ச ரீக்கை
இலங்கிசனின் சேயாகிய ஈசா — எச்ச ரீக்கை

திராவிட ரடியாரிடர் தீர்ப்பாய் — எச்ச ரீக்கை
தினையார்புன மீதேமுனஞ் சென்றாய் — எச்ச ரீக்கை
ஆராதனை செய்வோர்க்கரு ளாளா — எச்ச ரீக்கை
அருமாவடி நீழலமர் ஆதி — எச்ச ரீக்கை

## பராக்கு

அத்திமுகம் கொண்டவ ருளாளா — பராக்கு
அடியார்துயர் தீர்த்தருளும் ஆதீ — பராக்கு
சித்தியொடு புத்திபுணர் தேவே — பராக்கு
தேவிஉமை பெற்றருளும் சிறுவா — பராக்கு

தத்துவமெ லாங்கடந்த சாமீ — பராக்கு
சகலகண நிரைகளுக்கும் தலைவா — பராக்கு
சகடமுறு மச்சறுத்த சாமீ — பராக்கு
சண்முகற்கு முன்னிளவ லானாய் — பராக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுபவர்க் கின்பசுகந் தருவாய் — பராக்கு
விகடகரி மாமுகனை வென்றாய் — பராக்கு
விக்கினங்களை நீக்கியருள் விரகா — பராக்கு
வெள்ளைமா வடிவதியும் வீரா — பராக்கு

## லாலி

உலகுபுகழ் ஐங்கரனே லாலிசுப லாலி
ஓங்கார வடிவினனே லாலிசுப லாலி
விலகவினை செய்பவனே லாலிசுப லாலி
விதிசந்தி வீற்றவனே லாலிசுப லாலி

இலகுமஞ்சள் கோமயத்து லாலிசுப லாலி
இருந்தருளும் விநாயகனே லாலிசுப லாலி
திலகமுடன் நீறணிந்தே லாலிசுப லாலி
தினம்வணங்க அருள்தருவாய் லாலிசுப லாலி

தங்குமுயர் மீசாலை லாலிசுப லாலி
தானதிரு நீலகண்ட லாலிசுப லாலி
இலங்குவெள்ளை மாவடிக்கண் லாலிசுப லாலி
எழிற்பிள்ளை யாரேஓம் லாலிசுப லாலி

மங்கலங்கள் ஈங்களிப்பாய் லாலிசுப லாலி
மகாதேவன் புத்திரனே லாலிசுப லாலி
பொங்குபுகழ் அருள்தருவாய் லாலிசுப லாலி
புகழத்தி முகத்தினனே லாலிசுப லாலி

## மங்களம்

—மங்களம் ஜெய மங்களம்—
—மங்களம் சுப மங்களம்—
மாவடிவி நாய கர்க்கு ஜெய மங்களம்
மாமருக னான வர்க்கு சுப மங்களம்
தேவுபணி ஐங்க ரர்க்கு ஜெய மங்களம்
சித்திபுத்தி நாய கர்க்கு சுப மங்களம்

சிவகுமாரன் மூத்த வர்க்கு ஜெய மங்களம்
சிறப்பருளும் நாத னார்க்கு சுப மங்களம்
பவமறுக்க வந்த வர்க்கு ஜெய மங்களம்
பார்வதியாள் புத்தி ரர்க்கு சுப மங்களம்

ஆறுதலைத் தமைய னார்க்கு ஜெய மங்களம்
ஆறுதலைத் தருமி வர்க்கு சுப மங்களம்
ஏறுபுகழ் விநாய கர்க்கு ஜெய மங்களம்
இருமைநலம் தருப வர்க்கு சுப மங்களம்
மங்களம் ஜெய மங்களம்!
மங்களம் சுப மங்களம்!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டு தொடரட்டும்

அடியேனின் குலதெய்வம் வெள்ளை மாவடிப்பிள்ளையார். சிறுவயதுமுதல் கும்பிட்ட தெய்வமும் அதுதான். என்னைப் பொறுத்தவரை மாவடியான் அருளால் எனது காரியங்களில் மகத்தான வெற்றி பெற்றுள்ளேன். மாவடியான் மோதகம் மாண்புமிக்கது. சிறுவயதில் சாப்பிட்ட ஞாபகம் இப்பொழுதும் பச்சையாக இருக்கிறது.

அடியேன் 1979-ம் ஆண்டு தொடக்கம் தருமகர்த்தா சபையிலிருந்து தொண்டாற்ற இறையருள் கிடைத்தது. எனினும் அடியேன் தலைவராக இருக்கின்ற இன்றைய நேரத்தில் நடக்கும் இந்தக் குடமுழுக்கு விழா வைப்பற்றி கூற ஆசைப்படுகிறேன்.

இந்தக் குடமுழுக்குவிழா முன்பு நடந்த குடமுழுக்குகளைக் காட்டிலும் ஒரு வகையில் சிறந்ததென்றே கூறவேண்டும். காரணம் மிகக்குறுகிய கால எல்லையுள் மிக அதிகமான திருப்பணிகளை முடிக்க இறை அருள் கூர்ந்தமையேயாகும். 12 வருடங்களுக்குள் நடைபெறவேண்டிய குடமுழுக்கு 15 வருடங்களாகியும் நடைபெறாமையை தருமகருத்தா சபை கவனத்தில் எடுத்தது. வழிபடுவோர் சபையின் உதவியுடன் செயற்பாடு ஆரம்பமாகியது. உலைவைத்த பின்தான் அரிசியைப்பற்றி நினைத்தோம். திருப்பணிவேலைகள் தொடங்கிய பின்புதான் பணத்தைப்பற்றிச் சிந்தித்தோம்.

தருமகருத்தா சபையும் வழிபடுவோர் சபையும் சேர்ந்து ஒரு தெரிவுக்குழுவை அமைத்து திருப்பணிச்சபை என்ற பெயரில் இயங்கினோம். விநாயகன் அருளால் நாங்கள் எதிர்பார்த்ததைவிட அதிகபணத்தை அடியார்கள் வாரி வழங்கினர்.

கோயில் திருத்தப்பட்டது. வர்ணங்கள் தீட்டிப் புதுப் பொலிவுபெறச் செய்யப்பட்டது. சுற்றுமதில் கட்டப்பட்டு, ஆலயமதில் என்பதை எல்லோரும் ஊகிக்கும்படி அதற்கேற்ற நிறம் பூசப்பட்டது. சாந்தி மண்டபம் கலசம் வைத்து ஆகமவிதிப்படி அமைக்கப்பட்டது.

திருப்பணி வேலைகள் சில தனிப்பட்ட அடியார்களால் செய்து முடிக்கப்பட்டன. வசந்தமண்டபம், வைரவர்மண்டபம் இரண்டையும் திரு. ஐ. மாணிக்கவாசகர் குடும்பம் கட்டித்தந்தது. மேலும் அக்குடும்பத்தினர் வடக்கு வீதியில் இருக்கும் கடை இரண்டையும் கட்டுவித்து ஆலயத்திற்குத் தருமசாதனம் செய்தனர். சண்டேசுரருக்கு புதிதாக ஒரு கோயில் அமைத்துக்கொடுத்தார்கள். குஞ்சையா என்றழைக்கப்படும் திரு. சோ. கணதிபப்பிள்ளை குடும்பத்தினர்

இந்தத் திருப்பணிகளுக்கெல்லாம் அடியார்கள் பலர் சிரமதானமாகச் செய்து உதவிய வேலைகள் மிகக் கனதிவாய்ந்தன. இந்தத்திருப்பணி வேலைகளில் தருமகர்த்தா சபையும் வழிபடுவோர் சபையும் ஆற்றிய தொண்டுகள் அளப்பரியன என்பதைத் திருப்பணிச் சபைத்தலைவர் என்ற வகையிலே நான் சுட்டிக் காட்டாமல் இருக்கமுடியாது. அனைவரதும் முயற்சியால் குடமுழுக்கு வைபவம் குறையின்றி இனிது முடிந்து, இன்று மண்டலாபிஷேகம் மன நிறைவுடன் முடிவடைய விநாயகர் அருள் பாலித்துள்ளார்.

இப்பொழுது உங்கள் கைகளில் இக்குடமுழுக்கு மலர் அருள்மணம் வீசிக்கொண்டிருக்கிறது. இந்த மலர்க் குழுவினருக்கும், குடமுழுக்கு வைபவத்தை சிறந்தமுறையில் நடத்திய குருசங்கமித்தினருக்கும் திருப்பணிச்சபை, தர்மகர்த்தா சபை, வழிபடுவோர் சபை இவைகளின் உறுப்பினர்களுக்கும், தொண்டர்கள் தனிப்படத் திருப்பணி செய்துதவியவர்கள் ஆகிய எல்லோருக்கும் எனது மனமார்ந்த நன்றியை வெளிப்படுத்துகின்றேன். முகாமை இயக்குனர் திரு. சி. இராமலிங்கம் அவர்களின் சேவை எங்களுக்குப் பெரும் உதவியாக விளங்கியது. அவருக்கும் எனது நன்றி உரித்தாகட்டும்.

எங்கள் ஆலயத்திற்கு ஒரு இராசகோபுரம் இல்லாமை பெருங்குறையாக இருக்கிறது. இராசகோபுரமே தூலலிங்கமாகும். வேறும் எத்தனையோ திருப்பணிகள் எங்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றன. எனவே எங்கள் வேலை முடிந்துவிடவில்லை தொண்டு தொடரட்டும் என்று சொல்லி முடிக்கிறேன்.

எம்கடன் பணிசெய்து கிடப்பதே.

ஐ. மாணிக்கவாசகர்
திருப்பணிச்சபைத்தலைவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளுக்கொரு நாகரீகம் ஆளுக்கொரு அலங்காரம்

இளம் உள்ளங்களின் தெரிவுக்கேற்ற வகையில்

- உள்நாட்டு வெளிநாட்டு புடவைகள்
- பட்டுச் சாறிகள், வேட்டி சால்வைகள்
- சூட்டிங், சேட்டிங் வகைகள்
- பிளவ்ஸ் துணிகள்

மலிவான விலையில் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய இடம்

# ராஜ் வேல்ஸ்

24, நவீன சந்தை
சாவகச்சேரி.

---

மீசாலை மாவடிப் பிள்ளையார் கோவில்
கும்பாபிஷேக மலர்சிறக்க எமது வாழ்த்துக்கள்

V

# வித்தியா ரெக்ஸ்

4, நவீனசந்தை,
சாவகச்சேரி.

இன்றைய நவநாகரீக உலகிற்கேற்ப

★ திருமணப் புடைவைகள்

★ சேட்டிங், சூட்டிங்

● றெடிமேற் ஆடைகள்

ஆகியவற்றை பெற்றுக்கொள்ள

# பூம்புகார் புடைவையகம்

21, நவீனசந்தை சாவகச்சேரி.

---

மாவடிப் பிள்ளையார் கும்பாபிஷேக மலர்சிறக்க

## எமது நல்வாழ்த்துக்கள்

நவீன தங்க நகைகளை 22 கரட்டில்
பெற்றுக்கொள்ள

# வதனி நகைமாடம்

கண்டி வீதி, கொடிகாமம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீசாலை மாவடிப் பிள்ளையார் கோவில்
கும்பாபிஷேக மலர்சிறக்க எமது வாழ்த்துக்கள்

சி அரியரத்தினம்
(வெற்றிலைக்கடை)
சாவகச்சேரி.

---

★ பலசரக்கு சாமான்கள்
★ மணிக்கைப் பொருட்கள்
★ வீட்டுப் பாவனைப் பொருட்கள்

ஆகியவற்றை பெற்றுக்கொள்ளவும்
கட்டிட வேலைகள் செய்து கொடுப்பவர்களும

# ச. வேலுப்பிள்ளை களஞ்சியம்

மீசாலை.

கண்டி வீதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலய அபிடேகப் பொருட்களான
வெற்றிலை பாக்கு பழம்
புனுகு ஜவ்வாது கோரோசனை
விபூதி சந்தனம் குங்குமம்
பன்னீர் நெய் தேன்

மலிவான விலையில் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய இடம்

# ஸ்ரீ வெற்றிலைக் கடை

(சந்தை உட்புறம்)

யாழ் வீதி, கொடிகாமம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

மீசாலை

## திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோவில்
## திருப்பணிச்சபை பொருளாளரின் கணக்கறிக்கை
## 05-01-97 முதல் 04-07-97 வரை

எல்லாம்வல்ல எம்பெருமான் மாவடி விநாயகன் துணைகொண்டு எனது இவ் அறிக்கையை சமர்ப்பிக்கின்றேன். எனது சிறுபராயம்தொட்டு எங்கள் குடும்பகுல தெய்வம் மாவடியானை வணங்கி பல இன்னல்கள் நீங்கப்பெற்றும் பல பேறுகள் பெற்றுமுள்ளேன். முன்னாள் ஆலய முகாமையாளர்களும் எனது பாட்டனார்களுமான அமரர்கள் திரு. வி. சபாரத்தினம். (மணியப்பா) திரு. த தம்பிராசா (ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்) ஆகியோரது காலங்களின்போது இருந்த ஈடுபாடுகளைக் காட்டிலும் அண்மைக் காலத்திலேயே முன்பைவிட எம்பெருமானுடன் நெருக்கமாக வர வழியேற்பட்டது. இவ்வரிசையில் ஆலய நலன்விரும்பிகள் என்னை அமைக்கப்பட்டுள்ள திருப்பணிச் சபையின் பொருளாளர் பொறுப்பை ஏற்குமாறு வேண்டினார்கள். எனது சொந்த இன்னல்களுக்கு மத்தியிலும் எம்பெருமானுக்கு பணிசெய்ய கிடைத்த ஒரு வாய்ப்பாகக் கருதி இப்புனித பணியை ஏற்றுக்கொண்டேன். தொடர்ந்து இன்றுவரை என் சக்திக்கேற்ப இயன்றளவு தூரம் இப்பணிக்கு செயலாற்றியுள்ளேன்.

எனைப் பொறுத்தளவில் இப்பணியானது தனிநபர் முயற்சியாக செய்வது என்பது கூடிய சிரமமானது. இது ஒரு கூட்டுமுயற்சி. இவ்வரிசையில் திருப்பணி நிதி சேகரிப்பு விடயங்களிலும் மாவடியான் அன்பர்கள் நீங்கள் பல்வேறு வழிகளில் உதவியுள்ளீர்கள்; உதவுகின்றீர்கள். திருப்பணிச்சபையின் ஏனைய அங்கத்தவர்களும் தங்கள் பணிகளுடன் மேலதிக பணியாக உதவியுள்ளனர் யாபேருக்கும் எனது உளமார்ந்த நன்றிகள்.

திருப்பணி வேலைகளுக்கு மனமுவந்து பொருளுதவி, பணவுதவி சரீரவுதவி புரிந்த உள்ளூர், வெளியூர் அன்பர்கள் யாபேருக்கும் எங்கள் நன்றிகள். ஆலய புனருத்தாரண வேலைகளில் பொதுத்திருத்த வேலைகளைவிட தனி அன்பர்கள் பொறுப்பாகவும் புதிய கட்டட வேலைகள் நடந்தேறியுள்ளன. வசந்த மண்டபம், பைரவர் ஆலயம் அமைக்கப்பட்டும். ஆலயத்திற்கு உபகாரமாக கடைத்தொகுதியும் கையளிக்கப்பட்டுள்ளன. அத்துடன் குறிப்பாக புதிய அமைப்பாக சண்டேஸ்வரப் பெருமானுக்கு ஆலயம் இன்னொரு அன்பரால் அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது.

திருப்பணிச் சபைக்கு சாவகச்சேரி மக்கள் வங்கிக் கிளையில் நடைமுறைக் கணக்கில் ஒரு கணக்கு இல. 2670 -ல் செயற்பட்டு வருகின்றது எனது பணியில் ஒரு பகுதிக்கு (செலவினம் சம்பந்தமானது) ஆலய முகாமையாளர் திரு. சி. இராமலிங்கம் அவர்கள் செயலாற்றி உதவியுள்ளார். அவர்கட்கும் எனது நன்றிகள். 06-07 97ல் நடந்த திருப்பணிச்சபைக்கூட்ட தீர்மானத்தின்படி 04 07-97 வரையான வரவு. செலவு கணக்கறிக்கையை கும்பாபிஷேக மலரில் சேர்ப்பதென தீர்மானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அறிக்கையை சமர்ப்பிப்பதுடன் பூரணப்படுத்தப்பட்ட விரிவான அறிக்கை இத்திருப்பணி முடிவுடன் தனி அறிக்கையாகச் சமர்ப்பிக்கப்படும் என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

முடிவாக இவ்வறிக்கையை கணக்காய்வு செய்வதற்கென பெரிய அரசடி, சாவகச்சேரியைச் சேர்ந்த கணக்காய்வாளர் திரு. க. சண்முகநாதன் அவர்களை அணுகிய போது எதுவித தயக்கமுமின்றி கணக்காய்வு செய்வதற்கு சம்மதித்தார். முற்றிலும் இலவசமாக மிகக் குறுகியகால அவகாசத்தில் இவ்வறிக்கையை உரிய வழிகாட்டலுடன் கணக்காய்வு செய்து தந்துள்ளார் அவர்கட்கு திருப்பணிச்சபை சார்பான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

க. சோமசேகரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் ஆலய திருப்பணிச் சபை

## வரவு - செலவு கணக்கறிக்கை

(05-01-97 தொடக்கம் 04-07-97 வரை)

| | வரவுகள் | ரூபா | சதம் |
|---|---|---|---|
| 1 | திருப்பணிச்சபை நிதி சேகரிப்பு மூலம் | 362275 | 00 |
| 2 | கும்பாபிஷேகதின வருமானங்கள் | 14620 | 50 |
| 3 | தர்மகர்த்தாசபை நிதியிலிருந்து வழங்கப்பட்டது | 228000 | 00 |
| 4 | ஆலய முகாமையாளர் கையிருப்பில் இருந்து வழங்கியது | 33846 | 25 |
| 5 | வங்கி இருப்பு | 3462 | 00 |
| | மொத்த வரவுகள் | 642203 | 75 |

| | செலவீனங்கள் | ரூபா | சதம் |
|---|---|---|---|
| 1 | பாலஸ்தாபனதின செலவீனங்கள் | 7966 | 50 |
| 2 | பிரசார செலவீனங்கள் | 20530 | 00 |
| 3 | கட்டடப்பொருட்கள் | 268781 | 50 |
| 4 | மேசன் கூலிகள் | 104050 | 00 |
| 5 | வெள்ளையடித்தல், வர்ணம் பூசுதல் | 58945 | 00 |
| 6 | கும்பாபிஷேகதின செலவீனங்கள் | 148110 | 50 |
| 7 | கூலிகள் (பொது) | 24620 | 00 |
| 8 | நானாவித செலவீனங்கள் | 9200 | 25 |
| | மொத்த செலவீனங்கள் | 642203 | 75 |

ஐ. மாணிக்கவாசகர்
தலைவர்

அ. கைலாயபிள்ளை
செயலாளர்

க. சோமசேகரம்
பொருளாளர்

**கணக்காய்வாளரின் அறிக்கை:**

மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலய திருப்பணிச்சபையின் கணக்குகள் அனைத்தையும் பரிசோதித்து மேற்படி அறிக்கையை உரிய ஆவணங்களுடன் சரிபார்த்து இத்திருப்பணிச்சபையின் வரவு செலவுகளை இக்கணக்கறிக்கை சரியாக பிரதிபலிக்கின்றதென்பதை இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

பெரிய அரசடி
சாவகச்சேரி.

15-07-97

க. சண்முகநாதன்
(கணக்காய்வாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பணிச்சபை செயலாளர் இதயத்திலிருந்து ......

மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவ
டிப் பிள்ளையார் எமது பகுதி மக்களின்
குலதெய்வம். அவரது அருளினால் தென்ம
ராட்சி மக்கள் கடந்த தசாப்தத்திலிருந்து
நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற ஈழப்
போர்களில் பாதிப்புக்கள் இல்லாது காப்
பாற்றப்பட்டனர் அத்துடன் வலிகாமத்
தில் இருந்து இடம் பெயர்ந்து வந்த மக்
களையும் தாங்கக்கூடிய வல்லமையையும்
பெற்றனர்.

இந்து சமய விதிகளின்படி ஆலயங்கள்
பன்னிரு வருடங்களுக்கொருமுறை புனருத்
தாரணம் செய்து கும்பாபிஷேகம் செய்யப்
பட வேண்டும். எமது ஆலயம் 21-06-81-ம்
ஆண்டில் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.
பொருளாதாரத் தடைகள் எமது பாகத்தில்
ஏற்படுத்தப்பட்டு கட்டடப் பொருட்கள்
இல்லாமையால் உரிய காலத்தில் மீண்டும்
புனருத் தாரணம் செய்ய முடியாது
போயிற்று. சென்ற ஆண்டின் இறுதிப் பகுதி
யில் கட்டடப்பொருட்கள் ஓரளவு கிடைக்க
ஆரம்பித்ததையடுத்து ஆலய தர்மகர்த்தா
சபையினரும வழிபடுவோர் சபையினரும்
புனருத்தாரண வேலைகளைச்செய்து மகா
கும்பாபிஷேகத்தை எப்படியாயினும் செய்ய
வேண்டுமெனத் திட்டமிட்டனர்.

ஆலய நிர்வாகத்திற்குப் பொறுப்பாக
தர்மகர்த்தா சபையுள்ளது. அச்சபையிலே
வழிபடுவோர் சபையின் தலைவரும் செய
லாளரும் பதவிவழி அங்கத்துவம் பெறுகின்
றனர். 05-01-97 இல் நடைபெற்ற தர்ம
கர்த்தா சபைக் கூட்டத்தில் திருப்பணி
வேலைகளைச் செய்வதற்குரிய திருப்பணிச்
சபையாக தர்மகர்த்தா சபை செயற்பட
வேண்டும் என்றும் இத் திருப்பணிச்சபை
யின் கடமை மக்களிடம் இருந்து நிதி சேக
ரித்து. ஆலயத்தைப் புனருத்தாரணம்
செய்து. மகாகும்பாபிஷேகத்தை நடாத்து
விப்பதென்றும். மண்டலாபிஷேகத்துடன்
அச்சபையின் பணி நிறைவுறும் என்றும் தீர்
மானிக்கப்பட்டது. அதன் அடிப்படையில்
திருப்பணிச்சபை உறுப்பினர்கள் தெரிவு
செய்யப்பட்டனர்.

வைரவர் ஆலயம், யாகசாலை வசந்த
மண்டபம் ஆகியவற்றின் புனர்நிர்மாணம்,
அர்த்தமண்டபத் திருத்தவேலை, சண்டே
சுவரர் ஆலயம். மேற்கு வீதி மதிலும்
தெற்கு வீதியின் ஒருபகுதி மதிலும் அமைத்
தல் வெளிவீதி மதல பூச்சுவேலல, முன்
மண்டபத்தின் நிலம் செப்பனிடல். மின்
பிறப்பாக்கி கொள்வனவு ஆகிய திருப்பணி
கள் செய்யப்பட்டு மகா கும்பாபிஷேகம்
செய்ய வேண்டுமென தெரிவு செய்யப்பட்ட
திருப்பணிச்சபை தீர்மானித்தது.

இதனடிப்படையில் 09-02-97 இல் ஆலய
பிரதமகுரு சிவஸ்ரீ சி சிதம்பரநாதக் குருக்
களால் பாலஸ்தாபனம் செய்யப்பட்டது.
பாலஸ்தாபனம் செய்யும் போதே 8-6-97ல்
கும்பாபிஷேகம் செய்வதென நாட்குறிக்கப்
பட்டது. இதனால் திருப்பணிச்சபையினர்
நான்கு மாதத்தில் அனைத்து வேலைகளை
யும் முடிக்கவேண்டிய நிலைக்குட்பட்டனர்.
இதன் பின்னரே நிதி சேகரிக்கும வேலை
ஆரம்பித்தது வேலை ஆரம்பிக்கும் போது
திருப்பணிச் சபையிடம் எந்தவித நிதியும்
இருக்கவில்லை. நிதி உதவி வேண்டி உத
யன். வீரகேசரி ஆகிய பத்திரிகைகளில்
விளம்பரம் செய்ததோடு ஆலயத்தை அண்
டிய பகுதியிலுள்ள அடியார்களிடம் சென்
றோம். இப்பணியில் திருப்பணிச்சபை
உறுப்பினர்களும், வழிபடுவோர் சபை உறுப்
பினர்களும் ஆலய அடியார்களும் ஈடுபட்
டனர். மக்கள் மிகவும் ஆர்வத்துடன் பங்
களிப்பைச் செய்தனர். குறிப்பிட்ட காலத்
தில் திருப்பணிகளைப் பூர்த்தி செய்வதற்கு
வேண்டிய நிதியை வாரிவழங்கிய அன்பர்
களுக்கும் நிதி சேகரிக்க உதவி புரிந்தவர்
களுக்கும் திருப்பணிச்சபையின் சார்பில்
நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திருப்பணி வேலையைச் செய்வதற்கு
வசந்த மண்டபம், யாகசாலை. போன்ற
வற்றை இடிக்க வேண்டி இருந்தது.
இவற்றை சிரமதான அடிப்படையிலிடித்து
இடிபாடுகளை அகற்றுவதற்கு அடியார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலர் உதவிபுரிந்தனர். அதுமட்டுமன்றி ஆலயத்தில் நடைபெற்ற அனைத்துச் செயற்பாடுகளுக்கும் தம் உடலுழைப்பை ஈர்ந்த அன்பர்கள் அனைவருக்கும் திருப்பணிச் சபை சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். கட்டிடத்திற்குத் தேவையான மண், கல் போன்ற கட்டுமானப் பொருட்களை ஏற்றுவதற்கு இலவசமாக வாகன உதவிசெய்த அன்பர்களுக்கும் மாவடி விநாயகன் திருவருள் கிட்டவேண்டுமென வேண்டுகிறேன்.

திருப்பணிச்சபை செய்ய வேண்டிய வேலைகளில் சில தனிப்பட்ட உபயகாரர்களால் செய்துமுடிக்கப்பட்டது திருப்பணிச்சபைத் தலைவரும், தருமகர்த்தாசபை தலைவருமான திரு. ஐ மாணிக்கவாசகரும் அவரது குடும்பத்தினரும் பலலட்சம் ரூபா செலவில் அழகிய வசந்தமண்டபத்தைக் கட்டித்தந்துள்ளனர். அதேவேளை வைரவர் ஆலயத்தையும் கட்டித்தந்துள்ளனர். ஆலய வடக்குவீதியில் இரு அறைகளைக் கொண்ட கடை ஒன்றையும் ஆலயத்துக்கு கட்டி வழங்கியுள்ளனர், அக்கடை வாடகைப்பணம் கோவிலுக்குக் கிடைப்பதற்கு வழிசெய்யப்பட்டுள்ளது. மீசாலை கிழக்கு திரு. சோ. கணபதிப்பிள்ளை குடும்பத்தினர் ஆலய உள்வீதியில் சண்டேசுவரர் ஆலயத்தை அமைத்து வழங்கியுள்ளனர் மீசாலை கிழக்கு திரு. க.கார்த்திகேசு குடும்பத்தினர் சர்ப்பகிரக உட்புறத்துககுரிய மாபின் பதிப்பதற்கான செலவை வழங்கி உள்ளனர். இவர்கள் அனைவருக்கும் திருப்பணிச்சபை சார்பான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆலய சிற்ப நிர்மாண வேளைகளைச் சாவகச்சேரி சி. பாலசுப்பிரமணியம் குழுவினர் குறித்தவேளையில் செய்து முடித்துள்ளனர். மதில்வேலை மண்டபநிலம் செப்பனிடல் ஆகியவேலைகளை மீசாலை எஸ். வேலுப்பிள்ளை குழுவினர் செய்துள்ளனர் மீசாலை திரு சி. சிவா, திரு. சி. யோகநாதன் கல்வயல் திரு. க. சிவா ஆகியோர் வர்ணவேலைகளை அழகுறச் செய்துள்ளனர். மீசாலை திரு சி. சிவா கர்ப்பக்கிரகத்துக்குரிய வர்ணவேலையைத் தனது செலவில் செய்துள்ளார். இவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள்.

திட்டமிட்ட திருப்பணி வேலைகளில் வசந்தமண்டபம், வைரவர் ஆலயம், சண்டேசுவரர் ஆலயம், அர்த்தமண்டபத் திருத்தம் வெளிமண்டபநிலம் செப்பனிடல், மதிலமைத்தலும் பூசுதலும் கேணிமுற்றம் செப்பனிடல் ஆகியபணிகளை பூரணமாக நிறைவுற்றது யாகமண்டபவேலை நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது 9 8-97க்கு முன்னர் அவ்வேலை முடிக்கப்படும் எனும் நம்பிக்கையுண்டு. அன்னதான மண்டபத்தின் தெற்குப்பகுதி மண்டபத்தின் நிலவேலைகளை வழிபடுவோர்சபை உறுப்பினர் திரு வா சடாச்சரம் குடும்பத்தினர் செய்துமுடித்துள்ளனர். மின்பிறப்பாக்கி நிதிப்பற்றாக்குறையினால் கொள்வனவு செய்யப்படவில்லை.

விநாயகரின் புனராவர்த்தன பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகக் கிரியைகள் எமது ஆலயத்தின் பிரதம சிவாச்சார்யார் "வேதாகம சோதிட பூஷணம்" "சிவாச்சார்ய திலகம்" திருக்கணித பஞ்சாங்க கணிதர் சிவஸ்ரீ சி சிதம்பரநாதக் குருக்களின் தலைமையில் 4-6 97 புதன் காலை 6 மணிக்கு ஆரம்பமாகியது எண்ணெய்காப்பு வைபவத்தில் 7-6-97 காலை முதல் மாலை வரை மக்கள் பக்தி சிரத்தையுடன் பங்குபற்றினர். 8 7-97 ஞாயிறு காலை 5 30 மணிமுதல் 6.16 மணிவரையான சுபமுகூர்த்தத்தில் எம்பெருமானுக்கு குடமுழுக்கு வைபவம் நடாத்தப்பட்டது. இக்கிரியைகளில் பிரதம சிவாச்சாரியாருடன் "பிரதிஷ்டா வித்தகர்" "கிரியா ஞான கலாமணி" சிவஸ்ரீ கி. சோமசுந்தரக்குருக்கள், "சிவாகம கிரியாஞானபூபதி" சிவஸ்ரீ செ. பரமானந்தக் குருக்கள், "பாலகுருமணி" சிவஸ்ரீ க. பரராசக்குருக்கள் சிவஸ்ரீ ப.பாலசுப்பிரமணியக் குருக்கள் சிவஸ்ரீ த இராசேஸ்வரக்குருக்கள், சிவஸ்ரீ பா. பாலமுரளிதரக் குருக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். "சமஸ்கிருத பண்டிதர் கி. சதாசிவசர்மா சாதகாசாரியராகக் கலந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டார். ஏனைய அந்தணப் பெருந்தகைகளும் கோயில் அர்ச்சகர்களான சிவஸ்ரீ சி நீலகண்டக்குருக்கள், சிவஸ்ரீ சி. வேலுப்பிள்ளைக் குருக்கள் உதவி அர்ச்சகர் பா. சிவலிங்க ஐயர் ஆகியோர் கிரியைகளில் உதவி புரிந்தனர். இவர்கள் அனைவருக்கும் திருப்பணிச் சபையின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திருப்பணிச்சபையின் அழைப்பை ஏற்று மகா கும்பாபிடேகக் கிரியைக்கு சமூகமளித்து அருளாசியுரை வழங்கி சிறப்பித்த நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் இரண்டாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாச்சாரிய சுவாமிகளுக்கு இறையன்பு கலந்த நன்றிகளைத் தெரிவிப்பதில் திருப்பணிச் சபை பெருமையடைகின்றது.

கிரியைகளின் போது மங்களவாத்திய இசைவழங்கிய சுப்பிரமணியம் விபீஷணன் குழுவினருக்கும் "இசைப் பேரறிஞர்" எம். பஞ்சாபிஷேகன் குழுவினருக்கும் நன்றிகள். கோயில் மண்டப அலங்காரம் செய்தும், பஜனை நடாத்தியும் உதவிய மீசாலை சித்திர வேலாயுதர் ஆலய பக்தர்களுக்கும் எமது உளம் கனிந்த நன்றிகள்

மகா கும்பாபிடேகத்தினைத் தொடர்ந்து நாற்பத்தைந்து தினங்கள் மண்டல அபிடேகம் செய்த உபயகாரர் அனைவருக்கும் நன்றிகள் உரித்தாகுக 8-6-97 மகா கும்பாபிடேகத்தினத்தன்றும் 21-7-97 மண்டலாபிடேகப் பூர்த்தி விழா அன்றும் சிறப்பான முறையில் அன்னதானம் நடாத்திய வழிபடுவோர் சபையின் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் சிறப்பாக திரு. வா. சடாட்சரம்' திரு. க. வேதநாயகம் ஆகியோருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திருப்பணி வேலைகளில் கட்டுமானப் பணியாளர்களையும், ஏனைய தொழிலாளர்களையும் நெறிப்படுத்தி வேலைகளை நிறைவேற்றியமைக்கும் ஏனைய ஆலயச் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தியமைக்கும் திருப்பணிச் சபை அங்கத்தவரும் ஆலய முகாமையாளருமான திரு. சி. இராமலிங்கம் தர்மகர்த்தாசபைச் செயலாளர் திரு. சு. அருளானந்தசிவம் ஆகியோருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தரமான ஆய்வுக்கட்டுரைகளை சிரமம் பாராது தந்துதவிய யாழ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த அன்புக்குரிய துணைவேந்தர், பேராசிரியர்கள் விரிவுரையாளர்கள், ஏனைய அறிஞர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மலர் வெளியிடுவதற்கு அவசியமான நிதியை விளம்பரங்கள் மூலம் வழங்கிய வர்த்தகப் பெருமக்களுக்கும், அவ் விளம்பரங்களைச் சேகரித்த இதழாசிரியர் திரு. சோ. கணேசலிங்கம் செயற்குழு உறுப்பினர்கள் திரு. சு அருளானந்தசிவம், திரு. ச. சந்திரகுமார் மற்றும் திரு. ப கோடீஸ்வரநாதன் திரு. சி கணேசன் திரு. என். பரமசிவம் ஆகியோருக்கும் நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

ஆலய கும்பாபிஷேகக் கிரியைகளை வீடியோ மூலம் படமாக்கிய கிருபா போட்டோ நிறுவனத்தினருக்கும், ஒலி ஒளி வழங்கிய சாள்ஸ் அவர்களுக்கும் திருப்பணிச் சபையின் நன்றிகள் அட்டைப்படத்தையழகுறச் செய்த தேவர் அவர்கட்கும் துரித கெதியில் படத்துக்கான "புளக்" தயாரித்துத்தந்த அருண் புளக் நிறுவனத்தினருக்கும் நன்றிகள்.

இம்மலரை துரித கெதியில் அழகுற அமைத்து தங்கள் கரங்களில் தவழவிட்ட திருக்கணித அச்சக முதல்வர் சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக் குருக்கள் அவர்களுக்கும், அச்சகப் பணியாளர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அடுத்து வருகின்ற மகாகும்பாபிஷேகம் இராசகோபுரக் கட்டுமானத்துடன் நடைபெறுகின்ற பெருவிழாவாக இருக்க வேண்டும் என்று மாவடியான் திருவடியை இறைஞ்சி அமைகின்றேன்.

நன்றி.

மாவடிப் பிள்ளையார் கோயில்
மீசாலை.

அ. கயிலாயபிள்ளை
(கௌரவ செயலாளர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்கினேஸ்வரா

## அரிசி ஆலை
## தேங்காய் எண்ணெய் ஆலை

மருதடிச்சந்தி கச்சாய் வீதி, சாவகச்சேரி.

**உற்பத்தியாளருக்கோர் நற்செய்தி**

தேங்காய், கொப்பரா ஆகியவற்றைத் நியாய விலையில் கொள்வனவு செய்யவும், தரமான தேங்காய் எண்ணெய், பிண்ணாக்கு என்பவற்றைப் பெற்றுக்கொள்ளவும், கொப்பரா அரைக்கவும் நெல், புழுங்கல் குற்றவும், அரிசி, மிளகாய், தானிய வகைகள் அரைக்கவும் நம்பிக்கையுடன் நாடவேண்டிய இடம் **விக்கினேஸ்வரா**

249690

உரிமை: செல்வி தர்மலிங்கம் வேணி

மீசாலை கிழக்கு, மீசாலை.



LIBRARY UNIVERSITY
UNIVERSITY
University of Jaffna
249690
Library
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
ARCHIVES

நீர் இறைக்கும் இயந்திர உதிரிப்பாகங்கள்
கட்டடப் பொருட்கள் பெயின்ற் வகைகள்
இரும்புப் பொருட்கள் என்பவற்றை

நம்பிக்கையுடன் நாடவேண்டிய
நிறுவனம்

கணேசா விற்பனை நிலையம்

276, கண்டி வீதி,
சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ புத்தம் புதிய மோட்டார் சைக்கிள்கள்
★ உழவு இயந்திர உதிரிப்பாகங்கள்
★ வாகன ரயர், ரியூப் வகைகள்
★ பலசரக்கு சாமான்கள்
★ மின் பிறப்பாக்கிகள்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற
நாடவேண்டிய நிறுவனம்

ஜெயமதி மோட்டோர்ஸ்
119 கண்டி வீதி, சாவகச்சேரி.

ஜெயமதி களஞ்சியம்
291 A, 292 B கண்டி வீதி, சாவகச்சேரி.

★ குமரன் றேடர்ஸ் ★
119, கண்டி வீதி, சாவகச்சேரி.


திருக்கணிதம் - மட்டுவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org